MH மதுரம் மருத்துவமனை
MATHURAM HOSPITAL
A Multi - Speciality
Division of Dr.Samuel A.Mathuram Nursing Home
திருச்சி மாநகரின் முதல் மருத்துவமனை. தற்போது அதிநவீன வசதிகளுடன்...
For Appointments call
98849-92517, 0431-2792648
அரசு தலைமை மருத்துவமனை எதிரில், திருச்சி-17.

காவேரி டைம்ஸ்
CAUVERY TIMES
Bilingual Neighbourhood Weekly Free Newspaper
RNI No. TNBIL / 2007 / 23710
Volume : 10 Issue : 540, Trichy - APR-06 - APR-12, 2018 Friday

MH மதுரம் மருத்துவமனை
MATHURAM HOSPITAL
A Multi - Speciality
Division of Dr.Samuel A.Mathuram Nursing Home
திருச்சி மாநகரின் முதல் மருத்துவமனை. தற்போது அதிநவீன வசதிகளுடன்...
For Appointments call
98849-92517, 0431-2792648
அரசு தலைமை மருத்துவமனை எதிரில், திருச்சி-17.

# பாரதிதாசன் பல்கலைக்கழக NSS திட்ட விருதுகள் வழங்கும் விழா

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளில் சிறப்பாக செயல்படும் நாட்டு நலப்பணித்திட்ட (NSS) தொண்டர்கள், திட்ட அலுவலர்கள் மற்றும் கல்லூரிகளை தேர்வு செய்து அவர்களுக்கு ஆண்டு தோறும் விருதுகள் வழங்கி வருகிறது. இந்த விருதுகள் வழங்கும் விழா மற்றும் திருச்சி பெல் நிறுவனத்திற்கு பாராட்டு விழா கடந்த 3ந் தேதி நடைபெற்றது. பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் ப.மணிசங்கர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விருதுகளை வழங்கி சிறப்புரையாற்றினார். மேலும் பல்கலைக்கழக எல்லைக்குட்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி, கல்லூரிகளுக்கு நாப்கின் மின் எரியூட்டிகளை வழங்கியதற்கு பெல் நிறுவனத்தை அவர் பெரிதும் பாராட்டினார். இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் முனைவர் எஸ்.ராஜசேகரன் கலந்து கொண்டு வாழ்த்தி பேசினார். பல்கலைக்கழக நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் முனைவர் பி.மாசிலாமணி வரவேற்றார். திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் அ.இலக்குமிபிரபா நன்றி கூறினார்.



MH மதுரம் மருத்துவமனை
MATHURAM HOSPITAL
(A Multi - Speciality
Division of Dr.Samuel A.Mathuram Nursing Home)
திருச்சி மாநகரின் முதல் மருத்துவமனை.
தற்போது அதிநவீன வசதிகளுடன்...
For Appointments call
98849-92511, 0431-2792648
அரசு தலைமை மருத்துவமனை எதிரில்,
திருச்சி-17.


# காவேரி டைம்ஸ்
# CAUVERY TIMES

Bilingual Neighbourhood Weekly Free Newspaper
RNI No. TNBIL / 2007 / 23710
Volume : 10 Issue : 538, Trichy - MAR-23 - MAR-29, 2018 Friday


MH மதுரம் மருத்துவமனை
MATHURAM HOSPITAL
(A Multi - Speciality
Division of Dr.Samuel A.Mathuram Nursing Home)
திருச்சி மாநகரின் முதல் மருத்துவமனை.
தற்போது அதிநவீன வசதிகளுடன்...
For Appointments call
98849-92511, 0431-2792648
அரசு தலைமை மருத்துவமனை எதிரில்,
திருச்சி-17.



பாரதிதாசன் பல்கலைக்கழக வணிகவியல் துறை சார்பில் நடைபெற்ற மேலாண்மை போட்டிகளில் ஒட்டுமொத்த சேம்பியன் பட்டத்தை ஜமால் முகமது கல்லூரியும், 2வது இடத்தை சீதாலெட்சுமி இராமசுவாமி கல்லூரியும் பெற்றது. துணைவேந்தர் முனைவர் ப.மணிசங்கர் பரிசு அளித்து பாராட்டினார்.துறைத்தலைவர் முனைவர் செல்வம் வரவேற்றார்.

BENNETT, COLEMAN & CO. LTD. | ESTABLISHED 1838 TRICHY | TUESDAY, APRIL 3, 2018 | 14 PAGES | METRO | PRICE ₹2.50

THE TIMES OF INDIA

TIMESOFINDIA.COM | EPAPER.TIMESOFINDIA.COM

VOLUME 5, ISSUE 196




# Graduation day held at Jamal Mohamed College

A graduation day function was held at Jamal Mohamed College (Aided Courses - Men), Tiruchirappalli recently. S Ismail Mohideen, principal presided over the function and gave the welcome address. G Srinivas, joint secretary, university grants commission, (SERO), Hyderabad, graced the occasion as chief guest and distributed degrees to the graduates. As many as 770 graduates, including 556 under-graduates, 202 post-graduates and 12 MPhil holders were conferred on with degrees. A K Khaja Nazeemudeen, D Litt, secretary and correspondent, Hajee M.J Jamal Mohamed, treasurer, K Abdus Samad, assistant secretary, management committee members, university senate members, controller of examinations and directors attended.

–TPTC Edition–




தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்




திருச்சி • செவ்வாய் • மார்ச் 27, 2018 | சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் | • 16 பக்கம் • 600 காசு • மலர் 67 • இதழ் 202

# 'தேசத்தை மாணவர்கள் கட்டமைக்க வேண்டும்'

## கல்லூரி பட்டமளிப்பு விழாவில் அறிவுறுத்தல்




திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடந்த பட்டமளிப்பு விழாவில், பல்கலைக்கழக மானியக்குழு தென்கிழக்கு மண்டல இணைச்செயலாளர் ஸ்ரீநிவாஸ் மாணவர்களுக்கு பட்டம் வழங்கினார்.

திருச்சி, மார்ச் 27–

*மாணவர்கள் தேசத்தை கட்டமைப்பதில் பங்காற்ற வேண்டும் என்று பல்கலைக்கழக மானியக்குழு தென்கிழக்கு மண்டல இணைச் செயலாளர் ஸ்ரீநிவாஸ் கூறினார்.*

திருச்சி ஜமால் முகமது கல்லூரி அரசு உதவிபெறும் பிரிவு பட்டமளிப்பு விழா நடந்தது. விழாவிற்கு கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன் தலைமை வகித்தார். கல்லூரி தாளாளர் மற்றும் செயலாளர் காஜா நஜிமுத்தீன் முன்னிலை வகித்தார்.

பல்கலைக்கழக மானியக் குழு தென்கிழக்கு மண்டல இணைச் செயலாளர் ஸ்ரீநிவாஸ் இளநிலை பிரிவில் 556 மாணவர்கள், முதுநிலை பிரிவில் 202 மாணவர்கள், எம்பில் ஆராய்ச்சி படிப்பில் 12 மாணவர்கள் என மொத்தம் 770 மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கிப் பேசினார். அவர் பேசியதாவது:

''பட்டம் பெறும் மாணவர்கள் சிறந்த கல்வியாளர்களாக திகழ்வதோடு, தேர்ந்தெடுக்கும் எந்தத்துறையிலும் பன்முகத் திறன் கொண்டவர்களாக மிளிர வேண்டும். பட்டதாரிகளுக்கு பல்வேறு துறைகளிலும் ஏராளமான வாய்ப்புகள் உள்ளன.அதில் தகுந்த துறையில் இணைத்துக் கொள்ள வேண்டும். மாணவர்கள் இந்த தேசத்தை கட்டமைப்பதில் பெரும் பங்காற்ற வேண்டும். சமூக அமைதியை நிலை நாட்ட தேவையான நன்னெறி, மனித மதிப்புகளைக் கற்பிக்கும் பொறுப்பு பட்டதாரிகளுக்கு உள்ளது'', இவ்வாறு அவர் பேசினார்.

கல்லூரி பொருளாளர் ஜமால் முகமது, உதவி செயலாளர் அப்துஸ் சமது; கல்லூரி துணை முதல்வர் முகமது இப்ராகீம், கூடுதல் துணை முதல்வர் முகமது சிஹாபுதீன் உட்பட மாணவர்கள், பெற்றோர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

Now Live makkalkural.tv

MAKKAL KURAL (Independent National Tamil Daily) 8 பக்கம் விலை ரூ.4.00

மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

மதுரை பதிப்பு

(மலர்:39 * 26.3.2018 திங்கள் மாலை * வெளியூர் 27.3.2018 செவ்வாய் * இதழ் 301)

Regd. No. TN/SR-21/18–20

பிரியா
குக்கர் கேஸ்கட் Rs.80/-
MARLEX, BUTTERFLY, PREMIER
போன்ற எல்லா கம்பெனி குக்கர்களுக்கும் கிடைக்கும்



# ஜமால் முஹம்மது கல்லூரி பட்டமளிப்பு விழா: 1,403 மாணவிகளுக்கு பட்டங்கள்

## பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் மணிசங்கர் வழங்கினார்

திருச்சி, மார்ச் 26–

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியின் சுயநிதி மகளிர் பிரிவுக்கான பட்டமளிப்பு விழா 1,403 மாணவிகளுக்கு திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் மணிசங்கர் பட்டங்களை வழங்கினார்.

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியின் சுயநிதி மகளிர் பிரிவுக்கான பட்டமளிப்பு விழர் கல்லூரிக் குளிர்மைக் கலையரங்கில் நடைபெற்றது. இந்த விழாவில், சிறப்பு விருந்தினராக திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் மணிசங்கர் கலந்துகொண்டு மாணவிகளுக்குப் பட்டங்களை வழங்கி பட்டமளிப்பு விழாப் பேருரை நிகழ்த்தினார்.

இதில், இளநிலைப்படிப்பில் 990 மாணவிகளும், முதுகலைப்படிப்பில் 245 மாணவிகளும், எம்.பில். படிப்பில்

168 மாணவிகளும் என மொத்தம் 1,403 மாணவிகள் பட்டம் பெற்றனர். சிறப்பு விருந்தினர் அவர்கள் பட்டமளிப்பு விழாப் பேருரையில்

பெண்கள் கல்வி கற்று பட்டங்களை பெறுகின்ற இன்றையச் சூழலைப் பார்க்கின்ற போது அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு? என்ற பழமொழியை சிந்திக்க வேண்டியுள்ளது என்றார்கள். 30 சதவீதம் இளைய சமூகத்தினர் கல்வியறிவு பெறாதவர்களாக உள்ள இன்றைய சூழலில் இங்கு பட்டம் பெறுகின்ற நீங்களெல்லாம் கற்பதற்கான நல்ல வாய்ப்பினை பெற்றவர்களாக இருக்கிறீர்கள் என்று கூறியதோடு அர்ப்பணிப்பு உணர்வுடன், கடின உழைப்பையும் செய்தால் வெற்றி என்பது உறுதியாக கிட்டும் என்று ஊக்கப்படுத்தினார். இந்திய கல்வி வளர்ச்சி பற்றி குறிப்பிட்டும் சர்.சி.வி. இராமன், தாமஸ் எடிசன், ஏ.பி.ஜே. அப்துல் கலாம் முதலான அறிவியல் மேதைகளை மேற்கோள் காட்டி பேருரை நிகழ்த்தினார்.

முன்னதாக கல்லூரி முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன், தலைமையேற்று வரவேற்றார். மேலும், இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் ஏ.கே. காஜா நஜீமூதீன், பொருளாளர் எம்.ஜே. ஜமால் முஹம்மது, உதவிச் செயலாளர் கே. அப்துஸ் சமது, கல்லூரியின் ஆட்சி மன்றக்குழு உறுப்பினர்கள், பாரதிதாசன் பல்கலைக்கழக செனட் உறுப்பினர்கள், கல்லூரியின் தேர்வு நெறியாளர், துணை முதல்வர் முகமது இப்ராஹிம், கூடுதல் துணை முதல்வர் முகமது சிஹாபுதீன், துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், பெற்றோர்கள், முன்னாள் மாணவிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

# தினமணி

திங்கள்கிழமை
26 மார்ச் 2018
திருச்சி
16 பக்கங்கள் ரூ.5

### ஜமால் முகமது கல்லூரியில்

# சுயநிதி மகளிர் பிரிவில் பயின்ற 1,403 பேருக்கு பட்டம் வழங்கல்



**மாணவிக்குப் பட்டம் வழங்குகிறார் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் ப. மணிசங்கர். உடன் (இடமிருந்து) கல்லூரி முதல்வர் எஸ். இஸ்மாயில் மொய்தீன், பொருளாளர் எம்.ஜே. ஜமால் முஹம்மது, செயலர், தாளாளர் டாக்டர் ஏ.கே. காஜா நஜிமுத்தீன்.**

**திருச்சி, மார்ச் 25:** திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் சுயநிதி மகளிர் பிரிவில் பயின்ற 1,403 பேருக்கு ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நடைபெற்ற நிகழ்ச்சியில் பட்டங்கள் வழங்கப்பட்டன.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் சுயநிதி மகளிர் பிரிவும் இயங்கி வருகிறது. இங்கு ஆயிரக்கணக்கானோர் பயின்று வருகின்றனர். இவர்களில் முதுநிலைப் படிப்பில் 225 பேர், இளநிலை பிரிவில் 990, எம் பில் படிப்பில் 168 என மொத்தம் 1, 403 பேருக்கு பட்டங்கள் வழங்கப்பட்டன.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் பி. மணிசங்கர் பற்கேற்று மாணவியருக்கு பட்டங்களை வழங்கிப் பேசியது:

நாட்டின் பொருளாதாரம் மேம்படவும், ஒற்றுமை ஓங்கவும் உழைப்பதுடன் அனைத்து துறைகளையும் ஆள்பவர்கள் பெண்கள். தூய்மை இந்தியா திட்டத்தை வீட்டிலிருந்தே நடைமுறைப்படுத்தி வருபவர்கள் அவர்களே. அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு என்றிருந்த நிலையில் சுமார் 30 சதவிகித இளையோர் கல்வியறிவு பெறாதவர்களாக இருப்பதாக புள்ளி விவரம் தெரிவிக்கிறது. அந்நிலையில் இங்கே பட்டங்கள் பெற்றுள்ள மாணவியர் நல்ல வாய்ப்பை பெற்றுள்ளீர்கள். மேலும் அர்ப்பணிப்புடன் கடினமாக உழைக்கும் நிலையில் வாழ்வில் வெற்றி பெறுவது எளிது. கடின உழைப்புக்கு சர் சி.வி. ராமன் மற்றும் தாமஸ் ஆல்வா எடிசன் உள்ளிட்டோரை நினைவு கொள்ளவேண்டும் என்றார். கல்லூரி முதல்வர் எஸ். இஸ்மாயில் மொய்தீன் தலைமை வகித்தார். கல்லூரிச் செயலர் ஏ.கே. காஜா நஜிமுதீன், பொருளாளர் எம்.ஜே. ஜமால்முகமது, உதவி செயலர் கே. அப்துஸ் சமது மற்றும் கல்லூரி ஆட்சிமன்றக்குழுவினர், பேராசிரியர்கள், மாணவியர் மற்றும் பெற்றோர் பலர் பங்கேற்றனர்.




தினமலர்

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

–TPTC Edition–




திருச்சி • திங்கள் • மார்ச் 26, 2018

சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில்

• 16 பக்கம் • 600 காசு • மலர் 67 • இதழ் 201



திருச்சி ஜமால் முகமது கல்லூரி 67வது ஆண்டு விழாவில் வனப் பாதுகாப்பு கூடுதல் முதன்மை பாதுகாவலர் வெங்கடாசலம் பேசினார். அருகில் கல்லூரி செயலாளர் காஜா நஜமுதீன், முதல்வர் இஸ்மாயில் முகைதீன் உட்பட பலர்.

# 'கல்வி மட்டுமே உயர்வு தரும்'

திருச்சி, மார்ச் 26–

*திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் 67வது ஆண்டு விழா நடந்தது.*

கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன் தலைமை வகித்தார். விழாவில் வனப் பாதுகாப்பு கூடுதல் முதன்மை பாதுகாவலர் மற்றும் சுற்றுப்புற சூழல் இயக்குனர் வெங்கடாசலம் பேசியதாவது, எத்தனை செல்வங்கள் இருந்தாலும் கல்வி மட்டுமே வாழ்வில் உயர்நிலை தரும். ஆசிரியர்கள் மாணவர்களிடம் புரிந்துணர்வு இருக்க வேண்டும். தேர்வுகளில் பதில் அளிக்கும் போது உங்கள் பதில்கள் மற்றவர்களிடம் இருந்து வித்தியாசமாக இருக்க வேண்டும். தாங்கள் படித்த கல்வி நிறுவனங்களின் வளர்ச்சியில் மாணவர்களின் பங்களிப்பு இருக்க வேண்டும்.

இந்தியாவில் பெய்யும் 400 மில்லியன் ஹெக்டேர் மழையில் 180 மில்லியன் ஹெக்டேர் கடலில் வீணாக கலந்து விடுகிறது. நீர்வளம் குறைந்து வருவதால் அதனை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். இந்தியாவில் கிடைக்கும் நீரில் 70% விவசாயத்திற்கும், 20% தொழிற்சாலைகளுக்கும், 10% தனி மனித வாழ்விற்கு பயன்படுத்தப் படுகிறது. ஆறு, மலை, காடு இவைகளை பாதுகாத்தால் மழை வளம் அதிகரிக்கும். இயற்கையுடன் இணைந்து வாழும் தன்மையை மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் சிறந்த மதிப்பெண் எடுத்த மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியில் ஈடுபட்ட ஆசிரியர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது. கல்லூரி செயலாளர் காஜா நஜமுதீன் வரவேற்றார். துணை முதல்வர் முகமது இப்ராஹிம் நன்றி கூறினார்.




MAKKAL KURAL (Independent National Tamil Daily) 8 பக்கம் விலை ரூ.4.00

# மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

மதுரை பதிப்பு

(மலர்:39 * 25.3.2018 ஞாயிறு மாலை * வெளியூர் 26.3.2018 திங்கள் * இதழ் 300)

Regd. No. TN/SR-21/18–20




# திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் பட்டமளிப்பு விழா



திருச்சி, மார்ச் 25–

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியின் சுயநிதி ஆண்கள் பிரிவு பட்டமளிப்பு விழா இன்று (24.03.2018) பிற்பகல் 3 மணியளவில் கல்லூரிக் குளிர்மைக் கலையரங்கில் நடைபெற்றது. இந்த விழாவில், சிறப்பு விருந்தினராக பெங்களூரு, தேசிய தரமதிப்பீடு மற்றும் நிர்ணயக்குழு துணை ஆலோசகர் திரு. டீ.ஜீ. பொன்முடிராஜ் அவர்கள் கலந்துகொண்டு மாணவர்களுக்குப் பட்டங்களை வழங்கி, பட்டமளிப்பு விழா பேருரை நிகழ்த்தினார்.

இதில், இளநிலை படிப்பில் 940 மாணவர்களும், முதுநிலை படிப்பில் 199 மாணவர்களும் எம்பில் படிப்பில் 169 மாணவர்கள் என மொத்தம் 1,308 மாணவர்கள்பட்டம்பெற்றனர். சிறப்பு விருந்தினர், இன்றைய மாணவர்கள் அறிவு சார்ந்த விஷயங்களைத் தேர்வு செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார். உயர் கல்வி வாய்ப்புக்களை மாணவர்கள் சரிவர பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும், இப்போதைய இந்தியா, மாணவர்களாகிய உங்கள் கையில்தான் உள்ளது என குறிப்பிட்டார்.

இளைஞர்கள் இளைய இந்தியா என்ற வாசகத்தை மாணவர்கள் முன்னெடுத்துச் செல்ல வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். முன்னதாக, கல்லூரி முதல்வர் முனைவர். எஸ். இஸ்மாயில் முகைதீன் தலைமையேற்று வரவேற்றார்.

மேலும், இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் டாக்டர். ஏ.கே. காஜா நஜிமுத்தீன், பொருளாளர் ஹாஜி. எம்.ஜே. ஜமால் முஹமது, துணைச் செயலாளர் கே. அப்துஸ் சமது. கல்லூரியின் ஆட்சி மன்றக்குழு உறுப்பினர்கள், பாரதிதாசன் பல்கலைக்கழக செனட் உறுப்பினர்கள், கல்லூரியின் தேர்வு நெறியாளர், துணை முதல்வர் முகமது இப்ராஹிம், கூடுதல் துணை முதல்வர் முகமது சிஹாபுதீன், துறைத்தலைவர்கள், பேராசிரியப் பெருமக்கள், பெற்றோர்கள், முன்னாள்இந்நாள் மாணவர்கள், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

Dr. HAJA K. MAJEED, M.B.B.S., F.A.G.E.
Dr. ABDUL MAJEED ARSHAD, M.D.
(Chest Specialist)
MARIAM DIAGNOSTIC CENTRE
Authorised Medical Centre for GCC Countries and Brunei Darussalam
New No. 19A (Old No. 8), Thiruvalluvar Salai, Teynampet, Chennai - 600 018. Ph : 044 - 2433 1034 / 35 / 37
Fax : 91- 044 - 2433 1036 / Mobile : 98400 74949
E-mail : mariamdiagnosticcentre@gmail.com
Website : mariamdc.com

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper

RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018
TN /PMG (CCR) WPP258/2016-18

SCM SHIRTS
SCM A product of Seyad Cotton Mills
Seyad Home Industries Private Limited
Tirunelveli - 627 003

மணி - 33 சுடர் - 203 | ஹிஜ்ரி 1439 - ஜுமாஅத்துல் ஆகிர் - 26 | திருவள்ளுவர் ஆண்டு 2048 பங்குனி - 01 | சென்னை 15.03.2018 வியாழன் | வெளியூர் 16.03.2018 வெள்ளி | http://muslimleaguetn.com/manichudar.asp | பக்கம் 4 | விலை ₹ 3

# ஜமால் முஹம்மது கல்வியியல் கல்லூரியில் மீலாதுந்நபி விழா

திருச்சி, மார்ச்14-

ஜமால் முஹம்மது கல்வியியல் கல்லூரியின் மீலாதுந்நபி விழா ஜமால் முஹம்மது கல்லூரியில் காஜாமியான் ராவுத்தர் குளிர் மைய அரங்கில் அளவில் நடைபெற்றது.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக திருச்சி ராஜா காலணி அஸ்ஸலாம் அரபிக் கல்லூரி முதல்வர் மௌலானா மௌலவி நூஹ் மஹ்லரி, கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். இறைதூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள், "சுவனம் தாய்மார்களின் காலடியில் இருக்கிறது" யார் பெண் குழந்தைகளை பெற்று வளர்க்கிறார்களோ அவர்கள் எல்லோரும் நேராக சுவனம் செல்லக்கூடியவர்கள் என்று நபிகள் நாயகம் கூறி யதாக கூறினார்கள்.

பெண் குழந்தைகளின் முக்கி யத்துவத்தைப் பற்றி எடுத் துரைத்தார். இறைதூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் ஒளிவு மறைவின்றி வாழ்ந்து காட்டினார். வாழ்நாளில் ஒரு முறைகூட, பொய் உரைக் காதவர் என்பதை பற்றியும் எடுத்துரைத்தார்.

ஜாதி, நிற வேற்றுமைகள் பார்ப்பவர்களை நபிகள் வெறுத்தார்கள். பெண்களுக் காக சம உரிமைகளை பற்றியும் வலியுறுத்தினார். ஆசிரியர்கள் முகமது நபி அவர்களின் வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

பின்பு விழாவில் கல்லூரி அளவிலான மீலாதுந்நபி பேச்சுப்போட்டி மற்றும் தீனியாத் போட்டித் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை கல்லூரி செயலாளர் மற்றும் தாளாளர் காஜா நஜீமுதீன் சாஹிப், முன்னாள் பொருளாளர் ஹாஜி. கலீல் அகமது சாஹிப் மற்றும் துணைச் செயலர் முனைவர் அப்துஸ் சமது சாஹிப் ஆகியோர் வழங்கினர்.

ஜமால் முகம்மது ஆசிரியர் கல்வியியல் கல்லூரி முதல்வர் முனைவர். புசந்திரகுமார்; அனைவரையும் வரவேற்று, தலைமையுரை ஆற்றினார். பேராசிரியர் அப்துல் ரசாக் நன்றி கூறினார். விழாவில் பேராசிரியர் ராஜா முகம்மது, நிர்வாக அலுவலரும், திரளான மாணவ, மாணவிகளும், பேராசிரியர்களும், இஸ்லா மிய பெருமக்களும் கலந்து கொண்டு விழாவை சிறப்பித் தனர்.

அண்ணாநகரில் முதன்மையான தங்க நகை ஷோ ரூம்
For Trust & Integrity
வாவு ஜுவல்லர்ஸ்
தங்கம் | வெள்ளி | வைரம் | மாணிக்கம்
AA-7A, 2வது அவென்யு (ரவுண்டானா அருகில்), அண்ணாநகர், சென்னை - 600 040. போன் : 044 2628 4295, 2628 4296
Sunday open upto 1.30 p.m.

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்
# மணிச்சுடர்
MANICHUDAR TAMIL DAILY
நிறுவனர் : மர்ஹூம் சிராஜூல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper
RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018
TN /PMG (CCR) WPP258/2016-18

MOHAMAD IDRIS BROS.
KIBS கிப்ஸ் HANDLOOM TEXTILES
கிப்ஸ்
■ லுங்கிகள் ■ பனியன்கள்
■ ஜட்டிகள் ■ கைக்குட்டைகள்
தயாரித்து விநியோகிப்பவர்கள்:
முகமது இதிரீஸ் பிரதர்ஸ் (பி) லிட்.,
5, அரண்மனைக்காரன் தெரு, சென்னை - 600 001.
044 - 2522 1371 / 2522 1372 / 2522 1373






# ஜமால் முஹம்மது கல்லூரியில் நாட்டு நலப்பணித்திட்ட நிறைவு விழா

திருச்சி, மார்24-

திருச்சி ஜமால் முகமது கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட நிறைவு விழா (23.03.2018) திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்றது. இந்த விழாவில் கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் முனைவர் ஏ.கே.காஜா நஜீமுதீன் மற்றும் கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன் தலைமையுரை வழங்கினார்.

இக்கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர். எம். காமராஜ் மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட தொண்டர்கள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

சிறப்பு விருந்தினராக திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி, தேர்வு நெறியாளர் முனைவர். இ.சி.ஹென்றி அமிர்தராஜ், கலந்து கொண்டு ஜமால் முகமது கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட 4ஆம் ஆண்டு சேவை புத்தகத்தை வெளியிட்டு நாட்டு நாட்டு நலப்பணித்திட்டத்தின் நிகழ்வு கள் குறித்து உரையாற்றினார்.

கல்லூரியின் செயல்பாடு களைக் குறித்து நாட்டு நலப் பணித்திட்ட மேனாள் அலுவ லர்கள், மாணவர்கள் குறித்தும் பாராட்டு வழங்கினார்.

நிகழ்ச்சியை நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் காமராஜ், முனைவர் அன்வர் சாதிக், அக்பர் அலி, ஃபைஸ் பாஷா மற்றும் முனைவர். ஆசிக் அஹமது ஏற்பாடு செய்திருந்தனர்.

Now Live makkalkural.tv

MAKKAL KURAL (Independent National Tamil Daily) 12 பக்கம் விலை ரூ.4.00

# மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

மதுரை பதிப்பு

(மலர்:39 ★ 23.3.2018 வெள்ளி மாலை ★ வெளியூர் 24.3.2018 சனி ★ இதழ் 298)

Regd. No. TN/SR-21/18–20

வாவு ஜுவல்லர்ஸ்

# ஜமால் முஹம்மது கல்லூரியில் 19வது கல்லூரி நாள் விழா




திருச்சி, மார்ச் 23–

ஜமால் முஹம்மது (தன்னாட்சி) கல்லூரியின் மகளிர் பிரிவிற்கான 19வது கல்லூரி நாள் விழா இன்று கொண்டாடப்பட்டது.

கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக, சென்னை இராணிமேரி கல்லூரியின் முன்னாள் ஆங்கிலத்துறை பேராசிரியை முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

இதில் தற்போதைய சூழ்நிலையில் தேசத்தைக் கட்டமைப்பதில் பெண்கள் முக்கிய பங்காற்ற வேண்டுமென்றும், பெண்கள் உயர்கல்வியில் மேம்பட்டவர்களாகத் திகழ்வதோடு, பெண் தொழில் முனைவோராக உருவாக வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார். கல்லூரியின் தாளாளர் மற்றும் செயலாளர் ஏ.கே. காஜா நஜிமுத்தீன் மற்றும் பொருளாளர் எம்.ஜே. ஜமால் முகமது, உதவிச் செயலாளர் கே. அப்துஸ் சமது ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இந்த கல்வியாண்டில், கல்லூரி அளவிலும், பல்கலைக்கழக அளவிலும், ஒவ்வொரு துறையிலும் முதலாவதாக வெற்றிபெற்ற மாணவிகளுக்கு தங்கப்பதக்கங்களையும், நற்சான்றிதழ்களையும், பரிசுகளையும் சிறப்பு விருந்தினரோடு, கல்லூரியின் தாளாளர் மற்றும் செயலாளர், பொருளாளர், உதவிச் செயலாளர் ஆகியோர் வழங்கினர். முன்னதாக, கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன் அவர்கள் அனைவரையும் வரவேற்று, ஆண்டறிக்கை வாசித்தார். மாணவிகள் ஒன்றிணைந்து கல்லூரிப் பாடலை பாடினர்.

விழாவில், கல்லூரியின் துணைமுதல்வர் முனைவர் முகமது இப்ராஹிம் மற்றும் இயக்குநர்கள், பேராசிரியர்கள் அப்துல் காதர் நிஹால், முகமது பாசில், ஜமால் முகமது யாசீன் ஜூபைர் உள்ளிட்ட குழுவினர் கல்லூரி நாள் விழாவிற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். கலைநிகழ்ச்சிகளோடு நிறைவாக, கூடுதல் துணை முதல்வர் முகமது சிஹாபுதீன் நன்றியுரை வழங்கினார்.

Dr. HAJA K. MAJEED, M.B.B.S., F.A.G.P.
Dr. ABDUL MAJEED ARSHAD, M.D.
(Chest Specialist)
MARIAM
DIAGNOSTIC CENTRE
Authorised Medical Centre for
GCC Countries and Brunei Darussalam
New No. 19A (Old No. 8), Thiruvalluvar Salai, Teynampet,
Chennai - 600 018. Ph : 044 - 2433 1034 / 35 / 37
Fax : 91- 044 - 2433 1036 / Mobile : 98400 74949
E-mail : mariamdiagnosticcentre@gmail.com
Website : mariamdc.com

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துல் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper

RNI 42779/87 / REGD. No. TN/CNI GPO/006/2016-2018
TN /PMG (CCR) WPP258/2016-18

தரம்
மென்மை
நீடித்த உழைப்பு
999
மார்க் லுங்கிகள்
இது வெறும் நம்பரல்ல. நம்பிக்கை!






## திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில்

# மகளிர் பிரிவின் 19வது கல்லூரி நாள் விழா

திருச்சி, மார்ச்23-

திருச்சி ஜமால் முஹம்மது (தன்னாட்சி) கல்லூரியின் மகளிர் பிரிவிற்கான 19வது கல்லூரி நாள் விழா இன்று கொண்டாடப் பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் எஸ்.இஸ்மாயில் முகைதீன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராக, சென்னை இராணிமேரி கல்லூரியின் முன்னாள் ஆங்கிலத்துறை பேராசிரியை முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.

இதில் தற்போதைய சூழ் நிலையில் தேசத்தைக் கட்ட மைப்பதில் பெண்கள் முக்கிய பங்காற்ற வேண்டுமென்றும், பெண்கள் உயர்கல்வியில் மேம்பட்டவர்களாகத் திகழ்வ தோடு, பெண் தொழில் முனை வோராக உருவாக வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். கல்லூரியின் தாளாளர் மற்றும் செயலாளர் டாக்டர். ஏ.கே. காஜா நஜிமுத்தீன் மற்றும் பொருளாளர் ஹாஜி. எம்.ஜே. ஜமால் முகமது, உதவிச் செய லாளர் முனைவர். கே. அப்துஸ் சமது ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இந்த கல்வியாண்டில், கல்லூரி அளவிலும், பல்கலைக் கழக அளவிலும், ஒவ்வொரு துறையிலும் முதலாவதாக வெற்றிபெற்ற மாணவிகளுக்கு தங்கப்பதக்கங்களையும், நற்சான்றிதழ்களையும், பரிசு களையும் சிறப்பு விருந்தி னரோடு, கல்லூரியின் தாளா ளர் மற்றும் செயலாளர், பொரு ளாளர், உதவிச் செயலாளர் ஆகியோர் வழங்கினர்.

முன்னதாக, கல்லூரி முதல் வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன் அனைவரையும் வரவேற்று, ஆண்டறிக்கை வாசித்தார். மாணவிகள் ஒன்றி ணைந்து கல்லூரிப் பாடலை பாடினர்.

விழாவில், கல்லூரியின் துணைமுதல்வர் முனைவர் முகமது இப்ராஹிம் மற்றும் இயக்குநர்கள், பேராசிரியர்கள் அப்துல் காதர் நிஹால், முகமது ஃபாசில், ஜமால் முகமது யாசீன் ஜுபைர் உள்ளிட்ட குழுவினர் கல்லூரி நாள் விழாவிற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். கலைநிகழ்ச்சிகளோடு நிறை வாக, கூடுதல் துணை முதல்வர் முகமது சிஹாபுதீன் நன்றியுரை வழங்கினார்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

# தினமணி

செவ்வாய்க்கிழமை
20 மார்ச் 2018
திருச்சி
22 பக்கங்கள் ரூ.5

# 'தண்ணீரை பாதுகாப்பது நமது கடமை'

**திருச்சி, மார்ச் 19 :** இயற்கை மாறுபாட்டால் குறைந்து வரும் தண்ணீரை பாதுகாப்பது நமது கடமை என்றார் சுற்றுச்சூழல் துறை இயக்குநரும், வனத்துறை உயர் அதிகாரியுமான ஏ.வி. வெங்கடாச்சலம்.

திருச்சி ஜமால்முகமது. கல்லூரியின் 67ஆவது கல்லூரி தினவிழா திங்கள்கிழமை நடைபெற்றது. இதில், சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று அவர் பேசியது : ஒரு நாடு எவ்வாறு இருக்க வேண்டும், நாட்டு மக்களுக்கு எந்தெந்த வசதிகள் இருக்க வேண்டும் என்பதை திருக்குறளில் அழகாக கூறப்பட்டுள்ளது. மனிதனுக்கு தேவையான அடிப்படைவசதிகளில்தண்ணீர் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளது. உணவில் முக்கிய பங்கை வகிப்பதுடன், உணவு உற்பத்திக்கு காரணியாகவும் இருப்பது தண்ணீர். உலகில் 97 சதவிகிதம் பயன்படுத்தவே முடியாத வகையிலான (கடல்) உப்பு நீராகவும், வெறும் 3 சதவிகிதம் மட்டும் உப்பற்ற நீராகவும் உள்ளது. அதிலும் 2 சதவிகிதம் மலைப்பிரதேசங்களில் உள்ள பனிக்கட்டிகளாகவும், 1 சதவிகிதம் மட்டுமே நாம் அன்றாடம் பயன்படுத்தும் நீராகும், இதில் ஆறு, குளம், ஏரி, நிலத்தடி நீர் உள்ளிட்டவை அடங்கும். அந்த ஒரு சதவிகித நீரும் பற்றாக்குறையாக இருப்பதுதான் தற்போதைய நிலை. அதிலும், 70 சதவிகிதம் விவசாயத்துக்கும், 20 சதவிகிதம் தொழிற்சாலைகளுக்கும், 10 சதவிகிதம் அன்றாடத் தேவைகளுக்கும் பயன்படுகிறது. மனிதனுக்கு தேவையான சராசரியான தண்ணீர் அளவுகூட தற்போது கிடைப்பதில்லை. மேலை நாடுகளில் ஒவ்வொருவருக்கும் தலா 400 லிட்டர் தண்ணீர் கிடைக்கும் வகையில் வழி வகை செய்யப்பட்டுள்ளது. அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை நாம் இன்னும் மேற்கொள்ளவில்லை. தண்ணீரை பாதுகாப்பதில் நாம் அனைவருக்கும் பங்குள்ளது என்றார் அவர்.



**திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் திங்கள்கிழமை நடைபெற்ற 67–ஆவது கல்லூரி தினவிழாவில் பேசுகிறார் சுற்றுச்சூழல் துறை இயக்குநர் ஏ.வி. வெங்கடாச்சலம்.**

நிகழ்ச்சியில், கல்லூரிச் செயலாளர் ஏ.கே. காஜா நஜிமுதீன், பொருளாளர் எம்.ஜே. ஜமால் முகமது, இணை செயலாளர் கே. அப்துஸ் சமது, கல்லூரி முதல்வர் எஸ். இஸ்மாயில்முகைதீன், கூடுதல் துணை முதல்வர் முகமது சிகாபுதீன், துணை முதல்வர் முகமது இப்ராகிம் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

முரசு: 57 ஒலி: 300
அபூர்வ கோவில்களும், வினோத வழிபாடுகளும் இலவச புத்தகத்துடன்
8 பக்கங்கள் விலை 500 காசுகள்
THANJAI MALAI MURASU
Reg.No. TRY/060/2018-2020
RNI Regn. No.5842/61
தஞ்சை
மாலை முரசு
திருச்சி பதிப்பு
15-3-2018 (பங்குனி 1) வியாழக்கிழமை
★★★




# திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் மாணவர்கள் கலைதிறன் போட்டி

திருச்சி, மார்ச்.15–

திருச்சி ஜமால் முகமது கல்லூரி இயற்பியல் துறை சார்பாக கல்லூரிகளுக்கு இடையேயான ''ஜாம்பி –72'' என்ற தலைப்பில் அறிவியல் சார்ந்த கலைதிறன் போட்டி நடைபெற்றது.

இந்த கலைவிழாவில் மாணவர்களுக்கு கலைதிறன் மற்றும் அறிவியல் சார்ந்த போட்டிகள் சவுண்ட்ஸ் ஆப் சைலன்ஸ், ப்வர் பாய்ண்ட் பிரஸன்டேசன், போஸ்டர் பிரஸன்டேசன், மையம், பிளாஸ்ஸோ ஜமால், மைண்ட்ஸ் ஸ்பீக், சினி பீ குயிஸ் உள்ளிட்ட 14 போட்டிகள் நடைபெற்றன.

விழாவின் தொடக்கத்தில் இயற்பியல் துறை தலைவர் ஜமால் முகமது ஜாபர் வரவேற்றார். கல்லூரியின் முதல்வர் இஸ்மாயில் மொய்தீன் தலைமை தாங்கி பேசினார். விழாவில் கல்லூரி செயலாளர் காஜா நஜிமுதீன் சிறப்புரை ஆற்றினார். சிறப்பு விருந்தினராக ஜோசப் கண் மருத்துவமனையின் துணை நிர்வாகி சுபா கலந்து கொண்டார். கல்லூரியின் பொருளாளர் ஜமால் முகமது சிறப்பு விருந்தினருக்கு நினைவு ப்பரிசு வழங்கினார்.

கலை நிகழ்ச்சிகளில் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தையும் முதல் பரிசு சுழல் கோப்பையையும் மதுரை அமெரிக்கன் கல்லூரி தட்டிச் சென்றது. இரண்டாவது பரிசு சுழல் கோப்பையை பாரதிதாசன் பல்கலைகழகம் வென்றது. மூன்றாம் பரிசு சுழல் கோப்பையை திருச்சி தூய வளனார் கல்லூரி வென்றது. கலந்துக் கொண்ட அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப் பட்டது.

கலைவிழாவில் 30–க்கும் மேற்பட்ட கல்லூரிகளிலிருந்து 1000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டார்கள். கல்லூரியின் துணை முதல்வர் முகமத இப்ராஹீம், இயற்பியல் துறை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். விழாவின் ஒருங்கிணைப்பாளரான இயற்பியல் துறை தலைவர் ஜமால் முகமது ஜாபர் கூறினார்.

REGD. No. TRY/056/2018-2020 ★★★★
இன்டர்நெட் முகவரி:
http://www.dailythanthi.com
- சென்னை, திருச்சி, மதுரை, கோவை, சேலம், நெல்லை, வேலூர், கடலூர், ஈரோடு, நாகர்கோவில், தஞ்சாவூர், திண்டுக்கல், திருப்பூர், புதுச்சேரி, பெங்களூரு, மும்பை, துபாய் நகரங்களில் அச்சாகிறது -
தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
திருச்சி (16–3–2018) வெள்ளிக்கிழமை
மலர் 76 இதழ் 135
ஹேவிளம்பி ஸ்ரீ பங்குனி மீ 2 உ. ஹிஜிரி 1439 ஜமாதுல் ஆகிர் 27
சிறுவர் தங்கமலர், வெள்ளிமலர்
28 பக்கம் 500 காசு

நம் உயர்த்தப்பட்ட ஒரு ரூபாய் நிஜாம் பாக்கு
M/s S.A SAFIULLAH & CO., P.B.No.14 PUDUKKOTTAI-3

0452-2534108
80 BEST SKIN OINTMENT
சைபால்
Partners:S.S.Subramanian & S.Balaji



# ஜமால் முகமது கல்லூரியில் மாணவ–மாணவிகளுக்கான கலைத்திறன் போட்டி

திருச்சி,மார்ச்.16–

திருச்சி ஜமால் முகமது கல்லூரி இயற்பியல் துறை சார்பில் கல்லூரி மாணவ–மாணவிகளுக்கான கலைத்திறன் போட்டிகள் நடைபெற்றன. இதற்கு கல்லூரி செயலாளர் காஜா நஜிமுதீன் தலைமை தாங்கினார். இயற்பியல் துறை தலைவர்



ஜமால் முகமது ஜாபர் வரவேற்றுப்பேசினார். முதல்வர் இஸ்மாயில் மொய்தீன் சிறப்புரையாற்றினார். திருச்சி ஜோசப் கண் மருத்துவமனை துணை நிர்வாகி சுபா பிரபு கலந்து கொண்டு இன்றைய சூழலில் மாணவர்களின் பொறுப்பு மற்றும் சமுதாயத்தில் எவ்வாறு பங்காற்றவேண்டும் என்று விளக்கம் அளித்து பேசினார். இதில் 20–க்கும் மேற்பட்ட கல்லூரிகளில் இருந்து 500–க்கும் மேற்பட்ட மாணவ–மாணவிகள் கலந்து கொண்டனர். இறுதியில் முதல் பரிசை மதுரை அமெரிக்கன் கல்லூரி தட்டி சென்றது. 2–ம் பரிசை பாரதிதாசன் பல்கலைக்கழகமும், 3–ம் பரிசை திருச்சி தூய வளனார் கல்லூரியும் பெற்றது. பின்னர் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு மற்றும் கோப்பை வழங்கப்பட்டது. இதில் கல்லூரி துணை முதல்வர் முகமது இப்ராகிம் உள்பட மாணவ–மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

தினமலர்

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

திருச்சி • புதன் • மார்ச் 14, 2018

சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில்

# ஜமாலில் கலைத்திறன் போட்டி

திருச்சி, மார்ச் 14–

*திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் இயற்பியல் துறை சார்பில் கல்லூரி களுக்கு இடையேயான 'ஜாம்பி - 7இ2' என்ற தலைப்பில் அறிவியல் சார்ந்த கலைத்திறன் போட்டி நடந்தது.*

தொடக்க விழாவிற்கு கல்லூரி முதல்வர் இஸ்மாயில் மொய்தீன் தலைமை வகித்தார். ஜோசப் கண் மருத்துவமனைதுணை நிர்வாகி சுபா சிறப்புரை யாற்றினார்.

விழாவில், கலைத்திறன் மற்றும் அறிவியல் சார்ந்த சவுண்ட்ஸ் ஆப் சைலன்ஸ், பவர் பாயிண்ட் பிரஷன் டேசன் உள்ளிட்ட 14 வகையான போட்டிகள் நடந்தன. இதில், 30க்கும் மேற்பட்ட கல்லூரி களைச் சேர்ந்த ஆயிரத்திற்கும் மேற் பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு தங்களது திறமைகளை வெளிப்படுத் தினர். மதுரை அமெரிக்கன் கல்லூரி சாம்பியன் பட்டம் வென்றது. பாரதிதாசன் பல்கலைக் கழகம் 2ம் பரிசையும், திருச்சி ஜோசப் கல்லூரி 3ம் பரிசையும் வென்றன.

கல்லூரி பொருளார் ஜமால் முகமது, துணை முதல்வர் முகமது இப்ராகீம், பேராசிரியர்கள், மாண வர்கள் கலந்து கொண்டனர். விழா ஒருங்கிணைப்பாளர் ஜமால் முகமது ஜாபர் நன்றி கூறினார்.




திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடந்த கலைத்திறன் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற மதுரை அமெரிக்கன் கல்லூரி மாணவ, மாணவிகளுடன் ஜமால் கல்லூரி செயலாளர் காஜா நஜிமுதீன், முதல்வர் இஸ்மாயில் மொய்தீன், ஜோசப் கண் மருத்துவமனை துணை நிர்வாகி சுபா, ஒருங்கிணைப்பாளர் ஜமால் முகமது ஜாபர்.

தினமலர்

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

திருச்சி • புதன் • மார்ச் 14, 2018 | சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில்

# பெண்களுக்கு எதிரான வன்முறை தடுக்க விழிப்புணர்வு

## கலெக்டர் வலியுறுத்தல்

திருச்சி, மார்ச் 14-

*திருச்சியில் சமூகநலத் துறை சார்பில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைதடுத்து நிறுத்துவது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்த டூவீலர் பேரணி நடந்தது.*

பேரணியை தொடங்கி வைத்து கலெக்டர் ராசாமணி பேசியதாவது:

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு தமிழகம் முழுவதும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுத்து நிறுத்துவது குறித்த விழிப்புணர்வு பேரணி நடைபெற்று வருகிறது. இப்பேரணிஒவ்வொருவரும் நல்லொழுக்கத்தையும், சிறந்த ஆளுமைப் பண்பையும் வளர்த்துக் கொள்வதற்காக நடத்தப்படுகிறது.



திருச்சி ஜமால் முகமது கல்லூரி சார்பில் நடந்த பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுப்பது குறித்த பைக் விழிப்புணர்வு பேரணியை கலெக்டர் ராசாமணி துவக்கி வைத்தார்.

கல்லூரி மாணவ, மாணவிகள் பொதுமக்களிடையே பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுத்து நிறுத்துவது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். தாய் தந்தை, சகோதர, சகோதரிகள் சமூகத்தில் இணைந்து செயல்பட வேண்டும். ஒரு நல்ல சமுதாயம் தான் நல்ல குடிமகனை உருவாக்க முடியும். பெண்களை ஆண்களுக்கு இணையாக நாம் மதிக்க வேண்டும். படிக்கும் பெண்கள், உழைக்கும் மகளிர் வளர்ச்சிக்கு நாம் உதவ வேண்டும். குழந்தை திருமணம், வரதட்சணை கொடுமை ஆகியவற்றை அறவே ஒழிக்க வேண்டும். சுற்றுப்புறம் வளர்ச்சி அடைந்தால் தான் நாட்டின் வளர்ச்சி மேம்படும். ஆண், பெண் இணைந்து செயல்பட்டால் தான்தனிமனித ஒழுக்கமும், தனிமனித நெறிமுறையும் மேம்படும். அப்போது தான் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்க முடியும். இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட சமூக நல அலுவலர் உஷா, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் புவனேஷ்வரி, ஜமால் முகமது கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் காஜாநஜ்முதீன் ஷாகிப், முதல்வர் இஸ்மாயில் முகைதீன், மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

REGD. No. TRY/056/2018-2020 ★★★★
இன்டர்நெட் முகவரி:
http://www.dailythanthi.com

- தினத்தந்தி, வெளிநாட்டு ஏடு போன்ற தோற்றம் உடையது -

# தினத் தந்தி
DAILY THANTHI

வெல்க தமிழ்

22 பக்கம் 500 காசு

திருச்சி (14-3-2018) புதன்கிழமை | மலர் 76 இதழ் 133

ஹேவிளம்பி ஸ்ரீ மாசி மீ 30 உ. ஹிஜிரி 1439 ஜமாதுல் ஆகிர் 25









பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுத்து நிறுத்துவது குறித்து மோட்டார் சைக்கிள்களில் விழிப்புணர்வு பேரணி சென்றவர்களை படத்தில் காணலாம்.(உள்படம்; திருச்சியில் பேரணியை கலெக்டர் ராஜாமணி கொடியசைத்து தொடங்கி வைத்த காட்சி).

### இளைய சமுதாயத்தினர்

# பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்க உதவியாக இருக்க வேண்டும்

## கலெக்டர் ராஜாமணி பேச்சு

திருச்சி, மார்ச்.14-

பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுத்து நிறுத்த இளைய சமுதாயத்தினர் உதவியாக இருக்க வேண்டும் என்று கலெக்டர் ராஜாமணி கூறினார்.

### விழிப்புணர்வு பேரணி

சமூகநலத்துறையின் சார்பில் உலக மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுத்து நிறுத்துவது குறித்த மோட்டார் சைக்கிள் விழிப்புணர்வு பேரணி கடந்த 8-ந் தேதி சென்னையில் இருந்து தொடங்கியது. இந்த பேரணியில் கலந்து கொண்ட 10 பேர் மோட்டார் சைக்கிள்களில் சென்னையில் இருந்து கன்னியாகுமரி வரை சென்று மீண்டும் சென்னை திரும்புகிறார்கள். பேரணி செல்லும் வழியில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுத்து நிறுத்துவது குறித்த விழிப்புணர்வு பிரசாரத்தில் ஈடுபடுகிறார்கள்.

நேற்று காலை திருச்சிக்கு மோட்டார் சைக்கிள்களில் வந்த 10 பேரையும் மாவட்ட சமூக நலத்துறை மற்றும் ஜமால்முகமது கல்லூரி சார்பில் வரவேற்றனர். அதன்பிறகு கல்லூரியில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர். இதில் கலெக்டர் ராஜாமணி கலந்து கொண்டு பேசியதாவது:-

### பெண்களை மதிக்க வேண்டும்

இந்த பேரணியை நடத்துவதன் முக்கிய நோக்கம் நல்லொழுக்கத்தையும், சிறந்த ஆளுமைப்பண்பையும் வளர்த்து கொள்வதுமாகும். ஒவ்வொரு கல்லூரி மாணவ-மாணவிகளும் பொதுமக்களிடையே பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுத்து நிறுத்துவது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். ஒரு நல்ல சமுதாயம் தான் நல்ல குடிமகனை உருவாக்க முடியும். பெண்களை ஆண்களுக்கு இணையாக நாம் மதிக்க வேண்டும். படிக்கும் பெண்கள், உழைக்கும் மகளிர், அவர்களின் வளர்ச்சிக்கு நாம் உதவ வேண்டும். குழந்தை திருமணம், வரதட்சணை கொடுமை ஆகியவற்றை அறவே ஒழிக்க வேண்டும். நாம் பெற்றெடுத்த தாய்-தந்தையரை மதிக்க வேண்டும். நம்முடைய சுற்றுப்புறம் வளர்ச்சி அடைந்தால் தான் நாட்டின் வளர்ச்சி மேம்படும். இன்றைய இளைய சமுதாயமான நீங்கள் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுத்து நிறுத்துவதற்கு உதவிகரமாக இருக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

பின்னர் திருச்சியில் இருந்து பேரணியை கலெக்டர் ராஜாமணி கொடியசைத்து தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட சமூக நல அலுவலர் உஷா, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் புவனேஸ்வரி, கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் காஜாநஜுமுதீன் மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



### சரக்கு ரெயில் மூலம் திருச்சிக்கு

# அரிசி-உர மூட்டைகள் வந்தன

திருச்சி, மார்ச்.14-

சத்தீஷ்கார் மாநிலத்தில் இருந்து 2 சரக்கு ரெயில்கள் மூலம் தலா 42 வேகன்களில் மொத்தம் 5,300 டன் புழுங்கல் அரிசி மூட்டைகள் திருச்சி ரெயில்வே குட்ஷெட்டுக்கு நேற்று வந்தன. அவற்றை சுமை தூக்கும் தொழிலாளர்கள் இறக்கி, லாரிகளில் ஏற்றினர். பின்னர் 2,650 டன் அரிசி மூட்டைகள் திருச்சி கே.கே.நகரில் உள்ள மத்திய அரசின் சேமிப்பு குடோனுக்கும், மீதமுள்ள அரிசி மூட்டைகள் காந்தி மார்க்கெட்டில் உள்ள தமிழ்நாடு அரசின் சேமிப்பு குடோனுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. இதேபோல் கர்நாடக மாநி

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புதுதில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

புதன்கிழமை
14 மார்ச் 2018
திருச்சி
18 பக்கங்கள் ரூ.5

# பெண்களுக்கு எதிரான கொடுமைகளை தடுக்க இளையோர் அணி திரள வேண்டும்



**பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்கும் வகையில் திருச்சியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணியை தொடக்கி வைக்கிறார் ஆட்சியர் கு.ராசாமணி.**

**திருச்சி, மார்ச் 13:** பெண்களுக்கு எதிரான கொடுமைகளை தடுக்க இளைய சமுதாயம் அணி திரள வேண்டும் என திருச்சி மாவட்ட ஆட்சியர் கு. ராசாமணி வலியுறுத்தினார்.

மகளிருக்கு எதிரான வன்முறைகளை தடுத்து நிறுத்துவது தொடர்பாக பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மாநிலம் தழுவிய இருசக்கர வாகன பேரணி நடைபெறுகிறது. சென்னையிலிருந்து தொடங்கிய இந்த பேரணியானது அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களை கடந்து திருச்சி வழியாக கன்னியாகுமரிக்கு செல்லவுள்ளது. திருச்சிக்கு செவ்வாய்க்கிழமை வருகை தந்த பேரணிக்கு சமூக நலத் துறை சார்பில் வரவேற்பு அளித்து மாநகரப்பகுதிகளில் விழிப்புணர்வு பிரசாரத்தில் ஈடுபடுத்தப்பட்டது. இந்த பிரசார பேரணியை தொடக்கி வைத்து ஆட்சியர் கு.ராசாமணி பேசியது:

பெண்களுக்கு எதிரான கொடுமைகளை தடுத்து நிறுத்துவதில் ஒவ்வொரு கல்லூரி மாணவர், மாணவியரும் முக்கிய பங்காற்ற வேண்டும். பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நிகழாத வரையில் பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். தாய், தந்தை, சகோதரர், சகோதரி என அனைவரும் இணைந்து நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டும். மகளிருக்கு எதிரான வன்முறைகளை தடுத்தும் பணியில் அதிகளவில் இளையோர் ஈடுபட வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில், மாவட்ட சமூக நல அலுவலர் உஷா, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட அலுவலர் புவனேஸ்வரி, ஜமால் முகமது கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன் மற்றும் கல்லூரி மாணவர், மாணவிகள், ஆசிரியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

லாக் ஆன் செய்யுங்கள்
etamil.thehindu.com
இப்பொழுது டிஜிட்டலிலும்.

தி இந்து
Vol. 6 No. 72 தமிழால் இணைவோம் RNI No.TNTAM/2013/55769
புதன், மார்ச் 14, 2018 • சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி ஆகிய நகரங்களில் அச்சாகிறது • திருச்சி பதிப்பு • 20 பக்கங்கள் ₹ 5
எமது பதிப்புகள்: சென்னை, காஞ்சிபுரம், புதுவை, வேலூர், கோவை, சேலம், தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை
எமது இணையதளம்: http://tamil.thehindu.com

லாக் ஆன் செய்யுங்கள்
etamil.thehindu.com
இப்பொழுது டிஜிட்டலிலும்.

### தனிமனித ஒழுக்கம், நெறிமுறை மேம்பட்டால்

# பெண்களுக்கு எதிரான வன்முறையை தடுக்க முடியும்

**• விழிப்புணர்வு பேரணியை தொடங்கிவைத்த ஆட்சியர் கருத்து**

**திருச்சி**

பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுத்து நிறுத்துவது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த, சென்னை முதல் கன்னியாகுமரி வரை நடைபெற்று வரும் மோட்டார் சைக்கிள் பேரணி நேற்று திருச்சியை வந்தடைந்தது.

இந்தப் பேரணிக்கு சமூக நலத் துறை சார்பில் ஜமால் முகமது கல்லூரி வளாகத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது. விழிப்புணர்வு பேரணியில் 10 பேர் வந்திருந்தனர். தொடர்ந்து, திருச்சியில் இணைந்த 6 பேரையும் சேர்த்து 16 பேர் மதுரை வழியாக கன்னியாகுமரி வரை விழிப்புணர்வு பேரணி மேற்கொள்ள உள்ளனர்.

திருச்சியில் இருந்து மோட்டார் சைக்கிள் விழிப்புணர்வுப் பேரணியை மாவட்ட ஆட்சியர் கு.ராஜாமணி கொடியசைத்துத் தொடங்கிவைத்தார். அப்போது, ஆட்சியர் பேசும்போது, "நல்லொழுக்கம், சிறந்த ஆளுமைப் பண்பு ஆகியவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே இந்த விழிப்புணர்வுப் பேரணியின் முக்கிய நோக்கம். கல்லூரி மாணவ- மாணவிகள் ஒவ்வொருவரும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுத்து நிறுத்துவது குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். ஆண்களுக்கு இணையாக பெண்களை அனைவரும் மதிக்க வேண்டும். படிக்கும் பெண்கள், உழைக்கும் மகளிர் ஆகியோரது வளர்ச்சிக்கு அனைவரும் உதவ வேண்டும். குழந்தைத் திருமணம், வரதட்சணைக் கொடுமை ஆகியவற்றை அறவே ஒழிக்க வேண்டும்.

ஆண், பெண் இணைந்து செயல்பட்டால்தான் தனிமனித ஒழுக்கமும், தனிமனித நெறிமுறையும் மேம்படும். அப்போதுதான், பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுக்க முடியும்" என்றார்.

மாவட்ட சமூக நல அலுவலர் உஷா, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் புவனேஷ்வரி, ஜமால் முகமது கல்லூரிச் செயலர்- தாளாளர் காஜா நஜிமுதீன், கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன் மற்றும் கல்லூரி மாணவ- மாணவிகள் கலந்துகொண்டனர்.



▲ திருச்சி ஜமால் முகமது கல்லூரி வளாகத்தில் நேற்று மோட்டார் சைக்கிள் விழிப்புணர்வுப் பேரணியை கொடியசைத்து தொடங்கிவைக்கிறார் ஆட்சியர் கு.ராஜாமணி.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

வெள்ளிக்கிழமை
9 மார்ச் 2018
திருச்சி
18 பக்கங்கள் ரூ.5

# படைப்பாற்றலை அதிகரிக்க சிறுகதை வகுப்புகள் நடத்த வேண்டும்: எழுத்தாளர் பிரபஞ்சன்



திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் தமிழ்த்துறை சார்பில் வியாழக்கிழமை நடைபெற்ற தேசியக் கருத்தரங்கில் பேசுகிறார் எழுத்தாளர் பிரபஞ்சன்.

**திருச்சி, மார்ச் 8:** மாணவர்களின் படைப்பாற்றலை மேம்படுத்தும் வகையிலும், அவர்களின் திறனை வெளிக்கொணரும் வகையிலும் கல்லூரிகளில் சிறுகதை வகுப்புகள் நடத்த வேண்டும் என்றார் எழுத்தாளர் பிரபஞ்சன்.

திருச்சி ஜமால்முகமது கல்லூரியில் தமிழாய்வுத் துறை சார்பில், 21 ஆம் நூற்றாண்டில் (2001 முதல் 2017 வரை) தமிழர் புதினங்கள் என்ற தலைப்பிலான தேசியக் கருத்தரங்கின் தொடக்க விழா வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்ற அவர் தொடர்ந்து நிகழ்ச்சியில் பேசியது:

இலக்கியங்களில் பிரிவுகள் கிடையாது. ஆனால் புதினங்களில் சிறுகதைகள், நாவல்கள், நீண்ட நாவல்கள் என வகைப்படுத்தப்படுகின்றன.

தமிழில் தகுதியில்லாத முரண்பட்ட கருத்துக்களை உடையவைகளும் நாவல்களாக அங்கீகரிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் மிகச் சிறந்த சாகித்ய அகாதெமி விருதுகள் பெற்றவைகளும் உண்டு. எனது கணிப்பின் படி சுமார் 30-க்கும் மேற்பட்ட சிறந்த நாவல்கள் தமிழில் உள்ளன. வலம், மறுக்கை, பார்த்தீனியம், பொய்த்தேர்வு போன்ற நாவல்களை மாணாக்கர்கள் அவசியம் படித்தல் வேண்டும்.

மாணவ, மாணவியரிடம் இலக்கிய ஆற்றல் மற்றும் சிறுகதை படைப்பாற்றல் அதிகளவில் உள்ளது. ஆனால் அவற்றை வெளியே கொண்டுவருவதற்கான வாய்ப்புகள் குறைவாக உள்ளன.

எனவே மாணவர்களின் படைப்பாற்றலை மேம்படுத்தும் வகையிலும், அவர்களின் திறனை வெளிக்கொணரும் வகையிலும் கல்லூரிகளில் சிறுகதை வகுப்புகள் நடத்த வேண்டும் என்றார் அவர்.

நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன் தலைமை வகித்தார். கல்லூரி செயலாளர் மற்றும் தாளாளர் ஏ.கே. காஜா நஜிமுதீன், பொருளாளர் எம்.ஜெ. ஜமால்முகமது சாகிப், தமிழ்த்துறைத் தலைவர் அ. சையத் ஜாகீர்ஹசன், பேராசிரியர்கள் மு. சாதிக்பாட்சா, த. செல்வராசு உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

http://www.maalaimalar.com Regd. No. TRY/061/2018-2020 RNI.No.42628/85

மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

MAALAI MALAR

திருச்சி 7-3-2018 (புதன்கிழமை) 8 பக்கம் 400 காசு ★★★ | மலர் 41 இதழ் 82






திருச்சி உருமு தனலட்சுமி கல்லூரியில் நடைபெற்ற கணிதத்திறன் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்ட காட்சி.

## திருச்சி காட்டூர்

# உருமு தனலட்சுமி கல்லூரியில் கணிதத்திறன் போட்டிகள்

திருச்சி, மார்ச். 7–

உருமு தனலட்சுமி கல்லூரி கணிதத்துறையில் கல்லூரிகளுக்கு இடையிலான போட்டி நடந்தது.

**கணிதத்திறன் போட்டி**

திருச்சியை அடுத்த காட்டூர் உருமு தனலட்சுமி கல்லூரி கணிதத்துறை சார்பில் கல்லூரிகளுக்கிடையிலான மாணவர்களுக்கு கணிதத் திறன் போட்டிகள் மேத்பைரேட்ஸ்–18 நடைபெற்றது.

தொடக்க விழாவில் முன்னாள் கல்லூரி கல்வி இணை இயக்குனர் (நிதி) மு.சீனிவாசகம் கலந்து கொண்டு போட்டிகளை தொடங்கி வைத்தார்.

திருச்சி மாவட்டத்தை சேர்ந்த 16 கல்லூரிகளிலிருந்து 110 மாணவ–மாணவியர் போட்டிகளில் கலந்து கொண்டனர். கணிதவினாடி–வினா, கணித ஓவியம், கணித ஆய்வுக் கட்டுரை மற்றும் தனித்திறன் போட்டிகள் நடைபெற்றது.

சீதாலட்சுமி கல்லூரி ஒட்டு மொத்த சாம்பியன் பட்டம் வென்றது. ஜமால் முகமது கல்லூரி இரண்டாமிடம் பெற்றது. கல்லூரி குழுமத்தலைவர் பத்மா ராமகிருஷ்ணன் விழாவிற்கு தலைமை தாங்கி வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கினார். கல்லூரி முதல்வர் (பொ) கிறிஷ்டி செல்வராணி மாணவர்களை வாழ்த்தினார்.

முன்னதாக கணிதத்துறை தலைவர் கிருஷ்ணகுமார் வரவேற்றார். பேராசிரியர்கள் முரளிராஜ் மற்றும் மோகன் விழா ஏற்பாடுகளை செய்தனர். பாண்டிசெல்வி நன்றி கூறினார். விழாவை நிகழ்ச்சிகளை மோகன் ஒருங்கிணைத்தார்.

பம்புசெட்டுகள்
அதிகமான இதயங்களில்
நாகப்பா கார்ப்பரேஷன்
திருச்சியில் கட்டிட சாமான்கள் விற்பனையில் முதலிடம் வகிப்பவர்கள்
90, மேலப்புலிவார்டு ரோடு, திருச்சி-8.
☎ 0431-2700078, 2717006, 4010350
உரிமையாளர்: L.N.லெட்சுமணன் B.E.,

–TPTC Edition–

# தினமலர்

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

6.COM
The Printing Press
NOTE BOOKS & DIARIES FOR ALL SCHOOLS & COLLEGES
4A/3, WILLIAMS ROAD, CANTONMENT, TRICHY-620001.
0431-2464564 / 98424 75875 / 98428 75875

திருச்சி • புதன் • மார்ச் 7, 2018

சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில்

• 16 பக்கம் • 600 காசு • மலர் 67 • இதழ் 182




திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடந்த கருத்தரங்கில் சாம்பியன் பட்டம் வென்ற ஆண்டவன் கல்லூரி மாணவர்களுக்கு சிறப்பு விருந்தினர்கள் பரிசு வழங்கினர்.

## கல்வி நிறுவன செய்திகள்

### சிம்போரியா 18 கருத்தரங்கம்

**திருச்சி:** திருச்சி ஜமால் முகமது கல்லூரி வேதியியல் முதுகலை மற்றும் ஆராய்ச்சி துறை சார்பில் சிம்போரியா 18 எனும் ஒரு நாள் மாநில அளவிலான கருத்தரங்கம் மற்றும் போட்டிகள் நடந்தது.

கல்லூரி தாளாளர் காஜா நஜமுதின் தலைமையில் நடந்த நிகழ்ச்சியில் வினாடி வினா, குறும்படம், பாடல், மவுன நாடகம், கோலம், புகைப்படம், ஓவியம் மற்றும் புதிர் உள்ளிட்ட பல போட்டிகள் நடந்தது. இதில் மாநிலம் முழுவதிலிருந்தும் 13 கல்லூரிகளை சேர்ந்த 650 மாணவர்கள் கலந்து கொண்டனர். இதில் சாம்பியன் பட்டத்தை ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வென்றது. கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன் வரவேற்றார். உதவி பேராசிரியர் புருசோத்தமன் நன்றி கூறினார்.

அண்ணாநகரில் முதன்மையான தங்க நகை ஷோ ரூம்
For Trust & Integrity
வாவு ஜுவல்லர்ஸ்
தங்கம் | வெள்ளி | வைரம் | மாணிக்கம்
AA-7A, 2வது அவென்யூ (ரவுண்டானா அருகில்), அண்ணாநகர்,
சென்னை - 600 040. போன் : 044 2628 4295, 2628 4296
Sunday open upto 1.30 p.m.

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper

RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018
TN /PMG (CCR) WPP258/2016-18

தரம்
மென்மை
நீடித்த உழைப்பு
999
மார்க் லுங்கிகள்
இது வெறும் நம்பரல்ல, நம்பிக்கை!





திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் வரதட்சினை தொடர்பான அமைப்பான கைக்கூலி கைவிட்டோர் கழகம் மற்றும் உதவும் இதயங்கள் என்ற அமைப்பு செயல்பட்டு வருகிறது. ஒரு ஆண்டு செய்த பணிகளை குறித்த எதிரொலி இதழை வருடம் தோறும் முழுக்க முழுக்க மாணவிகள் மேற்பார்வையில் இந்த இதழ் வெளிவரும். ஷ்ரீன், நூரூல் ரஹ்மத் ஆயிஷா ஆகியோர் இந்த இதழின் ஆசிரியர்களாக பணிபுரிகிறார்கள். அதன் 8ஆம் ஆண்டு எதிரொலி இதழ் வெளியிட்டு விழா கல்லூரி வளாகத்தில் 03.03.2018 சனிக்கிழமை மாலை நடைபெற்றது. இராமநாதபுரம் தொகுதி எம்.பி. அன்வர் ராஜா மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் பங்கேற்றனர்.

X

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

சனிக்கிழமை
3 மார்ச் 2018
திருச்சி
16 பக்கங்கள் ரூ.5

# 'அழிவின் விளிம்பில் 70% மேற்குத் தொடர்ச்சி மலைகள்'

**திருச்சி, மார்ச் 2:** அழிவின் விளிம்பில் 70% மேற்குத் தொடர்ச்சி மலைகள் உள்ளனஎன்றார் சூழலியலாளர் கோவை ஓசை அகிலா.



திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் பேசுகிறார் சூழலியலாளர் கோவை ஓசை அகிலா.

உலக வன உயிரின நாளையொட்டி திருச்சி தண்ணீர் சுற்றுச்சூழல் மன்றம் சார்பில் ஜமால் முகமது கல்லூரி மற்றும் காவேரி மகளிர் கல்லூரியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில், காக்கைக் குருவி எங்கள் ஜாதி என்ற தலைப்பில் மேலும் அவர் பேசியது: நம்மால் ஒருபோதும் காடுகளை உருவாக்க முடியாது. பல்லாயிரம் பில்லியன் ஆண்டுகளுக்கு முன் பரிணாம வளர்ச்சியின் அடிப்படையில் காடுகள் உருவாகின. அவற்றைப் பாதுகாத்தலே நாம் தற்போது முன்னெடுக்க வேண்டிய கடமையாகும்.

மேற்குத் தொடர்ச்சி மலையின் மண் பல லட்சம் கோடி ஆண்டுகளுக்கு முன்னோடியாகும். அம்மலையில் வாழும் பழங்குடியினர் சுமார் 12,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட மூத்தக் குடியினர். உலகத்தில் அரிதான உயிர்கள் இம்மலையில் மட்டும்தான் உள்ளன. இந்தியாவில் 5000 வகையானத் தாவரங்கள் உள்ளன. அவற்றில் 1700 வகையானத் தாவரங்கள் மேற்குத் தொடர்ச்சி மலையில்தான் உள்ளன.

பூமிப்பந்தில் 5% மேற்குத் தொடர்ச்சிமலை. ஆனால் 30 % உயிரினங்கள் மேற்குத் தொடர்ச்சி மலையில்தான் உள்ளன. ஒரு இடத்தை பல்லுயிர் பெருக்க இடமாக மாற்ற அவை அரிதான உயிரினங்கள் வாழும் இடங்களாக மாற்ற வேண்டும். இரண்டாவது 70% சிதை உற்று இருத்தல் வேண்டும். அந்தவகையில் 70 % மேற்குத் தொடர்ச்சி மலைகள் அழிவின் விளம்பில் உள்ளன என்றார் அவர்.

இந்த நிகழ்வுகளில் தண்ணீர் அமைப்புச் செயலர் கே.சி. நீலமேகம், இணைச் செயலர்கள் கி. சதீஷ் குமார், ஆர்.ஏ.தாமஸ், மாணவர் மன்ற ஒருங்கிணைப்பாளர்கள் சிராஜுதீன், கீர்த்தனா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

BENNETT, COLEMAN & CO. LTD. | ESTABLISHED 1838 TRICHY | THURSDAY, MARCH 1, 2018 | 18 PAGES | METRO | PRICE ₹2.50



THE TIMES OF INDIA

TIMESOFINDIA.COM | EPAPER.TIMESOFINDIA.COM VOLUME 5, ISSUE 168



END ROHINGYA GENOCIDE OR FACE PROSECUTION, NOBEL LAUREATES TELL SUU KYI 14

TWIN HONOURS FOR ROGER FEDERER AT LAUREUS AWARDS 17



TOLD 'WHITE LIES' FOR PREZ: TRUMP'S COMMUNICATIONS DIRECTOR HOPE HICKS 14

# Colleges felicitated for raising Swachh spirit among public

TIMES NEWS NETWORK

R Baskar



Corporation commissioner N Ravichandran presents a shield to faculty members of Trichy colleges for supporting the civic body in its preparation for Swachh Survekshan 2018

**Trichy:** The Trichy Corporation felicitated four city colleges for extending their contribution in familiarising Swachh Survekshan 2018 among residents. Four colleges namely Bishop Heber, Holy Cross, Jamal Mohamed and Cauvery College for Women were awarded with a shield each. The felicitations were part of the Swachh Survekshan 2018 awareness event organised by the directorate of field publicity held here on Wednesday.

Since August 2017, the civic body has been gearing up for Swachh Survekshan 2018, the annual cleanliness survey being conducted across India for past three years. The urban local body (ULB) said that educational institutions in the city were helpful in creating awareness among the residents. Apart from rallies and other conventional formats of awareness building programmes, city colleges have helped the civic body by conducting door-to-door survey and in familiarising the concept of Swachh Survekshan conducted by the Union government through SBM.

In January 2018, several NCC students from city colleges took out an initiative to spread word about the survey by distributing pamphlets across the 65 wards, corporation sources said. "Be it promoting the Swachhata mobile application or creating awareness about Swachh related activities, college students were vital messengers in taking the cleanliness message to public," corporation commissioner N Ravichandran told a gathering of students.

Field publicity officer for Trichy, K Devi Padmanabhan said that awareness programmes on Swachh Survekshan 2018 was held at Chennai, Trichy, Salem, Madurai, and Coimbatore. Stating that microcompost centres are being expanded to all parts of the city, commissioner claimed that the 47-acre large Ariyamangalam dump yard could soon be closed with decentralised waste collection and disposal through microcompost centres increasing its coverage to most parts of the city.

REGD. No. TRY/056/2018-2020 ★★★★
இன்டர்நெட் முகவரி:
http://www.dailythanthi.com

– தினத்தந்தி, வெளிநாட்டு ஏடு போன்ற தோற்றம் உடையது –

22 பக்கம் 500 காசு

தினத் தந்தி
DAILY THANTHI

திருச்சி (28–2–2018) புதன்கிழமை | மலர் 76 இதழ் 119 | வெல்க தமிழ் | ஹேவிளம்பி ஞ் மாசி மீ 16 உ ஹிஜிரி 1439 ஜமாதுல் ஆகிர் 11

vodafone

வோடஃபோனுடன் இணைந்திடுங்கள்



கைப்பந்து போட்டியில் காந்தி கிராம பல்கலைக்கழக அணியும், திருப்பத்தூர் தூய இருதய கல்லூரி அணியும் மோதிய காட்சி.

### திருச்சியில்

# மாநில அளவில் கல்லூரிகளுக்கு இடையேயான கைப்பந்து போட்டி தொடங்கியது

திருச்சி, பிப்.28–

திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி மைதானத்தில், ஜி. எச்.லாண்டர் நினைவு கோப்பைக்கான மாநில அளவில் கல்லூரிகளுக்கு இடையிலான கைப்பந்து போட்டி நேற்று தொடங்கியது. இதில் தமிழகத்தை சேர்ந்த 12 கல்லூரி அணிகள் பங்கேற்று 'லீக்' மற்றும் 'சூப்பர் லீக்' முறையில் விளையாடி வருகின்றன. போட்டியை கல்லூரி முதல்வர் பால் தயாபரன் முன்னிலையில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன் தொடங்கி வைத்தார். நேற்று காலை நடந்த போட்டியில் பிஷப் ஹீபர் கல்லூரி அணி, மதுரை அருள் ஆனந்தர் கலை கல்லூரியை 25–14, 25–14 என்ற புள்ளி கணக்கிலும், திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி அணி, பிஷப் ஹீபர் கல்லூரி 'பி' அணியை 25–19, 25–18 என்ற புள்ளி கணக்கிலும் வென்றன. மதியம் நடந்த போட்டியில் சென்னை டி.ஜி. வைஷ்ணவ கல்லூரி, திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரியை 25–19, 15–18 என்ற புள்ளி கணக்கிலும், திருப்பத்தூர் தூய இருதய கல்லூரி, திண்டுக்கல் காந்திகிராம கிராமிய நிகர்நிலை பல்கலைக்கழக அணியை 25–21, 25–16 என்ற புள்ளி கணக்கிலும் வெற்றி பெற்றன. போட்டிகள் தொடர்ந்து நடைபெறுகிறது. வருகிற 1–ந்தேதி இறுதிப் போட்டி மற்றும் பரிசளிப்பு விழா நடைபெறுகிறது. இதில் சிறப்பு அழைப்பாளராக தெற்கு ரெயில்வேயின் சர்வதேச கைப்பந்து விளையாட்டு வீரர் இளமாறன் கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பை மற்றும் பரிசுகளை வழங்குகிறார்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்
வேலூர்
தருமபு
நெல்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

புதன்கிழமை
28 பிப்ரவரி 2018
திருச்சி
18 பக்கங்கள் ரூ.5


## மாநில வாலிபால் போட்டி

# சென்னை, திருச்சி கல்லூரிகள் வெற்றி

**திருச்சி, பிப்.27:** திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியில் தொடங்கிய மாநில அளவிலான வாலிபால் போட்டியில் சென்னை, திருச்சி கல்லூரிகள் வெற்றி பெற்றுள்ளன.

பொன்விழா ஆண்டு ஜி.எச். லாண்டர் கோப்பைக்கான மாநில அளவிலான வாலிபால் போட்டிகள் திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியில் செவ்வாய்க்கிழமை தொடங்கியது. திருச்சி ஜமால் முகமது கல்லூரி முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன் போட்டியைத் தொடக்கி வைத்தார்.

இந்த போட்டிகள் லீக் மற்றும் சூப்பர் லீக் முறையில் நடத்தப்படுகிறது. 12 கல்லூரி அணிகள் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு லீக் முறையில் விளையாடுகின்றன. ஒவ்வொருப் பிரிவிலும் முதல் இடம் பிடிக்கும் 4 அணிகள் சூப்பர் லீக் முறையில் விளையாட தகுதி பெறும்.

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற லீக் போட்டியில் மதுரை அருளானந்தர் கல்லூரியை 25-14, 25-14 என்ற புள்ளிகள் கணக்கில் திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி வென்றது.

திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியை 25-19, 25-18 என்ற புள்ளிகள் கணக்கில் திருச்சி தூய வளனார் கல்லூரி வென்றது.

திருச்சி தூய வளனார் கல்லூரியை 25-19, 25-18 என்ற புள்ளிகள் கணக்கில் சென்னை டி.ஜி. வைஷ்ணவ் கல்லூரி வென்றது.

Now Live makkalkural.tv

MAKKAL KURAL (Independent National Tamil Daily) 12 பக்கம் விலை ரூ.4.00

# மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

மதுரை பதிப்பு

(மலர்:39 ★ 24.2.2018 சனி மாலை ★ வெளியூர் 25.2.2018 ஞாயிறு★ இதழ் 271)

Regd. No. TN/SR-21/18–20

Now Live trinitymirror.tv



திருச்சி ஜமால் முகமது கல்லூரி கணிதத் துறை மற்றும் டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் சங்கம் சார்பாக நடைபெற்ற மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையேயான அறிவுதிறன் சார் போட்டியில் ஒட்டுமொத்த சாம்பியன் பட்டம் பெற்ற திண்டுக்கல் காந்தி கிராம பல்கலைக்கழக அணிக்கு கல்லூரி செயலாளர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே.காஜா நஜுமுதீன், பொருளாளர் எம்.ஜே. ஜமால் முகமது ஆகியோர் பரிசு வழங்கினர். துணை முதல்வர் ஏ.முகமது இப்ராகிம், பட்டுக்கோட்டை இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதன்மை மேலாளர் ஜி.சத்தியநாராயணன், அமைப்பு செயலர் என்.முகமது தொய்யுப் ஆகியோர் உடன் உள்ளனர்.

FOLLOW US:
thehindu.com
com/thehindu
twitter.com/the_hindu

# THE HINDU

MONDAY, FEBRUARY 26, 2018

INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

TIRUCHIRAPALLI
CITY EDITION
24 pages • ₹6.00

PRINTED AT · CHENNAI · COIMBATORE · BENGALURU · HYDERABAD · MADURAI · NOIDA · VISAKHAPATNAM · THIRUVANANTHAPURAM · KOCHI · VIJAYAWADA · MANGALURU · TIRUCHIRAPALLI · KOLKATA · HUBBALLI · MOHALI · MALAPPURAM · MUMBAI · TIRUPATI · LUCKNOW

## CAMPUS CONNECT

### Innovation talk

Student Centre for Innovations in Engineering and Technology (SCIEnT) SCIENT team of National Institute of Technology - Tiruchi conducted the first lecture of the year on 'Graph Convolution neural networks'. Tijmen Tieleman, Co-Founder and CTO of minds.ai explained about neural networks models on graphs and architecture of classical CNN. His lecture focussed on how to differentiate the convolution in the spatial and spectral domain for grid data and also discussed the formulation of a generic convolution method that works well on both graphs and grids.

### Winner

Jamal Mohamed College emerged the overall winner of 'Festocom 2k18,' a cultural event conducted by the Department of Commerce, Bishop Heber College, and Andhra Loyola College finished overall runner-up. Dinesh Gajendran, founder, Audacious Foundation, inaugurated the event. Music composer Santhosh Narayanan gave away the prizes.

### Achievers' day

Urumu Dhanalakshmi College celebrated 'Achievers 2018 Day' recently. Students, who represented the college in State-level NCC meet, at Republic Day Parade in New Delhi,and Prime Minister's Rally, besides those who had taken part in silambam, cricket, netball, handball and kabaddi competitions, were honoured on the occasion by the chief guest A. Amalraj, Commissioner of Police, Tiruchi City. Kalki Ramakrishnan, college council secretary, felicitated the students.



Students of Jamal Mohamed College receiving the trophy from music composer Santhosh Narayanan in Tiruchi.

### Seminar on Shakespeare

The Vista English Association of Chidambaram Pillai College for Women organised a seminar on the topic 'Shakespeare: A few insights.' G. Ravindran, former head, Department of English, St. Joseph's College, spoke on the different types of Shakespeare's plays such as comedies, tragedies, romances, and histories. He focussed on the various critical approaches that can be applied in the analysis of the plays.

### Fitness workshop

Department of Physical Education and SEERAS Diet Clinic, Seethalakshmi Ramaswami College, organised a two-day workshop on 'Fitness management' in collaboration with Indian Dietetic Association, Coimbatore Chapter. S. Uma Mageshwari, president, Indian Dietetic Association, Coimbatore Chapter, spoke on the necessity of changing lifestyle and dietary habits. K. Chandrasekaran, Head, Department of Physical Education, Madurai Kamaraj University, emphasised on the importance of mental stability which is important to lead a healthy life.
R. Panchapakesan, managing trustee and secretary, Padmabhushan Sri. N. Ramaswami Ayyar Educational Complex, honoured veteran yoga instructor and Padma Shri awardee V. Nanammal on the occasion.

### "Phygital" world

The physical-digital twins have combined to emerge as the "phygital" world to dominate the information technology-driven business arena, according to N. Ganapathy Subramaniam, Chief Operating Officer, TATA Consultancy Services. Delivering the inaugural address of the SASTRA Techno Management Festival - DAKSH 18 at the SASTRA Deemed University, near Thirumalai Samudram in Thanjavur district on Friday, Mr. Ganapathy Subramaniam explained that the "virtual and physical pairing of products or services" would revolutionise the Information Technology industry that was on the cusp of a major technology wave.
Tthe IT sector was always evolving, creating dynamic and exciting opportunity for industry and academia to explore the true potential of digital technologies.

RICE CITY
Nurturing Tomorrow
Rice City Matriculation Higher Secondary School
Railway Road, Aduthurai - 612 101 Ph : 0435 2473350 / 2470138
E-mail : ricecityschool@gmail.com www.ricecity.org

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper

RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018
TN /PMG (CCR) WPP258/2016-18

SCM SHIRTS
A product of Seyad Cotton Mills
Seyad Home
Industries Private Limited
Tirunelveli - 627 003

மணி - 33 சுடர் - 182 | ஹிஜ்ரி 1439 - ஜமா அத்துல் ஆகிர் - 05 | திருவள்ளுவர் ஆண்டு 2048 மாசி - 10 | சென்னை 22,02,2018 வியாழன் | வெளியூர் 23,02,2018 வெள்ளி | http://muslimleaguetn.com/manichudar.asp | பக்கம் 4 | விலை ₹ 3



# ஜமால் முஹம்மது கல்லூரி அப்துல் காதர் நிகாலுக்கு முனைவர் பட்டம்

## தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித் வழங்கினார்

திருச்சி.பிப்22-

ஜமால் முஹம்மது கல்லூரி சுயநிதி பிரிவு நிதியாளர் மற்றும் ஐடி துறை தலைவர் அப்துல்காதர் நிகால் உள்பட கல்லூரியைச் சேர்ந்த பேராசி ரியர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் உள்பட 25 மேற்பட்டோருக்கு பாரதிதாசன் பல்கலைக் கழக பட்டமளிப்பு விழாவில் தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித் முனைவர் பட்டங்களை வழங்கினார். அவர்களுக்கு கல்லூரி நிர்வாகம் சார்பில் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

திருச்சி பாரதிதாசன் பல் கலைக்கழகத்தில் 34வது பட்டமளிப்பு விழா பல் கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது. விழாவுக்கு தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித் தலைமை வகித்தார். பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் பி. மணிசங்கர் அனைவரையும் வரவேற்று பேசினார். இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் செயலாளர் விஞ்ஞானி சிவன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பட்டம் பெறும் மாணவ, மாணவிகளுக்கு பல்வேறு அறிவுரைகளை வழங்கினார். பட்டமளிப்பு விழாவில் உயர் கல்வி துறை அமைச்சர் கேபி. அன்பழகன் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

இந்த பட்டமளிப்பு விழாவில் 1182 பேருக்கு முனைவர் பட்டமும், 1246 பேருக்கு இளங்கலை மற்றும் முதுகலை பட்டம் வழங்கப்பட்டது. இதில் 574 பேர் பெண்கள் முனைவர் பட்டம் பெற்றுள்ளார்கள். இதில் துறையூர் சட்டமன்ற தொகு தியின் முன்னாள் எம்எல்ஏ இந்திராகாந்தியும் முனைவர் பட்டம் பெற்றார். அவருக்கு உயர்கல்வி துறை அமைச்சர் கேபி. அன்பழகன் வழங்கினார்.



ஜமால் முஹம்மது கல்லூரி சுயநிதி பிரிவு நிதியாளர் மற்றும் ஐடி துறை தலைவர் அப்துல் காதர் நிகால் உள்பட கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள உள்பட 25 மேற்பட்டோர் முனைவர் பட்ட பெற்றார்கள். அவர்களுக்கு கல்லூரி தாளாளர் மற்றும் செயலாளர் முனைவர் ஏ.கே. காஜாநஜ் முதீன், பொருளாளர் ஹாஜி எம்.ஜே. ஜமால் முஹம்மது, உதவிச் செயலாளர் முனைவர் அப்துல் சமது, முதல்வர் முனைவர் இஸ்மாயில் மொய்தீன், துணை முதல்வர் முனைவர் முஹம்மது இப்ராஹிம், கூடுதல் துணை முதல்வர் முஹம்மது சகாபுதீன் மற்றும் அனைத்து துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் ஆகயோர்கள் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

### பார் கவுன்சில் தேர்தல் புதிய விதிமுறைகள் விவகாரம்:

# சென்னை உயர் நீதிமன்ற உத்தரவுக்கு உச்சநீதிமன்றம் இடைக்கால தடை

புதுடெல்லி,பிப்.22-

பார் கவுன்சில் தேர்தல் தொடர்பான புதிய விதி முறைகள் குறித்து சென்னை உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

பார் கவுன்சில் தேர்தல் குறித்து புதிய விதிமுறைகள் தொடர்பாக சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை கடந்த பிப்ரவரி 16-ஆம் தேதி உத்தரவு பிறப்பித்திருந்தது. இந்த உத்தரவை எதிர்த்து கே. சந்திரமோகன் உச்சநீதிமன்றத்தில் திங்கள்கிழமை மேல்முறையீட்டு மனுதாக்கல் செய்தார்.

இந்த மனு உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி தீபக் மிஸ்ரா, ஏ.எம். கான்வில்கர், டி. ஒய். சந்திரசூட் ஆகியோர்

RICE CITY
Nurturing Tomorrow
Rice City Matriculation Higher Secondary School
Railway Road, Aduthurai - 612 101 Ph : 0435 2473350 / 2470138
E-mail : ricecityschool@gmail.com www.ricecity.org

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துல் சமது
https://www.facebook.com/Manichudardailypaper

RNI 12728/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018
TN /PMG (CCR) WPP258/2016-18

SCM SHIRTS
SCM A product of Seyad Cotton Mills
Seyad Home
Industries Private Limited
Tirunelveli - 627 003

மணி - 33 சுடர் - 180 | ஹிஜ்ரி 1439 ஜமாஅத்துல் ஆகிர் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2048 மாசி - 08 | சென்னை 20.02.2018 செவ்வாய் | வெளியூர் 21.02.2018 புதன் | http://muslimleaguetn.com/manichudar.asp | பக்கம் 4 | விலை ₹ 3

# திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் அறிவுத்திறன் போட்டி



திருச்சி, பிப்20-

திருச்சி ஜமால் முகமது கல்லூரி கணிதத் துறை மற்றும் டாக்டர்.ஏபிஜே அப்துல் கலாம் சங்கம் சார்பாக மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையிலான அறிவுதிறன் சார் போட்டிகள் ஐந்து போட்டிகள் நடத்தப்பட்டன. இந்நிகழ்ச்சியின் பரிசளிப்பு விழாவிற்கு கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் ஏ.முகமது இப்ராகிம் தலைமை வகித்து தலைமையுரையாற்றினார்.

கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே.காஜா நஜ்முதீன் மற்றும் பொருளாளர் ஹாஜி எம். ஜே. ஜமால் முகமது ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை திண்டுக்கல் காந்திகிராம பல்கலைக்கழக அணிக்கு வழங்கினர். புத்தனாம்பட்டி நேரு நினைவு கல்லூரிக்கு இரண்டாவது இடத்திற்கான பரிசு வழங்கப்பட்டது. பட்டுக்கோட்டை இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் முதன்மை மேலாளர் ஜிசத்தியநாராயணன் கலந்து கொண்டு நிறைவுரையாற்றினார். இவ்விழாவில் தமிழ் நாட்டிலுள்ள பல்வேறு கல்லூரிகளில் இருந்து சுமார் 300 மாணவ-மாணவியர்கள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாகபி.கவுசிக்குமார் வரவேற்புரையாற்றினார். இறுதியாக மாணவ உறுப்பினர் டி. முருகையர் நன்றியுரையாற்றினார். இவ் விழாவிற்கான ஏற்பாடுகளை அமைப்புச் செயலர் என்.முகமது தொய்யுப் உள்பட துறைப் பேராசிரியர்கள் மற்றும் மாணவ உறுப்பினர்கள் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.

லாக் ஆன் செய்யுங்கள்
etamil.thehindu.com
இப்பொழுது டிஜிட்டலிலும்.

தி இந்து
Vol. 6 No. 49 தமிழால் இணைவோம் RNI No.TNTAM/2013/55769

லாக் ஆன் செய்யுங்கள்
etamil.thehindu.com
இப்பொழுது டிஜிட்டலிலும்.

திங்கள், பிப்ரவரி 19, 2018 • சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி ஆகிய நகரங்களில் அச்சாகிறது • திருச்சி பதிப்பு • 16 பக்கங்கள் ₹ 5

எமது பதிப்புகள்: சென்னை, காஞ்சிபுரம், புதுவை, வேலூர், கோவை, சேலம், தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை எமது இணையதளம்: http://tamil.thehindu.com

# புரிந்து படித்தால் தேர்வில் வெற்றி உறுதி

## ‘நீங்களும் ஐஏஎஸ் ஆகலாம்’ நிகழ்ச்சியில் அ.கலியமூர்த்தி பேச்சு

திருச்சி

புரிந்து படித்தால் தேர்வில் வெற்றி பெறுவது உறுதி என திருச்சியில் நடைபெற்ற ‘நீங்களும் ஐஏஎஸ் ஆகலாம்’ நிகழ்ச்சியில் முன்னாள் காவல் கண்காணிப்பாளர் அ.கலியமூர்த்தி தெரிவித்தார்.

‘தி இந்து’ தமிழ் நாளிதழுடன் இணைந்து வெற்றி ஐஏஎஸ் கல்வி மையம் சார்பில் ‘நீங்களும் ஐஏஎஸ் ஆகலாம்’ என்ற வழிகாட்டு நிகழ்ச்சி திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நேற்று நடைபெற்றது. இதில் முன்னாள் காவல் கண்காணிப்பாளரும், தன்னம்பிக்கை பேச்சாளருமான அ.கலியமூர்த்தி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேசியதாவது:

நான் படிக்கும்போதெல்லாம் ஐஏஎஸ் என்றால் என்னவென்றே தெரியாது. சப் இன்ஸ்பெக்டர் வேலையே, பெரிதாக தெரிந்தது. இப்போது அந்த நிலை இல்லை. போட்டித் தேர்வுகள் குறித்த விழிப்புணர்வு மாணவர்களிடமும், இளைஞர்களிடமும் அதிகரித்து காணப்படுகிறது. எனவே, வெற்றியைப் பெற ஒவ்வொருவரும் திட்டமிட்டு உழைக்க வேண்டும்.

எந்த சூழ்நிலையிலும் உன்னுடைய வாழ்க்கையை வழிநடத்தப்போவது உன்னுடைய எண்ணங்களே. எனவே, எண்ணங்களில் கவனம் வையுங்கள். அவை சொற்களாகும். சொற்களில் கவனம் வையுங்கள். அவை செயல்களாக மாறும். செயல்களில் கவனம் வையுங்கள். அவை பழக்கங்களாக மாறும். பழக்கங்களில் கவனம் வையுங்கள். அவை உங்கள் வாழ்க்கையை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்லும்.

நீங்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்றால், முதலில் மனதை கட்டுப்படுத்த வேண்டும். மனதை நீங்கள் கட்டுப்படுத்தவில்லை என்றால், மனது உங்களை கட்டுப்படுத்திவிடும். அதன்போக்கில் சென்றால், நம்மால் வெற்றி பெற முடியாது. மனம் என்பது அற்புதமான பொக்கிஷம். கெட்ட எண்ணங்கள் மனதில் நுழையாமல் பாதுகாக்க வேண்டும். அதுதான், இறுதி வரை நமது வெற்றிக்கான உந்துகோலாக இருக்கும்.





வெற்றி ஐஏஎஸ் கல்வி மையம் சார்பில் திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நேற்று நடைபெற்ற ‘நீங்களும் ஐஏஎஸ் ஆகலாம்’ என்ற வழிகாட்டு நிகழ்ச்சியில் பங்கேற்ற முன்னாள் காவல் கண்காணிப்பாளர் அ.கலியமூர்த்தி, வெற்றி ஐஏஎஸ் கல்வி மைய இயக்குநர் எம்.சண்முகம், வருமான வரித்துறை அதிகாரி பி.சுதந்திரபாலன், டிஎஸ்பி (பயிற்சி) என்.சுரேஷ், ஜமால் முகமது கல்லூரி தாளாளர் ஏ.கே.ஹாஜா நஜிமுதீன் உள்ளிட்டோர். அடுத்த படம். நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களில் ஒரு பகுதியினர்.

நாம் ஏழைதானே, ஆங்கிலம் தெரியாதே,” நம்மால் ஐஏஎஸ் தேர்வில் வெற்றி பெற முடியுமா என்று நினைத்தால், அந்த தாழ்வு மனப்பான்மையை தூக்கிப் போடுங்கள். இலக்கை அடைய முயற்சி செய்தால், உங்களுக்கு உதவி செய்ய உலகமே தயாராக உள்ளது. அறிவை வளர்க்க வேண்டும் என நினைத்தால், நிறைய புத்தகங்கள் படிக்க வேண்டும். படித்தால் மட்டுமே உலகை ஆள முடியும். ஐஏஎஸ் ஆக வேண்டுமென்று முடிவெடுத்துவிட்டால், அதற்கு திட்டமிட்டு உழையுங்கள். பொருள் புரிந்து படித்தால் வெற்றி உறுதி. சிரமமின்றி யாராலும் சிகரத்தை தொட முடியாது. எனவே, இலக்கை அடைய சற்று சிரமப்படுங்கள். தொட்டுவிட்டால், உங்களது சாதனையை உலகம் போற்றும்.

லட்சியம் இல்லாத வாழ்க்கை முகவரியில்லாத கடிதம் போன்றது. என்வே, ஒவ்வொருவரும் ஒரு லட்சியத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அதை அடைய முயற்சி செய்யுங்கள். லட்சியத்தை ஒருபோதும் மாற்றிவிடக் கூடாது. அதை அடைவதற்கான பாதையை வேண்டுமானால் மாற்றிக் கொள். அவ்வாறு செய்தவர்கள் யாரும் தோற்றதாக சரித்திரமில்லை.

VETRII IAS STUDY CIRCLE
Chennai
நடத்தும்
நீங்களும் IAS ஆகலாம்
in association with Media Partner
தி இந்து

தோல்வியைக் கண்டு துவளக் கூடாது. மற்றவர்களின் பேச்சைக் கேட்டு மனம் தளர்ந்துவிடக்கூடாது. தொடர்ந்து முயற்சி செய்தால் நிச்சயம் வெற்றி கிடைக்கும். எந்த சூழ்நிலையிலும் தன்னம்பிக்கையை கைவிட்டுவிடக்கூடாது. தன்னம்பிக்கை இருந்தால் இடையூறுகள் தவிடுபொடியாகும். உழைப்புதான் வெற்றிக்கான மூல ஆதாரம். உழைப்பு இல்லாமல் ஒருவரால் வெற்றி பெற முடியாது. அதேபோல நேரம் மிக முக்கியமானது. ஒவ்வொரு நொடியையும் வீணடிக்காமல் திட்டமிட்டு உழையுங்கள். ஐஏஎஸ் ஆக வேண்டும் என நினைத்து படிக்கத் தொடங்கிவிட்டால், ஆரம்பத்தில் காட்டக்கூடிய அதே உற்சாகத்தை கடைசி வரை நீட்டித்து, தெளிவுடன் படித்தால் எளிதில் வெற்றியை எட்ட முடியும் என்றார்.

### தகுதியை வளர்க்க வேண்டும்

வெற்றி ஐஏஎஸ் கல்வி மைய இயக்குநர் எம்.சண்முகம் பேசும்போது, “யுபிஎஸ்சி, டிஎன்பிஎஸ்சி, ரயில்வே உட்பட பல்வேறு தேர்வுகள் மூலம் ஆண்டுதோறும் சுமார் 60 முதல் 70 ஆயிரம் பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன. இதற்கான தேர்வில் வெற்றி பெற ஒவ்வொருவரும் தங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும். யுபிஎஸ்சி தேர்வுக்கான தயாரிப்பில் ஈடுபட்டால், மற்ற தேர்வுகளை எளிதில் எதிர்கொள்ளலாம். அரசு வேலை நிச்சயம் கிடைத்துவிடும்.

அண்மைகாலமாக அரசு பணிகளுக்கான தேர்வை எழுதக்கூடியவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. அவர்களுடன் போட்டிபோடும் அளவுக்கு நமது தகுதிகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். கடின உழைப்புடன், திட்டமிட்டு படித்தால் நிச்சயம் வெற்றி பெற்று விடலாம்” என்றார்.

### பயிற்சி அவசியம்

2017-ம் ஆண்டு நடைபெற்ற யுபிஎஸ்சி தேர்வில் வெற்றி பெற்று, வருமானவரித்துறையில் ஐஆர்எஸ் அதிகாரியாக தேர்வு செய்யப்பட்டுள்ள பி.சுதந்திரபாலன் பேசும்போது, “ஐஏஎஸ் போன்ற போட்டித் தேர்வுகளில் வெற்றி பெற அவசியம் பயிற்சி தேவை. பயிற்சி மையங்களுக்குச் செல்லும்போதுதான், தேர்வின் தன்மை, தேர்வு எழுதும்போது கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகளை தெளிவாக புரிந்து கொள்ள முடியும். மேலும், தேர்வுக்கு தயாராவதற்கான வழிமுறைகளை தெரிந்து கொள்ளலாம். திட்டமிட்டு படிக்கும் பழக்கம் உருவாகும்” என்றார்.

### உங்களை நம்புங்கள்

2017-ம் ஆண்டில் டிஎன்பிஎஸ்சி குரூப்-1 தேர்வில் வெற்றி பெற்று டிஎஸ்பி பயிற்சியில் உள்ள என். சுரேஷ் பேசும்போது, “போட்டித் தேர்வுகளை எழுதி, அரசு வேலைக்குச் செல்ல வேண்டும் என முடிவு செய்துவிட்டால் முதலில் உங்களை நம்புங்கள். நிச்சயம் வெற்றி பெற்றுவிடுவோம் என நினைத்துக் கொண்டே, தினந்தோறும், திட்டமிட்டு படியுங்கள். சரியான புரிதலுடன், முறையாக படித்தோம் என்றால் எந்த தேர்வுமே மிக எளிதுதான்.

யுபிஎஸ்சி தேர்வுக்கும், டிஎன்பிஎஸ்சி தேர்வுக்கும் பெரிய வித்தியாசம் இல்லை. எனவே, ஒரே சமயத்தில் இரண்டுக்குமே தயாராகலாம். எந்த புத்தகத்தை படித்தாலும், அதிலுள்ளவற்றை புரிந்து படிக்க வேண்டும். கடின உழைப்புடன், தொடர்ந்து முயற்சி செய்து படித்தால் நிச்சயம் அரசு பணி கிடைத்துவிடும்” என்றார்.

திருச்சி ஜமால் முகமது கல்லூரி தாளாளர் ஏ.கே.ஹாஜா நஜிமுதீன், பொருளாளர் ஜார்ஜ் அமலரத்தினம், தமிழக அரசின் வீர தீர செயலுக்கான அண்ணா பதக்கம் வென்ற சீனிவாசன், வெற்றி ஐஏஎஸ் கல்வி மைய முதன்மை மார்க்கெட்டிங் மேலாளர் கே.ரகு உட்பட பலர் பேசினர். ஏராளமான மாணவ, மாணவிகள், இளைஞர்கள் கலந்து கொண்டனர்.




MAKKAL KURAL (Independent National Tamil Daily) 8 பக்கம் விலை ரூ.4.00

# மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

மதுரை பதிப்பு

(மலர்:39 ★ 18.2.2018 ஞாயிறு மாலை ★ வெளியூர் 19.2.2018 திங்கள் ★ இதழ் 265)

Regd. No. TN/SR-21/18–20




# திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் மாநில வரதட்சிணை ஒழிப்பு மாநாடு

*திருச்சி, பிப்.18–*

**ஜமால் முஹம்மது கல்லூரி கைக்கூலி கைவிட்டோர் கழகம் சார்பில் 3வது மாநில அளவிலான வரதட்சினை ஒழிப்பு மாநாடு மற்றும் 33–ம் ஆண்டு பிரதிபலிப்பு இதழ் வெயீட்டு விழா நடைபெற்றது.**

இதில் சிறப்பு விருந்தினர்களாக அரசியல் விமர்சகர் மற்றும் கவிஞர் வீரபாண்டியன், சென்னை மேடவாக்கம் காயிதே மில்லத் கல்லூரி தமிழ் துறைத் தலைவர் காஜா கனி, கல்லூரி தாளாளர் மற்றும் செயலாளர் ஏ.கே. காஜாநங் ஆகியோர் கலந்து கொண்டார்கள். இந்த கழகத்தின் நிர்வாகிகள் நேற்று இரவு இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் தேசிய தலைவர் காதர்மொய்தீன் இல்லத்தில் சந்தித்து வரதட்சினை மாநாடு சிறப்பாக நடந்ததற்கு வாழ்த்துகளை கூறினார்.

ஜமால் முஹம்மது கல்லூரில்1983–ம் ஆண்டு அங்கு படித்த கூத்தநல்லூர் அப்துல் அலீம் மாணவராக இருந்த போது இந்த கழகத்தை தொடங்கினார். பின்னர் 1984–ம் ஆண்டு முறைப்படி இந்த கழகம் பதிவு செய்யப்பட்டது. இந்த கழகம் மூலம் வரதட்சனை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

கைக்கூலி கைவிட்டோர் கழகத்தின் வரதட்சிணை ஒழிப்பு 3 வது மாநில மாநாடு கல்லூரி கலையரங்கத்தில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் எஸ்.இஸ்மாயில் மொய்தீன் தலைமை வகித்து பேசினார். விடுதி ஒருங்கிணைப்பாளர் முஹம்மது சர்புதீன் அனைவரையும் வரவேற்று பேசினார்.

நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்பாக இந்த கழகத்தின் உள்ள ஆண், பெண் நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்பட மாநாட்டில் பங்குபெற்ற சுமார் 1500 மாணவ மாணவிகள், 'தாம் வரதட்சிணை வாங்கவோ,கொடுக்கவோ மாட்டேன்' என உறுதி எடுத்துக் கொண்டனர்.

மாநாட்டின் சிறப்பு விருந்தினராக கவிஞர் வீரபாண்டியன், சென்னை காயிதே மில்லத் கல்லூரியின் தமிழ்த் துறை தலைவர் ஹாஜா கனி ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கைக்கூலி கைவிட்டோர் கழகம் சார்பில் நடத்தப்பட்ட வரதட்சிணை ஒழிப்பு மாநாடு உலகத்தில் எந்த கல்லூரியிலும் நடத்தப்பட வில்லை இந்த கல்லூரியில் தான் முதன் முதலில் பார்க்கிறேன். இதில் சாதி மதம் பேதம் இல்லாமல் இந்த கழகம் செயல்பட்டு வருதாகவும் வரதட்சிணை சம்பந்தமாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார்கள். இவ்வாறு அவர்கள் பேசினார்.

மேலும் மாநாட்டிற்கு சிறப்பு விருந்தினராக கல்லூரின் செயலாளர் ஏ.கே. காஜா நஜ்முதீன், கல்லூரி பொருளாளர் எம்.ஜே.ஜமால் முஹம்மது, கல்லூரி துணைச் செயலர் அப்துஸ் சமது , துணை முதல்வர் ஏ.முஹம்மது இப்ராஹீம், கூடுதல் துணை முதல்வர் முஹம்மது சிகாபுதீன், கைக்கூலி கைவிட்டோர் கழக நிறுவனர் கூத்தநல்லூர் அப்துல் அலிம், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

கல்லூரி சுயநிதி பிரிவு நிதியாளர் மற்றும் ஐ.டி துறை தலைவர் கே.என். அப்துல் காதர் நிஹால், விடுதி இயக்குநர் கே.என். முஹம்மது பாசில்,வருகை பதிவேட்டாளர் மற்றும் விடுதி இயக்குநர் எம்.ஜே. ஜமால் முஹம்மது யாஸீன் ஜுபைர் ,விடுதி இயக்குநர் பி.என்.பி. முகமது சிகாபுதீன், கழக ஆலோசகர் முனைவர் எம்.அப்துல் ஹக்கீம் , விடுதி காப்பாளர்கள் முனைவர் சையது அலி பதுஷா, முனைவர் ஜாகீர் உசேன், முனைவர் பிரச்சான்னா, அப்பாஸ் மந்திரி, ஷேக் இஸ்மாயில் மற்றும் துனை வார்டன்கள் கழகத்தின் முன்னாள் தலைவருர் முஹம்மது முஸ்தாக், முஹம்மது மோரீஸ் அஸ்லம், உபைத்துல்லாஹ் பலர் கலந்து கொண்டனர்.இம்மாநாட்டில் தமிழகத்தில் உள்ள பல்வேறு கல்லூரிகளை சார்ந்த மாணவர்கள் சுமார் 1500 பேர் பங்குபெற்றனர்.

**பிரதிபலிப்பு இதழ் வெளீயிட்டு விழா**

மாநாட்டின் இன்னொரு நிகழ்வாக கழகத்தின் சார்பில் வருடம் தோறும் நடத்தப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளை தொகுத்து 33 வது ஆண்டு பிரதிபலிப்பு இதழ் வெளீயிட்டு விழா நடைபெற்றது. இந்த இதழுக்கு ஆசிரியர்களாக சரவணன், கவின், அஹமது ரிஸ்வான் ஆகியோர் பல்வேறு மாணவர்களிடம் கட்டுரை மற்றும் கவிதைகளை தொகுத்து புத்தக இதழாக வெளிக் கொண்டு வந்தனர். முன்னாள் மாணவர் சென்னையில் தனியார் ஐ.டி துறையில் பணிபுரியும் அப்பாஸ் இந்த புத்தகத்தை வடிவமைத்தார்.

இந்த மலரை கல்லூரி தாளாளர் காஜாநஜ்முதீன், கல்லூரி பொருளாளர் எம்.ஜே. ஜமால் முஹம்மது ஆகியோர் வெளியிட அரசியல் விமர்சகர் மற்றும் கவிஞர் வீரபாண்டியன், காயிதே மில்லத் கல்லூரி தமிழ் துறைத் தலைவர் முனைவர் காஜா கனி ஆகியோர் பெற்றுக் கொண்டார்கள்.

இம்மாநாட்டினை கைக்கூலி கைவிட்டோர் கழகத்தின் தலைவர் எம்.முஹம்மது நியாஸ்.,செயலர் ஜே.முஹம்மது பாயிசுர் ரஹ்மான்.,பொருளாளர் ஏ.முஹம்மது ஆசிப் முஸ்தபா .,உதவும் இதயங்கள் செயலர் பைசல் அஹமது, துணைத் தலைவர்கள் முஹம்மது சபாயத், முஹம்மது இப்ராஹிம், துணைச் செயலாளர்கள் ரியாஸ் கான், சையது சுல்தான், துணை பொருளாளர்கள் எம். இம்ரான், முஹம்மது ரிஸ்வான், அப்பாஸ்,முஹம்மது ஆசிக், முஹம்மது காசிம் மற்றும் கழக உறுப்பினர்கள் மற்றும் கல்லூரி நிர்வாகம் ஆகியோர் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து இருந்தனர். கழகத்தின் முஹம்மது பாயிசூர் ரஹ்மான் நன்றி கூறினார்.

MOHAMAD IDRIS BROS.
KIBS
கிப்ஸ்
HANDLOOM TEXTILES
கிப்ஸ்
■ லுங்கிகள் ■ பனியன்கள்
■ ஜட்டிகள் ■ கைக்குட்டைகள்
தயாரித்து விநியோகிப்பவர்கள்:
முகமது இத்ரீஸ் பிரதர்ஸ் (பி) லிட்.,
5, அரண்மனைக்காரன் தெரு, சென்னை - 600 001.
044 - 2522 1371 / 2522 1372 / 2522 1373

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper

RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018
TN /PMG (CCR) WPP258/2016-18

தரம்
மென்மை
நீடித்த உழைப்பு
999
மார்க் லுங்கிகள்
இது வெறும் நம்பரல்ல. நம்பிக்கை!

மணி - 33 சுடர் - 178 | ஹிஜ்ரி 1439 - ஜமாஅத்துல் ஆகிர் - 01 | திருவள்ளுவர் ஆண்டு 2048 மாசி - 06 | சென்னை 18.02.2018 ஞாயிறு | வெளியூர் 19.02.2018 திங்கள் | http://muslimleaguetn.com/manichudar.asp | பக்கம் 4 | விலை ₹ 3

## திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில்

# வரதட்சணை ஒழிப்பு மாநாடு

### பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீனை சந்தித்து மாணவர்கள் வாழ்த்து பெற்றனர்



திருச்சி, பிப்ரவரி 18-

கைக்கூலி கைவிட்டோர் கழகத்தின் வரதட்சணை ஒழிப்பு 3 வது மாநில மாநாடு கல்லூரி கலையரங்கத்தில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் எஸ்.இஸ்மாயில் மொய்தீன் தலைமை வகித்து பேசினார். விடுதி ஒருங்கிணைப்பாளர் முனைவர் முஹம்மது சர்புதீன் அனைவரையும் வரவேற்று பேசினார்.

நிகழ்ச்சி தொடங்குவதற்கு முன்பாக இந்த கழகத்தின் உள்ள ஆண்.பெண் நிர்வாகிகள் உறுப்பினர்கள் உள்பட மாநாட்டில் பங்குபெற்ற சுமார் 1500 மாணவ மாணவிகள் தாம் வரதட்சிணை வாங்கவோ, கொடுக்கவோ மாட்டேன் என உறுதி எடுத்துக் கொண்டனர்.

மேலும் மாநாட்டிற்கு சிறப்பு விருந்தினராக கல்லூரின் செயலாளர் முனைவர் ஏ.கே. காஜா நஜ்முதீன், கல்லூரி பொருளாளர் எம்.ஜே.ஜமால் முஹம்மது, கல்லூரி துணைச் செயலர் முனைவர் அப்துஸ் சமது , துணை முதல்வர் ஏ.முஹம்மது இப்ராஹீம், கூடுதல் துணை முதல்வர் முஹம்மது சிகாபுதீன், கைக்கூலி கைவிட்டோர் கழக நிறுவனர் கூத்தநல்லூர் அப்துல் அலிம், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

கல்லூரி சுயநிதி பிரிவு நிதியாளர் மற்றும் ஐடி துறை தலைவர் முனைவர் கே.என். அப்துல் காதர் நிஹால், விடுதி இயக்குநர் முனைவர் கே.என். முஹம்மது பாசில்,வருகை பதிவேட்டாளர் மற்றும் விடுதி இயக்குநர் எம்.ஜே. ஜமால் முஹம்மது யாஸீன் ஜுபைர் விடுதி இயக்குநர் முனைவர் பி.என்.பி. முகமது சிகாபுதீன், கழக ஆலோசகர் முனைவர் எம்.அப்துல் ஹக்கீம் , விடுதி காப்பாளர்கள் முனைவர் சையது அலி பதுஷா, முனைவர் ஜாகிர் உசேன், முனைவர் பிரச்சான்னா, அப்பாஸ் மந்திரி, ஷேக் இஸ்மாயில் மற்றும் துணை வார்டன்கள் கழகத்தின் முன்னாள் தலைவருர் முஹம்மது முஸ்தாக், முஹம்மது மோரீஸ் அஸ்லம்,

கழகத்தின் தலைவர் முஹம்மது நியாஸ் தலைமையில் சனிக்கிழமை இரவு பேராசிரியர் கே.எம். காதர்மொகிதீன் இல்லத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றார்கள்.

அப்போது மாணவர்ளிடம் பேசிய பேராசிரியர் கே.எம். காதர்மொய்தீன் : கைக்கூலி கைவிட்டோர் கழகம் சார்பில் நடத்தப்பட்ட வரதட்சனை ஒழிப்பு மாநாடு மற்றும் 33-வது பிரதிபலிப்பு இதழ் வெளீயிட்டு விழாவை சிறப்பாக நடத்திய கல்லூரி நிர்வாகம் மற்றும் கல்லூரி முதல்வர், இந்த கழகத்தை நிறுவிய கூத்தநல்லூர் அலீம் ஆகியோருக்கு தனது வாழ்த்துக்களை தெரிவிப்பதாக இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம். காதர்மொய்தீன் தெரிவித்தார்.

மாநாட்டின் இன்னொரு நிகழ்வாக கழகத்தின் சார்பில் வருடம்தோறும் நடத்தப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளை தொகுத்து 33 வது ஆண்டு பிரதிபலிப்பு இதழ் வெளீயிட்டு விழா நடைபெற்றது. இந்த இதழுக்கு ஆசிரியர்களாக சரவணன், கவின், அஹமது ரிஸ்வான் ஆகியோர் பல்வேறு மாணவர்களிடம் கட்டுரை மற்றும் கவிதைகளை தொகுத்து புத்தக இதழாக வெளிக் கொண்டு வந்தனர். முன்னாள் மாணவர் சென்னையில் தனியார் ஐடி துறையில் பணிபுரியும் அப்பாஸ்

இந்த புத்தகத்தை வடிவமைத்தார்.

இந்த மலரை கல்லூரி தாளாளர் மற்றும் செயலாளர். முனைவர் ஏ.கே. காஜாநஜ்முதீன், கல்லூரி பொருளாளர் எம்.ஜே. ஜமால் முஹம்மது ஆகியோர் வெளியிட அரசியல் விமர்சகர் மற்றும் கவிஞர் வீரபாண்டியன், காயிதே மில்லத் கல்லூரி தமிழ் துறைத் தலைவர் முனைவர் காஜா கனி ஆகியோர் பெற்றுக் கொண்டார்கள்.

கழகத்தின் முஹம்மது பாயிசூர் ரஹ்மான் நன்றி கூறினார்.

FOLLOW US:
thehindu.com
facebook.com/thehindu
twitter.com/the_hindu

SATURDAY, FEBRUARY 17, 2018

THE HINDU

INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

TIRUCHIRAPALLI
CITY EDITION
26 pages • ₹6.00



Blessings of 125 crore Indians are with me for my next exam: Modi
page 9



Rahul forms panel to work out details for next plenary session
page 12



Ranil Wickremesinghe says he will continue as Prime Minister
page 14

Kohli cracks unbeaten century as India wins series 5-1
page 17



PRINTED AT · CHENNAI · COIMBATORE · BENGALURU · HYDERABAD · MADURAI · NOIDA · VISAKHAPATNAM · THIRUVANANTHAPURAM · KOCHI · VIJAYAWADA · MANGALURU · TIRUCHIRAPALLI · KOLKATA · HUBBALLI · MOHALI · MALAPPURAM · MUMBAI · TIRUPATI · LUCKNOW

# Autonomous colleges welcome 'Graded Regulatory Mechanism'

## Say it is a key reform proposed by Ministry of Human Resource Development

**R. KRISHNAMOORTHY**
TIRUCHI

Autonomous colleges of long standing in the region are hoping to benefit from the 'Graded Regulatory Mechanism' proposed by the Ministry of Human Resource Development as a key reform of University Grants Commission.

As per the higher education reform package finalised by NITI Aayog, colleges with high ratings will be able to function with more transparency, freedom, and autonomy. While better performing educational institutes will get more operational autonomy and financial support for starting new research centres, educational institutes below this group will be on watch but continue to get support. The third category of autonomous colleges 'ranked poor' are to remain under government control and if they don't improve after some time, the financial support will be reviewed, according to a recent UGC notification.

Of the over 140 institutions affiliated to the Bharathidasan University in the Central districts, 23 are autonomous colleges, some of which were started decades or even more than a century before the university came into being.

The oldest affiliated aided colleges that was granted autonomous status is the St. Joseph's College, Tiruchi, that was started in 1866. Of the other autonomous colleges of long standing, National College, Tiruchi, was started in 1919, Holy Cross College, Tiruchi, in 1923; Jamal Mohamed College, Tiruchi, and Seethalakshmi Ramaswami College, in 1951; A.V.C College, Mayiladuthurai, in 1955; A.V.V.M. Pushpam College, Poondi, in 1956; and Bishop Heber College, Tiruchi, in 1966. Besides, there are eight government affiliated colleges and four unaided colleges that enjoy autonomous status.

The UGC notification states that "the only safe and better way to improve the quality of under graduate education is to de-link most of the colleges from the affiliating structure", and that under the prevailing system, "colleges do not have freedom to modernise their curricula or make them globally competent, locally relevant and skill oriented to promote employability."

Referring to this factor, managements of autonomous colleges hold the view that the UGC notification would require the parent (Bharathidasan) university to play an effective facilitating role for the transition. As the UGC intends to play an active role in this regard, there will henceforth be an appreciable level of transparency in grant and renewal of autonomy. "The autonomous colleges have been waiting for this reform for a long time," a college principal said on condition of anonymity, pointing out that there have been instances of the university preventing some of the autonomous colleges from increasing intake of students in recent years.

The UGC has promised to the autonomous colleges assistance for upgrade of syllabus, redesigning of courses, exam reforms, and capacity building of teachers. The UGC's reform will, in the future, pave way for colleges to formulate new courses/programmes within the nomenclature specified by UGC, the principals say.

Since the autonomous colleges are free to start UG, PG diploma or certificate courses and issue certificates under their seals without prior approval of the university, and also fix the fee for the courses at their own level, revenue generation will also improve considerably, another principal said.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

சனிக்கிழமை
17 பிப்ரவரி 2018
திருச்சி
14 பக்கங்கள் ரூ.5

# 'சமூகப் புரட்சியால் மட்டுமே வரதட்சிணை ஒழிப்பு சாத்தியம்'

**திருச்சி, பிப்.16:** சட்டத்தால் மட்டும் வரதட்சிணையை ஒழிக்க முடியாது. மாணவர்களிடையே எழும் சமூகப் புரட்சியால் மட்டுமே ஒழிக்க முடியும் என காயிதே மில்லத் கல்லூரியின் தமிழ்த்துறைத் தலைவர் ஜே. ஷாஜாகனி பேசினார்.

திருச்சி ஜமால்முகமது கல்லூரியின் கைக்கூலி கைவிட்டோர் கழகம் சார்பில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற மாநில அளவிலான வரதட்சிண்ண ஒழிப்பு மாநாட்டில் அவர் பேசியது: இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் நம் பைந்தமிழ் நாட்டில் வரதட்சிணை என்ற தீய பழக்கம் இருந்ததற்கான சுவடுகள் காணப்படவில்லை. சங்க இலக்கியங்களில்சான்றேயில்லை. மேலும், வரம் என்பதும், தட்சிணை என்பதும் தமிழ் சொல் இல்லை. எனவேதான், வரதட்சிணை என்பதற்கு பதிலாக தூய தமிழில் கைக்கூலி என பெயரிட்டு அதனை கைவிட்டோர்கழகம் என்ற அமைப்பை உருவாக்கி நாளைய சமுதாயம் வரதட்சிணை பெறாத சமூகமாக மாற்ற நடவடிக்கை எடுத்திருப்பது பாராட்டுக்குரியது. வரதட்சிணைக்கு எதிரான செயல்பாட்டை கல்லூரியில் தொடங்கியிருப்பதும், ஆண்டுதோறும் மாநாடு நடத்துவதும் சாலச்சிறந்தது. வரதட்சிணையை ஒழிக்க சட்டம் இயற்றியிருந்தாலும் அதனால் மட்டுமே ஒழிக்க முடியாது. அறச்சீற்றத்தால் மட்டுமே சாத்தியமாகும். இதற்கு சமூகப்புரட்சி ஏற்பட வேண்டும் என்றார்.



திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற வரதட்சிணை ஒழிப்பு மாநில மாநாட்டில், விழா மலரை வெளியிடும் கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன், செயலர் காஜா நஜீமுதீன், கவிஞர் திரு. வீரபாண்டியன், முனைவர் ஜே. ஹாஜாகனி.

நிகழ்ச்சியில், கவிஞர் திரு. வீரபாண்டியன் பேசுகையில், பல் வேறு மதங்கள், மார்க்கங்கள் வரதட்சிணை கூடாது என வலியுறுத்தி வந்தாலும், மார்க்க சட்டத்திலேயே அதனை இடம்பெறச் செய்து முன்னோடியாக விளங்குவது இஸ்லாம் மார்க்கம் மட்டுமே. மேலும், பெண்ணுக்கு மஹர் கொடுத்து திருமணம் செய்து வழக்கத்தையும் கொண்டுள்ளது. இந்த வகையில் ஜமாமல் முகமதுகல்லரியில் வரதட்சிணைக்கு எதிராக ஒரு கழகத்தை தொடங்கி, மாணழர்கள் அனைவரும் வரதட்சிணை வாங்க மாட்டோம் எனவும், மாணவிகள் கொடுக்க மாட்டோம் என உறுதிமொழியேற்பது பாராட்டுக்குரியது. இது அனைத்துக் கல்லூரிகளுக்கும் பரவ வேண்டும் என்றார்.

மாநாட்டுக்கு, கல்லூரியின் முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன் தலைமை வகித்தார். கல்லூரி நிர்வாகக் குழுச் செயலர் ஏ.கே. காஜா நஜீமுதீன் மாநாட்டு மலரை வெளியிட்டார். கைக்கூலி கைவிட்டோர் கழகத்தலைவர் முகமது நியாஸ், செயலர் பாயிஸுர் ரஹ்மான், பொருளாளர் ஆசிப் முஸ்தபா, நிறுவனத்தலைவர் அப்துல் அலீம், உதவும் இதயங்கள் செயலர் பைசல் அகமது ஆகியோர் வாழ்த்திப் பேசினர். இந்த மாநாட்டில், கல்லூரி நிர்வாகத்தினர், பேராசிரியர்கள், மாணவர், மாணவிகள், பெற்றோர் என பலர் கலந்து கொண்டனர்.

லாக் ஆன் செய்யுங்கள்
etamil.thehindu.com
இப்பொழுது டிஜிட்டலிலும்.

தி இந்து
Vol. 6 No. 47 தமிழால் இணைவோம் RNI No.TNTAM/2013/55769
சனி, பிப்ரவரி 17, 2018 • சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி ஆகிய நகரங்களில் அச்சாகிறது • திருச்சி பதிப்பு • 24 பக்கங்கள் ₹6
எமது பதிப்புகள்: சென்னை, காஞ்சிபுரம், புதுவை, வேலூர், கோவை, சேலம், தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை எமது இணையதளம்: http://tamil.thehindu.com

அஜந்தா ₹10
044-43554397

வெற்றி ஐஏஎஸ் கல்வி மையம் நடத்தும்

# நீங்களும் ஐஏஎஸ் ஆகலாம் விழிப்புணர்வு பயிலரங்கு

• திருச்சியில் நாளை நடைபெறுகிறது

■ திருச்சி

சென்னை அண்ணா நகரை தலைமையிடமாகக் கொண்டு ஐஏஎஸ் மற்றும் டிஎன்பிஎஸ்சி தேர்வுகளுக்கு பயிற்சியளிக்கும் வெற்றி ஐஏஎஸ் கல்வி மையம் சார்பில் நீங்களும் ஐஏஎஸ் ஆகலாம் என்ற வழிகாட்டு நிகழ்ச்சி திருச்சி டிவிஎஸ் டோல்கேட் அருகிலுள்ள ஜமால் முகமது கல்லூரி வளாகத்தில் நாளை (பிப்.18) நடைபெற உள்ளது.

ஐஏஎஸ், ஐபிஎஸ் ஆக வேண்டும் என்ற கனவு பலருக்கும் உண்டு. ஆனால், தேர்வு முறை, எப்படி படிக்க வேண்டும், சரியான பயிற்சி மையத்தை தேர்ந்தெடுப்பது எப்படி, எப்போது படிக்கத் தொடங்க வேண்டும் என ஏராளமான கேள்விகள் அவர்களுக்குள் தோன்றும்.

இந்த கேள்விகளுக்கு விடையளிக்கும் வகையிலும், ஐஏஎஸ், டிஎன்பிஎஸ்சி தேர்வு குறித்த விரிவான விளக்கம், படிக்க வேண்டிய புத்தகங்கள், படிக்கும் முறைகள், எழுத்துப் பயிற்சி போன்ற பல வினாக்களுக்கு தெளிவைத் தரும் நோக்கில் இந்த நிகழ்ச்சி மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோருக்கும் என இங்கு நடத்தப்படுகிறது.

பிளஸ் 2 படிக்கும் மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் இந்த கருத்தரங்கில் பங்கேற்கலாம். பட்டப் படிப்பு படிக்கத் தொடங்கும்போதே இதற்குத் தயார் செய்வது எப்படி, எந்த படிப்பை தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது குறித்து விரிவான விளக்கம் அளிக்கப்படும்.

VETRII IAS STUDY CIRCLE
Chennai
நடத்தும்
நீங்களும் ஆகலாம்
தி இந்து

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நாளை (பிப்.18) காலை 9 மணிக்கு நடைபெற உள்ள இந்த நிகழ்ச்சியில், திருச்சி மாவட்ட முன்னாள் காவல்துறை கண்காணிப்பாளர் ஏ.கலியமூர்த்தி, 2017-ம் ஆண்டு வெற்றி ஐஏஎஸ் கல்வி மையத்திலிருந்து, ஐஏஎஸ் தேர்வில் வெற்றி பெற்ற சுதந்திரபாலன் ஐஆர்எஸ், டிஎன்பிஎஸ்சி குரூப் 1 தேர்வில் வெற்றி பெற்று காவல்துறை துணை கண்காணிப்பாளராக தேர்வாகியுள்ள என்.சுரேஷ், வெற்றி ஐஏஎஸ் கல்வி மையத்தின் இயக்குநர் மு.சண்முகம் மற்றும் கல்வி மைய முதுநிலை பயிற்சியாளர் கே.நந்தகுமார் உள்ளிட்டோர் பங்கேற்று கருத்துரையாற்ற உள்ளனர். இதைத் தொடர்ந்து ஐஏஎஸ் மற்றும் டிஎன்பிஎஸ்சி தேர்வுகளுக்கு சென்னையில் பயிற்சி பெற விரும்பும் மாணவர்களுக்கு கட்டணச் சலுகை தேர்வு (Scholarship Test) எளிமையான வினாக்களுடன் நடத்தப்பட உள்ளது.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கும் அனைவருக்கும் பாடத்திட்டக் கையேடு, வெற்றியின் நடப்பு நிகழ்வுகள் புத்தகம் இலவசமாக வழங்கப்படும். இதில் பங்கேற்க விரும்புவோர் 96001 24042, 98400 97666 ஆகிய செல்போன் எண்களுக்கு தங்களது பெயர், கல்வித்தகுதி, தொடர்பு எண் உள்ளிட்ட விவரங்களை குறுந்தகவலாக (SMS) அனுப்பியோ அல்லது போனில் பேசி தொடர்பு கொண்டோ பதிவு செய்து கொள்ளலாம்.

FOLLOW US:
thehindu.com
facebook.com/thehindu
twitter.com/the_hindu

THURSDAY, FEBRUARY 15, 2018

# THE HINDU

INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

TIRUCHIRAPALLI
CITY EDITION
20 pages • ₹6.00


We don't communalise our martyrs, says Lt. Gen. Devraj Anbu
Page 12


Iranian President Hassan Rouhani to arrive in India today
Page 13


Ratan Tata's name figures in graft case against Netanyahu
Page 14

IPL-2018 schedule announced, MI to meet CSK in opener
Page 17


PRINTED AT · CHENNAI · COIMBATORE · BENGALURU · HYDERABAD · MADURAI · NOIDA · VISAKHAPATNAM · THIRUVANANTHAPURAM · KOCHI · VIJAYAWADA · MANGALURU · TIRUCHIRAPALLI · KOLKATA · HUBBALLI · MOHALI · MALAPPURAM · MUMBAI · TIRUPATI · LUCKNOW

# Volleyball champions




The triumphant Jamal Mohamed College volleyball squad.

**SPECIAL CORRESPONDENT**
TIRUCHI

Jamal Mohamed College and Bishop Heber College 'A' won the men's and women's titles respectively in the Tiruchi district volleyball championship here recently.

The two-day tournament, organised by Tiruchi District Volleyball Association at the Anna Stadium, was conducted on knock-out basis. It attracted 24 teams in the men's section and eight teams in the women's category.

In the men's final, Jamal Mohamed College defeated YMIA Volleyball Club, Lalgudi, while in the women's summit clash Bishop Heber College 'A' team prevailed over Bishop Heber College 'B' team.

R.S. Tamilselvan, chairman, Tiruchi District Volleyball Association, gave away the prizes.



# தினகரன்

ஒரு புதிய அனுபவம்

www.dinakaran.com
/dinakarannews
/dinakaranonline



ரஜினியுடன் கூட்டணி சேர மாட்டேன் பக்கம் 11



சென்னை பெருநகர விரிவாக்கம் சாதகமா, பாதகமா? பக்கம் 6

கறித்துண்டை போல வியாபாரம் செய்வதா? பக்கம் 14

● திருச்சி ● திங்கள், பிப்ரவரி 12, 2018 ● சென்னை ● புதுவை ● வேலூர் ● சேலம் ● கோவை ● திருச்சி ● மதுரை ● நெல்லை ● நாகர்கோவில் ● பெங்களூர் ● மும்பை ● டெல்லி ● கதிர் 39 ஒளி 248 ● 20 பக்கம் ₹5


## மாவட்ட அளவில் வாலிபால் போட்டி

திருச்சி, பிப்.12: திருச்சி அண்ணாவிளையாட்டரங்கில் மாவட்ட வாலிபால் கழகம் சார்பில் மாவட்ட அளவிலான வாலிபால் போட்டி இரண்டு நாட்கள் நடந்தது. இதில்திருச்சிமாவட்டத்திலிருந்து24ஆண்கள் அணியும், 8பெண்கள் அணிகளும்கலந்துகொண்டுதனித்தனியே விளையாடியது. இதில்ஆண்களுக்கானஇறுதிப்போட்டியில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணி வெற்றி பெற்றது. இதனை எதிர்த்து விளையாடிய லால்குடி ஓய் எம்ஐஏ கிளப் அணிரன்னராகதேர்வானது. இதேபோல் பெண்கள் பிரிவில் பிஷப்ஹீபர் கல்லூரியின் ஏ அணி வெற்றி பெற்றது. எதிர்த்து விளையாடிய அதே கல்லூரியைச்சேர்ந்தபி அணிரன்னராகதேர்வானது. மாவட்ட வாலிபால் கழக தலைவர் பிச்சையப்பா, வாலிபால் கழகசேர்மன் தமிழ்செல்வன் ஆகியோர் வெற்றிபெற்ற அணிகளுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டினர்.

சென்னை கோவை சேலம் திருச்சி மதுரை நெல்லை நாகர்கோவில் வேலூர் புதுவை

தமிழ் முரசு

நம்பர் 1 மாலை நாளிதழ்

www.tamilmurasu.org

திருச்சி 13.2.2018 செவ்வாய் ★

● முரசு 21 ● ஓசை 27 ● 8 பக்கம் ● ₹4




போலீஸ்
நிலையத்தை
திருநங்கைகள்
முற்றுகை
பக்கம்... 3

## மாவட்ட வாலிபால் போட்டி

# பிஷப், ஜமால் கல்லூரி அணிகள் வெற்றி




**திருச்சியில் நடந்த மாவட்ட அளவிலான வாலிபால் போட்டியில் பெண்கள் பிரிவில் வெற்றி பெற்ற பிஷப்ஹீபர் கல்லூரி அணிக்கு சுழற்கோப்பை மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.**

**திருச்சி, பிப்.13–**

திருச்சி மாவட்ட வாலிபால் கழகம் சார்பில் மாவட்ட அளவிலான ஆண்கள், பெண்களுக்கான வாலிபால் போட்டிகள் அண்ணா விளையாட்டரங்கில் 2 நாட்கள் நடந்தன. ஆண்கள் பிரிவில் 24 அணிகளும், பெண்கள் பிரிவில் 8 அணிகளும் கலந்துகொண்டன. பெண்கள் பிரிவில் பிஷப்ஹீபர் கல்லூரி ஏ அணி முதலிடத்தையும், பிஷப்ஹீபர் கல்லூரி பி அணி இரண்டாம் இடத்தையும் வென்றன.

ஆண்கள் பிரிவில் ஜமால் முகமது கல்லூரி அணி முதலிடத்தையும், லால்குடி ஒய்எம்ஐஏ அணி இரண்டாம் இடத்தையும் பிடித்தன.

பரிசளிப்பு விழாவுக்கு திருச்சி மாவட்ட வாலிபால் கழக தலைவர் தங்க. பிச்சையா தலைமை வகித்தார்.

வெற்றி பெற்றவர்களுக்கு திருச்சி மாவட்ட வாலிபால் கழக சேர்மன் தமிழ்செல்வன் சுழற்கோப்பை மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். உதவி தலைவர் முத்துசுப்ரமணியம், செயலாளர் கோவிந்தராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முட்டு வலிக்கு முற்றுப்புள்ளி...
அதி நவீன முட்டு மாற்று அறுவை சிகிச்சை
ஜி.வி.என். மருத்துவமனை
சிங்காரத்தோப்பு, சூப்பர் பஜார், திருச்சி - 620 008.
0431-2700712, 2700811, 2705979, 2703945

-TPTC Edition-
தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

பூமெக்ஸ்
பனியன்கள் • ஜட்டிகள்
Poomex

திருச்சி • செவ்வாய் • பிப்ரவரி 6, 2018 • சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் • 16 பக்கம் • 600 காசு • மலர் 67 • இதழ் 153

# மாஸ்டர் மைண்ட் பயிலரங்கு திருச்சியில் நாளை நடக்கிறது

**திருச்சி, பிப். 6-**

*திருச்சியில் நாளை (7ம் தேதி) மாஸ்டர்மைண்ட் பயிலரங்கு நடைபெறுகிறது.*

திருச்சி உட்பட 8 மாவட்டங்களை சேர்ந்த கலை அறிவியல் கல்லூரி மாணவ, மாணவிகளின் ஆக்கத் திறனை வெளிக்கொண்டு வரும் வகையில் கடந்த 14 ஆண்டுகளாக மாஸ்டர் மைண்ட் பயிலரங்கு நடத்தப்படுகிறது. நாளை (7ம் தேதி) 15வது ஆண்டாக மாஸ்டர் மைண்ட் பயிலரங்குதிருச்சி சங்கம் ஓட்டலில் காலை 10 மணிக்கு நடைபெறுகிறது.

இதில் 8 மாவட்டத்தை சேர்ந்த 150 மாணவ, மாணவிகள் பங்கேற்க உள்ளனர். ஜமால் முகமது கல்லூரி முதல்வர் இஸ்மாயில் மொய்தீன் பயிலரங்கை தொடங்கி வைக்கிறார். மாலையில் நடக்கும் பரிசளிப்பு விழாவில் தேசிய கல்லூரி முதல்வர் சுந்தரராமன் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ள உள்ளார்.

பயிலரங்கில் முதலாவதாக 'இந்தியா குவிஸ்' வினாடி வினா போட்டியும், தொடர்ந்து குழு விவாதம், மூன்றாவதாக 'நேர்காணல்' ஆகியவை நடைபெறும்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் ஜோசப் கல்லூரி முன்னாள் துணை முதல்வர் பேராசிரியர் பாலகிருஷ்ணன், ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் தேவராஜ், அர்ச்சனாஸ்வீட்ஸ் உரிமையாளர்ராஜமாணிக்கம் ஆகியோர் செய்து வருகின்றனர்.

மாண்புமிகு இந்து அறநிலையத்துறை இணை ஆணையர், திருச்சிராப்பள்ளி
முன்பாக
பல்வகை மனு எண். 5/2016
(அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோயில் வெட்டிவயல், அறந்தாங்கி வட்டம், புதுக்கோட்டை மாவட்டம், பரம்பரை அறங்காவலர், வாரிசு அங்கீகாரம் சம்பந்தமாக)
கே.சரவணன்,
த/பெ.லேட்.கதிரேசன் பிள்ளை,
வெட்டிவயல், அறந்தாங்கிவட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம்.
...மனுதாரர்
எதிராக
யாருமில்லை ..எதிர்மனுதாரர்
திருநாவுக்கரசு,
த/பெ.லேட். கதிரேசன் பிள்ளை,
வெட்டிவயல், அறந்தாங்கிவட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம்.
...3ம் நபர்
3ம் நபருக்கு அறிவிப்பு

MOHAMAD IDRIS BROS.
KIBS கிப்ஸ்
HANDLOOM TEXTILES
கிப்ஸ்
■ லுங்கிகள் ■ பனியன்கள்
■ ஜட்டிகள் ■ கைக்குட்டைகள்
தயாரித்து விநியோகிப்பவர்கள்:
முகமது இதிரீஸ் பிரதர்ஸ் (பி) லிட்.,
5, அரண்மனைக்காரன் தெரு, சென்னை - 600 001.
044 - 2522 1371 / 2522 1372 / 2522 1373

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : பன்னூல் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper

RNI 42726/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018
TN /PMG (CCR) WPP256/2016-18

SCM SHIRTS
A product of Seyad Cotton Mills
Seyad Home
Industries Private Limited
Tirunelveli - 627 003

மணி - 33 சுடர் - 163 | ஹிஜ்ரி 1439 - ஜுமாதல் அவ்வல் - 16 | திருவள்ளுவர் ஆண்டு 2048 தை - 21 | சென்னை 03.02.2018 சனி | வெளியூர் 04.02.2018 ஞாயிறு | http://muslimleaguetn.com/manichudar.asp | பக்கம் 4 | விலை ₹ 3



## திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் மாற்றுதிறனாளிகளுக்கான விளையாட்டு போட்டி

### கைக்கூலி கைவிட்டோர் கழகம் சார்பில் நடைபெற்றது

திருச்சி, பிப்.03-

ஜமால் முஹம்மது கல்லூரி கைக்கூலி கைவிட்டோர் கழகம் சார்பில் மாற்று திறனாளிகளுக்கு விளையாட்டு போட்டியில் டால்பின் சிறப்பு பள்ளி முதல் பரிசையும், விடிவெள்ளி சிறப்பு பள்ளி இரண்டாவது பரிசையும் வென்றது இவர்களுக்கு பரிசு கோப்பை மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

ஜமால் முஹம்மது கல்லூரியின் கைக்கூலி கைவிட்டோர் கழகத்தின் சார்பில் மதத்-2018 என்ற பெயரில் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கான ஒருநாள் விளையாட்டு போட்டி மற்றும் கலை நிகழ்ச்சிகள் காஜாமியான் விடுதியில் காலை முதல் மாலை வரை நடைபெற்றது.

இந்நிகழ்வில் திருச்சியில் உள்ள சுமார் 15 க்கும் மேற்பட்ட பள்ளியில் இருந்து 400 க்கும் மேற்பட்ட மாற்றுத்திரன் கொண்ட மாணவர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்தினர். இதில் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டது. இதில் மாற்று திறனாளிகள் தங்களது திறமைகளை வெளிப் படுத்தி னார்கள். அதுமட்டுமல்லாமல் அவர்கள் நடத்திய கலை நிகழ்ச்சிகள் அனைத்து வியப்பாக இருந்தது. மாற்று திறனாளிகள் என்பதை மறந்து விட்டு சகல மனிதர்கள் எப்படி இருப்பார்களோ அதே போன்று தங்களது திறமைகளை வெளிப்படுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக கல்லூரி யின் செயலர் மற்றும் தாளாளர் முனைவர் ஏ.கே.காஜா நஜ்முதீன் கல்லூரின் பொருளாளர் ஹாஜி எம்.ஜே. ஜமால் முஹம்மது, துணைச் செயலர் முனைவர் அப்துல் சமது, ப முதல்வர் எஸ். இஸ்மாயில் முஹைதீன், துணை முதல்வர் முனைவர் முஹம்மது இப்ராஹிம், கூடுதல் துணை முதல்வர் ணை முதல்வர் முஹம்மது சிகாபுதீன், கல்லூரின் இயக்குநர் முனைவர் அப்துல் காதர் நிஹால், விடுதி நிர்வாக இயக்குநர் முனைவர் முஹம்மது பாசில், விடுதி நிர்வாக இயக்குநர் ஜமால் முஹம்மது யாஸீன் ஜுபைர் ஆகியோர் கலந்து பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற. மாற்று திறனாளிகள் மாணவ மாணவியருக்கு பரிசுகளை வழங்கினார்கள்.

இந்த ஆண்டில் டால்பின் சிறப்பு பள்ளி முதல் பரிசையும். விடிவெள்ளி சிறப்பு பள்ளி இரண்டாவது பரிசையும் வென்றது. இவர்களுக்கு பரிசு கோப்பை மற்றும் சான்றிதழ்கள் வழங்கப் பட்டது.

விழாவில் விடுதி இயக்குநர் பி.என்.பி முகமது சகாபுதீன், விடுதி ஒருங்கிணைப்பாளர் முனைவர் முஹம்மது சர்புதீன் கழக ஆலோசகர் முனைவர் எம்.அப்துல் ஹக்கீம், விடுதி காப்பாளர்கள் முனைவர் சையது அலி பாதுஷா, முனைவர் பிரச்சன்னா. ஜாகீர் உதவும் இதயங்கள் நிறுவனர் அப்துல் ஜாவித், கழகத்தின் முன்னாள். நிர்வாகிகள் ஆஷிக். , முன்னாள் உதவும் இதயங்கள் செயலர் ஜாபர், அமீர் சுஹைல் தலைமை எடிட்டர் அலி, முன்னாள் தலைவர் முஹம்மது ஷபிக், முன்னாள் செயலாளர் உவைஸ், முன்னாள் துணைத் தலைவர் ஷேக், உதவும் இதயங்கள் செயலர் ரியாஸ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியை கைக்கூலி கைவிட்டோர் கழகம் மற்றும் உதவும் இதயங்கள் சேர்ந்த நிர்வாகிகள் தலைவர் முஹம்மது நியாஸ், செயலர் முஹம்மது பாயிசுர் ரஹ்மான், பொருளாளர் முஹம்மது ஆசிப் முஸ்தபா, உதவும் இதயங்கள் செயலர் பைசல் அஹமது, கழக துணை செயலர் ரியாஸ் கான் மற்றும் உறுப்பினர்கள் ஏற்பாடு செய்தனர்.

FOLLOW US:
thehindu.com
facebook.com/thehindu
twitter.com/the_hindu

FRIDAY, JANUARY 26, 2018

THE HINDU

INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

TIRUCHIRAPALLI
CITY EDITION
42 pages • ₹6.00



'Those who killed Muslims and burnt Dalits attack our children'
page 9



Defend justice, liberty, equality and fraternity, Rahul tells citizens
page 12



Donald Trump willing to testify under oath in Russia probe
page 14

Bumrah limits South Africa's lead to seven in the third Test
page 17



PRINTED AT · CHENNAI · COIMBATORE · BENGALURU · HYDERABAD · MADURAI · NOIDA · VISAKHAPATNAM · THIRUVANANTHAPURAM · KOCHI · VIJAYAWADA · MANGALURU · TIRUCHIRAPALLI · KOLKATA · HUBBALLI · MOHALI · MALAPPURAM · MUMBAI · TIRUPATI · LUCKNOW

# JASA basketball tournament from Jan. 31

TN ROUND-UP

COIMBATORE: Jayalakshmi Sports Academy will conduct the JASA 2018 all-India basketball tournament for colleges (men and women) and school girls at the VOC Park Corporation Sports Complex courts here from January 31 to February 4.

Loyola College, SRM University, Sathyabama University (all Chennai), Mar Ivanios, SB College (both Kerala), PSGCAS and GRD College of Science (both Coimbatore) have confirmed participation in the men's section. MOP Vaishnav, Hindustan University, SRM (all Chennai), PSGCAS, PSGR Krishnammal (Coimbatore) and a host of others will contest in the women's section.

The event for the school girls is being conducted for the first time. The idea is to provide a platform for them to understand the sport better and move to the next level. The tournament will be played on a league basis. There will be cash prizes for the top-four finishers in both the men's and women's sections.

### Chess tournament

The Coimbatore District Chess Association will conduct a district-level selection tournament for the under-7, 11, 15 and 19 age group boys and girls at the Krishna Gounder Kalyana Mandapam on January 28.

The tournament is sponsored by Salzer Electronics Ltd. For details, contact M. Vinod Kumar at 98844 03988 or T. Naveen at 80567 79502.



**Topping the charts:** Jamal Mohamed (Tiruchi), winner of the State-level ball badminton tournament at the PSGCAS courts in Coimbatore recently. • SPECIAL ARRANGEMENT

### Double for Lokesh

Lokesh Viswanathan of PSG College of Arts and Science clinched a double in the 35th State-level inter-collegiate badminton tournament for the PSG Trophy. Shamitha Devi made it doubly sweet for the hosts, finishing on top in the women's section.

**The results: Badminton: Men (semifinal league):** Lokesh Viswanathan (PSGCAS) bt Athithyan (PSGCAS) 21-13, 21-13; P. Naveen (PSGCAS) bt Martin Thomas (PSGCAS) 21-18, 21-17; Lokesh bt Martin Thomas 21-13, 21-12; P. Naveen bt Athithyan 21-13, 21-11; Lokesh bt P. Naveen 22-24, 21-19, 21-9; Athithyan bt Martin Thomas 21-13, 21-14. **Final standings:** 1. Lokesh, 2. P. Naveen, 3. Athithyan, 4. Martin Thomas.

**Doubles (final):** Lokesh & Naveen bt Arun Brun & Navin (PSGCAS) 22-20, 21-14.

**Women (semifinal league):** Shamitha Devi (PSGCAS) bt Dharshana (PSGCAS) 21-18, 21-17; Shaarika (Karunya) bt Vaisanave (GVG) 21-19, 24-22; Shamitha bt Vaisanave 21-7, 21-9; Shaarika bt Dharshana 21-18, 21-17; Vaisanave bt Dharshana 16-21, 21-16, 21-12; Shamitha bt Shaarika 21-14, 21-14. **Final standings:** 1. Shamitha, 2. Shaarika, 3. Vaisanave, 4. Dharshana

**Ball badminton (semifinal league):** PSGCAS bt St. Joseph's (Tiruchi) 35-28, 35-30; Jamal Mohamed (Tiruchi) bt STC (Pollachi) 35-22; 39-27; PSGCAS bt STC 35-21, 36-34; Jamal Mohamed bt St. Joseph's 35-21, 35-27; STC bt St. Joseph's 35-30, 35-29; Jamal Mohamed bt PSGCAS 35-33, 35-24.

**Final standings:** 1. Jamal Mohamed; 2. PSGCAS; 3. STC; 4. St. Joseph's.

**Table tennis: Men: Final standings:** 1. Pravin Kumar (PSGCAS); 2. Javahar (PSGCAS); 3. Shiek Abdullah (Jamal Mohamed); 4. Murali (Jamal Mohamed). **Doubles: Final:** 1. Pravin Kumar & Javakar (PSGCAS) bt Shiek Abdullah & Murali (Jamal) 11-9, 11-4, 9-11, 11-6. **Women: Final standings:** 1. Mahima Hain (SSN CE, Chennai); 2. Kezia Sharon (SSN); 3. Rhea Nihal (PSGCAS); 4. Sakthi Rajeswari (PSGCAS).

### Easy for Carmel MHSS

At Erode, Carmel MHSS scored a 37-run win over Vijay Vikas in the DCAE under-13 inter-school cricket tournament on Thursday.

**The scores:** Carmel MHSS 97 for seven in 25 overs bt Vijay Vikas 40 in 12 overs (S. Sanjay three for nine); C.S. Academy 164 for two in 25 overs (Mayank Nahar 58 n.o, A. Shudharshan 41 n.o) bt Geethaanjali SSS 79 for eight in 25 overs; Saratha MHSS 119 for five in 25 overs lost to Sagar International 121 for five (K. Rahul 39 n.o).

### Loga scalps five

At Sivakasi, Loga Muthumari's five for 29 ensured Gladiators' 33-run win over Allwin in the Virudhunagar DCA second division league.

**The scores: I div:** Sivakasi Town 265 for six 40 overs (Suryaprakash 56, Muthukumar 55, Shailendra Babu 51) bt Sattur Town 169 in 31.1 overs (Neelamekam 25, Sathesh Kumar three for 19).

Red Rose 143 in 29.5 overs (Vijay 27, Bala three for 14, Ajay three for 46) lost to Liberty 146 for five in 27.1 overs (Gurunathan 33, Gouse Maiden 32 n.o., Gnanam three for 34).

Kalasalingam University 231 for eight in 40 overs (Sai Gireesh 81, Shankar Ganesh 50, Kanaga Rengadurai 34, Bharath three for 42).

**II div:** Gladiators 164 for eight in 25 overs (Gomathi 35, Muthukumar 26, Marimuthu 25 n.o., Ruban three for 30) bt Allwin 131 in 21 overs (Dinesh 29, Loga Muthumari five for 29).

Mepco EC 184 for seven in 25 overs (Gautham 31, I. Gowtham 29, Govintharaj three for 47) bt Miraculous 176 for nine in 25 overs (Karthick Deva 48, Arun Pandiyan 37, Varun Kalyanaraman three for 28).

### Vijay smashes 205

At Karaikudi, Vijay Pandian blasted 205 and picked up four wickets to help Karaikudi Town thrash TCPL by 199 runs in the second division of the Sivagangai DCA league.

In another second division match, K. Dinesh's spell of five for nine helped Knights beat Star Birds by 66 runs.

V. Balasubramanian's destructive spell of seven for 24 helped Senshare register a massive 247 run win over B. Tech in the third division.

**The scores: I div:** ACCET 117 in 30.2 overs (S. Vinoth 29, Mohammed Ithris four for 10, J. Karthikeyan four for 44) lost to Devakottai A 118 for one in 15.1 overs (M. Surendran 52 n.o., K. Vignesh 51).

**II div:** Yoham Sekkalai 293 for six in 45 overs (A. Murali 70, A. Vijay Kandasamy 51, C.S. Anandkumar 44, K. Manikandan 25, Vicky four for 40) bt Chettinad Vanchi 146 in 31.2 overs (Sabeek 33).

Knights 137 in 35.3 overs (Yasir Arafat three for 22, Tamilarasan three for 31) bt Star Birds 71 in 22 overs (K. Dinesh five for nine, R. Toubik Mohammed three for 25).

Karaikudi Town 317 for nine in 45 overs (Vijay Pandian 205, K. Karthikeyan 30 n.o., K. Varadharajan three for 48) bt TCPL 118 in 26 overs (Vijay Pandian four for 33, Anwarali three for 34).

**III div:** Young Blood 195 in 41.5 overs (R. Balaji 78, A.T. Senthilnathan four for 35, S. Subramanian three for 25) bt Smashers 120 in 34.5 overs (R. Prasanth

# ஜமால் முஹம்மது கல்லூரி சார்பில் சோழமாதேவி கிராமத்தில் மனிதநேய விழா

திருச்சி, ஜன.31–

ஜமால் முஹம்மது கல்லூரி (தன்னாட்சி) நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இணைந்து நடத்திய“மனிதநேய வார விழா” திருவரம்பூர் வட்டம், சோழமாதேவி கிராமத்தில் நடைபெற்றது.

மனிதநேய வார விழாவின் முதல் நிகழ்வாக சோழமாதேவி கிராமத்தில் உள்ள மாரியம்மன் கோவில் தெருவிலுள்ள திடலில் கிராம பிரமுகர்கள், பொதுமக்கள், மாணவ மாணவியர்கள், பெற்றோர்கள் மற்றும் ஜமால் முஹம்மது கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் உள்ளிட்ட சுமார் 100 நபர்கள் கலந்து கொண்ட நிகழ்வில், நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் முனைவர் மு. அன்வர் சாதிக் அவர்கள் “வேற்றுமையில் ஒற்றுமை” என்ற தலைப்பிலும், நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் திரு. S. அக்பர்அலி அவர்கள் “மனிதநேயத்தின் முக்கியத்துவம்”என்ற தலைப்பிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். நிகழ்வின் இறுதியில் அனைவருக்கும் ரொட்டிக்கட்டுகள் வழங்கப்பட்டது.

அன்றைய நாளின் அடுத்த நிகழ்வாக சோழமாதேவி அரசினர் ஆதிதிராவிடர் மேல்நிலைப்பள்ளியில் உள்ள 10 மற்றும் 12ம் வகுப்பு மாணவர்கள் மத்தியில் மனிதநேய வார விழா அனுசரிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் பள்ளியின் தலைமை ஆசிரியர் சு. திருமலைச்சாமி, ஆசிரியப்பெருமக்கள் மற்றும் நவல்பட்டு கிராம முன்னாள் தலைவர் கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள். இவ்விழாவில் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் முனைவர் மு. அன்வர் சாதிக் அவர்கள் “மனிதநேயத்தினை வளர்ப்பதில் கல்வியின் பங்கு” என்ற தலைப்பிலும், நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் அக்பர் அலி “மனிதநேயத்தினை வளர்ப்பதில் குடும்பத்தின் பங்கு” என்ற தலைப்பிலும் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். விழாவின் இறுதியில் 10 மற்றும் 12ம் வகுப்பு மாணவ, மாணவியர்கள் சுமார் 60 நபர்களுக்கு எழுதுகோல் மற்றும் ரொட்டிகள் வழங்கப்பட்டது .

நிகழ்வில் கலந்துகொண்ட சுமார் 25 நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்களை கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் முனைவர். காஜா நஜீமுதீன் சாஹிப் , பொருளாளர் ஹாஜி ஜமால் முஹம்மது சாஹிப், உதவி செயலர் முனைவர் அப்துல் சமது , முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன் அவர்கள், துணை முதல்வர் முனைவர் முஹம்மது இப்ராஹீம் , கூடுதல் துணை முதல்வர் முனைவர். ஹம்மது சிகாபுதீன் சுயநிதிப்பிரிவு இயக்குநர் முனைவர் அப்துல் காதர் நிஹால், விடுதி இயக்குநர்கள் முனைவர் முஹம்மது பாஃஜில், ஜமால் முஹம்மது யாஸீன் ஜுபைர் அவர்கள் மற்றும் நாட்டுநலப்பணித்திட்ட அலுவலர் முனைவர் காமராஜ் வாழ்த்தினார்கள்.




திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் தேசிய நாட்டு நலப்பணித்திட்டம் சார்பில் தியாகிகள் தினத்தையொட்டி கல்லூரின் முதல்வர் எஸ்.இஸ்மாயில் முகைதீன், துணை முதல்வர் ஏ.முகமது இப்ராகிம், எம்.காமராஜ், கல்லூரி நாட்டுநலப்பணி திட்ட அலுவலர் மற்றும் பேராசியர்கள், மாணவர்கள் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

பட்டின் பாரம்பரியம்... பட்டுக்கு 15% தள்ளுபடி
தைலா Thaila
பட்டு • ரெடிமேட்ஸ் • மில்ஜவுளிகள்
55, பெரியகடை வீதி, திருச்சி-2 போன் : 2705554

–TPTC Edition–

தினமலர்

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

பட்டின் பாரம்பரியம்... பட்டுக்கு 15% தள்ளுபடி
தைலா Thaila
பட்டு • ரெடிமேட்ஸ் • மில்ஜவுளிகள்
55, பெரியகடை வீதி, திருச்சி-2 போன் : 2705554

திருச்சி • புதன் • ஜனவரி 31, 2018 | சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் | • 16 பக்கம் • 600 காசு • மலர் 67 • இதழ் 147

# கல்வி சான்றுகளின் உண்மை தன்மை?

## கல்லூரி முதல்வர்களுக்கு அதிரடி உத்தரவு

திருச்சி, ஜன. 31 -

*தமிழகத்தில் அரசு கலை அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகளில் பணிபுரியும் இணை பேராசிரியர் மற்றும் உதவி பேராசிரியர்களின் கல்வி சான்றுகளின் உண்மை தன்மையை ஆராய அறிவுறுத்தப் பட்டுள்ளது.*

இது குறித்து தமிழக அரசின் கல்லூரி கல்வி இயக்குநர் மஞ்சுளா மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு கலை, அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரி முதல்வர்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கை:

கடந்த 2006ம் ஆண்டு ஜனவரி 1ம் தேதிக்கு பின்னர் பணியில் சேர்ந்த உதவி பேராசிரியர்களுக்கு தற்போது உள்ள நடைமுறைகளை பின்பற்றி தர ஊதியம் உயர்த்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதற்காக அனைத்து இணை பேராசிரியர்கள், உதவி பேராசிரியர்களின் அனைத்து கல்வி சான்றிதழ்களின் மீதும் உண்மை தன்மை சான்று பெறப்படவேண்டும். அவ்வாறு உண்மை தன்மை பெறப்படுவதை உறுதி செய் வதற்காக தர ஊதிய கருத்துருக்களுடன் அனுப்பப்படும் பணி பதிவேடுகளில் கல்வி சான்றுகளின் மீது உண்மை தன்மை பெறப்பட்ட விபரங்களை பணி பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்த பின்னரே உரிய ஆணை வழங்கப்படும்.

2007, 2008 மற்றும் 2009ம் ஆண்டுகளில் பணியில் சேர்ந்துள்ள உதவி பேராசிரியர்களின் பணி மேம்பாடு கருத்துருக்களுடன் பெறப்படும் பணிப்பதிவேடுகளை பரிசீலித்தபோது பெரும்பாலான உதவி பேராசிரியர்களின் கல்வி சான்றிதழ்கள் மீது உண்மை தன்மை பெறப்பட்ட விபரம் பதிவு செய்யப் படவில்லை. 2011ம் ஆண்டுக்கு பின்னர் பணியில் சேர்ந்த உதவி பேராசிரியர்களை பொறுத்தவரை தகுதிகாண் பருவம் நிறைவு ஆணை வழங்கும் போதே அவர்களின் கல்வி சான்றுகளின் மீது உண்மை தன்மை பெறப்பட்ட விவரம் உறுதி செய்யப்பட்ட பின்னர் அவர்களுக்கு தகுதிகாண் பருவ நிறைவு ஆணை வழங்கப்பட்டது.

ஆனால் 2007,2008, மற்றும் 2009ம் ஆண்டுகளில் பணியில் சேர்ந்துள்ள உதவி பேராசிரியர்களின் பணி மேம்பாடு கருத்துருக்கள் சில கல்லூரிகளில் இருந்து தாமதமாக அனுப்பப்படுகிற நிலையில் அவர்களின் கல்வி சான்றுகளின் மீது உண்மை தன்மை பெறப்படாமல் உள்ளது.

எனவே 2007, முதல் 2009ம் ஆண்டு வரை பணியில் சேர்ந்துள்ள உதவி பேராசிரியர்களுக்கும் தர ஊதியம் உயர்த்தி வழங்க கோரும் கருத்துருக்கள் அனுப்பும்போது அவர்களின் அனைத்து கல்வி சான்றிதழ்களின் மீதும் உண்மை தன்மை பெற்று உரிய பதிவுகளை பணி பதிவேட்டில் பதிவு செய்து அதன் நகல்களுடன் அனுப்ப வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

BENNETT, COLEMAN & CO. LTD. | ESTABLISHED 1838 | TRICHY | MONDAY, JANUARY 29, 2018 | 18 PAGES | METRO | PRICE ₹2.50

THE TIMES OF INDIA

TIMESOFINDIA.COM | EPAPER.TIMESOFINDIA.COM

VOLUME 5, ISSUE 141



INGVAR KAMPRAD, IKEA'S SWEDISH BILLIONAIRE FOUNDER, DIES AT 91 14

RICH LEGISLATORS SHOULD FORGO SALARY TO REDUCE INEQUALITY, SAYS VARUN 8



SAINA OUTPLAYED BY CHINESE TAIPEI'S TAI TZU YING IN INDONESIA MASTERS FINAL 18



# Like men, women must learn martial arts, says MP

TIMES NEWS NETWORK

**Trichy:** Though awareness towards learning martial arts has been steadily increasing in Trichy, the number of women practitioners is still considerably less compared to their male counterparts.

This was evident at the 2018 South Zone India Taekwondo Championship held in the city on January 27 and 28, in which female participants made for only 1/4th of the total participants. The tournament was organised by Industan Sports Taekwondo Academy (INSTA) at Jamal Mohamed College. Member of Parliament (MP) P Kumar was invited as the chief guest for the inaugural ceremony.

It's a welcome sign that people in the city are taking martial arts more seriously, but women are still hesitant to take it up, said INSTA's secretary and taekwondo championship organiser Julesh Kumar. "Women are not getting into martial arts because they are not exactly aware about it. Many think martial art means only karate. But a tournament of this scale is a first-of-its-kind in the city, so we can expect young girls and women to soon consider mastering a self- defence technique," he told **TOI**. Kumar also emphasised that more young girls and boys should learn taekwondo because it is a part of Olympic Games.

The total number of participants in the championship was more than 250, while the women participants accounted for only around 65.

One of the tournament officials, Mahalakshmi, stated that it is a must for women to learn martial arts, considering the amount of crime that has been happening against them. "They (women) do not learn martial arts because they are not allowed to. Parents are scared to send their daughters to such classes," she said.



# தினகரன்

ஒரு புதிய அனுபவம்

www.dinakaran.com
/dinakarannews
/dinakaranonline



20வது கிராண்ட்ஸ்லாம் வென்று சாதனை பக்கம் 15



மக்களை திவாலாக்கிய பஸ் கட்டண உயர்வு பக்கம் 6

காதலனுடன் அடுத்த மாதம் திருமணம்? பக்கம் 14

●திருச்சி ●திங்கள், ஜனவரி 29, 2018

●சென்னை ●புதுவை ●வேலூர் ●சேலம் ●கோவை ●திருச்சி ●மதுரை ●நெல்லை ●நாகர்கோவில் ●பெங்களூர் ●மும்பை ●டெல்லி

●கதிர் 39 ஒளி 234 ●20 பக்கம் ₹5


# டேக்வாண்டோ போட்டி



▶ தென்மண்டல அளவிலான டேக்வாண்டோ போட்டி திருச்சி ஜமால்முகமது கல்லூரியில் நடந்தது. இதில் ஆக்ரோஷத்துடன் மோதும் சிறுவர்கள்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

வியாழக்கிழமை
25 ஜனவரி 2018
திருச்சி
14 பக்கங்கள் ரூ.5

# பிளாஸ்டிக் சேகரிப்பில் கல்லூரி மாணவர்கள்

**திருச்சி, ஜன. 24 :** திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி, தண்ணீர் சுற்றுச்சூழல் மாணவர் மன்றம் சார்பில் பிளாஸ்டிக் பைகள் சேகரிப்புப் பணி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

காஜாமலை பகுதியில் சாலை ஓரங்களில் கிடந்த பிளாஸ்டிக் பொருள்களைச் சுத்தம் செய்யும் பணி நடைபெற்றது. இந்நிகழ்வில் பல மூட்டை பிளாஸ்டிக் பொருள்கள் சேகரிக்கப்பட்டது.

அதனை மாநகராட்சி குப்பை கிடங்கில் சேர்க்கப்பட்டது. மேலும் பிளாஸ்டிக் பைகளுக்கு மாற்றாக துணிப்பையை பயன்படுத்த வேண்டும் என பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி துணிப்பைகளும் வழங்கப்பட்டது.

இதில், கல்லூரியின் செயலாளர் மற்றும் தாளாளர் காஜா நஜிமுதீன், பொருளாளர் ஜமால் முகம்மது, முதல்வர் இஸ்மாயில் முகைதீன், துணை முதல்வர் முகம்மது இப்ராகிம், கூடுதல் துணை முதல்வர் முகம்மது சிகாபுதீன், தண்ணீர் அமைப்பின் நிர்வாகிகள் கே.சி. நீலமேகம் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர். ஏற்பாடுகளை தண்ணீர் சுற்றுச்சூழல் மாணவர் மன்ற ஒருங்கிணைப்பாளர் சிராஜுதீன் செய்திருந்தார்.

Now Live makkalkural.tv

MAKKAL KURAL (Independent National Tamil Daily) 8 பக்கம் விலை ரூ.4.00

மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

மதுரை பதிப்பு

(மலர்:39 ★ 27.1.2018 சனி மாலை ★ வெளியூர் 28.1.2018 ஞாயிறு★ இதழ் 243)

Regd. No. TN/SR-21/18–20

Now Live trinitymirror.tv

# ஜமால் முஹம்மது கல்லூரியில் குடியரசு தினவிழா: தேசிய கொடி ஏற்றினார் தாளாளர் காஜா நஜ்முத்தீன்

திருச்சி, ஜன.27–

ஜமால் முஹம்மது கல்லூரியில் செயலாளர் முனைவர் ஏ.கே. காஜா நஜ்முத்தீன் தேசிய கொடியை ஏற்றி என்.சி.சி. மாணவர் படை அணிவகுப்பு மரியாதை ஏற்றுக் கொண்டார்.

திருச்சி காஜாமலை ஜாமிஆ அன்வாருல் உலூம் அரபிக் கல்லூரியில் குடியரசு தின விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. தேசிய கொடியை அரபிக் கல்லூரி முதல்வர் மவ்லவி ரூஹுல் ஹாக் ஏற்றி வைத்து அரபிக் கல்லூரி மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

ஜமால் முஹம்மது கல்லூரியில் தேசிய கொடியை கல்லூரி தாளாளர் மற்றும் செயலாளர் ஏ.கே.காஜா நஜ்முத்தீன் ஏற்றி வைத்து என்.சி.சி. மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். இந்த விழாவில் கல்லூரி பொருளாளர் ஹாஜி எம்.ஜே. ஜமால் முஹம்மது, உதவிச் செயலாளர் முனைவர் அப்துல் சமது,முதல்வர் முனைவர் இஸ்மாயில் மொய்தீன், துணை முதல்வர்கள் முனைவர் முஹம்மது இப்ராஹிம், முஹம்மது சிகாபுதீன்,

சுயநிதி பிரிவு இயக்குனர் மற்றும் நிதியாளர் முனைவர் அப்துல் காதர் நிகால், சுயநிதி பிரிவின் வருகை பதிவாளர் ஜமால் முஹம்மது யாசின் ஜுபைர்,விடுதி இயக்குனர் முஹம்மது பாசில், மற்றும் அனைத்து துறை தலைவர்கள் பேராசிரியர்கள் மாணவர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

Now Live makkalkural.tv

MAKKAL KURAL (Independent National Tamil Daily) 10 பக்கம் விலை ரூ.4.00

# மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

மதுரை பதிப்பு

(மலர்:39 ★ 23.1.2018 செவ்வாய் மாலை ★ வெளியூர் 24.1.2018 புதன் ★ இதழ் 239)

Regd. No. TN/SR-21/18–20

Now Live trinitymirror.tv




# ஜமால் முகமது கல்லூரியில் ‘வேதியியலில் சமீபத்திய முன்னேற்றம்’ தேசிய கருத்தரங்கு

திருச்சி, ஜன.21–

ஜமால் முகமது கல்லூரியில் முதுகலை மற்றும் ஆராய்ச்சி வேதியியல் துறையில் வேதியியலில் சமீபத்திய முன்னேற்றங்கள் என்ற தலைப்பில் ஒருநாள் தேசியகருத்தரங்கம் நடைபெற்றது. செயலர் மற்றும் தாளாளர் முனைவர் ஏ.கே.காஜா நஜீமுதீன் சாஹிப் மற்றும் பொருளாளர் எம்.ஜே.ஜமால் முகம்மதுசாஹிப் வாழ்த்துரை வழங்கினர். முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன் தலைமையுரை நிகழ்த்தினார். முன்னதாக கூடுதல் துணைமுதல்வர் மற்றும் வேதியியல் துறைதலைவர் எம்.முகமதுசிகாபுதீன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

சிறப்பு விருந்தினராக கோட்டயம் மகாத்மாகாந்திபல்கலைக்கழகம் இயக்குநர் முனைவர் இப்னுசாட், நச்சு உலோக அயனிகளை தோ்ந்தெடுத்து கண்டறிதலுக்கான உணர்விகளை வடிவமைத்தல் என்ற தலைப்பில் தமது உரையை நிகழ்த்தினார். இக்கருத்தரங்கில் முதன்மை விஞ்ஞானி மற்றும் தலைவர் (மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் சென்னை) தென்னரசு, மண்டல மூலப்பொருளிலிருந்து கிடைக்கப்பெறும் சீர்மையற்ற மூலக்கூறின் வேதியியல் மாற்றம் என்ற தலைப்பின் கீழ் விரிவுரை நிகழ்த்தினார்.

ஸ்ரீஹரிகோட்டா விஞ்ஞானி செல்வகுமார் ராக்கெட் உந்துதலில் வேதியியலின் பங்களிப்பு என்ற தலைப்பின் கீழ் சிறப்பு விரிவுரைநிகழ்த்தினார். 300 ஆராய்ச்சியாளர்கள் தங்களின் கண்டுபிடிப்புகளைப் பற்றி பகிர்ந்து கொண்டனர். நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் ஆராய்ச்சியாளர்கள் பலர் கலந்துகொண்டு தமது ஆராய்ச்சி கட்டுரைகளை சமர்ப்பித்தனர்.

இக்கருத்தரங்கில் கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் ஏ.கே. காஜா நஜீமுதீன் சாஹிப், பொருளாளர் ஜனாப் எம்.ஜே.ஜமால் முகம்மதுசாஹிப், முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன், சுயநிதிப்பிரிவு இயக்குநர் கே.என்.அப்துல் காதர் நிகால், விடுதி இயக்குநர் எம்.ஏ.ஜமால் முகமதுயாசின் ஜுபைர் ஆகியோர் கலந்துகொண்டு கருத்தரங்கத்தை சிறப்பித்தனர். கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை உதவிப் பேராசிரியர், வேதியியல் துறை ரியாஸ் அகமது, சிறப்பாகசெய்திருந்தார்.

BENNETT, COLEMAN & CO. LTD. | ESTABLISHED 1838 | TRICHY | TUESDAY, JANUARY 23, 2018 | 18 PAGES | METRO | PRICE ₹2.50

# THE TIMES OF INDIA

TIMESOFINDIA.COM



**KICKER:** Assistant collector Manish Narnavare speaking at intra-departmental contest at Jamal Mohammed College

## Intra-departmental competition at JMC

Dr APJ Abdul Kalam Club and Mathematics Association of Jamal Mohamed College jointly organised an intra-departmental competition, 'Math Intelligentsia-2K18' recently. Assistant collector (U/T), Trichy Manish Narnaware delivered the valedictory address in the presence of secretary and correspondent of the college, AK Khaja Nazeemudeen.

# நம்ம திருச்சி

வார இதழ்

அறம் செய்ய ஆயத்தம் ஆவோம்

TNTAM 22995 10 பக்கம் விலை ரூ.5 2018 ஜன. 13–19

www.nammatrichyonline.com
Namma Trichy Magazine
நம்ம திருச்சி
94 88 84 20 25
nammatrichy2016@gmail.com

நம்ம திருச்சி Digital e paper இப்போது ஆன்–லைனில் www.nammatrichyonline.com தொடர்புக்கு: nammatrichy2016@gmail.com திருச்சி, புதுக்கோட்டை, அரியலூர், பெரம்பலூர், கரூர், தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் ஆகிய பகுதிகளில் கிடைக்கும்





திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் சங்கம் மற்றும் கணித மன்றம் இணைந்து நடத்திய "மேத் இன்டெலிஜென்சியா" போட்டிகள் கடந்த 9-ம் தேதியன்று நடைபெற்றது. அந்த, போட்டியில் வெற்றி பெற்ற கணிதத் துறை மாணவர்களுக்கு திருச்சி உதவி ஆட்சியர் (பயிற்சி) டாக்டர். மனீஷ் நர்நவார் பரிசுகளை வழங்கி நிறைவுரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் டாக்டர். ஏ.கே. காஜா நஜீமுதீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நம்ம திருச்சி
அறம் செய்ய ஆயத்தம் ஆவோம்
வார இதழ்
TNTAM 22995 10 பக்கம் விலை ரூ.5 2018 ஜன. 13–19
www.nammatrichyonline.com
Namma Trichy Magazine
நம்ம திருச்சி
94 88 84 20 25
nammatrichy2016@gmail.com
நம்ம திருச்சி Digital e paper இப்போது ஆன்–லைனில் www.nammatrichyonline.com தொடர்புக்கு: nammatrichy2016@gmail.com திருச்சி, புதுக்கோட்டை, அரியலூர், பெரம்பலூர், கரூர், தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் ஆகிய பகுதிகளில் கிடைக்கும்

### ஜமால் முகமது கல்லூரியில்

# இந்திய ஆட்சி பணித்தேர்வுக்கு தயாரராவது குறித்த கருத்தரங்கு

**திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் இந்திய ஆட்சி பணித்தேர்வுக்கு தயாராவது எப்படி? என்ற ஒரு நாள் பயிற்சி பட்டறை கடந்த 9–ம் தேதி நடைபெற்றது.**

இந்த நிகழ்ச்சி கல்லூரியின் முதல்வர் முனைவர் இஸ்மாயில் தலைமையில் நடைபெற்றது. கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் முனைவர் காஜா நஜ்முத்தீன், துணை செயலர் முனைவர் அப்துல் சமது மற்றும் துணை முதல்வர் முகம்மது இப்ராகீம், கூடுதல் துணைமுதல்வர் முனைவர் முகம்மது சிகாபுதீன், தன்னிதிப்பிரிவு இயக்குநர் முனைவர் அப்துல்காதர் நிஹால், விடுதி இயக்குனர்கள் முகம்மது பாசில் மற்றும் பேராசிரியர் ஜமால்முகம்மது யாஸீன் ஜூபைர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

காலை நிகழ்ச்சியில் திருச்சி சார் ஆட்சியர் கமல் கிஷோர், உதவி ஆட்சியர் முனைவர் மணீஷ் நர்நவார் இருவரும் 'தன் வாழ்வில் வெற்றியின் ரகசியத்தையும், மாணவர்கள் எதிர்கொள்ள வேண்டிய மனவலிமையையும், தேர்வின் அணுகுமுறைகளையும் விளக்கினர்.

மாலை நிகழ்ச்சியில் வருமானவரித்துறை உதவி ஆணையர் முனைவர் விஜய்தீபன், உதவி ஆணையர் மதன்குமார் ஆகியோர் மாணவர்களுடன் கலந்துரையாடினர்.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில் கல்லூரியின் ஆட்சிப் பணித்தேர்வு பயிற்சி மையத்தின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் மஸ்கர்நஸீப்கான் வரவேற்றார்.

இறுதியில் முனைவர் சையதுமுகமது நன்றி கூறினார்.

நிகழ்ச்சியை முனைவர் சாதிக்புகாரி, பேரா.சிராஜீதீன் ஆகியோர் சிறப்புற வழிநடத்தினர். 200க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

இதேபோல, அன்றைய தினமே கல்லூரியில் நடைபெற்ற டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் சங்கம் மற்றும் கணித மன்றம் இணைந்து நடத்திய "மேத் இன்டெலிஜென்சியா" நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

MH மதுரம் மருத்துவமனை
MATHURAM HOSPITAL
(A Multi - Speciality
Division of Dr.Samuel A.Mathuram Nursing Home)
திருச்சி மாநகரின் முதல் மருத்துவமனை.
தற்போது அதிநவீன வசதிகளுடன்...
For Appointments call
98849-92511, 0431-2792648
அரசு தலைமை மருத்துவமனை எதிர்ல்.
திருச்சி-17.

காவேரி டைம்ஸ்
CAUVERY TIMES
Bilingual Neighbourhood Weekly Free Newspaper
RNI No. TNBIL / 2007 / 23710
Volume : 10 Issue : 525, Trichy - DEC-22 - DEC-28, 2017 Friday

MH மதுரம் மருத்துவமனை
MATHURAM HOSPITAL
(A Multi - Speciality
Division of Dr.Samuel A.Mathuram Nursing Home)
திருச்சி மாநகரின் முதல் மருத்துவமனை.
தற்போது அதிநவீன வசதிகளுடன்...
For Appointments call
98849-92511, 0431-2792648
அரசு தலைமை மருத்துவமனை எதிர்ல்.
திருச்சி-17.



திருச்சி ஜமால் முகமது கல்லூரி நிர்வாகக்குழு பொருளாளராக பதவி வகித்த ஹாஜி கே.ஏ.கலீல் அகமது ஓய்வு பெற்றதையடுத்து அவருக்கு பாராட்டு விழா கடந்த 19ந் தேதி நடைபெற்றது. கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே.காஜாநஜீமுதீன் தலைமை தாங்கினார். புதிய பொருளாளராக ஹாஜி எம்.ஜே.ஜமால்முகமது, புதிய உதவிச்செயலராக முனைவர் கே.அப்துல் சமது ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். கல்லூரி முதல்வர் முனைவர் எஸ்.இஸ்மாயில் முகைதீன் வரவேற்றார்.

www.maalaisudar.com

VEL ARCH

மாலைச்சுடர்

மலர்-23 Maalai Sudar சென்னை 6.1.2018 சனி வெளியீடு 7.1.2018 ஞாயிறு • 6 பக்கங்கள் விலை ரூ.4.00 • Reg No: TN/CC(S)DN/188/18-20.RNI No: 61868/95 • Licensed to Post without prepayment under WPP No.TN/PMG(CCR)WPP-301/18-20 • இதழ்-235

உள்ளே

- ★ முதல்வர் உதவித் தொகை
- ★ கமல்ஹாசன் மீது ஜெயக்குமார் கடும் தாக்கு
- ★ மலேசியாவில் நட்சத்திர கிரிக்கெட் போட்டி
- ★ வீடு வீடாக சென்று பிரச்சாரம் செய்ய திட்டம்: உதயகுமார்
- ★ ரூ.90 லட்சம் மதிப்புள்ள குட்கா பறிமுதல்

## சிங்கப்பூர் பிரிவின் சார்பில் கட்டப்பட்டது

# ஜமால்முகமது கல்லூரியில் புதிய கட்டிடம் திறப்பு



**திருச்சி, ஜன.6:**

**திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் முன்னாள் மாணவர் சங்கம் சிங்கப்பூர் பிரிவின் சார்பாக கட்டப்பட்ட புதிய கட்டிட திறப்பு விழா நடைபெற்றது.**

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் முன்னாள் மாணவர் சங்கம் சிங்கப்பூர் பிரிவின் சார்பாக கட்டப்பட்ட புதிய கட்டிடத்தினை 3.01.2018 அன்று கல்லூரி வளாகத்தில் முனைவர். எம். முகைதீன் அப்துல் காதர், தலைவர், ஜமால் முகமது கல்லூரி முன்னாள் மாணவர் சங்கம் - சிங்கப்பூர் பிரிவு அவர்கள் கலந்து கொண்டு கட்டிடத்தினை திறந்து வைத்தார்.

இந்நிகழ்விற்கு கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் டாக்டர். ஏ.கே.காஜா நஜீமுதீன், பொருளாளர் ஹாஜி. எம். ஜே. ஜமால் முகமது, உதவிச் செயலர் முனைவர். கே. அப்துல் சமது ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரியின் செயலர் அவர்கள் முன்னாள் மாணவர் சங்கம் சிங்கப்பூர் பிரிவின் செயல்பாடுகளை எடுத்துரைத்தார்.

இக்கட்டிட திறப்பு விழாவில் சிங்கப்பூரைச் சேர்ந்த ரியாஸ், துபையிலிருந்து ஜாபர் சித்தீக், குவைத்திலிருந்து இத்ரீஸ் உட்பட கல்லூரி முதல்வர் எஸ்.இஸ்மாயில் முகைதீன், துணை முதல்வர் ஏ. முகமது இப்ராகிம், கூடுதல் துணை முதல்வர் முனைவர். எம். முகமது சிகாபுதீன், இயக்குநர் கே.என்.அப்துல் காதர் நிகால், விடுதி இயக்குநர்கள் முனைவர் கே.என். முகமது பாஜில், பேராசிரியர் எம்.ஏ.ஜமால் முகமது யாசின் ஜூபைர், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு கட்டிட திறப்பு விழாவினை சிறப்பித்தனர்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

சனிக்கிழமை
6 ஜனவரி 2018
திருச்சி
14 பக்கங்கள் ரூ.5

# ஜமால் முகமது கல்லூரியில் கட்டுரைப் போட்டி பரிசளிப்பு

திருச்சி , ஜன. 5: திருச்சி ஜமால் முகமது கல்லூரியில், சத்தியச் சோலை என்ற அமைப்பு சார்பில் நடைபெற்ற கல்லூரி மாணவ, மாணவியருக்கான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

விழாவில், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் க. பாஸ்கரன் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று, போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகளை வழங்கி பேசுகையில், கட்டுரைகள் எழுதுவது மாணவ மாணவியரின் எழுத்தாற்றல் மற்றும் புரிந்து கொள்ளும் ஆற்றல்களை மேம்படுத்தும். எனவே இதுபோன்ற போட்டிகளில் மாணவ, மாணவியர் பங்கேற்று தங்களது திறனை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார். நிகழ்ச்சியில், சத்தியச்சோலை அமைப்பின் தலைவர் ஏ. ஹஜ்மொய்தீன் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் எஸ். இஸ்மாயில் மொஹிதீன் உள்ளிட்டோர்.



கட்டுரைப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்குகிறார் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் க. பாஸ்கரன். உடன் கல்லூரி முதல்வர் இஸ்மாயில் மொஹிதீன் உள்ளிட்டோர்.

மதுரம் மருத்துவமனை
MATHURAM HOSPITAL
(A Multi - Speciality
Division of Dr.Samuel A.Mathuram Nursing Home)
திருச்சி மாநகரின் முதல் மருத்துவமனை.
தற்போது அதிநவீன வசதிகளுடன்...
For Appointments call
98849-92511, 0431-2792648
அரசு தலைமை மருத்துவமனை எதிரில்,
திருச்சி-17.



# காவேரி டைம்ஸ்
# CAUVERY TIMES

Bilingual Neighbourhood Weekly Free Newspaper
RNI No. TNBIL / 2007 / 23710
Volume : 10 Issue : 527, Trichy - JAN-05 - JAN-11, 2018 Friday



மதுரம் மருத்துவமனை
MATHURAM HOSPITAL
(A Multi - Speciality
Division of Dr.Samuel A.Mathuram Nursing Home)
திருச்சி மாநகரின் முதல் மருத்துவமனை.
தற்போது அதிநவீன வசதிகளுடன்...
For Appointments call
98849-92511, 0431-2792648
அரசு தலைமை மருத்துவமனை எதிரில்,
திருச்சி-17.




திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் முன்னாள் மாணவர் சங்க சிங்கப்பூர் பிரிவின் சார்பாக கட்டப்பட்ட புதிய கட்டிட திறப்பு விழா கடந்த 3ந் தேதி நடைபெற்றது. முனைவர் எம்.முகைதீன் அப்துல்காதர் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் கல்லூரி செயலர் டாக்டர் ஏ.கே.காஜாநஜீமுதீன், பொருளாளர் ஜமால்முகமது, உதவி செயலர் முனைவர் கே.அப்துல்சமது, கல்லூரி முதல்வர் முனைவர் எஸ்.இஸ்மாயில்முகைதீன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் முன்னாள் மாணவர் சங்கம் சிங்கப்பூர் பிரிவின் சார்பாக கட்டப்பட்ட புதிய கட்டிடத்தினை கல்லூரி வளாகத்தில் தலைவர் (ஜமால் முகமது கல்லூரி முன்னாள் மாணவர் சங்கம் சிங்கப்பூர் பிரிவு) எம். முகைதீன் அப்துல் காதர், கலந்து கொண்டு கட்டிடத்தினை திறந்து வைத்தார். இந்நிகழ்விற்கு கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் டாக்டர். ஏ.கே.காஜா நஜீமுதீன், பொருளாளர் எம். ஜே. ஜமால் முகமது, உதவிச் செயலர் முனைவர். கே. அப்துல் சமது ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

# திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் முன்னாள் மாணவர் சங்கம் சிங்கப்பூர் பிரிவின் சார்பாக கட்டப்பட்ட புதிய கட்டிட திறப்பு விழா.







**திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் முன்னாள் மாணவர் சங்கம் சிங்கப்பூர் பிரிவின் சார்பாக கட்டப்பட்ட புதிய கட்டிட திறப்பு விழா.**

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் முன்னாள் மாணவர் சங்கம் சிங்கப்பூர் பிரிவின் சார்பாக கட்டப்பட்ட புதிய கட்டிடத்தினை (Singapore Alumni Block) கல்லூரி வளாகத்தில் முனைவர். எம். முகைதீன் அப்துல் காதர், தலைவர் ஜமால் முகமது கல்லூரி முன்னாள் மாணவர் சங்கம் – சிங்கப்பூர் பிரிவு அவர்கள் கலந்து கொண்டு கட்டிடத்தினை திறந்து வைத்தார்.

இந்நிகழ்விற்கு கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் டாக்டர். ஏ.கே.காஜா நஜ்முதீன், பொருளாளர் ஹாஜி. எம். ஜே. ஜமால் முகமது, உதவிச் செயலர் முனைவர். கே.அப்துஸ் சமது ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரியின் செயலர் அவர்கள் முன்னாள் மாணவர் சங்கம் சிங்கப்பூர் பிரிவின் செயல்பாடுகளை எடுத்துரைத்தார்.

இக்கட்டிட திறப்பு விழாவில் சிங்கப்பூரை சேர்ந்த ரியாஸ், துபாயிலிருந்து ஜாபர் சாதிக், குவைத்திலிருந்து இத்ரீஸ் உட்பட கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன், துணைமுதல்வர் முனைவர். ஏ. முகமது இப்ராகிம், கூடுதல் துணை முதல்வர் முனைவர். எம். முகமது சிஹாபுதீன், இயக்குநர் முனைவர் கே.என். அப்துல் காதர் நிஹால், விடுதி இயக்குநர்கள் முனைவர் கே.என். முகமது பாசில், பேராசிரியர் எம்.ஏ.ஜமால் முகமது யாசின் ஜுபைர், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு கட்டிட திறப்பு விழாவினை சிறப்பித்தனர்.

**ஆனந்தன், சிறப்பு செய்தியாளர்.**



# தினகரன்

ஒரு புதிய அனுபவம்

www.dinakaran.com
/dinakarannews
/dinakaranonline



35 பந்தில் சதம் உலக சாதனை சமன் செய்தார் — பக்கம் 15

இன்றைய இதழுடன் ஆன்மிக மலர் புத்தகம் கேட்டு வாங்குங்கள்



ஆர்.கே.நகரில் நாளை வாக்கு எண்ணிக்கை — பக்கம் 4

● திருச்சி ● சனி, டிசம்பர் 23, 2017 ● சென்னை ● புதுவை ● வேலூர் ● சேலம் ● கோவை ● திருச்சி ● மதுரை ● நெல்லை ● நாகர்கோவில் ● பெங்களூர் ● மும்பை ● டெல்லி ● கதிர் 39 ஒளி 198 ● 20 பக்கம் ₹5


### ஜமால்முகமது கல்லூரியில்

# இஸ்லாமிய பண்பாட்டு ஆய்வு மையம் திறப்பு

திருச்சி,டிச.23:திருச்சிஜமால் முகமது கல்லூரியில் இஸ் லாமிய பண்பாட்டு ஆய்வு மையம்திறக்கப்பட்டது.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் இஸ்லாமிய பண்பாட்டு ஆய்வு மையம் துவங்கப் பட்டது. கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகை தீன் தலைமை வகித்தார். செயலர் காஜா நஜீமுதீன், பொருளாளர் ஜமால் முக மது, உதவிசெயலர் அப்துல் சமது, முன்னாள் பொரு ளாளர் கலீல் அகமது ஆகி யோர்முன்னிலைவகித்தனர். ஆய்வு மையத்தை தஞ்சை அஞ்சுமன் அறிவகம் மற்றும் இஸ்லாமிய மைய நிறுவனர் ஜபரு ல்லா திறந்து வைத் தார். அரசு அருங்காட்சிய கத்துறை முன்னாள் உதவி இயக்குனர் ராஜா முகமது, ஆய்வு மைய இயக்குனராக பதவியேற்றார். முன்னாள் அமைச்சரும், தஞ்சை முத்த மிழ் மன்றத்தின் தலைவரு மான உபயதுல்லா, புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவன இயக்கு னர் பக்தவத்சல பாரதி ஆகி யோர்பேசினர்.

இந்திய யூனியன் முஸ் லிம் லீக் கட்சி தேசியத் தலைவர் காதர்மொய்தீன், கூடுதல் துணை முதல்வர் முகமதுசிகாபுதீன்ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழாய்வுத்துறை தலை வர் சையது ஜாகீர்ஹசன், வரலாற்றுத்துறை தலைவர் அக்பர்உசேன், பேராசிரியர் சிராஜுதீன்,இணைபேராசி ரியர்முகமதுஇஸ்மாயில்ஆகி யோர்கலந்துகொண்டனர்.

கல்லூரிதுணைமுதல்வர் முகமதுஇப்ராகிம்நன்றிகூறி னார்.

அண்ணாநகரில் முதன்மையான தங்க நகை ஷோ ரூம்
For Trust & Integrity
வாவு ஜுவல்லர்ஸ்
தங்கம் | வெள்ளி | வைரம் | மாணிக்கம்
AA-7A, 2வது அவென்யு (ரவுண்டானா அருகில்), அண்ணாநகர், சென்னை - 600 040. போன் : 044 2628 4295, 2628 4296
Sunday open upto 1.30 p.m.

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்
# மணிச்சுடர்
MANICHUDAR TAMIL DAILY
நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துல் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper
RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018
TN /PMG (CCR) WPP258/2016-18

SCM SHIRTS
Seyad Home Industries Private Limited
Tirunelveli - 627 003
A product of Seyad Cotton Mills

மணி - 33 சுடர் - 124 | ஹிஜ்ரி 1439 - ரபீஉல் ஆகிர் - 03 | திருவள்ளுவர் ஆண்டு 2048 மார்கழி - 07 | சென்னை 22.12.2017 வெள்ளி | வெளியூர் 23.12.2017 சனி | http://muslimleaguetn.com/manichudar.asp | பக்கம் 4 | விலை ₹ 3




## திருச்சி ஜமால் முகமது கல்லூரியில்

# இஸ்லாமிய பண்பாட்டு ஆய்வு மையம் தொடக்கம்

திருச்சி, டிச22-

இலக்கியம், நாட்டுப்புறவியல், சுதந்திரப் போராட்டம், கல்வி வளர்ச்சியில் தமிழ் முஸ்லிம்களின் பங்களிப்பு குறித்து விரிவாக ஆய்வு செய்ய இஸ்லாமிய பண்பாட்டு ஆய்வு மையம் தொடங்கப் பட்டுள்ளது.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் அமைந்துள்ள இந்த மையத்தின் தொடக்க விழா நடைபெற்றது. தஞ்சாவூர் அஞ்சுமன் அறிவகம் மற்றும் இஸ்லாமிய மைய நிறுவனர் டிஎம். ஐபருல்லாஹ், இந்த மையத்தை திறந்து வைத்தார்.

மையத்தின் நோக்கங்கள் குறித்து அதன் இயக்குநர் ஜெ. ராஜா முகம்மது பேசியதாவது:-

இந்திய சுதந்திரப் போராட்டம் தொடங்குவதற்கு முன்பாகவே ஆங்கிலேயர்களை எதிர்த்து சுதந்திரப் போராட்டத்தை மதுரையில் தொடங்கியவர் யூசுப் கான். இவரைத்தான் தனக்கு சுதந்திரத்தை பிரகடனப் படுத்தி போராடிய நபர் என ஆங்கிலேயர்களே குறிப்பிட்டுள்ளனர். சுல்தான் ஆட்சி காலத்திலும் இதேநிலைதான் இருந்தது. ஆர்க்காடுநவாப் காலத்தில்தான் ஆங்கிலேயர்களது உத்தரவை கேட்டு நடப்பவர்களாக மாறிப்போயினர். இதேபோல, தமிழ் இலக்கியத்திலும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படைப்புகள் உள்ளன. ஆனால், உமறுப்புலவர் எழுதிய சீறாப்புராணம், மஸ்தான் சாகிப் பாடல்களை மட்டுமே குறிப்பிடுகிறோம். வணிகத்திலும் ஆங்கிலேயர்களை விஞ்சி உலக பொருளாதாரத்தில் வலுசேர்த்தவர்கள் தமிழ் முஸ்லிம்கள். தமிழ் முஸ்லிம்களது பங்களிப்பு பல்வேறு துறைகளை கடந்து பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தொடங்கி விட்டது. ஆனால், அவரை அறியப்படாமல் உள்ளன. அவற்றை வெளிக் கொணருவதற்காகவே இஸ்லாமிய பண்பாட்டு ஆய்வு மையம் தொடங்கப்பட்டுள்ளது என்றார்.

புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் பக்தவத்சல பாரதி பேசுகையில், பண்பாட்டு ஆய்வுகள் என்பது வரலாற்று ரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும், சமயம் சார்ந்ததாகவும் இருப்பது சிறப்புக்குரியது. ஒடுக்கப்பட்டவர்களுக்கு கூட பல ஆய்வு மையங்கள் உள்ளன நிலையில், வரலாற்று சிறப்பு பெற்ற இஸ்லாமிய சமூகத்துக்கு ஆய்வு மையம் இல்லாத குறையை இந்த மையம் தீர்த்து வைத்துள்ளது. இதன் மூலம் விரிவான ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும் என்றார்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் கேஎம் காதர் முகைதீன், முன்னாள் அமைச்சரும், தஞ்சாவூர் முத்தமிழ் மன்றத் தலைவருமான சீநாமி. உபயதுல்லா, கல்லூரிச் செயலர் காஜா நஜீமுதீன், தலைவர் ஜமால் முகமது பிலால், பொருளாளர் கேஏ. கலீல் அகமது, துணைச் செயலர் முகமது சிகாபுதீன், கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன், முனைவர்கள் கே. அப்துஸ்சமது, அப்துல் காதர் நிஹால், முகமது பாசில், யாஸின் ஜூபைர் உள்ளிட்டோர் வாழ்த்திப் பேசினர். இந்த விழாவில், பேராசிரியர்கள், தமிழ் ஆர்வலர்கள், இலக்கிய ஆர்வலர்கள், மாணவர், மாணவிகள் என பலர் கலந்து கொண்டனர்.

Available on the Android App Store GET OUR ANDROID APP FOR FREE CLICK HERE



# திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் இஸ்லாமிய பண்பாட்டு ஆய்வு மையம் திறப்பு விழா.

By **Editor** - December 22, 2017 3 0



**திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் இஸ்லாமிய பண்பாட்டு ஆய்வு மையம் திறப்பு விழா.**

ஜமால் முகமது கல்லூரியில் இஸ்லாமிய பண்பாட்டு ஆய்வு மையம் புதிதாகத் துவங்கப்பட்டது. தமிழகத்தில் இஸ்லாமிய தோற்ற வளர்ச்சி, கொள்கை, பண்பாடு இஸ்லாமியத் தமிழிலக்கியம், நாட்டுப்புறவியல், கட்டடக்கலை, முஸ்லிம்களின் வணிக வரலாறு, கல்வி நிலை, சுதந்திரப் போராட்டத்தில் தமிழக முஸ்லிம்களின் பங்கு, சமய நல்லிணக்கம் ஆகிய பொருண்மைகளை ஆய்வு செய்து

ஆவணப்படுத்தி நூலாக்கப்படுத்துவதே இம்மையத்தின் முக்கிய நோக்கமாகும்.



இத்துவக்கவிழாவில் கல்லூரியின் முதல்வர் இஸ்மாயில் முகைதீன் அவர்கள் வரவேற்புரை மற்றும் தலைமையுரையாற்றினார். செயலர் மற்றும் தாளாளர் காஜா நஜீமுதீன், பொருளாளர் ஹாஜி ஆ.து. ஜமால் முகமது, உதவிச்செயலர் மு. அப்துஸ் சமது, மேனாள் பொருளாளர் ஹாஜி.கலீல் அகமது ஆகியோர் முன்னிலை வகித்து வாழ்த்துரையும் வழங்கினர். இவ்வாய்வு மையத்தினை தஞ்சை அஞ்சுமன் அறிவகம் மற்றும் இஸ்லாமிய மையத்தின் நிறுவனர் ஹாஜி னு.ஆ.ஜபருல்லா அவர்கள் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு அரசு அருங்காட்சியகத்துறையின் மேனாள் உதவி இயக்குனர் முனைவர் து. ராஜா முகமது அவர்கள் இந்த இஸ்லாமிய பண்பாட்டு ஆய்வு மையத்தின் இயக்குனராக பதவியேற்று நோக்கவுரையாற்றினார், துமிழக முன்னாள் அமைச்சரும் தஞ்சை முத்தமிழ் மன்றத்தின் தலைவருமான சீ.நா.மி. உபயதுல்லா அவர்களும், புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குனர் பக்தவத்சல பாரதி அவர்களும் மையக்கருத்துரையாற்றினர்.

இந்தி யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் எம். காதர் மொய்தீன், கூடுதல் துணை முதல்வர் முகமது சிகாபுதீன் அவர்களும் வாழ்த்துரை வழங்கி விழாவினைச் சிறப்புச் செய்தார். விழா சிறக்க தமிழாய்வுத்துறைத் தலைவர் சையது ஜாகிர் ஹசன், வரலாற்றுத்துறைத் தலைவர் அக்பர் உசேன் மற்றும் பேராசிரியர் பா. சுpராஜுதீன் ஆகியோர் பணியாற்றினர். விழா நிகழ்வினை இணைப்பேராசிரியர் கா. முகமது இஸ்மாயில் அவர்கள் தொகுத்து வழங்கினார். கல்லூரியின் துணை முதல்வர் முகமது இப்ராகிம் அவர்கள் நன்றியுரையாற்றினார். இவ்விழாவில் இஸ்லாமிய அறிஞர்கள், கல்லூரியின் பல்துறை பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

**ஆனந்தன், சிறப்பு செய்தியாளர்.**

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புதுதில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

# தினமணி

வெள்ளிக்கிழமை
22 டிசம்பர் 2017
திருச்சி
20 பக்கங்கள் ரூ.5

## இலக்கியம் – சுதந்திரப் போரில் தமிழ் முஸ்லிம்கள் பங்களிப்பு

# திருச்சியில் இஸ்லாமிய பண்பாட்டு ஆய்வு மையம் தொடக்கம்

**திருச்சி, டிச.21:** இலக்கியம், நாட்டுப்புறவியல், சுதந்திரப் போராட்டம், கல்வி வளர்ச்சியில் தமிழ் முஸ்லிம்களின் பங்களிப்பு குறித்து விரிவாக ஆய்வு செய்ய இஸ்லாமிய பண்பாட்டு ஆய்வு மையம் தொடங்கப்பட்டுள்ளது.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் அமைந்துள்ள இந்த மையத்தின் தொடக்க விழா வியாழக்கிழமை நடைபெற்றது. தஞ்சாவூர் அஞ்சுமன் அறிவகம் மற்றும் இஸ்லாமிய மைய நிறுவனர் டி.எம். ஜபருல்லாஹ், இந்த மையத்தை திறந்து வைத்தார். மையத்தின் நோக்கங்கள் குறித்து அதன் இயக்குநர் ஜெ. ராஜா முகம்மது பேசியது: இந்திய சுதந்திரப் போராட்டம் தொடங்குவதற்கு முன்பாகவே ஆங்கிலேயர்களை எதிர்த்து சுதந்திரப் போராட்டத்தை மதுரையில் தொடங்கியவர் யூசுப் கான். இவரைத்தான் தனக்கு சுதந்திரத்தை பிரகடனப்படுத்தி போராடிய நபர் என ஆங்கிலேயர்களே குறிப்பிட்டுள்ளனர். சுல்தான் ஆட்சி காலத்திலும் இதேநிலை தான் இருந்தது. ஆர்க்காடுநவாப் காலத்தில்தான் ஆங்கிலேயர்களது உத்தரவை கேட்டு நடப்பவர்களாக மாறிப்போயினர். இதேபோல, தமிழ் இலக்கியத்திலும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படைப்புகள் உள்ளன. ஆனால், உமறுப்புலவர் எழுதிய சீராப்புராணம், மஸ்தான் சாகிப் பாடல்களை மட்டுமே குறிப்பிடுகிறோம். வணிகத்திலும் ஆங்கிலயேர்களை விஞ்சி உலகபொருளாதாரத்தில் வலுசேர்த்தவர்கள் தமிழ் முஸ்லிம்கள். தமிழ் முஸ்லிம்களது பங்களிப்பு பல்வேறு துறைகளை கடந்து பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தொடங்கிவிட்டது. ஆனால், அவரை அறியப்படாமல் உள்ளன. அவற்றை வெளிக்கொணருவதற்காகவே இஸ்லாமிய பண்பாட்டு ஆய்வு மையம் தொடங்கப்பட்டுள்ளது என்றார்.




திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் வியாழக்கிழமை நடைபெற்ற இஸ்லாமியப் பண்பாட்டு ஆய்வு மையம் தொடக்க விழாவில் பேசுகிறார் மையத்தின் இயக்குநர் முனைவர் ஜெ. ராஜா முகம்மது.

புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் பக்தவத்சல பாரதி பேசுகையில், பண்பாட்டு ஆய்வுகள் என்பது வரலாற்று ரீதியாகவும், அறிவியல் ரீதியாகவும், சமயம் சார்ந்ததாகவும் இருப்பது சிறப்புக்குரியது. ஒடுக்கப்பட்டவர்களுக்கு கூட பல ஆய்வு மையங்கள் உள்ளன நிலையில், வரலாற்று சிறப்பு பெற்ற இஸ்லாமிய சமூகத்துக்கு ஆய்வு மையம் இல்லாத குறையை இந்த மையம் தீர்த்து வைத்துள்ளது. இதன் மூலம் விரிவான ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும் என்றார்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் கே.எம் காதர் முகைதீன், முன்னாள் அமைச்சரும், தஞ்சாவூர் முத்தமிழ் மன்றத் தலைவருமான சீ.நா.மி. உபயதுல்லா, கல்லூரிச் செயலர் காஜா நஜீமுதீன், தலைவர் ஜமால் முகமது பிலால், பொருளாளர் கே.ஏ. கலீல் அகமது, துணைச் செயலர் முகமது சிகாபுதீன், கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன், முனைவர்கள் கே. அப்துஸ்சமது, அப்துல் காதர் நிஹால், முகமது பாசில், யாஸின் ஜூபைர் உள்ளிட்டோர் வாழ்த்திப் பேசினர். இந்த விழாவில், பேராசிரியர்கள், தமிழ் ஆர்வலர்கள், இலக்கிய ஆர்வலர்கள், மாணவர், மாணவிகள் என பலர் கலந்து கொண்டனர்.

RICE CITY
Nurturing Tomorrow
Rice City Matriculation Higher Secondary School
Railway Road, Aduthurai - 612 101 Ph : 0435 2473350 / 2470138
E-mail : ricecityschool@gmail.com www.ricecity.org

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper

RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018
TN /PMG (CCR) WPP258/2016-18

தரம்
மென்மை
நீடித்த உழைப்பு
999
மார்க் லுங்கிகள்
இது வெறும் நம்பரல்ல, நம்பிக்கை!





திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி செயலாளராக மீண்டும் தேர்வு செய்யப்பட்ட முனைவர் ஏ.கே.காஜா நஜ்முத்தீன், பொருளாளராக தேர்வு செய்யப்பட்ட ஹாஜி ஜமால் முஹம்மது, துணை செய்யலாளராக தேர்வு செய்யப்பட்ட முனைவர் அப்துல் சமது ஆகியோர் தேசிய தலைவரை இல்லத்தியில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். கல்லூரியை மேலும் பலப்படுத்தவும் குறித்து ஆலோசனை நடத்தினார். புதிதாக தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் தேசிய தலைவர் பேராசிரியர் கே.எம்.காதர்மொகிதீன் வாழ்த்துகளை தெரிவித்தார்.




MAKKAL KURAL (Independent National Tamil Daily) 8 பக்கம் விலை ரூ.4.00

மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

மதுரை பதிப்பு

(மலர்:39 * 20.12.2017 புதன் மாலை * வெளியூர் 21.12.2017 வியாழன் ⋆ இதழ் 206)

Regd. No. TN/SR-21/15–17






# ஜமால் முகமது கல்லூரியின் நிர்வாகக்குழு உறுப்பினர் கலீல் அகமதுவுக்கு பாராட்டு விழா

திருச்சி, டிச.20–

திருச்சி ஜமால் முகமது கல்லூரி நிர்வாகக்குழுவின் பொருளாளராக பதவி வகித்த கே. ஏ. கலீல் அகமது ஓய்வு பெற்றார். அவருக்கு பாராட்டு விழா கல்லூரி வளாகத்தில் நடத்தப்பட்டது.

இவ்விழாவிற்கு கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ. கே. காஜா நஜீமுதீன் தலைமை வகித்து புதிதாக பொருளாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஹாஜி எம். ஜே. ஜமால் முகமதுவை மற்றும் உதவிச்செயலராக தோ்வு செய்யப்பட்ட முனைவர் கே. அப்துல் சமதுவை கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். மேலும் கல்லூரியில் 1989–ம் ஆண்டு முதல் 2017–ம் ஆண்டு வரை 28 ஆண்டுகள் தொடர்ந்து பொருளாளராக பதவி வகித்த ஹாஜி கே.ஏ.கலீல் அகமதுவின் சாதனைகளை எடுத்துரைத்து வாழ்த்துரை வழங்கினார்.

புதிதாக தேர்வு செய்யப்பட்ட பொருளாளரைப் பற்றி கல்லூரியின் முன்னாள் முதல்வர் ஏ.எம்.முகமது சிந்தாஷாவும், புதிதாக தோ்வு செய்யப்பட்ட உதவிச்செயலரைப் பற்றி கல்லூரியின் முன்னாள் முதல்வர் ஆர். காதர் முகைதீன் வாழ்த்திப் பேசினர்.

மேலும் இந்நிகழ்வில் கல்லூரியின் நிதியாளராக (தன்னிதி) கே.என்.அப்துல் காதர் நிகால், மேலாண்மைத்துறையின் இயக்குநராக ஆர். காதர் முகைதீன், வருகைப்பதிவாளாராக (தன்னிதி) பேராசிரியர் எம்.ஏ.ஜமால் முகமது யாசின் ஜுபைர் ஆகியோர் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

கல்லூரியின் முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன் வரவேற்புரையாற்றினார். துணை முதல்வர் ஏ. முகமது இப்ராகிம் நன்றியுரையாற்றினார். இவ்விழாவிற்கு விடுதியின் இயக்குனர் கே.என்.முகமது பாஜில் உள்பட கல்லூரி ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள், ஜமால் முகமது கல்வியியல் கல்வி மற்றும் ஜமால் முகமது ஆயிஷா பெண்கள் மெட்ரிக் மேல்நிலைப் பணியாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இறுதியாக கூடுதல் துணை முதல்வர் எம். முகமது சிகாபுதீனின் பிரார்த்தனை (துஆ) உடன் விழா சிறப்பாக நிறைவடைந்தது.

BENNETT, COLEMAN & CO. LTD. | ESTABLISHED 1838 TRICHY | MONDAY, DECEMBER 18, 2017 | 18 PAGES | METRO | PRICE ₹2.50

THE TIMES OF INDIA

TIMESOFINDIA.COM

**1,275 candidates fail to turn up for TNPSC exam:** A total of 1613 candidates appeared for the written examination for the post of assistant conservator of forest conducted by Tamil Nadu public service commission (TNPSC) in seven centres in Trichy on Sunday. Out of 2,888 candidates who were given hall-tickets, 1275 did not turn up for the exam. Trichy district collector K Rajamani visited the examination centres at Jamal Mohammed college and St James matriculation school in Trichy.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்
www.dinakaran.com
/dinakarannews
/dinakaranonline

இப்போது திருமணம் இல்லை பக்கம் 14
அணைகள் பராமரிப்பில் அலட்சியம் பக்கம் 6
உலக சூப்பர் சீரீஸ் வெள்ளி பதக்கம் வென்றார் பக்கம் 15

● திருச்சி ● திங்கள், டிசம்பர் 18, 2017 ● சென்னை ● புதுவை ● வேலூர் ● சேலம் ● கோவை ● திருச்சி ● மதுரை ● நெல்லை ● நாகர்கோவில் ● பெங்களூர் ● மும்பை ● டெல்லி ● கதிர் 39 ஒளி 193 ● 20 பக்கம் ₹5

# உதவி வனபாதுகாவலர் பணிக்கான எழுத்து தேர்வு

## 1,275 பேர் ஆப்சென்ட்



உதவி வன பாதுகாவலர்கள் பதவிக்கான எழுத்துதேர்வு திருச்சி ஜமால்முகமது கல்லூரியில் நேற்று நடந்தது. தேர்வு நடைபெறுவதை கலெக்டர் ராஜாமணி பார்வையிட்டார்.

திருச்சி, டிச.18: திருச்சி மாவட்டத்தில்நேற்றுநடந்த உதவி வனபாதுகாவலர் எழுத்து தேர்வினை 1,613 பேர் எழுதினர். 1,275 பேர் தேர்வு எழுதவில்லை என கலெக்டர்ராஜாமணிதெரிவித்தார்.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் உதவி வன பாதுகாவலர்பணிக்கானதேர்வு தமிழகம் முழுவதும் நேற்று நடந்தது.திருச்சியில்ஜமால் முகமது கல்லூரி, புனித ஜேம்ஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி ஆகிய தேர்வு மையங்களில் நடந்த தேர்வினை கலெக்டர் ராஜாமணிபார்வையிட்டுஆய்வு செய்தார்.

ஆய்வுக்குப்பின் அவர் கூறுகையில், 'திருச்சி மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் உதவி வன பாதுகாவலர் எழுத்து தேர்வு 7மையங்களில் நடந்தது. மாவட்டத்தில் 2,888 தேர்வாளர்கள்தேர்வுஎழுத விண்ணப்பித்திருந்தனர். இதில் 1,613 தேர்வாளர்கள் தேர்வு எழுதினர். 1,275தேர்வாளர்கள்தேர்வுஎழுதவரவில்லை.

தேர்வு மையங்களை கண்காணிக்க10முதன்மைக் கண்காணிப்பாளர்கள் பணியில் ஈடு படுத்தப்பட்டனர்.தேர்வுவினாத்தாள், விடைத்தாள்களை தேர்வு மையங்களுக்கு கொண்டு செல்லும் பணியினை மேற்கொள்ள 2நடமாடும்குழுக்கள்அமைக்கப்பட்டிருந்தது.

தேர்வு மையங்களில் திடீர் ஆய்வு மேற்கொள்ள துணைகலெக்டர்நிலையில் 1 அலுவலர், 1 வருவாய் உதவியாளர் ஆகியோர் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். அனைத்து தேர்வு மையங்களிலும் வீடியோகிராபர் மூலம்தேர்வுபதிவுசெய்யப்பட்டது.

அனைத்து தேர்வு மையங்களிலும் காவல் துறை மூலம் பாதுகாப்பு பணி மேற்கொள்ளப்பட்டது.தேர்வாளர்கள்தேர்வு மையங்களுக்கு செல்ல சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டன' என்றார்.

REGD. No. TRY/056/2015-2017 ★★★★
இன்டர்நெட் முகவரி:
http://www.dailythanthi.com

BIS HALLMARK 91.6 தங்க நகைகள் வாங்க
நகரில் மதிப்புமிக்க நிறுவனம்
A GOLD SAVINGS SCHEME
A 100% 916 HALLMARK SHOWROOM
M/s வம்.சண்முகம்பிள்ளை
VESV ஜீவல்லர்ஸ் A/c
3220-3223, தெற்கு ராஜவீதி, புதுக்கோட்டை-622 001.
போன்: 04322-221869, 223869

- இந்திய நாளிதழ்களில் முதல் இடம் வகிக்கும் தமிழ் நாளிதழ் - தினத்தந்தி -

# தினத் தந்தி
DAILY THANTHI

வெல்க தமிழ்

திருச்சி (18-12-2017) திங்கட்கிழமை | மலர் 76 இதழ் 48

ஹேவிளம்பி ஞ மார்கழி மீ 3 உ
ஹிஜிரி 1439 ரபீஉல் அவ்வல் 28

மாணவர் ஸ்பெஷல் மற்றும்
2018 புத்தாண்டு பலன்கள்
24 பக்கம் 500 காசு

பட்டின் பாரம்பரியம்... 15%
தைலா Thaila
பட்டு • ரெடிமேட்ஸ் • மில்ஜவுளிகள்
55, பெரியகடை வீதி, திருச்சி-2 போன் : 2705554

# உதவி வன பாதுகாவலர் பணிக்கான எழுத்து தேர்வு

திருச்சி,டிச.18-

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் உதவி வன பாதுகாவலர் பணிக்கான எழுத்து தேர்வு திருச்சி மாவட்டத்தில் 7 மையங்களில் நேற்று நடைபெற்றது. இந்த தேர்வினை எழுத 2,888 பேர் விண்ணப்பித்து இருந்தனர். இதில் 1,613 தேர்வாளர்கள் தேர்வு எழுதினர். 1,275 பேர் தேர்வு எழுத வரவில்லை. தேர்வு மையங்களை கண்காணிக்க 10 முதன்மைக் கண்காணிப்பாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். தேர்வு வினாத்தாள் மற்றும் விடைத்தாள்களை தேர்வு மையங்களுக்கு கொண்டு செல்லும் பணியினை மேற்கொள்ள 2 நடமாடும்



குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன. தேர்வு மையங்களில் திடீர் ஆய்வு மேற்கொள்ள துணை கலெக்டர் நிலையில் 1 அலுவலர், 1 வருவாய் உதவியாளர் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். அனைத்து தேர்வு மையங்களிலும் வீடியோகிராபர் மூலம் தேர்வு நடைபெற்றதை பதிவு செய்யப்பட்டது. போலீஸ் பாதுகாப்பும் போடப்பட்டு இருந்தது. தேர்வாளர்கள் தேர்வு மையங்களுக்கு செல்ல சிறப்பு பஸ்கள் இயக்கப்பட்டன. ஜமால் முகமது கல்லூரி, புனித ஜேம்ஸ் மெட்ரிக் பள்ளி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருந்த தேர்வு மையங்களை மாவட்ட கலெக்டர் கே. ராஜாமணி பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

திங்கள்கிழமை
18 டிசம்பர் 2017
திருச்சி
14 பக்கங்கள் ரூ.5


# உதவி வனப் பாதுகாவலர் தேர்வு: 1,613 பேர் எழுதினர்

**திருச்சி, டிச.17:** தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் ஞாயிற்றுக்கிழமை நடத்திய உதவி வனப் பாதுகாவலர் தேர்வை திருச்சி மாவட்டத்தில் 1,613 பேர் எழுதினர்.

வனத்துறையில் காலியாக உள்ள உதவி வனப் பாதுகாவலர் பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிக்கையை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் விடுத்திருந்தது. இதன்படி இத்தேர்வு மாநிலம் முழுவதும் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்டது. திருச்சி மாவட்டத்தில் 7 இடங்களில் தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டிருந்தன. திருச்சி ஜமால் முகமது கல்லூரி, புனித ஜேம்ஸ் மெட்ரிக். மேல்நிலைப் பள்ளி மையங்களை மாவட்ட ஆட்சியர் கு.ராசாமணி ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதைத் தொடர்ந்து ஆட்சியர் கூறியது:

திருச்சி மாவட்டத்தில் உதவி வனப் பாதுகாவலர் தேர்வை எழுத 2,888 பேர் விண்ணப்பித்திருந்தனர். இவர்களில் 1,613 பேர் மட்டுமே வந்தனர். 1,275 பேர் தேர்வெழுத வரவில்லை. தேர்வு மையங்களைக் கண்காணிக்க 10 முதன்மைக் கண்காணிப்பாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். தேர்வு வினாத்தாள் மற்றும் விடைத்தாள்களை தேர்வு மையங்களுக்கு கொண்டு செல்லும் பணியில் 2 நடமாடும் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டன என்றார்.



**திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் தேர்வு மையத்தில் ஆய்வு செய்த மாவட்ட ஆட்சியர் கு.ராசாமணி.**

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

வியாழக்கிழமை
14 டிசம்பர் 2017
திருச்சி
14 பக்கங்கள் ரூ.5

# கல்லூரி மாணவர்களுக்கான மாநில அளவிலான வினாடி-வினா

**திருச்சி, டிச. 13:** திருச்சி ஜமால் முகமது கல்லூரியில், மாநில அளவிலான வினாடி வினா போட்டிகள் புதன்கிழமை நடைபெற்றது.

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி விலங்கியல் ஆராய்ச்சித் துறை மற்றும் கல்பாக்கம் இந்திராகாந்திஅணு ஆராய்ச்சி மையம் இணைந்து நடத்திய போட்டியில் திருச்சி, தஞ்சாவூர், பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்கள் உள்ளடங்கிய திருச்சி பிராந்தியத்தைச் (ஜோர்னல்) சேர்ந்த இருபதுக்கும் மேற்பட்ட கலை அறிவியல் கல்லூரி மாணவ, மாணவிகள் பங்கேற்றனர்.

முன்னதாக நடைபெற்ற நிகழ்ச்சியில் ஜமால் முஹம்மது கல்லூரி முதல்வர் எஸ்.இஸ்மாயில் முஹையுதீன் தலைமை வகித்தார். கல்பாக்கம் இந்திரா காந்தி அணு ஆராய்ச்சி மைய கதிரியக்க அளவீடு மற்றும் பயன்பாட்டுத்துறைத் தலைவர் கே. சிவசுப்பிரமணியன் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று அணு ஆற்றல் துறையின் மூன்று நிலைகள் மற்றும் அணு ஆராய்ச்சி மைய பணிகள் குறித்து விளக்கி பேசினார்.

போட்டிகளில் கும்பகோணம் இதயா கல்லூரி, திருச்சி பிஷப்ஹீபர் கல்லூரி, ஜோசப் கல்லூரி ஆகியவை முறையே முதல் மூன்று இடங்களை பெற்றன. வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு தாளாளர் அ. ஒ. காஜாநஜுமுதீன், சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை வழங்கினார். கல்லூரியின் விலங்கியல் துறைத் தலைவர் முஹம்மதுசம்சுதீன், பேராசிரியர் அ. சாதிக் புகாரி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

http://www.maalaimalar.com Regd. No. TRY/061/2015-2017 RNI.No.42628/85

மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

MAALAI MALAR

திருச்சி 12-12-2017 (செவ்வாய்க்கிழமை) 8 பக்கம் 400 காசு ★★★ மலர் 40 இதழ் 360

## திருச்சி ஜமால் முகமது கல்லூரியில்

# கணிதவியல் அணுகுமுறை-கணக்கீடு குறித்த பன்னாட்டு கருத்தரங்கம்

திருச்சி, டிச. 12–

திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் கணிதத்துறை சார்பில் கணிதவியல் அணுகுமுறைகள் மற்றும் கணக்கீடுகள் குறித்த பன்னாட்டு கருத்தரங்கம் தொடக்க விழா நடைபெற்றது.

தஞ்சாவூர் பிரிஸ்ட் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் எத்திராஜுலு கருத்தரங்கை துவக்கி வைத்தார். ஜமால் முகமது கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன் தலைமையுரையாற்றினார்.

கல்லூரி செயலரும் தாளாளருமான டாக்டர் ஏ.கே. காஜா நஜிமுதீன் ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பை வெளியிட, ஜமால் முகமது கல்லூரி பொருளாளர் கே. ஏ.கலீல் அகமது சாஹிப் பெற்றுக் கொண்டார்.

முன்னதாக கணிதத் துறைத் தலைவர் மேஜர் என். அப்துல் அலி வரவேற்றார். கருத்தரங்க அமைப்புச் செயலாளர் முனைவர் நாகூர் கனி கருத்தரங்கைப் பற்றிய மைய உரையாற்றினார். இறுதியாக துறை இணை பேராசிரியர் முனைவர் ஜாகிர் உசேன் நன்றி கூறினார்.

நிகழ்ச்சியில் உதவிச்செயலர் ஜமால் முகமது, துணை முதல்வர் முனைவர் முகமது இப்ராகிம், கூடுதல் துணை முதல்வர் முனைவர் முகமது சிகாபுதீன், மேலாண்மைத் துறை இயக்குநர் முனைவர். அப்துல் சமது, சுயநிதிப்பிரிவு இயக்குநர் முனைவர் அப்துல் காதர் நிஹால், விடுதி இயக்குநர்கள் முனைவர் முகமது பாஜில், பேராசிரியர் ஜமால் முகமது யாசின் ஜுபைர் உள்பட பலர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

கணித துறையின் மேதைகளிடமிருந்து ஆராய்ச்சி குறித்த அறிவினை இளம் மாணவர்கள் பெற்றுக்கொள்ளவும், பன்னாட்டு கருத்தரங்கில் கலந்துரையாடவும் வழிவகை செய்யும் நோக்குடன் இக்கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டது.

கருத்தரங்கில் பங்களாதேஷ் நாட்டிலிருந்து முனைவர் முகமது பபுல் ஹசன், கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து முனைவர் பெரேரா மற்றும் சுல்தான் காபூஸ் பல்கலைக்கழக் பேராசிரியர் முனைவர் நசீர் ஆகியோர் தங்களது ஆய்வு கருத்துக்களை இளம் ஆய்வாளர்களோடு கருத்து பரிமாற்றம் செய்தனர்.

சுமார் 500 பேராசிரியர்கள் மற்றும் ஆய்வு மாணவர்கள் கலந்து கொண்ட இக்கருத்தரங்கில் 190 ஆய்வுக் கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. ஆய்வு கட்டுரைகளின் தொகுப்பு நூலில் இடம் பெற்றுள்ள பல ஆய்வுக்கட்டுரைகள் கணிதத் துறையின் நவீன வளர்ச்சியினைக் காட்டுவதாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.



திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் கணிதவியல் துறை சார்பில் அணுகுமுறைகள் மற்றும் கணக்கீடுகள் குறித்த பன்னாட்டு கருத்தரங்கம் நடைபெற்றபோது எடுத்தபடம்.

# ஜமால்முகமது கல்லூரியை சேர்ந்த ஐ.ஏ.எஸ். தேர்வு மாணவர்களுக்கு நிர்வாக திறன் கலந்துரையாடல்

**திருச்சி, டிச.9**

முகாமில், 67 தனியார் நிறுவனங்கள் கலந்துகொண்டு, தங்கள் நிறுவனங்களுக்கான பணியாளர்களை தேர்வு செய்தனர். இதில், 8ம் வகுப்பு முதல் முதுநிலை, தொழில்படிப்பு பட்டதாரிகள் வரை என பல்வேறு கல்வித்தகுதிகளைக் கொண்ட 2 ஆயிரத்து 500க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு முதல்கட்டமாக, 444 வேலைநாடுநர்களுக்கு பணிநியமன ஆணைகளை கலெக்டர் ராசாமணி வழங்கினார். நிகழ்ச்சியில், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் வாசுதேவன், மண்டல வேலைவாய்ப்பு இணை இயக்குனர் அனிதா, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குனர் பாபு, டிடிட்சியா தலைவர் கனகசபாபதி, மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர்கள் காமராஜ், முத்துபாண்டி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

திங்கள்கிழமை
16 அக்டோபர் 2017
திருச்சி
22 பக்கங்கள் ரூ.5

# தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்: 444 பேருக்கு நியமன ஆணை



திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்ற தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்ணுக்கு பணி நியமன ஆணையை வழங்குகிறார் ஆட்சியர் கு. ராசாமணி.

**திருச்சி, அக். 15:** திருச்சி மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஆகியவை இணைந்து நடத்திய தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இந்த முகாமில் 67 வேலை வாய்ப்பு அளிக்கும் நிறுவனங்களைச் சேர்ந்த அலுவலர்கள் பங்கேற்று, 8-ஆம் வகுப்பு தேர்ச்சி முதல் பட்டயம், பட்டம் படித்த இளைஞர், இளைஞிகள் உள்ளிட்டோரை நேர்காணல் மூலம் தேர்வு செய்தனர். இதில் பல்வேறு கல்வித்தகுதிகளைக் கொண்ட சுமார் 2234-க்கும் மேற்பட்ட வேலைநாடுநர்கள் கலந்து கொண்டனர். இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட 444 வேலைநாடுநர்களுக்கு பணிநியமன ஆணைகள் உடனடியாக வழங்கப்பட்டது. பணிநியமன ஆணைகளை மாவட்ட ஆட்சியர் கு. ராசாமணி வழங்கினார். நிகழ்ச்சியில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் வி. வாசுதேவன், மண்டல வேலைவாய்ப்பு இணை இயக்குநர் ஆ. அனிதா, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத் திட்ட இயக்குநர் பி. பாபு, ஜமால் முகம்மது கல்லூரி செயலர் ஏ.கே. காஜா நஜிமுதீன், கல்லூரி முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

ZAM ZAM REAL ESTATE
ALHAJEE S.M. BATHRUTHEEN
வாய்மையும் நம்பிக்கையும் பெற்ற வளம் மிகுந்த நிறுவனம்
கட்டிடங்கள் வாங்க - விற்க வாடகை வசூல் செய்ய புகழ் பெற்றது
பு.எண்: 76 (ப.எண்: 233) பீட்டர்ஸ் ரோடு, ராயபேட்டை, சென்னை - 600 014.
போன் : 044 - +91 44 2848 0697 / 4330 2522
E-mail : zamzam501@rediffmail.com www.zamzamrealestate.com

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper

RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018
TN /PMG (CCR) WPP258/2016-18

தரம்
மென்மை
நீடித்த உழைப்பு
999
மார்க் லுங்கிகள்
இது வெறும் நம்பரல்ல. நம்பிக்கை!





# ஜமால் முஹம்மது கல்லூரியில் வில்வித்தை போட்டியில் முஹம்மது பாசித் அலி தங்கப் பதக்கம் வென்றார்

## தலைவர் பேராசிரியர் கே.எம். காதர் மொகிதீன் பாராட்டு

திருச்சி, அக்11-

மாநில அளவிலான வில்வித்தை போட்டியில் ஜமால் முஹம்மது கல்லூரி அரபித் துறை முஹம்மது பாசித் அலி தங்கம் பதக்கம் வென்ற மாணவரை பாராட்டி பேராசிரியர் கேஎம். காதர் மொகிதீன் சல்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தோடு தேசிய அளவிலான போட்டியிலும் தங்கம் பெறவேண்டும் என ஊக்கப்படுத்தினார்.

மாணவரை பாராட்டிய கல்லூரி செயலாளர் முனைவர் ஏ.கே. காஜா நஜ்முதீன், உதவிச் செயலாளர் ஹாஜி ஜமால் முஹம்மது, கல்லூரி முதல்வர் முனைவர் இஸ்மாயில் மொய்தீன் ஆகியோர் பாராட்டி தேசிய அளவிலான போட்டிக்கு கல்லூரி நிர்வாகம் உதவி செய்வதாகவும் கூறி தங்கம் வென்ற மாணவரை பாராட்டி ஊக்கப்படுத்தினார்கள். பின்னர் இந்த மாணவருக்கு தேசிய அளவிலான. வில்வித்தைக்கு தேவையான அனைத்து உதவிகளை செய்யுமாறும் விளையாட்டுத் துறை உதவி இயக்குநர் ஷாகின்ஷாவுக்கு கல்லூரி நிர்வாகம் உத்தரவு விட்டது.

பின்னர் மாணவருக்கு பேராசிரியர் கேஎம். காதர் மொய்தீன் சல்வை அணிவித்து பாராட்டு தெரிவித்தார்.

இந்த சந்திப்பின் போது இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் திருவாரூர் மாவட்ட தலைவர் எம்என். ஜலாலுதீன், திருச்சி தெற்கு மாவட்ட துணைத்தலைவர் அப்துல் முத்தலிப், ஜமால் முஹம்மது கல்லூரி அரபித் துறைத் தலைவர் முனைவர் மொய்தீன் அப்துல் காதர், அரபித் துறை பேராசிரியர் முனைவர் காஜா மொய்தீன், சன்சைன் ஹஜ் மற்றும் உம்ரா சர்விஸ் உரிமையாளர் எம்எஸ். பசல், திருச்சி மாவட்ட மணிச்சுடர் செய்தியாளர் எம்கே. ஷாகுல் ஹமீது ஆகியோர் உடன் இருந்தனர்

RAMRAJ
கும்பகோணம் | தஞ்சாவூர் | மயிலாடுதுறை

தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்
-TPTC Edition-

Since 1947 ISO 9001:2008
சிவ சிதம்பரம்பிள்ளை ஜுவல்லரி
1526, தெற்கலங்கம், தஞ்சாவூர். Ph:274297

திருச்சி • சனி • அக்டோபர் 14, 2017 | சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் | • 16 பக்கம் • 600 காசு • மலர் 67 • இதழ் 39

# திருச்சியில் நாளை தனியார் வேலைவாய்ப்பு முகாம்

திருச்சி, அக். 14-

*திருச்சியில் இளைஞர்களுக்கான தனியார்துறை வேலை வாய்ப்பு முகாம் நாளை (15ம் தேதி) ஜமால் முகமது கல்லூரியில் நடக்கிறது.*

திருச்சி மாவட்ட வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை மற்றும் மாநில ஊரக வாழ்வாதார இயக்க மாவட்ட மேலாண்மை அலகு சார்பில், தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் நாளை (15ம் தேதி) காலை 9 மணி முதல் பகல் 3 மணி வரை திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற உள்ளது. திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 18 வயது பூர்த்தியடைந்த, குறைந்த பட்சம் 8ம் வகுப்பு, 10ம் வகுப்பு, பிளஸ்2, டிப்ளமோ, ஐடிஐ, பட்டப்படிப்பு பெற்ற இருபால் இளைஞர்கள் கலந்து கொள்ளலாம்.

இம்முகாமில், பல்வேறு தொழில் நிறுவனங்கள் பங்கேற்க உள்ளதால், திருச்சி மாவட்டம் நகர மற்றும் ஊரகப்பகுதிகளைச் சார்ந்த இளைஞர்கள் தங்களது பயோடேட்டா, கல்வித்தகுதி, இருப்பிடச்சான்று, போட்டோ மற்றும் இதர சான்றுகளின் அசல் மற்றும் நகலுடன் நேரில் வந்து கலந்து கொண்டு பயன் பெறலாம். மேலும் விவரங்களுக்கு, மாவட்ட இயக்க மேலாண்மை அலகின் இணை இயக்குனரை நேரிலும், 0431--2412726 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம். இத்தகவலை கலெக்டர் ராசாமணி தெரிவித்துள்ளார்.

# தினகரன்

ஒரு புதிய அனுபவம்

www.dinakaran.com
/dinakarannews
/dinakaranonline





இன்று 2 தினகரன்
ஆன்மிக மலர் புத்தகம் கேட்டு வாங்குங்கள்



விநாயகர் பரிசுத் திருவிழா: போட்டி எண் 5-க்கான கூப்பன்
250 பேருக்கு வெள்ளி காமாட்சி விளக்கு பரிசு
பக்கம் 16





●திருச்சி ●சனி, அக்டோபர் 14, 2017 ●சென்னை ●புதுவை ●வேலூர் ●சேலம் ●கோவை ●திருச்சி ●மதுரை ●நெல்லை ●நாகர்கோவில் ●பெங்களூர் ●மும்பை ●டெல்லி ●கதிர் 39 ஒளி 129 ●24 பக்கம் ₹5


### திருச்சியில் நாளை

# தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்

**திருச்சி, அக்.14:** திருச்சி மாவட்ட தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் இளைஞர்களுக்கான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நாளை (15ம் தேதி) நடைபெற உள்ளது.

இதுகுறித்து கலெக்டர் ராஜாமணி விடுத்துள்ள செய்திக்குறிப்பில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பில் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 18 வயது பூர்த்தியடைந்த, குறைந்தபட்சம் 8ம் வகுப்பு, 10ம் வகுப்பு, 12ம் வகுப்பு, டிப்ளமோ, ஐடிஐ, பட்டப்படிப்பு படித்த இளைஞர்களுக்கு (ஆண்,பெண் இருபாலரும்) அவரவர்களின் தகுதிக்கேற்ப, தனியார் துறையில் வேலைவாய்ப்பு அளித்திட மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க மாவட்ட இயக்க மேலாண்மை அலகு (மகளிர் திட்டம்) இணைந்து நடத்தும் வேலைவாய்ப்பு முகாம் நாளை (15ம் தேதி) காலை 9மணி முதல் பிற்பகல் 3மணி வரை திருச்சி ரேஸ்கோர்ஸ் மைதானம் அருகில் உள்ள ஜமால்முகமது கல்லூரியில் நடக்கிறது. வேலைவாய்ப்பு முகாமில் பல்வேறு தொழில் நிறுவனங்கள் பங்கேற்கவுள்ளதால், திருச்சி மாவட்டம் நகர பகுதி மற்றும் ஊரகப்பகுதிகளைச் சார்ந்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு பயன் பெற தன்விபரம் குறிப்பு, கல்வித்தகுதி, இருப்பிடச் சான்று, புகைப்படம் மற்றும் இதர சான்றுகளின் அசல் மற்றும் நகலுடன் கலந்துகொள்ளவேண்டும்.

மேலும் விபரங்களுக்கு இணை இயக்குநர் திட்ட இயக்குநர் மாவட்ட இயக்க மேலாண்மை அலகு, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், மாவட்ட ஆட்சியரகம், திருச்சி-1 என்ற முகவரியில் நேரிலோ அல்லது 0431-2412726 என்ற தொலைபேசிஎண்ணிலோ தொடர்பு கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது.

http://www.maalaimalar.com Regd. No. TRY/061/2015-2017 RNI.No.42628/85

# மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

MAALAI MALAR

திருச்சி 11-10-2017 (புதன்கிழமை) 8 பக்கம் 400 காசு ★★★ | மலர் 40 இதழ் 299

# மேலாண்மை கருத்தரங்கம்



திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் தேசிய அளவிலான மேலாண்மை துறை கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் புதுடெல்லி மேலாண்மை ஆய்வு மையத்தின் பொது துணை இயக்குனர் அழகுசுந்தரம் மேலாண்மை சம்பந்தப்பட்ட புத்தகத்தை வெளியிட்டார். இதில் கல்லூரி மேலாண்மை துறை தலைவர் காதர் மைதீன், இயக்குனர் அப்துல் சமது, கல்லூரி செயலாளர் காஜா நஜிமுதின், முதல்வர் இஸ்மாயில் முகைதீன், கல்லூரி பொருளாளர் கலில் அகமது உள்பட பலர் கலந்து கொண்டனர்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புதுதில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

# தினமணி

வெள்ளிக்கிழமை
13 அக்டோபர் 2017
திருச்சி
22 பக்கங்கள் ரூ. 5


வெள்ளிக்கிழமை, 13 அக்டோபர் 2017

# உலக மனநல தின மனிதச் சங்கிலி



திருச்சியில் நடைபெற்ற மனிதச் சங்கிலியில் பங்கேற்ற சமூக ஆர்வலர்கள் மற்றும் கல்லூரி மாணவிகள்.

***திருச்சி, அக்.12:*** உலக மனநல தினத்தையொட்டி திருச்சியில் கல்லூரி மாணவ, மாணவிகள், செவிலியர்கள் உள்ளிட்டோர் பங்கேற்ற மனிதச் சங்கிலி வியாழக்கிழமை நடைபெற்றது.

திருச்சி ஆத்மா மருத்துவமனைகள் மற்றும் இளையோர் எக்ஸ்னோரா இண்டர்நேஷல் ஆகியவை இணைந்து நடத்திய இந்த மனிதச்சங்கிலி பாரதியார் சாலையில் தொடங்கியது. நிகழ்வுக்கு ஆத்மா மருத்துவமனைகளின் இயக்குநர் டாக்டர் கே. ராமகிருஷ்ணன் தலைமை வகித்தார். இளையோர் எக்ஸ்னோரா இண்டர்நேஷனல் நிறுவனர் பி. மோகன், மாவட்ட நூலக அலுவலர் அ. பொ.சிவகுமார், குழந்தைகள் நலக்குழுத் தலைவர் இந்திராகாந்தி ஆகியோர் மனிதச்சங்கிலியைத் தொடக்கி வைத்தனர்.

பாரதியார் சாலை, எல்ஐசி, ஆர்.சி. மேல்நிலைப் பள்ளி, ஜென்னி பிளாசா, தலைமை அஞ்சல் நிலையம் வரையிலான பகுதி வரை மாணவ, மாணவிகள் மனிதச்சங்கிலியில் நீண்டவரிசையில் கைகோர்த்து நின்றனர். திருச்சி ஜமால் முகமது, காட்டூர் உருமு தனலட்சுமி கல்லூரி கல்லூரி மாணவர் எக்ஸ்னோரா மாணவ, மாணவிகள், ஆத்மா மருத்துவமனை செவிலியர்கள், துவாக்குடி அரசுக் கலைக் கல்லூரி மாணவ, மாணவிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

FOLLOW US:
thehindu.com
facebook.com/thehindu
twitter.com/the_hindu

THE HINDU
FRIDAY, OCTOBER 13, 2017
INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878
TIRUCHIRAPALLI
CITY EDITION
36 pages • ₹6.00

PRINTED AT · CHENNAI · COIMBATORE · BENGALURU · HYDERABAD · MADURAI · NOIDA · VISAKHAPATNAM · THIRUVANANTHAPURAM · KOCHI · VIJAYAWADA · MANGALURU · TIRUCHIRAPALLI · KOLKATA · HUBBALLI · MOHALI · MALAPPURAM · MUMBAI · TIRUPATI · LUCKNOW

# Creating awareness of mental health

**SPECIAL CORRESPONDENT**
TIRUCHI

A large number of health workers, volunteers and students formed a human chain here on Thursday to raise awareness on the importance of mental health and well being on the occasion of World Mental Health Day.

Athma Hospitals, Tiruchi and Youth Exnora International organised the programme. Students of Jamal Mohamed College, Urumu Dhanalakshmi College, Government Arts College, Thuvakudi, nursing trainees and para medical staff members, formed human chain on Madurai road from Tiruchi Railway Junction Roundabout to Head Post Office.

Anbalayam, another voluntary organisation, also organised a human chain in association with Campion Anglo Indian Higher Secondary School in the city. Students and volunteers participated in the human chain held in front of the school.

முரசு: 57 ஒலி: 147

8 பக்கங்கள் விலை 500 காசுகள்

THANJAI MALAI MURASU

Reg.No. TRY/060/2015-2017

RNI Regn. No.5842/61

# தஞ்சை மாலை முரசு

திருச்சி பதிப்பு

11-10-2017 (புரட்டாசி 25) புதன்கிழமை

★★★

திருச்சியில் தேசிய அளவில் 2 நாள் நடக்கிறது

## ஆயிரம் மாணவர்கள் பங்கேற்கும் மேலாண்மை போட்டிகள்

### இன்று தொடங்கியது

திருச்சி, அக். 11–

திருச்சியில் தேசிய அளவிலான ஆயிரம் மாணவர்கள் பங்கேற்கும் மேலாண்மை போட்டிகள் இன்று தொடங்கியது. நாளையும் தொடருகிறது.

திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியின் ஜமால் மேலாண்மை துறையின் சார்பில் தேசியளவிலான மேலாண்மை பந்தய போட்டியாளர் கூட்டியல்வு, டைகூன்ஸ் 2017 ஆகியவை இன்று முதல் 2 நாட்கள் நடக்கிறது. முதல் நாள் நிகழ்ச்சி என்.பி. அப்துல்கபூர் அரங்கில் இன்று காலை 10 மணிக்கு தொடங்கியது.




கல்லூரி முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன் தலைமை தாங்கினார். ஜமால் மேலாண்மை துறை இயக்குநர் கே.அப்துஸ் சமது, வரவேற்புரை நிகழ்த்தி சிறப்பு விருந்தினரை அறிமுகம் செய்து வைத்தார். தொடக்க விழா பேருரையை புதுடெல்லி வேளாண்மை ஆய்வு மையத்தின் பொது துணை இயக்குநர் கே. அழகு சுந்தரம் தொடங்கிவைத்து சிறப்புரையாற்றினார். இன்றும், நாளையும் நடைபெறும் மேலாண்மை போட்டியாளர் கூட்டியல்வில் மேலாண்மைத்திறன் தொடர்பானபோட்டிகள் 11 பிரிவுகளில் நடைபெறுகிறது.

http://www.maalaimalar.com Regd. No. TRY/061/2015-2017 RNI.No.42628/85

மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

MAALAI MALAR

திருச்சி 12-10-2017 (வியாழக்கிழமை) 8 பக்கம் 600 காசு ★★★ மலர் 40 இதழ் 300

## பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்ற

# திருச்சி உள்பட 8 மாவட்ட கல்லூரிகளுக்கு இடையேயான கூடைப்பந்து போட்டிகள்

## பிஷப் ஹீபர் கல்லூரி அணி சாம்பியன்

திருச்சி, அக். 12–

திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழக இணைவு பெற்ற திருச்சி, தஞ்சை, புதுகை, நாகை, திருவாரூர், கரூர், அரியலூர், பெரம்பலூர், ஆகிய 8 மாவட்டகளில் உள்ள கல்லூரிகளுக்கு இடையிலான கூடைப்பந்து போட்டி கும்பகோணம் அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நாக் அவுட் மற்றும் அரை இறுதி போட்டிகள் லீக் முறையில் நடைபெற்றது.

16 கல்லூரி அணிகள் பங்கேற்ற போட்டியில் அரை இறுதி லீக்போட்டியில் திருச்சி பிஷப் ஹீபர், ஜமால் முகமது, செயிண்ட் ஜோசப், மயிலாடுதுறை ஏ.வி.சி. ஆகிய 4 கல்லூரி அணிகள் விளையாட தகுதி பெற்றன.

அரை இறுதி லீக் போட்டிகளில் பிஷப் ஹீபர் கல்லூரி, ஏ.வி.சி. கல்லூரியை 105–51 என்ற புள்ளிகள் கணக்கிலும், செயிண்ட் ஜோசப்'ஸ் கல்லூரியை 82–62 என்ற புள்ளி கணக்கிலும், ஜமால் முகமது கல்லூரியை 94–76 என்ற புள்ளிகள் கணக்கிலும் மூன்று போட்டிகளிலும் வென்று முதலிடம் பிடித்தது.

மேலும் பாரதிதாசன் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு இடையிலான கூடைபந்து போட்டியின் சாம்பியன் பட்டத்தை தக்க வைத்துக் கொண்டது.

ஜமால் முகமது கல்லூரி ஏ.வி.சி. கல்லூரியை 100–24 என்ற புள்ளிகள் கணக்கிலும், செயிண்ட் ஜோசப் கல்லூரியை 83–78 என்ற புள்ளிகள் கனக்கிலும் இரண்டு போட்டிகளில் வென்று இரண்டாம் இடம் பிடித்தது.

செயிண்ட் ஜோசப் கல்லூரி ஏ.வி.சி. கல்லூரியை 80–67 என்ற புள்ளிகள் கணக்கில் ஒரு போட்டியில் வென்று மூன்றாம் இடம் பிடித்தது.

வெற்றி பெற்று முதலிடம் பிடித்து சாம்பியன் பட்டத்தை தக்கவைத்து கொண்ட பிஷப் ஹீபர் கல்லூரி வீரர்களை கல்லூரி முதல்வர் டி.பால் தயாபரன், உடற்கல்வி துறை தலைவர் எல்.சி. ஜான், உடற் கல்வி துறை தலைவர் (பொ). ஏ.பால்ராஜ், பயிற்சியாளர் எஸ்.வீரசரவணன் ஆகியோர் பாராட்டினார்கள்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

வியாழக்கிழமை
12 அக்டோபர் 2017
திருச்சி
14 பக்கங்கள் ரூ.5

# 'திறன் மேம்பாடும், தொடர் கற்றலும் உயர்வுக்கு மிகவும் அவசியம்'



திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்ற விழாவில் பேசுகிறார் புதுதில்லி வேளாண் ஆய்வு மையத்தின் பொது துணை இயக்குநர் கே. அழகுசுந்தரம்.

**திருச்சி, அக். 11:** திறன் மேம்பாடும், தொடர் கற்றலும் வாழ்க்கையின் உயர்வுக்கு மிகவும் அவசியம் என்றார் புதுதில்லி வேளாண்மை ஆய்வு மையத்தின் பொது துணை இயக்குநர் கே. அழகுசுந்தரம்.

திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியின் ஜமால் மேலாண்மை கல்வி நிறுவனம் சார்பில் தேசிய அளவிலான மேலாண்மை போட்டிகள் 'டைகூன்ஸ் 2017' தொடக்க விழா புதன்கிழமை நடைபெற்றது.

வியாழக்கிழமை வரை நடைபெறும் போட்டிகளை புதுதில்லி வேளாண்மை ஆய்வு மையத்தின் பொது துணை இயக்குநர் கே. அழகுசுந்தரம் தொடங்கி வைத்துப் பேசியது:

கடந்த 1960-இல் ஏற்பட்ட கடும் வறட்சியினாலும், உணவுப் பொருள்கள் பற்றாக்குறையினாலும் நமது நாடு கடுமையாகப் பாதிக்கப்பட்டது. அப்போது நமது நாடு, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிடம் உணவு தானியங்களை கடனாகப் பெற்றது. ஆனால் தற்போது உலக நாடுகளுக்கே நாம் உணவு தானியங்களை ஏற்றுமதி செய்யும் அளவுக்கு உயர்ந்துள்ளோம்.

1960-இல் 300 மில்லியன் டாலராக இருந்த உள்நாட்டு உற்பத்தி, தற்போது 1.5 டிரில்லியன் டாலர்களாக உயர்ந்துள்ளது. இதற்கு நமது நாட்டு அறிஞர்கள் நிகழ்த்திய பசுமை புரட்சியே காரணம். இதன் மூலம் இந்தியர்களின் அறிவும் உலகளவில் உயர்ந்து வருவது தெளிவாகிறது.

வருங்கால தொழில்முனைவோர்களான நீங்கள், உங்களது திறனை இன்றைய சூழ்நிலைக்கு ஏற்றவாறு மேம்படுத்திக் கொள்ளுங்கள். தொடர்ந்து நாளிதழ்களை படித்து, உங்களது அறிவை விசாலமாக்கி, வாழ்க்கையில் முன்னேறுங்கள். திறனை மேம்படுத்திக் கொள்ளுதலும், தொடர்ந்து கற்றலும் வாழ்க்கையில் மிக உயர்ந்த இடத்தை அடைய அவசியம் தேவை என்றார் அழகுசுந்தரம்.

தொடர்ந்து, சிறந்த தலைமை நிர்வாக அலுவலர், முதன்மை மேலாண்மைக் குழு, சிறந்த தொழில்முனைவோர், நிதியியல் வல்லுநர், சந்தையிடும் யுக்திகள், வணிக குறியீட்டுப் பெயர் போட்டி, விநாடி வினா, கூட்டுக் குழுவுக்குரிய கண்காட்சி, மேலாண்மை கட்டுரை, பங்கு மூலதன போட்டி, மனிதவள விளையாட்டுப் போட்டி ஆகிய 11 பிரிவுகளில் மேலாண்மைப் போட்டிகள் நடைபெற்றது. இதில் தேசிய அளவில் 50-க்கும் மேற்பட்ட கல்லூரிகளைச் சேர்ந்த 500-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் பங்கேற்கின்றனர். முன்னதாக, ஜமால் மேலாண்மை கல்வி நிறுவனத்தின் இயக்குநர் கே. அப்துஸ் சமது வரவேற்றார். கல்லூரி செயலர் ஏ.கே. ஹாஹா நசிமுதீன் தலைமை வகித்தார். துணை செயலர் ஜமால் முகம்மது, கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

# தினகரன்

ஒரு புதிய அனுபவம்

www.dinakaran.com
/dinakarannews
/dinakaranonline






10,+1,+2 மற்றும் நீட் மாதிரி வினாவிடை
புத்தகம் கேட்டு வாங்குங்கள்

சன் டிவி-தினகரன் நாளிதழ் இணைந்து வழங்கும்
விநாயகர் பரிசுத் திருவிழா: போட்டி எண் 3-க்கான கூப்பன்
250 பேருக்கு வெள்ளி காமாட்சி விளக்கு பரிசு
பக்கம் 17





● திருச்சி ● வியாழன், அக்டோபர் 12, 2017 ● சென்னை ● புதுவை ● வேலூர் ● சேலம் ● கோவை ● திருச்சி ● மதுரை ● நெல்லை ● நாகர்கோவில் ● பெங்களூர் ● மும்பை ● டெல்லி ● கதிர் 39 ஒளி 127 ● 20 பக்கம் ₹5


## ஜமால்முகமது கல்லூரியில்

# தேசிய அளவில் மேலாண்மை போட்டிகள் துவக்கம்



▶ திருச்சி ஜமால்முகமது கல்லூரியில் தேசிய அளவிலான மேலாண்மை பந்தயபோட்டி மற்றும் புத்தக வெளியீட்டு விழா நடந்தது. இதில் வேளாண்மை ஆய்வு மைய துணை இயக்குனர் அழகுசுந்தரம், கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**திருச்சி, அக்.12:** திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் தேசிய அளவிலான மாணவர்கள் பங்கேற்கும் 2 நாள் மேலாண்மை போட்டிகள் நேற்று துவங்கியது.

திருச்சி ஜமால்முகமது கல்லூரியின் ஜமால் மேலாண்மை துறை சார்பில் தேசிய அளவிலான மேலாண்மை பந்தய போட்டியாளர் கூட்டியல்பு, டைகூன்ஸ் 2017 இரண்டு நாள் போட்டிகள் நேற்று துவங்கியது.

கல்லூரி அரங்கில் முதல்நாள் நடைபெற்ற தொடக்க விழாவிற்கு கல்லூரி முதல்வர் இஸ்மாயில் தலைமை வகித்தார். ஜமால் மேலாண்மை துறை இயக்குநர் அப்துல்சமது வரவவேற்றார். புதுடெல்லி வேளாண்மை ஆய்வு மையத்தின் பொது துணை இயக்குநர் அழகு சுந்தரம் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். முதல் நாள் போட்டியில் இந்திய அளவில் பல்வேறு கல்லூரிகளில் இருந்து 1000த்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர். 2வது நாளாக இன்று 11 போட்டிகள் நடைபெறுகிறது.

## ஜமால் முஹம்மது கல்லூரி சார்பில்

# திருச்சி மாநகராட்சியில் 1000 வீடுகளுக்கு சென்று வரதட்சணை எதிரான துண்டு பிரசுரம் விநியோகம்



திருச்சி, அக்.10–

ஜமால் முஹம்மது கல்லூரி கைக்கூலி கைவிட்டோர் கழகம் சார்பில் திருச்சி மாநகரில் 1000 வீடுகளில் சென்று வரதட்சினை எதிரான துண்டு பிராசுரம் விநியோகம் செய்யப்பட்டு வரதட்சினை வாங்கமால் மற்றும் மஃகர் கொடுத்து திருமணம் செய்யுங்கள் என திருச்சி மாநகர பகுதியில் உள்ள 1000 வீடுகளுக்கு சென்று விழிப்புணர்வு பிராச்சாரம் செய்யப்பட்டு துண்டுபிரசுங்கள் வழங்கப்பட்டது.

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் வரதட்சிணை வாங்க கூடாதும் என்றும் மஃகர் கொடுத்து திருமணம் செய்யவேண்டும் என்ற அமைப்பான கைக்கூலி கைவிட்டோர் கழகம் மாணவர்கள் மூலமாக இந்த அமைப்பு மிகச் சிறப்பாக செயல் பட்டு வருகிறது. இந்த அமைப்பின் சார்பில் கல்லூரி வளாகத்தில் வரதட்சினை எதிரான கையெழுத்து இயக்கம் நிகழ்ச்சி நடைபெற்றது. விழாவுக்கு கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் மொய்தீன் தலைமை வகித்தார். கழகத்தின் ஆலோசகரும் வணிகவியல் துறை பேராசிரியர் முனைவர் அப்துல் ஹக்கீம் அனைவரையும் வரவேற்று பேசினார்.

கல்லூரி செயாலளார் மற்றும் தாளாளர் முனைவர் ஏ.கே. காஜா நஜ்முதீன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வரதட்சினை வாங்குவாதால் ஏற்படும் பிரச்சனைகளை குறித்தும் அதனால் ஏற்படும் இன்னல்களை குறித்து பேசினார். பின்னர் வரதட்சினை எதிரான கொடுமை களை குறித்த கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்தார்.

பின்னர் கல்லூரியில் படிக்கும் 1000 மேற்பட்ட மாணவர்கள் வரதட்சினை எதிரான கையெழுத்து இட்டு நாங்களும் எக்காரணம் கொண்டு திருமணம் முடிக்கும் போது வரதட்சினை வாங்கமாலும் நாங்கள் மஃகர் கொடுத்து திருமணம் முடிப்போம் என்று உறுதிமொழி ஏற்றுக் கொண்டு கையெழுத்துயிட்டனார்கள்.

இந்த அமைப்பின சார்பில் திருச்சி மாநகராட்சி பகுதியில் பலக்கரை,காஜாமலை, டி.வி.எஸ். டோல்கேட்,சுப்ரமணியபுரம், பீமநகர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் உள்ள 1000 வீடுகளில் நேரிடையாக சென்று வரதட்சினை தொடர்பான விழிப்புணர்வு பிராச்சாரம் மற்றும் வரதட்சினை வாங்குவதால் ஏற்படும் இன்னல்கள் குறித்தும் துண்டுபிராசுரங்கள் வழங்கப்பட்டன.

வரதட்சினை வாங்கமால் திருமணம் முடித்தால் அந்த குடும்பங்கள் எப்படி இருக்கும் என்பதை விளக்க கூறினார்கள். பின்னர் இந்த பிராச்சாரம் மூலம் நாங்கள் எக்காரணம் கொண்டு வரதட்சினை வாஙகமால் என்னுடைய மகன்களுகும் மற்றும் எங்களுடைய மகள்களை வரதட்சினை கொடுக்காமல் திருமணம் செய்து கொடுப்போம் என 1000 குடும்பங்களை சேர்ந்த பெற்றோர்கள் மற்றும் அவரது மகன்கள் , மகள்கள் உறுதிமொழி ஏற்றுக் கொண்டு கைக்கூலி கைவிட்டோர் கழகம் சார்பில் உறுதிமொழி பத்திரத்தில் கையெழுத்தினார்.

விழாவில் சுயநிதி பிரிவு இயக்குனர் முனைவர் அப்துல் காதர் நிகால், விடுதி இயக்குனர் முனைவர் முஹம்மது பாசில், விடுதி ஓருங்கிணைப்பாளர் முனைவர் முஹம்மது சர்புதீன், துணை முதல்வர் முனைவர் முஹம்மது இப்ராஹிம், கூடுதல் துணை முதல்வர் முனைவர் முஹம்மது ஷிகாபுதீன்,

கைக்கூலி கைவிட்டோர் கழக நிறுவனர் கூத்தநல்லூர் அப்துல் அலீம், கைக்கூலி கைவிட்டோர் கழகத்தின் தலைவர் கணினி துறை மாணவர் முஹம்மது நியாஸ், செயாலளார் இயற்பியல் துறை மாணவர் பாயிசுர் ரகுமான், பொருளாளர் வணிகவியல் துறை மாணவர் முஹம்மது ஆசிப், உதவும் இதயங்களின் செயாலளர் பைசல் அகமது, துணைத்தலைவர் வேதியியல் துறை மாணவர் முஹம்மது சபாயத், துணைச் செயாலளார் வணிகவியல் துறை மாணவர் அபதுல் ரஹ்மான், துணன பொருளாளர் வணிகவியல் துறை மாணவர் இம்ரான்கான், உதவும் இதயங்களின் நிர்வாகி வேதியியல் துறை மாணவர் அப்பாஸ், கணினி த் துறை மாணவர்கள் அசன், முஹம்மது நிசாருதீன் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டார்கள்.




# தமிழ்நாடு முஸ்லிம் கல்வி டிரஸ்ட் சார்பில் பல்வேறு துறைகளில் சாதனை புரிந்த இளம் சாதனைகளர்கள் 78 பேருக்கு விருது

திருச்சி, அக்.10–

திருச்சியில் தமிழ்நாடு முஸ்லிம் கல்வி மற்றும் மேம்பாட்டு டிரஸ்ட் சார்பில் பல்வேறு துறைகளில் சாதனை புரிந்த இளம் சாதனைகளர்கள் 78பேருக்கு விருதுகள் மற்றும் பதக்கங்கள் சான்றிதழ் ஆகியவை வழங்கப்பட்டது.

தமிழ்நாடு முஸ்லிம் கல்வி மற்றும் மேம்பாட்டு டிரஸ்ட் சில ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டது. இந்த டிரஸ்ட் மூலம் கல்வி மற்றும் சிறு வயது முதல் பெரியவார்களுக்கு வரை பல்வேறு வகையான வகையில் உதவி செய்து வருகிறார்கள். அதுமட்டும்மாலமல் சிறியவர்கள் பல்வேறு சாதனைகள் புரிந்து வருகிறார்கள். மேலும் சாதனை புரிய அவர்களுக்கு தேவையான உதவிகளை இந்த ட்ரஸ்ட் செய்து வருகிறார்கள். கல்வி சம்பந்தமான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பல்வேறு மாவட்டங்களில் நடத்தி வருகிறார்கள்.

அதுமட்டுமல்லாமல் மாற்றுதிறனாளிகள் மற்றும் வாய் பேச முடியாத மாணவ, மாணவிகளுக்கும் அவர்களின் திறனை அறிந்து அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் இவர்களே ஏற்றுக்கொள்கிறது. வருடம் தோறும் பல்வேறு துறைகளில் சாதனை புரிந்தவார்களுக்கு விருது பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கிவருவார்கள்.

அந்த வகையில் இந்த வருடத்தின் இளம் சாதனைகளுக்கு விருது வழங்கும் விழா திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி காஜாமியான் விடுதியில் நடைபெற்றது. விழாவுக்கு தமிழ்நாடு முஸ்லிம் கல்வி மற்றும் மேம்பாட்டு டிரஸ்ட் தலைவரும் மற்றும் கல்லூரி செயாலாளர் முனைவர் ஏ.கே. காஜாநஜ்முதீன் தலைமை வகித்தார். தமிழ்நாடு முஸ்லிம் கல்வி மற்றும் மேம்பாட்டு டிரஸ்ட் துணைத்தலைவரும் திருச்சி அய்மான் மகளிர் கல்லூரி தாளாளர் முனைவர் எம்.எம். ஷாகுல் ஹமீது அனைவரையும் வரவேற்று பேசினார்.

ஜமால் முஹம்மது கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் மொய்தீன், மதுரை மீனாட்சி அரசு மகளிர் கல்லூரி முன்னாள் முதல்வரும் மற்றும் தமிழ்நாடு முஸ்லிம் கல்வி மற்றும் மேம்பாட்டு டிரஸ்ட் துணைத்தலைவர் முனைவர் தஸ்ரிப் ஜகான், எம்.ஏ.எம். பொறியியல் கல்லூரி சேர்மன் மற்றும் முனைவர் ஏம.ஏ.எம். நிஜாம், நெல்லை சதக்கத்துல்லா அப்பா கல்லூரி முதல்வர் முனைவர் முஹம்மது சாதிக், கீழக்கரை தாஸிம் பீவி அப்துல் காதர் மகளிர் கல்லூரி முதல்வர் முனைவர் சுமையா ஆகியோர் பேசுகையில் :

இந்த டிரஸ்ட் மூலம் கல்வி சம்பந்தமான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை பல்வேறு மாவட்டங்களில் நடத்தி வருகிறோம். அது மட்டுமல்லாமல் இளம் வயதிலேயே தங்களது சொந்த மூளைகளை வைத்து பல்வேறு கண்டுபிடிப்புகளை பிடித்த வருகிறார்கள். மேலும் அவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் இந்த டிரஸ்ட் மூலம் நாங்கள் பல்வேறு உதவிகளை செய்து வருகிறோம். இவ்வாறு அவர்கள் பேசினார்கள்.

பின்னர் பல்வேறு சாதனை படைத்த இளம் சாதனையாளர்கள் தாங்கள் கண்டுபிடித்த ராக்கெட், குட்டி விமானம், ஆளில்லாமல் விண்வெளியில் புகைப்படம் எடுக்க கூடிய இயந்திரங்கள் ஆகியவை டெமோ செய்யப்பட்டது.பின்னர் கண்பார்வையற்றோர் தங்கள் செய்த சாதனைகள் குறித்தும் மேடையில் மாணவர்கள் மத்தியில் பேசி அனைவரையும் ஆச்சிரியமுட்டும் வகையகல் அமைந்தது. இரண்டு கைகள் இல்லாமல் காலீல் மூலம் பல்வேறு ஓவியங்கள் வரைந்து காட்டியதையும் எல்லோருமையையும் அசத்தியது. காலம் சாட் என்ற பெயரில் கையளவு ஏவுகணை தயாரித்த கரூர் மாவட்டம் பள்ளப்பட்டியைச் சேர்ந்த இளம் விஞ்ஞானி ரிபாத் சாரூக் செய்த ஏவுகணை எப்படி தயாரித்து அதை உலகத்துக்கு எப்படி வந்ததையும் விளக்கி கூறினார்.

தமிழகத்தில் உள்ள பல்வேறு துறைகளில் சாதனை புரிந்த இளம் 78 சாதனையாளர்களுக்கு சிறப்பு விருந்தினர் முனைவர் கேசன் விருதுகள் மற்றும் பதக்கம் சான்றிதழ்களை வழங்கி இளம் சாதனை புரிந்நவார்களுக்கு பல்வேறு அறிவுரைகளை வழங்கி பேசினார். விழாவில் கல்லூரி பொருளாளர் கலீல் அஹமது, மேலாண்மை. துறை இயக்குநர் முனைவர் அப்துல் சமது, தமிழ்நாடு முஸ்லிம் கல்வி மற்றும் மேம்பாட்டு டிரஸ்டிகள் தொழில் அதிபர் நைனார் முஹம்மது, ஆலிம் முஹம்மது சாலிகு பொறியியல் கல்லூரி பேராசிரியர் முஹம்மது ரபீக், அப்துல் ரஹ்மான் ரபீக், நைனார் சுல்தான், விடுதி ஒருங்கிணைப்பாளர் முனைவர் முஹம்மது சர்புதீன், விடுதி இயக்குநர் முனைவர் முஹம்மது ஷகாபதீன். கூடுதல் துணை முதல்வர் முனைவர் முஹம்மது. ஷிகாபதின், திருச்சி செய்தியாளர் எம்.கே. ஷாகுல் ஹமீது, தமீமுல் அன்சாரி மற்றும் இளம் சாதணையாளர்களின் பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள்.

விழா முடிவில் தமிழ்நாடு முஸ்லிம் கல்வி மற்றும் மேம்பாட்டு டிரஸ்டி மற்றும் ஜமால் கல்லூரியின் மேலாண்மை துறை தலைவர் முனைவர் காதர் மொய்தீன் நன்றி கூறினார்.

THE NEW INDIAN EXPRESS
TIRUCHY • TUESDAY • OCTOBER 10, 2017 • ₹5.00 • PAGES 14 • LATE CITY EDITION


Richard H Thaler

READ SHARE FOLLOW
newindianexpress.com
facebook.com/thenewindianxpress twitter.com/newindianxpress



*RICHARD THALER HONOURED WITH ECONOMICS NOBEL*

**Famous for contribution to behavioural economics, which studies how cognitive limitations influence financial markets**

CO-FOUNDER OF **NUDGE THEORY**

Thaler is well-known as co-creator of 'nudge' theory, which demonstrates how people can be persuaded (or nudged) to make important financial decisions that leave them healthier and happier, like saving for a pension. He also coined the term

**BEING HUMAN**

- Behavioural economics explores the impact of psychological and social factors on decisions by individuals or groups and their effect on the economy and financial markets
- Thaler showed that financial decision-makers are not always rational, but mostly deeply human

$1.1 million

**HE JOKED HE WOULD SPEND THE PRIZE MONEY "IRRATIONALLY"**

CHENNAI • MADURAI • VIJAYAWADA • BENGALURU • KOCHI • HYDERABAD • VISAKHAPATNAM • COIMBATORE • KOZHIKODE • THIRUVANANTHAPURAM • BELAGAVI • BHUBANESWAR • SHIVAMOGGA • MANGALURU • TIRUPATI • TIRUCHY • TIRUNELVELI • SAMBALPUR • HUBBALLI • DHARMAPURI • KOTTAYAM • KANNUR • VILLUPURAM • KOLLAM • WARANGAL • TADEPALLIGUDEM • NAGAPATTINAM • THRISSUR

# Inter-college technical symposium organised

**EXPRESS NEWS SERVICE** @ Tiruchy

ABOUT 250 students pursuing Computer Science were provided with a chance of debugging a software to notify the errors for a smooth run of the program, that yielded them scores at the two-day-long Inter-Collegiate Technical Symposium 'SWAP 2K17' which was inaugurated at Jamal Mohamed College (JMC) on Monday.

The yearly programme was hosted mainly to provide a hands-on for the budding system professional, even before entering the field. Students of around 26 colleges across the country took part in the event. The two-day event will see students debugging the software, convert the given set of codes, design the web page, solving the riddle within a given time.

An associate professor in Computer Science Department OA Mohamed Jafar said, "One of the events is 'Stress Management' when the participants were given with problems to see how they come up with it and provide a solution." This is another way to understand the quick solutions when such problems were posed on them while on work, the assistant professor added.

The participants were given questions and they were seen selecting the best option available for the Multiple Choice Questions (MCQs).

ஹஜ் & உம்ரா சேவையில் 28வது ஆண்டு...
திருச்சி
சன்சைன் ஹஜ் & உம்ரா சர்வீஸ்
புனித உம்ரா பயணம்
(மாதந்தோறும் பயண ஏற்பாடு)
H.O.: No. R/301-3, Vallal Seethakathi Salai, Main Road, KILAKARAI - 623 517. Ramnad Dt
Mobile : 99941 20556 E-mail : sunshinehajservice@gmail.com
TRICHY
No. 24, Baba Towers, Tennur High Road, Trichy - 17
Mobile : 98403 32113 / 95665 55291 / E-mail : sunshinehajservice@gmail.com

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

https://www.facebook.com/Manichudardailypaper
RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018 TN /PMG (CCR) WPP258/2016-18

SCM SHIRTS
Seyad Home
Industries Private Limited
Tirunelveli - 627 003
A product of Seyad Cotton Mills

மணி - 33 சுடர் - 052 | ஹிஜ்ரி 1439 - முஹர்ரம் - 18 | திருவள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாசி - 23 | சென்னை 09.10.2017 திங்கள் | வெளியூர் 10.10.2017 செவ்வாய் | http://muslimleaguetn.com/manichudar.asp | பக்கம் 4 | விலை ₹ 3

# பல்வேறு துறைகளில் சாதனை புரிந்த இளம் சாதனையாளர்களுக்கு விருது

## முனைவர் தஸ்ரிப் ஜகான், முனைவர் எம்.ஏ.எம்.நிஜாம் பங்கேற்பு




திருச்சி, அக்.09-

திருச்சியில் தமிழ்நாடு முஸ்லிம் கல்வி மற்றும் மேம்பாட்டு டிரஸ்ட் சார்பில் பல்வேறு துறைகளில் சாதனை புரிந்த இளம் சாதனைகளர்கள் 78பேருக்கு விருதுகள் மற்றும் பதக்கங்கள் சான்றிதழ் ஆகியவை வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் மாநில மகளிர் அணி தலைவி முனைவர் தஸ்ரிப் ஜகான், தெற்கு மாவட்ட தலைவர் முனைவர் எம்.ஏ.எம்.நிஜாம் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

தமிழ்நாடு முஸ்லிம் கல்வி மற்றும் மேம்பாட்டு டிரஸ்ட் சில ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டது. இந்த டிரஸ்ட் மூலம் கல்வி மற்றும் சிறு வயது முதல் பெரியவர்கள் வரை பல்வேறு வகையான வகையில் உதவி செய்து வருகிறார்கள். அதுமட்டுமல்ல சிறியவர்கள் பல்வேறு சாதனைகள் புரிந்து வருகிறார்கள். மேலும் சாதனை புரிய அவர்களுக்கு தேவையான உதவிகளை இந்தட்ரஸ்ட் செய்து வருகிறது. அதுமட்டுமல்லாமல் மாற்றுதிறனாளிகள் மற்றும் வாய் பேச முடியாத மாணவ, மாணவிகளுக்கும் அவர்களின் திறனை அறிந்து அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளையும் ஏற்றுக்கொள்கிறது. வருடம் தோறும் பல்வேறு துறைகளில் சாதனை புரிந்தவார்களுக்கு விருது பதக்கம் மற்றும் சான்றிதழ் வழங்கிவருகிறார்கள். அந்தவகையில் இந்தவருடத்தின் இளம் சாதனைகளுக்கு விருது வழங்கும் விழா திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி காஜாமியான் விடுதியில் நடைபெற்றது. விழாவுக்கு கல்லூரி செயலாளர் முனைவர் ஏ.கே. காஜாநஜ்முதீன் தலைமை வகித்தார். திருச்சி அய்மான் மகளிர் கல்லூரி தாளாளர் முனைவர் எம்.எம். ஷாகுல் ஹமீது அனைவரையும் வரவேற்று பேசினார்.

ஜமால் முஹம்மது கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் மொய்தீன், மதுரை மீனாட்சி அரசு மகளிர் கல்லூரி முன்னாள் முதல்வரும் இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் மாநில மகளிர் அணி தலைவி முனைவர் தஸ்ரிப் ஜகான், எம்.ஏ.எம். பொறியியல் கல்லூரி முனைவர் எம்.ஏ.எம். நிஜாம், நெல்லை சதக்கத்துல்லா அப்பா கல்லூரி முதல்வர் முனைவர் முஹம்மது சாதிக், கீழக்கரை தாஸிம் பீவி அப்துல் காதர் மகளிர் கல்லூரி முதல்வர் முனைவர் சுமையா ஆகியோர் பேசுகையில் : இந்த டிரஸ்ட் மூலம் கல்வி சம்பந்தமான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை பல்வேறு மாவட்டங்களில் நடத்தி வருகிறோம். அது மட்டுமல்லாமல் இளம் வயதிலேயே அவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் இந்த டிரஸ்ட் மூலம் நாங்கள் பல்வேறு உதவிகளை செய்து வருகிறோம்.இவ்வாறு அவர்கள் பேசினார்கள்.

பின்னர் பல்வேறு சாதனை படைத்த இளம் சாதனையாளர்கள் தாங்கள் கண்டுபிடித்த ராக்கெட், குட்டி விமானம், ஆளில்லாமல் விண்வெளியில் புகைப்படம் எடுக்க கூடிய இயந்திரங்கள் ஆகியவை டெமோ செய்யப்பட்டது.

விழாவில் கல்லூரி பொருளாளர் கலீல் அஹமது, மேலாண்மை துறை இயக்குநர் முனைவர் அப்துல் சமது, தமிழ்நாடு முஸ்லிம் கல்வி மற்றும் மேம்பாட்டு டிரஸ்டிகள் தொழில் அதிபர் நைனார் முஹம்மது, ஆலிம் முஹம்மது சாலிகு பொறியியல் கல்லூரி பேராசிரியர் முஹம்மது ரபீக், அப்துல் ரஹ்மான் ரபீக், நைனார் சுல்தான், விடுதி ஒருங்கிணைப்பாளர் முனைவர் முஹம்மது சர்புதீன், விடுதி இயக்குநர் முனைவர் முஹம்மது ஷகாபுதீன். கூடுதல் துணை முதல்வர் முனைவர் முஹம்மது ஷியாவுதீன், திருச்சி செய்தியாளர் எம்.கே. ஷாகுல் ஹமீது,தமீமுல் அன்சாரி மற்றும் இளம் சாதனையாளர்களின் பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள். விழா முடிவில் தமிழ்நாடு முஸ்லிம் கல்வி மற்றும் மேலாண்மை துறை தலைவர் முனைவர் காதர் மொய்தீன் நன்றி கூறினார்.



# ...ட்டமளிப்பு விழா

## ...எல்.ஏ. பங்கேற்பு





சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

திங்கள்கிழமை
9 அக்டோபர் 2017
திருச்சி
14 பக்கங்கள் ரூ. 5

# அக்டோபர் 15-இல் வேலைவாய்ப்பு முகாம்

**திருச்சி, அக். 8:** திருச்சி ஜமால் முகமது கல்லூரியில், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை சார்பில் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் அக். 15-இல் நடைபெற உள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் கு. ராசாமணி விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

இம்முகாமில், பொறியியல் துறை, 108 ஆம்புலன்ஸ், தனியார் காப்பீட்டு நிறுவனங்கள், உணவு விடுதிகள், தொழிற்சாலைகள் உள்ளிட்ட சுமார் 50-க்கும் மேற்பட்ட நிறுவனங்களில் உள்ள பல்வேறு காலிப்பணியிடங்களுக்கு ஆள்தேர்வு நடைபெறவுள்ளது. இதில் பத்தாம் வகுப்பு முதல் பட்டயம், பட்டப்படிப்பு, ஐடிஐ, டிப்ளமோ மற்றும் பொறியியல் படித்தவர்கள் பங்கேற்று பயன் பெறலாம்.

முகாமில், பங்கேற்க விரும்புவோர் தங்களது கல்விச்சான்று உள்ளிட்ட தேவையான சான்றுகளுடன் பாஸ்போர்ட் அளவு புகைப்படம் மற்றும் சுயவிவரங்களுடன் பங்கேற்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.



# தினகரன்

ஒரு புதிய அனுபவம்

www.dinakaran.com
/dinakarannews
/dinakaranonline



சீன ஓபன் டென்னிசில் சாம்பியன் பக்கம் 15



மிரட்டும் டெங்கு மீட்குமா தமிழக அரசு பக்கம் 6

டோனி ரசிகராக நடிக்கிறார் பக்கம் 14

● திருச்சி ● திங்கள், அக்டோபர் 9, 2017 ● சென்னை ● புதுவை ● வேலூர் ● சேலம் ● கோவை ● திருச்சி ● மதுரை ● நெல்லை ● நாகர்கோவில் ● பெங்களூர் ● மும்பை ● டெல்லி ● கதிர் 39 ஒளி 124 ● 20 பக்கம் ₹5


## திருச்சியில்

# தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம்

**15ம் தேதி நடக்கிறது**

திருச்சி, அக்.9: திருச்சி மாவட்ட நிர்வாகம் சார்பில் ஜமால்முகமது கல்லூரியில் வருகிற 15ம் தேதி தனியார் வேலைவாய்ப்பு முகாம் நடைபெறுகிறது.

இது குறித்து கலெக்டர் ராஜாமணி விடுத்துள்ள செய்திகுறிப்பு: திருச்சி மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம், மாவட்ட ஊரக வளர்ச்சித்துறை இணைந்து நடத்தும் தனியார்துறைவேலைவாய்ப்பு முகாம் வருகிற 15ம் தேதி திருச்சி டிவிஎஸ் டோல் கேட் அருகில் உள்ள ஜமால் முகமது கல்லூரியில் நடைபெறுகிறது. தனியார் துறை வேலைவாய்ப்புமுகாமில்பொறியியல்துறை, 108 ஆம்புலன்ஸ், தனியார் காப்பீட்டு நிறுவனங்கள், முன்னணி தனியார் ஓட்டல் நிறுவனங்கள் மற்றும் தனியார் தொழிற்சாலைகள்என 50க்கும்மேற்பட்ட நிறுவனங்கள் கலந்து கொண்டு பல்வேறு பணிகளுக்கு ஆட்களை தேர்வு செய்ய உள்ளனர். வேலைவாய்ப்பு முகாமில் திருச்சி மாவட்டத்தை சேர்ந்த எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு, பனிரெண்டாம் வகுப்பு, கலை, அறிவியல் பட்டதாரிகள், ஐடிஐ, டிப்ளமோ மற்றும்பொறியியல் பட்டப்படிப்புபடித்துள்ள வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பங்கேற்று பயன் பெறலாம். விருப்பமுள்ளவர்கள் தங்களின் பாஸ்போர்ட் அளவு புகைப்படம், கல்விச்சான்றிதழ்கள், ஆதார் அட்டை மற்றும்சுய குறிப்பு (பயோ டேட்டா) ஆகியவற்றின் அசல் மற்றும் நகல்களுடன் வேலைவாய்ப்பு முகாமிற்கு நேரடியாக வரவேண்டும். இவ்வாய்ப்பினை திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள்பயன்படுத்தி தனியார்துறையில் வேலைவாய்ப்பினை பெற்றுக் கொள்ளலாம்என்றுகலெக்டர் தெரிவித்துள்ளார்.

FOLLOW US:
thehindu.com
facebook.com/thehindu
twitter.com/the_hindu

THE HINDU
MONDAY, OCTOBER 9, 2017
INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878
TIRUCHIRAPALLI
CITY EDITION
24 pages • ₹6.00

PRINTED AT · CHENNAI · COIMBATORE · BENGALURU · HYDERABAD · MADURAI · NOIDA · VISAKHAPATNAM · THIRUVANANTHAPURAM · KOCHI · VIJAYAWADA · MANGALURU · TIRUCHIRAPALLI · KOLKATA · HUBBALLI · MOHALI · MALAPPURAM · MUMBAI · TIRUPATI · LUCKNOW

# CAMPUS CONNECT




The team from Cauvery College for Women, the winner of the overall championship at JAM Titanica in Tiruchi.

## JAM Titanica winners

The Aurora Club Department of English of Cauvery College for Women bagged the overall championship at JAM Titanica held at Jamal Mohammed College. Students from around 18 colleges participated. Sandra Quintal Mary, Assistant professor, Holy Cross College, gave away the prizes.

முட்டு வலிக்கு முற்றுப்புள்ளி...
அதி நவீன முட்டு மாற்று அறுவை சிகிச்சை
ஜி.வி.என். மருத்துவமனை
46, சிங்காரத்தோப்பு, சூப்பர் பஜார், திருச்சி - 620 008.
0431-2700712, 2700811, 2705979, 2703945

-TPTC Edition-

தினமலர்

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

பூமெக்ஸ்
• பனியன்கள் • ஜட்டிகள்
: 0435 - 2420737
: 94433 37450
: 04364 - 225434
: 93459 12304
Poomex
contact@poomex.in

திருச்சி • செவ்வாய் • அக்டோபர் 3, 2017 | சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் | • 16 பக்கம் • 600 காசு • மலர் 67 • இதழ் 28

# கல்லூரி முதல்வர்களுக்கு துாய்மை சேவை விருது

திருச்சி, அக். 3-

*திருச்சி மாநகராட்சியில் 14 கல்லுாரிகளின் முதல்வர்களுக்கு துாய்மை சேவையை பாராட்டி மாநகராட்சி கமிஷனர் ரவிச்சந்திரன் விருது வழங்கினார்.*



திருச்சி மாநகராட்சியுடன் இணைந்து துாய்மை சேவை இயக்கத்தில் பங்கு பெற்ற 14 கல்லுாரி முதல்வர்களுக்கு, மாநகராட்சி கமிஷனர் ரவிச்சந்திரன் விருது வழங்கினார். அருகில், நகர பொறியாளர் அமுதவள்ளி.

காந்தி பிறந்த நாளான நேற்று திருச்சி மாநகராட்சி சார்பில் துாய்மை நாள் கடைப்பிடிக்கப்பட்டது.

இதை முன்னிட்டு நடந்த நிகழ்ச்சியில் துாய்மை இந்தியா இயக்கத்தில் மாநகராட்சிக்கு ஒத்துழைப்பு அளித்த கல்லுாரிகள் கவுரவிக்கப்பட்டன.

அரசு சட்டக் கல்லுாரி, ஜோசப் கல்லுாரி, சீதாலட்சுமி ராமசாமி கல்லுாரி, ஹோலி கிராஸ், ஸ்ரீமத் ஆண்டவன், இந்திரா காந்தி, உருமு தனலட்சுமி, சேஷசாயி இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி, ஜமால், ஈவெரா, அய்மான், பிஷப் ஹீபர், தேசிய கல்லுாரி, காவேரி மகளிர் கல்லுாரி ஆகிய 14 கல்லுாரிகளின் முதல்வர்களுக்கு மாநகராட்சி கமிஷனர் ரவிச்சந்திரன் விருதுகள் வழங்கினார்.

நிகழ்ச்சியில் நகர பொறியாளர் அமுதவள்ளி, செயற் பொறியாளர்கள் செல்வம், கண்ணன், உதவி கமிஷனர்கள் தயாநிதி, பிரபாகரன், வைத்தியநாதன், உதவி செயற் பொறியாளர்கள் பாலசுப்ரமணியன், ரவீந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

செவ்வாய்க்கிழமை
3 அக்டோபர் 2017
திருச்சி
18 பக்கங்கள் ரூ.5

# 14 கல்லூரிகளுக்கு தூய்மை சேவை விருது

**திருச்சி, அக். 2:** மகாத்மா காந்தி பிறந்த நாளையொட்டி தூய்மை சேவையை பாராட்டி திருச்சி மாநக ராட்சியில் 14 கல்லூரிகளின் முதல் வர்களுக்கு தூய்மை சேவை விருது வழங்கப்பட்டது.

திருச்சி மாநகராட்சிக்குள்பட்ட பல்வேறு பகுதிகளில் தூய்மை இந் தியா இயக்கம் குறித்து கல்லூரி மாணவ, மாணவிகள் மூலம் விழிப் புணர்வு கலை நிகழ்ச்சிகள், தூய் மைப் பணிகள், டெங்கு கொசுப் புழு ஒழிப்பு பணிகள் ஆகியவை மேற் கொள்ளும் வகையில், திருச்சி மாநக ராட்சிக்கு ஒத்துழைப்பு நல்கிய அரசு சட்டக் கல்லூரி, தூய வளனார் கல் லூரி, சீதாலட்சுமி ராமசுவாமி கல் லூரி, புனித சிலுவைக் கல்லூரி, ஸ்ரீமத் ஆண்டவன் கல்லூரி, ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரி, உருமு தன லட்சுமி கல்லூரி, சேஷாயி தொழில் நுட்பக் கல்லூரி, ஜமால் முகம்மது கல்லூரி, ஈ.வெ.ரா. கல்லூரி, அய் மான் மகளிர் கல்லூரி, பிஷப் ஹூபர் கல்லூரி, தேசிய கல்லூரி, காவேரி மகளிர் கல்லூரி ஆகிய 14 கல்லூரி களின் முதல்வர்களுக்கு தூய்மை சேவை விருதுகள் வழங்கப்பட்டது.

திருச்சி மாநகராட்சியில் விரு தினை நகரப் பொறியாளர் அமுத வள்ளி முன்னிலையில் மாநகராட்சி ஆணையர் ந. ரவிச்சந்திரன் திங்கள் கிழமை வழங்கி, கெளரவித்தார். இதில், மாநகர செயற்பொறியாளர் கள் செல்வம், கண்ணன், மாநகர அலுவலர்கள் உடனிருந்தனர்.

தினகரன்
ஒரு புதிய அனுபவம்
www.dinakaran.com
/dinakarannews
/dinakaranonline

டெஸ்ட் போட்டியில் 400 விக்கெட் பக்கம் 15
ஐட்ஜுக்கு வேலைவாய்ப்பு டுபாக்கூர் நிறுவனத்தால் பரபரப்பு பக்கம் 4
மோடிக்கு எதிராக பரபரப்பு பேச்சு பக்கம் 9

● திருச்சி ● செவ்வாய், அக்டோபர் 3, 2017 ● சென்னை ● புதுவை ● வேலூர் ● சேலம் ● கோவை ● திருச்சி ● மதுரை ● நெல்லை ● நாகர்கோவில் ● பெங்களூர் ● மும்பை ● டெல்லி ● கதிர் 39 ஒளி 118 ● 20 பக்கம் ₹5

### தூய்மை இந்தியா இயக்கத்திற்கு ஒத்துழைத்த

# 14 கல்லூரி முதல்வர்களுக்கு விருது

## காந்தி பிறந்தநாளில் மாநகராட்சி கவுரவிப்பு



மகாத்மா காந்தியின் பிறந்ததினமான நேற்று தூய்மை நாளாக கடைபிடித்து, தூய்மை சேவையை பாராட்டி திருச்சி மாநகராட்சி சார்பில் 14 கல்லூரிகளின் முதல்வர்களுக்கு மாநகராட்சி ஆணையர் ரவிச்சந்திரன் விருதுகள் வழங்கி கவுரவித்தார். அருகில் நகர பொறியாளர் அமுதவள்ளி.

திருச்சி, அக்.3: திருச்சி மாநகராட்சியின் தூய்மை இந்தியா இயக்கத்திற்கு ஒத்துழைத்த 14 கல்லூரிகளின் முதல்வர்களுக்கு காந்தி பிறந்தநாளான நேற்று மாநகராட்சி சார்பில் விருது வழங்கி கவுரவிக்கப்பட்டது.

மகாத்மா காந்தியின் பிறந்ததினத்தை தூய்மை நாளாக கடைபிடித்து தூய்மை சேவையை பாராட்டி திருச்சி மாநகராட்சியில் 14 கல்லூரிகளின் முதல்வர்களுக்கு விருது வழங்கும் விழா நேற்று நடந்தது.

மாநகராட்சி ஆணையர் ரவிச்சந்திரன் கல்லூரி முதல்வர்களுக்கு விருதுகள் வழங்கி கவுரவித்தார். மாநகராட்சியில் தூய்மை இந்தியா இயக்கம் குறித்து கல்லூரி மாணவர், மாணவிகள் மூலம் பொதுமக்களுக்கு துண்டு பிரசுரங்கள், கலை நிகழ்ச்சிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தியதற்கும், தூய்மை இந்தியா திட்டம் குறித்த செயலி பதிவிறக்கம் செய்தமைக்கும், பல்வேறு பகுதிகளில் தூய்மை பணிகள் செய்தமைக்கும், டெங்கு கொசுப்புழு உருவாவதை தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கும், மாநகராட்சிக்கு ஒத்துழைப்பு அளித்த அரசு சட்டக் கல்லூரி, தூய வளனார் கல்லூரி, சீதாலெட்சுமி ராமசாமி கல்லூரி, திருச்சிலுவை கல்லூரி, ஸ்ரீமத் ஆண்டவன் கலை கல்லூரி, ஸ்ரீமதி இந்திரா காந்தி கல்லூரி, உருமு தனலெட்சுமி கல்லூரி, சேஷாயி இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி, ஜமால் முகமது கல்லூரி, ஈவெரா கல்லூரி, அய்மான் மகளிர் கல்லூரி, பிஷப்ஹீபர் கல்லூரி, தேசிய கல்லூரி மற்றும் காவேரி மகளிர் கல்லூரி ஆகிய 14 கல்லூரிகளின் முதல்வர்களுக்கு மகாத்மா காந்தி பிறந்ததினமான நேற்று தூய்மை நாளாக கடைபிடித்து விருதுகள் வழங்கப்பட்டது. நகரப் பொறியாளர் அமுதவள்ளி முன்னிலை வகித்தார். இந்நிகழ்ச்சியில் செயற்பொறியாளர்கள் செல்வம், கண்ணன், உதவி ஆணையர்கள் தயாநிதி, பிரபாகரன், வைத்தியநாதன், உதவிசெயற்பொறியாளர்கள் பாலசுப்ரமணியன், ரவீந்தரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மாலை மலர்
இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்
MAALAI MALAR
திருச்சி 27-9-2017 (புதன்கிழமை) 10 பக்கம் 500 காசு ★★★ | மலர் 40 இதழ் 286

## திருச்சி ஜமால் முகமது கல்லூரியில்

# தேசிய நாட்டு நலப்பணி திட்ட தின கொண்டாட்டம்

திருச்சி, செப். 27–

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் தேசிய நாட்டு நலப்பணி திட்ட தினம் கொண்டாடப்பட்டது.

**என்.எஸ்.எஸ். தினம்**

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் தேசிய நாட்டு நலப்பணித்திட்ட தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது. விழாவிற்கு திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் ரவி, கலந்து கொண்டு மாணவர்களுக்கு தேசிய நாட்டு நலப்பணித் திட்டத்தின் முக்கியத்துவம் குறித்து உரையாற்றினார்.

மேலும் விழாவில் கல்லூரியின் செயலாளரும் தாளாளருமான காஜா நஜீமுதின் மற்றும் முதல்வர் இஸ்மாயில் முகைதீன், துணை முதல்வர் முகமது இப்ராகிம், கூடுதல் துணை முதல்வர் முகமது சிகாபுதீன், சுயநிதிப்பிரிவு இயக்குநர் அப்துல் காதர் நிஹால் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரி நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் காமராஜ் மற்ற நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.




திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் தேசிய நாட்டு நலப் பணித்திட்ட தினம் கொண்டாடப்பட்டபோது எடுத்தபடம்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

வியாழக்கிழமை
28 செப்டம்பர் 2017
திருச்சி
18 பக்கங்கள் ரூ.5

# 'இயற்கையை உயிரென்று உணர்ந்தால் காடுகளை அழிக்கமாட்டோம்'

**திருச்சி, செப். 27:** இயற்கைக்கும் உயிர் உண்டென்று உணர்ந்தால் காடுகளை அழிக்க மாட்டோம் என்றார் சூழலியல் ஆர்வலர் குமார்.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இயற்கையோடு இயல்பாக எனும் சூழலியல் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் அவர் மேலும் பேசியது:

கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு குடிக்க, குளிக்க ஏதுவாக இருந்தது நொய்யல் ஆறு. ஈரோடு, திருப்பூர் சாயப்பட்டறைக் கழிவுகள் மட்டுமன்றி வீட்டுக்கழிவுகளும் கலந்து தற்போது அந்த நதியை சீரழித்து விட்டன. இயற்கையையும், மரங்களையும் அழித்து வருகிறோம். அவற்றுக்கும் உயிர் உள்ளது என்று உணர்ந்தால் அழிக்க மாட்டோம். தேயிலைத் தோட்டத்துக்குள் யானை வரும் போது வெடி போடுகிறார்கள்.

இது இயற்கைக்கு எதிரான ஒருவகை போர் என்று கூறலாம். இயற்கை குறித்து கவலைப்பட்ட மலைவாழ் மக்களின் மன நிலையும் தற்போது மாறிவிட்டது. சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பு மேட்டூர் பகுதி காடுகளாக இருந்தது. அணை கட்டிய பின்பு மேட்டூர் மக்கள் வசிப்பிடமாகி விட்டது. நம்முடைய தேவைகளுக்காக இயற்கை அழிக்கிறோம். நெகிழி பைகள் பயன்படுத்துவதால் இயற்கையும், மற்ற உயிரினங்களும் பாதிப்படைகின்றன.



திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் தண்ணீர் சுற்றுச் சூழல் மாணவர் மன்றம் சார்பில் நடைபெற்ற விழிப்புணர்வுக் கூட்டத்தில் பேசுகிறார் சூழலியல் ஆர்வலர் குமார்.

கொள்ளிடம் ஆற்றில் நீர் வரத்து இல்லாததால், சிதம்பரம் - சீர்காழி இடையே அமைந்துள்ள கீழ் குண்டாளப்பாடி என்ற கிராமத்தில் நிலத்தடி நீர் முற்றிலும் உப்பாகியுள்ளது. நாம் ஒவ்வொருவரும் காவிரியின் வரலாறு, டெல்டா நிலப்பரப்பு ஆகியவை குறித்து கட்டாயம் அறிந்திருக்க வேண்டும். அப்போதுதான் இயற்கையை எந்த அளவுக்கு அழித்திருக்கிறோம் எனத் தெரிந்து கொள்ளவும், மீட்கவும் முடியும் என்றார் அவர். தொடர்ந்து தண்ணீர் அமைப்பின் செயலர் கே.சி. நீலமேகம், இணைச் செயலர்கள் கி. சதீஷ்குமார், ஆர்.ஏ. தாமஸ் உள்ளிட்டோர் பேசினர். ஏற்பாடுகளை கல்லூரி பேராசிரியர்கள் சிராஜுதீன், வே. அனு, இர. கீர்த்தனா ஆகியோர் செய்திருந்தனர்.

THE NEW INDIAN EXPRESS

TIRUCHY • WEDNESDAY • SEPTEMBER 27, 2017 • ₹5.00 • PAGES 16 • LATE CITY EDITION



READ SHARE FOLLOW

newindianexpress.com

facebook.com/thenewindianxpress twitter.com/newindianxpress



NADELLA ONCE GAVE UP GREEN CARD FOR HIS WIFE

The Microsoft CEO surrendered his permanent residency for a H1-B visa in 1994 so his newly-wed wife could join him in the US

IMMIGRATION LAW'S 'PERVERSE LOGIC'

During his early years at Microsoft, Nadella gave up his permanent residency due to a US law that if a Green Card holder marries, his/her spouse's visa would be rejected. "Anu was my priority... That made my decision simple," he writes in his new book, calling the law's logic 'perverse'

MOVE EARNED HIM 'NOTORIETY'

- Nadella says he went back to the US embassy in Delhi and said he wanted to return his Green Card and apply for a H-1B
- "What I didn't expect was the instant notoriety around campus," writes Nadella. "Hey, there goes the guy who gave up his Green Card," people commented

$17.7 million

SATYA NADELLA'S PAY PACKAGE LAST YEAR

CHENNAI • MADURAI • VIJAYAWADA • BENGALURU • KOCHI • HYDERABAD • VISAKHAPATNAM • COIMBATORE • KOZHIKODE • THIRUVANANTHAPURAM • BELAGAVI • BHUBANESWAR • SHIVAMOGGA • MANGALURU • TIRUPATI • TRICHY • TIRUNELVELI • SAMBALPUR • HUBBALLI • DHARMAPURI • KOTTAYAM • KANNUR • VILLUPURAM • KOLLAM • WARANGAL • TADEPALLIGUDEM • NAGAPATTINAM • THRISSUR



Kumar Shah, addressing the students of Jamal Mohamed College in Tiruchy, on Tuesday | **DEEPAK SATHISH**

# Green activist on a cycle mission to Leh

**EXPRESS NEWS SERVICE**
@ Tiruchy

ALL he had was his bicycle to start the journey for spreading the message on the need to save the environment. Thirty-year-old H Kumar Shah from Srivilliputhur began his cycle expedition from Kanyakumari on July 7 to reach out to school students across the country and to make them aware of the need to save the ecosystem.

Kumar Shah was in the city on Tuesday for an interactive session with the students of Jamal Mohamed College (JMC). The things he saw, the information he heard and the persons with whom he interacted with, will all be narrated as stories to the people he meets during the journey. Kumar, an engineering graduate, planned to travel to the Himalayas from Kanyakumari with just ₹500 in his pocket. Not just that, after halting at different stations along his journey, Kumar would do some skill-based works to make some money. "The only thing I am good at is sign languages. I can communicate easily with the people I see," the youth added.

> **To influence more on children's education, the place where they get educated must be very well maintained**
>
> H Kumar Shah

He never fails to showcase his talent wherever he travels and is to refurbish the school classroom. "To influence more on children's education, the place where they get educated must be very well maintained. This has inspired me to enrich the classrooms and leave before the weekdays start," he said.

At the session organised by Thaneer eNGO, Kumar shared his life experiences with the students and the curious students had many questions for him. The youngster will be in Tiruchy on Wednesday also before heading to Leh, Ladakh, and the North-East.

–TPTC Edition–

பிளைவுட், லாமினேட் ஷீட்ஸ், அலுமினியம் பிட்டிங்ஸ் மற்றும் கண்ணாடி வகைகளுக்கு
ஸ்ரீ விஜயா பிளைவுட் (பி) லிட்.,
No.70, மதுரை ரோடு (பேலஸ் தியேட்டர் அருகில்), திருச்சி-8. ☎ 2707605, 2707505

தினமலர்

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

புற்றுநோய்க்கு
ஜி.வி.என். மருத்துவமனை
46, சிங்காரத்தோப்பு, சூப்பர் பஜார், திருச்சி - 620 008.
போன்: 0431-2700712, 2700811, 2705979, 2703945
www.gvnhospitals.com

திருச்சி •புதன் •செப்டம்பர் 27, 2017 | சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் | •16 பக்கம் •600 காசு •மலர் 67 •இதழ் 22

# போட்டிகளில் வென்றவர்களுக்கு கலெக்டர் பரிசு

திருச்சி, செப். 27-

திருச்சி மாவட்டத்தில் தமிழ் வளர்ச்சித் துறை நடத்திய கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு கலெக்டர் ராசாமணி பரிசு வழங்கினார். தமிழ்வளர்ச்சித் துறை பல ஆண்டுகளாக மாணவர் களிடையே தமிழில் எழுத் தாற்றலையும், பேச்சாற்ற லையும் வளர்க்கும் நோக்கில் தமிழகம் முழுவதும் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டி களை நடத்தி மாணவர்களை ஊக்கப்படுத்தி வருகின்றது.

அதன்படி சமீபத்தில் கல்லூரி மாணவர்களுக்கான கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் திருச்சி ஜமால் முகமது கல்லூரி யில் நடைபெற்றது. இப்போட்டி யில் 35 கல்லூரிகளிலிருந்து 100 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

மாணவர்களுக்கான கவிதைப் போட்டியில் 'சத்தியதாயின் தவமே' என்ற தலைப்பில் புத்தனாம்பட்டி நேரு நினைவுக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர் வெற்றிவேல் முதலிடத்தையும், லால்குடி பாரதிதாசன் பல்கலைக் கழக உறுப்புக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர் முத்துக்குமரன் 2ம் இடத்தையும், திருச்சி ஹோலிகிராஸ் கல்லூரி மாணவி பிரியதர்ஷினி 3ம் இடத்தையும் வென்றனர்.

கட்டுரைப் போட்டியில் 'மானுடம் போற்றும் மக்கள் திலகம் என்ற தலைப்பில் திருச்சி சீதாலெட்சுமி ராமசுவாமி கல்லூரியைச் சேர்ந்த மாணவி வேம்பு இரண்டாமிடத் தையும் மண்ணச்சநல்லூர் சிதம்பரம்பிள்ளை மகளிர் கல்லூரியைச் சேர்ந்த மாணவி விஷாலி மூன்றாம் இடத்தையும் வென்றனர்.

பேச்சுப் போட்டியில் 'நன்னிலை உனக்கெனில்' என்ற தலைப்பில் திருவரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் பாலசுப்ரமணியம் முதலிடத் தையும், 'சத்துணவுத் தந்த சரித்திரம் எம்.ஜி.ஆர்.' என்ற தலைப்பில் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவி சா.ச.பிருந்தா இரண்டாம் இடத்தையும், 'வாழ்வியல் மொழி தமிழ்' என்ற தலைப்பில் திருச்சி ஹோலி கிராஸ் சிலுவை கல்லூரியைச் சேர்ந்த மாணவி அபிராமி மூன்றாமிடத்தையும் வென்றனர்.

முதல் பரிசு பெற்றவர்களுக்கு ரூ.10 ஆயிரம், இரண்டாம் பரிசு பெற்றவர்களுக்கு ரூ. 7 ஆயிரம், மூன்றாம் பரிசு பெற்றவர்களுக்கு ரூ. 5 ஆயிரம் பரிசுத் தொகை வழங்கினார் கலெக்டர் ராசாமணி. தமிழ்வளர்ச்சித்துறை துணை இயக்குநர் துரை.தம்பு சாமியும் தமிழ்வளர்ச்சித்துறைப் பணியாளர்களும் உடனிருந்தனர்.

FOLLOW US:
thehindu.com
facebook.com/thehindu
twitter.com/the_hindu

WEDNESDAY, SEPTEMBER 27, 2017

THE HINDU

INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

TIRUCHIRAPALLI
CITY EDITION
22 pages • ₹6.00

PRINTED AT · CHENNAI · COIMBATORE · BENGALURU · HYDERABAD · MADURAI · NOIDA · VISAKHAPATNAM · THIRUVANANTHAPURAM · KOCHI · VIJAYAWADA · MANGALURU · TIRUCHIRAPALLI · KOLKATA · HUBBALLI · MOHALI · MALAPPURAM · MUMBAI · TIRUPATI · LUCKNOW

## TAMIL NADU ROUND-UP

basketball tournament, for men and women for the Sterlite Trophy, at the SDAT stadium, here on Tuesday.

### JMC keeps crown

TIRUCHI: Jamal Mohamed College won all its matches in the four-team league to triumph for the 10th successive year in the Bharathidasan University inter-zonal inter-collegiate volleyball tournament for men here.

Bishop Heber College (two wins) and AVC College (one win) finished second and third respectively.

**The results (league):**

Jamal Mohamed bt Bishop Heber 25-19, 19-25, 21-25, 25-22, 15-13; AVC bt Annai CAS 25-21, 25-22, 25-19; Jamal Mohamed bt Annai CAS 25-21, 25-22, 25-19.

Bishop Heber bt AVC 25-21, 25-17, 25-17.

Bishop Heber bt Annai CAS 25-19, 26-24, 25-19; Jamal Mohamed bt AVC 25-19, 25-17, 25-22.

## ENGAGEMENTS

**At Coimbatore**

**Tennis:** AITA Championship Series tournament, K.G. Ramesh Tennis Academy, 7 a.m.

**At Tuticorin**

**Basketball:** 4th all India inter-collegiate flood-lit tournament (men & women) for Sterlite trophy, SDAT stadium, 5 p.m.



**Reign continues:** Jamal Mohamed College won the Bharathidasan University inter-zonal inter-collegiate volleyball tournament for the 10th successive year. ▪SPECIAL ARRANGEMENT

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

புதன்கிழமை
27 செப்டம்பர் 2017
திருச்சி
20 பக்கங்கள் ரூ.5

# பாரதிதாசன் பல்கலை. ஹாக்கி போட்டி: திருச்சி ஜமால்முகமது கல்லூரி சாம்பியன்

**புதுக்கோட்டை, செப். 26:** புதுக்கோட்டையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பாரதிதாசன் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு இடையேயான மகளிர் ஹாக்கி போட்டியில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணி சாம்பியன் கோப்பையை வென்றது.

புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் நடைபெற்ற போட்டிகளில், திருச்சி, கரூர், பெரம்பலூர், அரியலூர், தஞ்சை, நாகபட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை மாவட்டங்களைச் சேர்ந்த 16 கல்லூரி அணிகள் பங்கேற்றன. செவ்வாய்க்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில், திருச்சிராப்பள்ளி ஜமால் முகமது கல்லூரி அணி, புதுக்கோட்டை மன்னர் கல்லூரி அணியை 4 -0 என்ற கோல்கணக்கில் வென்று சாம்பியன் கோப்பையை கைப்பற்றியது. வெற்றி பெற்ற அணிகளுக்கு பாரதிதாசன் பல்கலைக்கழக விளையாட்டுக் குழுச் செயலர் அ. பழனிச்சாமி கோப்பை, பரிசுகளை வழங்கினார். கல்லூரி முதல்வர் இரா. தியாகராஜன், நாமக்கல் மாவட்ட ஹாக்கி கழகத் தலைவர் க. நடராஜன், போட்டி ஒருங்கிணைப்பாளர் உமா ஆகியோர் வாழ்த்திப் பேசினர். ஏற்பாடுகளை கல்லூரி உடற்கல்வி இயக்குநர் ஜான்பார்த்திபன், உடற்பயிற்சி பயிற்றுநர் அ.க. ராம்குமார் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.



**திருச்சி ஜமால்முகமது கல்லூரி அணிக்கு சாம்பியன் கோப்பையை வழங்குகிறார் பாரதிதாசன் பல்கலைக்கழக விளையாட்டுக் குழுச் செயலர் அ. பழனிச்சாமி.**



# தினகரன்

ஒரு புதிய அனுபவம்

www.dinakaran.com
/dinakarannews
/dinakaranonline



நடிகை கடத்தல் கைது செய்யும் திட்டம் இல்லை பக்கம் 12



போக்குவரத்து ஊழியருக்கு இடைக்கால நிவாரணம் பக்கம் 6

பத்மபூஷண் விருதுக்கு பரிந்துரை பக்கம் 13

●திருச்சி ●செவ்வாய், செப்டம்பர் 26, 2017 ●சென்னை ●புதுவை ●வேலூர் ●சேலம் ●கோவை ●திருச்சி ●மதுரை ●நெல்லை ●நாகர்கோவில் ●பெங்களூர் ●மும்பை ●டெல்லி ●கதிர் 39 ஒளி 112 ●18 பக்கம் ₹5


## ஜமால்முகமது கல்லூரியில்

# வணிகவியல்துறை தேசிய கருத்தரங்கம்

திருச்சி, செப்.26: திருச்சி ஜமால் முகமது கல்லூரி வணிகவியல் துறை சார்பில், 'புதிய இந்தியாவில் வர்த்தக வளர்ச்சிக்கான யுக்திகள், வாய்ப்புகள் மற்றும் சவால்கள்' என்ற தலைப்பில் ஒரு நாள் தேசிய கருத்தரங்கம் நேற்று நடந்தது.

முதல்வர் இஸ்மாயில் மொய்தீன் தலைமை வகித்து பேசுகையில், வேளாண்துறையில் இந்தியா சிறந்து விளங்குகிறது. அதிகளவு உற்பத்தி, ஏற்றுமதி செய்தாலும், கடந்த 2013 லிருந்து பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டது வேதனை. இதற்கு பல்வேறு காரணங்கள் இருந்தாலும் இளைய தலைமுறையினர் தான் அதை தடுத்து நிறுத்த பாடுபட வேண்டும் என்றார்.

ஆந்திரா மாநிலம் சித்தூர் ஸ்ரீவெங்கடேஷ்வரா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக்கல்லூரியின் மேலாண்மைத்துறைத் தலைவர் கிரிபாபு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு 'புதிய இந்தியாவின் வணிக வளர்ச்சி' என்ற தலைப்பில் பேசுகையில், புதிய இந்தியாவில் இளைஞர்கள் பங்களிப்பு முக்கியமானது என்றார்.

கருத்தரங்கில் 176 ஆய்வுக்கட்டுரைகள் அடங்கிய விழா மலர் தொகுப்பை கல்லூரி தாளாளர் காஜா நஜிமுதீன் வெளியிட, முதல் பிரதியை பொருளாளர் கலீல்அகமது பெற்றுக்கொண்டார்.

யுஜிசி பரிந்துரைத்த ஆய்வுக்கட்டுரைகள் அடங்கிய மற்றொரு தொகுப்பை துணை செயலாளர் ஜமால் முகமது வெளியிட, முதல்வர் இஸ்மாயில்மொய்தீன் பெற்றுக்கொண்டார். முன்னதாக துறைத்தலைவர் முகமது சிந்தாஷா வரவேற்றார்.

உதவி பேராசிரியர் ரியாஷ் அகமது நன்றி கூறினார்.



# தினகரன்

ஒரு புதிய அனுபவம்

www.dinakaran.com
/dinakarannews
/dinakaranonline



தொடரை கைப்பற்றியது இந்தியா பக்கம் 13



பஸ் ஸ்டிரைக்கை தடுக்க இன்று பேச்சுவார்த்தை பக்கம் 7

எனது கேரியரில் ஸ்பைடர் முக்கியமான படம் பக்கம் 12

● திருச்சி ● திங்கள், செப்டம்பர் 25, 2017 ● சென்னை ● புதுவை ● வேலூர் ● சேலம் ● கோவை ● திருச்சி ● மதுரை ● நெல்லை ● நாகர்கோவில் ● பெங்களூர் ● மும்பை ● டெல்லி ● கதிர் 39 ஒளி 111 ● 18 பக்கம் ₹5


### தமிழ்வளர்ச்சித்துறை சார்பில்

# கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டி

## வெற்றி பெற்றவர்களுக்கு கலெக்டர் பாராட்டு

திருச்சி, செப்.25: தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் நடந்த கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு திருச்சி கலெக்டர் பரிசுத் தொகை வழங்கி பாராட்டினார்.

திருச்சி மாவட்ட தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் கல்லூரி மாணவர்களுக்கான கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டி ஜமால் முகமது கல்லூரியில் நடந்தது. இதில் 35 கல்லூரிகளை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். மாணவர்களுக்கான கவிதை போட்டியில் புத்தனாம்பட்டி நேரு நினைவுக்கல்லூரி மாணவர் வெற்றிவேல், லால்குடி பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்பு கல்லூரி மாணவர் முத்துக்குமரன், திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரி மாணவி பிரியதர்ஷினி ஆகியோர் முறையே முதல் மூன்று இடங்களை பிடித்தனர்.

கட்டுரை போட்டியில் திருச்சி சீதாலட்சுமி ராமசாமி கல்லூரி மாணவி வேம்பு, மண்ணச்சநல்லூர் சிதம்பரம்பிள்ளை மகளிர் கல்லூரி விஷாலி ஆகியோர் முறையே 2, 3ம் இடங்களை பிடித்தனர். கட்டுரை போட்டியில் முதலிடம் பிடித்த மாணவர் பெயர் குறிப்பிடவில்லை.

பேச்சுப்போட்டியில் ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரி மாணவன் பாலசுப்பிரமணியம், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக மாணவி பிருந்தா, செயின்ட் ஜோசப் கல்லூரி மாணவி அபிராமி ஆகியோர் முறையே முதல் மூன்று இடங்களை பிடித்தனர்.

வெற்றி மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கும் விழாவில் கலெக்டர் ராஜாமணி தலைமை வகித்து, முதல் பரிசு பெற்றவர்களுக்கு ரூ.10 ஆயிரம், 2ம் பரிசு பெற்றவர்களுக்கு ரூ.7 ஆயிரம், 3ம் பரிசு பெற்றவர்களுக்கு ரூ.5 ஆயிரம் பரிசுகள் வழங்கி பாராட்டினார். தமிழ்வளர்ச்சித்துறை துணை இயக்குனர் தம்புசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

FOLLOW US:
thehindu.com
facebook.com/thehindu
twitter.com/the_hindu

THE HINDU
MONDAY, SEPTEMBER 25, 2017
INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878
TIRUCHIRAPALLI
CITY EDITION
26 pages • ₹6.00



BJP does not rule out the possibility of Mukul Roy's entry
page 10



Zia-ul-Haq pressed China in 1980 for joint nuclear test
page 10



German Chancellor Angela Merkel wins fourth term in office
page 12

Moeen Ali ton powers England to victory in ODI against West Indies
page 15



PRINTED AT · CHENNAI · COIMBATORE · BENGALURU · HYDERABAD · MADURAI · NOIDA · VISAKHAPATNAM · THIRUVANANTHAPURAM · KOCHI · VIJAYAWADA · MANGALURU · TIRUCHIRAPALLI · KOLKATA · HUBBALLI · MOHALI · MALAPPURAM · MUMBAI · TIRUPATI · LUCKNOW

# Commitment to ending dowry demand

Anti-Dowry Association of Jamal Mohamed college conducted a survey against dowry at Bhima Nagar, Subramaniapuram and various other parts of the city. Using pamphlets, posters and magazines to create awareness, the association members reached out to 1,000 families and secured their commitment to root out dowry. The survey, the association has been conducting annually since its formation in 1984 was guided this year by S. Ismail Mohideen, Principal, and M. Abdul Aleem, Staff Advisor.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

# தினமணி

சனிக்கிழமை
23 செப்டம்பர் 2017
திருச்சி
14 பக்கங்கள் ரூ.5

# 'இளையோருக்கு சமூக பாலின உணர்வூட்டல் மிகவும் அவசியம்'

**திருச்சி, செப். 22:** சமூக பாலின உணர்வூட்டல் குறித்து இளையோருக்கு பயிற்சி அளிப்பது அவசியம் என்றார் திருச்சி, ரயில்வே காவல்துறை கண்காணிப்பாளர் ஆனிவிஜயா.

பாரதிதாசன் பல்கலைக்கழக மகளிரியல் துறை மற்றும் ஜமால் முகமது கல்லூரி இணைந்து புதன்கிழமை நடத்திய, சமூகப் பாலின உணர்வூட்டல் என்ற தலைப்பிலான பயிற்சியில் பங்கேற்ற அவர் மேலும் பேசியது : சமூகப்பாலின உணர்வூட்டல் என்பது 1995ஆம் ஆண்டு முதல் பேச்சளவில்தான் உள்ளது. எந்த மாற்றமும் இல்லை. இவை குறித்தப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வந்தாலும் இன்றும் காவலர்கள் மத்தியில் கூட மாற்றம் இல்லை.

இளைஞர்கள் மற்றும் மாணவர்களுக்கு பாலின சமத்துவ உணர்வூட்டல் பயிற்சி அளிக்க வேண்டியது மிகவும் அவசியம் என்றார்.

பாரதிதாசன் பல்கலைக்கழகம் மகளிரியல் துறை இயக்குநரும் தலைவருமான ந.மணிமேகலை பேசுகையில்,

பல்கலைக்கழகம் மற்றும் பல்கலைக்கழக இணைவு பெற்ற கல்லூரிகளில் பாலின சமத்துவச்சங்கத்தை உருவாக்கவும்,பல்வேறு நிகழ்ச்சிகள் மூலம் அவற்றை உருவாக்க வழியுள்ளது.

இவற்றுக்காக பல்கலைக்கழக மானியக்குழு வழிகாட்டியுள்ளது என்றார். மகளிரியல் துறை உதவிப்போராசிரியர் சா. சுபா, பெரியார் ஈவெரா கல்லூரி இணைப் பேராசிரியர் வில்லியம் ஜான் போஸ்கோ, ஜமால் முகமது கல்லூரி முதல்வர், ஜமால் முகமது கல்லூரி பாலின சமத்துவ சங்க மாணவர்கள் ஒருங்கிணைப்பாளர் நாகூர் கனி , பெண்கள் ஒருங்கிணைப்பாளர் ஹைருநிஷா உள்ளிட்டோர் பேசினர். நிகழ்வில், சுமார் 15 கல்லூரிகளிலிருந்து மாணவ-மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

AMMAN-TRY
TMT BARS
நாடு போற்றும்
நல்ல கம்பி...
0431 - 2420022

–TPTC Edition–

தினமலர்

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

திருச்சியில்
மர, ஸ்டீல் பர்னிச்சர்கள்
வாங்க ராசியான ஸ்தாபனம்
ராயல் பர்னிச்சர்
22, மதுரை ரோடு, திருச்சி – 8.
போன்: 2702225, 2700620.

திருச்சி • சனி • செப்டம்பர் 23, 2017 | சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் | • 8 பக்கம் • மலர் 67 • இதழ் 18

# 'ஜமால்' மகளிர் சாம்பியன்

திருச்சி: பாரதிதாசன் பல்கலை கழகத்திற்கு உட்பட்ட கல்லூரிகளுக்கு இடையிலான மகளிருக்கான கூடைப்பந்து போட்டிகள் நடந்தது. இதில் புதுக்கோட்டை ஜெஜெ பொறியியல் கல்லூரியில் நடந்த போட்டியில் திருச்சி, கரூர், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகை ஆகிய ஊர்களை சேர்ந்த 10 கல்லூரிகள் கலந்து கொண்டன. இறுதி போட்டியில் ஜமால் முகமது கல்லூரி, மயிலாடுதுறை ஏவிசி கல்லூரியை வீழ்த்தியது. 3வது இடத்திற்கான போட்டியில் பிஷப் ஹீபர் கல்லூரி செங்கமலா தாயார் கல்லூரியை வீழ்த்தியது. சாம்பியன் பட்டம் வென்ற ஜமால் முகமது கல்லூரி வீராங்கனைகளை கல்லூரி தாளாளர் காஜா நஜ்முதீன், முதல்வர் இஸ்மாயில் முகைதீன், உடற்கல்வி இயக்குனர் சாயின்ஷா உட்பட பலர் பாராட்டினர்.

தி இந்து
Vol. 5 No. 265 தமிழால் இணைவோம் RNI No.TNTAM/2013/55769
சனி, செப்டம்பர் 23, 2017 • சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி ஆகிய நகரங்களில் அச்சாகிறது • திருச்சி பதிப்பு • 26 பக்கங்கள் ₹ 6

## இளைஞர்கள், மாணவர்களுக்கு

# பாலின சமத்துவ உணர்வூட்டல் பயிற்சி அளிக்க வலியுறுத்தல்

■ திருச்சி

திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழக மகளிரியல்துறை மற்றும் ஜமால் முகமது கல்லூரி இணைந்து சமூகப் பாலின உணர் வூட்டல் குறித்த பயிற்சி முகாம் பல்கலைக்கழக காஜாமலை வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

விழாவில் சிறப்பு அழைப்பா ளராக திருச்சி ரயில்வே எஸ்.பி. ஆனி விஜயா பங்கேற்றுப் பேசியது: சமூகப்பாலின உணர் வூட்டல் குறித்தப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வந்தாலும் இன்றும் காவலர்கள் மத்தியில் எந்த மாற்றமும் இல்லை. இளை ஞர்கள் மற்றும் மாணவர்களுக்கு பாலின சமத்துவ உணர்வூட்டல் பயிற்சி அளிக்க வேண்டும் என்றார்.

பல்கலைக்கழக மகளிரியல் துறை தலைவர் ந.மணிமேகலை பேசியது: எதிர்காலத்தில் பாலின சமத்துவ சமூகத்தை உருவாக்கு தலில் இளைய தலைமுறையினர் பொறுப்பு எடுத்துக்கொண்டு குழந்தைகளை இளம் பருவம் முதல் பாகுபாடின்றி வளர்ப்ப தோடு, இருபாலரையும் சமமாக நடத்த வேண்டும் என்றார்.

மகளிரியல்துறை உதவிப் பேராசிரியர் சா. சுபா, ஈவிஆர். கல்லூரி இணைப் பேராசிரியர் வில்லியம் ஜான் போஸ்கோ உள் ளிட்டோர் பயிற்சியளித்தனர்.

இந்நிகழ்ச்சியில் ஜமால் முகமது கல்லூரி முதல்வர் எஸ். இஸ்மாயில் மொய்தீன், ஜமால் முகமது கல்லூரி பாலின சமத்துவ சங்க மாணவர்கள் ஒருங்கிணைப்பாளர் நாகூர் கனி உள்ளிட்டோர் பேசினர்.

இந்த நிகழ்ச்சியில் 15 கல்லூரி களிலிருந்து மாணவ- மாண விகள் மற்றும் ஆசிரியர்கள் என 100-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

தி இந்து
Vol. 5 No. 265 தமிழால் இணைவோம் RNI No.TNTAM/2013/55769
சனி, செப்டம்பர் 23, 2017 • சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி ஆகிய நகரங்களில் அச்சாகிறது • திருச்சி பதிப்பு • 26 பக்கங்கள் ₹ 6



▲ பாரதிதாசன் பல்கலைக்கழக அளவிலான வாலிபால் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற ஜமால்முகமது கல்லூரி அணி வீரர்களுடன், கல்லூரி நிர்வாகிகள்.

### பல்கலைக்கழக அளவிலான வாலிபால் போட்டி

# ஜமால் முகமது கல்லூரி அணி மீண்டும் சாம்பியன்

● தொடர்ந்து 10-வதுஆண்டாக முதலிடம் பிடித்தது

**திருச்சி**

பல்கலைக்கழக அளவிலான வாலிபால் போட்டியில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி முதலிடம் பிடித்து, தொடர்ந்து 10 ஆண்டாக சாம்பியன் பட்டத்தை வென்றது.

பாரதிதாசன் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு இடையேயான வாலிபால் போட்டி திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இதில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி, பிஷப் ஹீபர் கல்லூரி, மயிலாடுதுறை ஏ.வி.சி கல்லூரி, கும்பகோணம் அன்னை கல்லூரி ஆகிய அணிகள் இறுதிச் சுற்றில் பங்கேற்றன.

இந்த அணிகளுக்கு இடையேயான போட்டிகள் லீக் முறையில் நடத்தப்பட்டன.

அதில், ஜமால் முகமது கல்லூரி அணி, எதிர்த்து விளையாடிய 3 அணிகளையும் வென்று முதலிடம் பிடித்து, சாம்பியன் பட்டத்தை தக்க வைத்தது. பிஷப் ஹீபர் கல்லூரி அணி 2-வது இடத்தையும், மயிலாடுதுறை ஏ.வி.சி கல்லூரி அணி 3-வது இடத்தையும் பெற்றன.

இப்போட்டியில் முதலிடம் பிடித்ததன் மூலம், பல்கலைக்கழக அளவிலான போட்டியில் ஜமால் முகமது கல்லூரி அணி தொடர்ந்து 10-வது முறையாக சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதையடுத்து அந்த அணியின் வீரர்களை ஜமால் முகமது கல்லூரி செயலாளர் மற்றும் தாளாளர் காஜா நஜீமுதீன், பொருளாளர் கலீல் அகமது, முதல்வர் இஸ்மாயில் முகைதீன், துணை முதல்வர் முகமது இப்ராகிம், கூடுதல் துணை முதல்வர் முகமது சிகாபுதீன், உடற்கல்வி இயக்குநர் ஷாகின் ஷா உள்ளிட்டோர் பாராட்டினர்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

வெள்ளிக்கிழமை
22 செப்டம்பர் 2017
திருச்சி
18 பக்கங்கள் ரூ.5

# ஜமால் முகம்மது கல்லூரியில் ஊட்டச்சத்து வார விழா

**திருச்சி, செப். 21:** திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் ஊட்டச் சத்து மற்றும் உணவுத்துறை சார்பில் ஊட்டச்சத்து வார விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

சர்வதேச ஊட்டச்சத்து வார விழாவை முன்னிட்டு நடைபெற்ற இந்த விழாவை ஜமால் முகம்மது கல்லூரியின் செயலாளர் காஜா நசிமுதீன் தொடங்கி வைத்தார்.

இதில், திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி, அய்மான் கலை அறிவியல் கல்லூரி, காவேரி மகளிர் கல்லூரி, கோவை விஎல்பி கல்லூரி, காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 124 மாணவ, மாணவிகள் பங்கேற்றனர்.

இவர்களுக்கு காய்கறிகளிலிருந்து படைப்புகளை உருவாக்குதல், பாரம்பரிய உணவுகளை



திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் வியாழக்கிழமை நடைபெற்ற ஊட்டச்சத்து வார விழா கண்காட்சியை பார்வையிடும் மாணவிகள் மற்றும் பேராசிரியர்கள்.

காட்சிப்படுத்துதல், ரங்கோலி வரைதல், குறும்படப் போட்டி, நடிப்பாற்றல்,சாப்பிடும்போட்டி, காய்கறி உடை அலங்காரப் போட்டி ஆகிய 7 விதமான போட்டிகள் நடத்தப்பட்டது. இதில் திருச்சி காவேரி மகளிர் கல்லூரி மாணவிகள் முதலிடம் பிடித்தனர். விழாவில், கல்லூரி முதல்வர் இஸ்மாயில் மொய்தீன், துணை முதல்வர் முகம்மது இப்ராஹீம், பேராசிரியர்கள், கல்லூரி மாணவ, மாணவிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

சென்னை கோவை சேலம் திருச்சி மதுரை நெல்லை நாகர்கோவில் வேலூர் புதுவை
தமிழ் முரசு
திருச்சி 21.9.2017 வியாழன் ★
நம்பர் 1 மாலை நாளிதழ் www.tamilmurasu.org
● முரசு 20 ● ஓசை 247 ● 8 பக்கம் ● ₹4











## ஜமால் முகமது கல்லூரியில்

# பாரம்பரிய உணவு தயாரிக்கும் போட்டி



திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் இன்று காய்கறிகளில் பல்வேறு உருவங்கள் வடிவமைக்கும் போட்டியில் மாணவ, மாணவிகள் ஈடுபட்டனர்.

திருச்சி, செப். 21- சர்வதேச ஊட்டச்சத்து வார விழாவை முன்னிட்டு திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் ஊட்டச்சத்து மற்றும் உணவு முறை துறை சார்பில் கல்லூரி மாணவிகளுக்கான பல்வேறு போட்டிகள் இன்று காலை துவங்கின. இதில் திருச்சி காவேரி, பிஷப் ஹீபர், அய்மான், கோவை வில்எபி கல்லூரிகள் மற்றும் காரைக்குடி அழகப்பா பல்கலை கழக மாணவிகள் 124 பேர் கலந்து கொண்டனர். கல்லூரி செயலாளர் காஜா நஜிமுதீன் தலைமை வகித்தார். முதல்வர் இஸ்மாயில் மொய்தீன், துணை முதல்வர் முகமது இப்ராகிம், துறை உறுப்பினர் பஷில் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

பாரம்பரிய உணவு தயாரித்தல், ரங்கோலி, சாப்பிடும் போட்டி, காய்கறி உடை அலங்காரம், காய்கறிகளில் பல்வேறு உருவங்கள் வடிவமைக்கும் போட்டி உட்பட பல்வேறு போட்டிகளில் மாணவிகள் கலந்து கொண்டனர். இதில் வெற்றி பெறும் மாணவிகளுக்கு மாலை நடைபெறும் விழாவில் பரிசுகள் வழங்கப்பட உள்ளது. திட்டத்துறை தலைவர் யாஸ்மீன் இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளார்.




திருச்சி ஜமால் முகமது கல்லூரி மற்றும் திருச்சி மாநகராட்சி பொன்மலைக் கோட்டம் இணைந்து நடத்திய மகாத்மா காந்தியின் பிறந்த நாளை போற்றும் வகையில் தூய்மையே சேவை உறுதிமொழி விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து கல்லூரி முழுவதும் தூய்மை செய்யும் பணியினை உதவி ஆணையர் எம். தயாநிதி, கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் காஜா நஜீமுதின் மற்றும் முதல்வர் இஸ்மாயில் முகைதீன், துணை முதல்வர் முகமது இப்ராகிம், கூடுதல் துணை முதல்வர் முகமது சிகாபுதீன், சுயநிதிப்பிரிவு இயக்குனர் அப்துல் காதர் நிஹால் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை ஆ. காமராஜ், கல்லூரி நாட்டுநலப்பணி திட்ட அலுவலர், மற்ற நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் மற்றும் மாணவர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

R.N.I. No.PONTAM/2006/16752
POSTAL REGD. No. SSP/PY/16/2015-17
WPP No. TN/PMG(CCR)WPP-318/2015-17

ASK வெள்ளி மாளிகை
187, கொசக்கடை வீதி, புதுச்சேரி-1.
(பாரதி வீதி, அண்ணா சாலைக்கு அருகில்)
போன்: 0413-2333465. மொபைல்: 93457 14449

நமது முரசு
NAMATHU MURASU
தமிழ் மக்களின் நாடித்துடிப்பு
மாலை நாளிதழ்

நமது முரசு
அலுவலக முகவரி :
31, பத்திரிகையாளர் காலனி,
என்.ரங்கசாமி நகர்,
முருங்கப்பாக்கம், புதுச்சேரி - 605 004,
போன் : 93446 28609
E-mail: namathumurasu2011@gmail.com
Web: www.namathumurasu.com

புதுச்சேரி 15.9.2017 வெள்ளிக்கிழமை முரசு: 12 ஓசை: 224 6 பக்கம் - 500 காசு ஹேவிளம்பி ஆண்டு ஆவணி 30 ஆம் தேதி



# திருச்சி பாரதிதாசன் பல்கலை. மேஜை பந்து போட்டியில் ஜமால் முகமது கல்லூரி சாம்பியன்

திருச்சி, செப். 15- திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் பாரதிதாசன் பல் கலைக்கழக கல்லூரிகளுக்கு இடையேயான இறகுபந்து மற்றும் மேஜைபந்து போட்டி கள் கல்லூரியின் உள் விளை யாட்டரங்கில் நடந்தது.

போட்டியில் திருச்சி, கரூர், பெரம்பலூர், அரியலூர், புதுக் கோட்டை, தஞ்சாவூர், திருவா ரூர், நாகை ஆகிய 8 மாவட்டங் களிலிருந்து 150 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

போட்டிகளை கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் காஜா நஜீமுதின் மற்றும் முதல்வர் இஸ்மாயில் முகைதீன், சுயநிதிப்பிரிவு இயக்குநர் அப்துல் காதர் நிஹால் ஆகியோர் தொடங்கி வைத்தனர். விழாவில் காதா முகைதீன் கல்லூரியின் உடற் கல்வி இயக்குநர் முருகானந் தம், பூண்டி புஷ்பம் கல்லூரி யின் உடற்கல்வி இயக்குநர் பேராசிரியர் முருகராஜ் மற்றும் பல்வேறு கல்லூரிகளின் உடற்கல்வி இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

மேஜைபந்து முதல் அரை யிறுதிப் போட்டியில் புதுக் கோட்டை ஜெ.ஜெ. கலை அறிவியல் கல்லூரி தஞ்சாவூர் அன்னை வேளாங்கன்னி கல்லூரி அணியை வென்றது.

2-வது அரையிறுதிப் போட்டியில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணி கும்ப கோணம் அன்னை கல்லூரி அணியை வென்றது.

மூன்றாவது இடத்திற்கான போட்டி கும்பகோணம் அன்னை கல்லூரி அணி 3-1 என்ற செட் கணக்கில் தஞ்சா வூர் அன்னை வேளாங்கன்னி கல்லூரி அணியை வென்றது.

இறுதிப் போட்டியில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணி 31 என்ற செட் கணக்கில் ஜெ.ஜெ. கல்ல அறிவியல் கல்லூரி அணியை வென்று தொடர்ந்து 3-வது ஆண்டாக சாம்பியன் பட்டம் பெற்றது.

# தினகரன்

ஒரு புதிய அனுபவம்

www.dinakaran.com
/dinakarannews
/dinakaranonline

● திருச்சி ● புதன், செப்டம்பர் 20, 2017 ● சென்னை ● புதுவை ● வேலூர் ● சேலம் ● கோவை ● திருச்சி ● மதுரை ● நெல்லை ● நாகர்கோவில் ● பெங்களூர் ● மும்பை ● டெல்லி ● கதிர் 39 ஒளி 106 ● 18 பக்கம் ₹5


## கல்லூரிகளுக்கு இடையிலான

# மகளிர் கூடைப்பந்து போட்டி ஜமால் முகமது கல்லூரி சாம்பியன்



▶ பாரதிதாசன் பல்கலைக்கழக கூடைப்பந்து (மகளிர்) போட்டியில் சாம்பியன் பட்டத்துடன் திருச்சி ஜமால் முகமது கல்லூரி மாணவிகள். கோப்பையை வென்ற அணியை கல்லூரியின் செயலர் காஜா நஜீமுதீன் , பொருளாளர் கலீல் அகமது, முதல்வர் இஸ்மாயில் முகைதீன், துணை முதல்வர் முகமது இப்ராகிம், உடற்கல்வி இயக்குனர் ஷாயின்ஷா ஆகியோர் பாராட்டினர்.

**திருச்சி, செப். 20:** பாரதிதாசன் பல்கலைக்கழக கூடைப்பந்து (மகளிர்) போட்டியில் சாம்பியன் பட்டத்தை திருச்சி ஜமால் முகமதுகல்லூரிவென்றது.

பாரதிதாசன் பல்கலைக்கழககல்லூரிகளுக்கு இடையேயான மகளிர் கூடைப்பந்து போட்டி புதுக்கோட்டை ஜெ.ஜெ. கலை மற்றும் அறிவியல் கல்லூரியில்நடைபெற்றது. இந்தபோட்டியில்திருச்சி, கரூர், பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகை ஆகிய 8 மாவட்டங்களிலிருந்து 10 கல்லூரிகள் கலந்துகொண்டன. முதல் அரையிறுதி போட்டியில் ஏ.வி.சி. கல்லூரி அணி, மன்னார்குடி செங்கமல தாயார்கல்லூரிஅணியை 46:09 என்ற புள்ளிக் கணக்கில் வென்றது.

இரண்டாவது அரையிறுதிபோட்டியில்திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணி திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி அணியை 48:35 என்ற புள்ளிக்கணக்கில் வென்றது. திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி அணி 26:04 என்ற புள்ளிக்கணக்கில் மன்னார்குடி செங்கமல தாயார்கல்லூரிஅணியை வென்று 3வது இடத்தை பிடித்தது. இறுதிபோட்டியில்திருச்சிஜமால்முகமது கல்லூரி அணி 47:22 என்ற புள்ளிக்கணக்கில் ஏ.வி.சி கல்லூரிஅணியைவென்று சாம்பியன் பட்டம் பெற்றது. கோப்பையை வென்ற திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் கூடைப்பந்து மகளிர் அணியைகல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் காஜா நஜீமுதின் மற்றும் பொருளாளர் கலீல் அகமது, முதல்வர் இஸ்மாயில் முகைதீன், துணை முதல்வர் முகமது இப்ராஹிம், உடற்கல்வி இயக்குனர் ஷாயின்ஷா ஆகியோர் பாராட்டினர்.

THE NEW INDIAN EXPRESS
TIRUCHY • TUESDAY • SEPTEMBER 19, 2017 • ₹5.00 • PAGES 16 • LATE CITY EDITION



READ SHARE FOLLOW
newindianexpress.com
facebook.com/thenewindianxpress twitter.com/newindianxpress

# TT tourney at Jamal Mohamed college

Tiruchy: Jamal Mohamed College (JMC) and Bharathidasan University (BDU) conducted a Table Tennis and Badminton tournament recently at the college premises. Over 150 players from Tiruchy, Karur, Perambalur, Pudukkottai, Thanjavur, Nagapattinam, and Thiruvarur took part.

FOLLOW US:
thehindu.com
facebook.com/thehindu
twitter.com/the_hindu

THE HINDU

TUESDAY, SEPTEMBER 19, 2017

INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

TIRUCHIRAPALLI
CITY EDITION
18 pages • ₹6.00

PRINTED AT · CHENNAI · COIMBATORE · BENGALURU · HYDERABAD · MADURAI · NOIDA · VISAKHAPATNAM · THIRUVANANTHAPURAM · KOCHI · VIJAYAWADA · MANGALURU · TIRUCHIRAPALLI · KOLKATA · HUBBALLI · MOHALI · MALAPPURAM · MUMBAI · TIRUPATI · LUCKNOW



The triumphant Jamal Mohammed College women's team.

## JMC women win title

PUDUKOTTAI: Jamal Mohamed College defeated AVC College 47-22 to win the women's title in the Bharathidasan University inter-collegiate basketball tournament at JJ CAS recently.

**The results: Final:** Jamal Mohamed bt AVC 47-22. **Third place:** Bishop Heber bt Sengamala Thayaar Educational Trust Women's College 26-4. **Semifinals:** AVC bt Sengamala Thayaar 46-9; Jamal Mohamed bt Bishop Heber 48-35.

சென்னை கோவை சேலம் திருச்சி மதுரை நெல்லை நாகர்கோவில் வேலூர் புதுவை

# தமிழ் முரசு

திருச்சி 15.9.2017 வெள்ளி ★ நம்பர் 1 மாலை நாளிதழ் www.tamilmurasu.org ● முரசு 20 ● ஓசை 241 ● 8 பக்கம்

செரிமானத்தை தூண்டும் கோவைக்காய்

பக்கம்... 2



காதலனை வறுத்தெடுத்த நடிகைக்கு பட்டம்

பக்கம்... 6



**பாரதிதாசன் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு இடையேயான இறகுபந்து மற்றும் மேஜைப்பந்து போட்டியில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணி சாம்பியன் பட்டம் வென்றது. வெற்றி பெற்ற அணியை கல்லூரி நிர்வாகிகள் பாராட்டினர்.**

–TPTC Edition–
தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்
திருச்சி • வெள்ளி • செப்டம்பர் 15, 2017
சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில்
• 20 பக்கம் • 600 காசு • மலர் 67 • இதழ் 10

## கல்வி நிறுவன செய்திகள்



கல்லூரிகளுக்கு இடையிலான பேட்மின்டன், டேபிள் டென்னிஸ் போட்டிகளில் வெற்றி பெற்ற ஜமால் முகமது கல்லூரி வீரர்களை கல்லூரி தாளாளர் காஜா நஜூமுதீன், முதல்வர் இஸ்மாயில் முகைதீன் உட்பட பலர் பாராட்டினர்.

# ஜமால் முகமது சாம்பியன்

***திருச்சி:*** *பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட கல்லூரிகளுக்கு இடையிலான பேட்மின்டன் மற்றும் டேபிள் டென்னிஸ் போட்டிகள் நடந்தது.*

திருச்சியில் நடந்த பேட்மின்டன் போட்டியில் 20 கல்லூரிகளும், டேபிள் டென்னிஸ் போட்டியில் 7 கல்லூரிகளும் கலந்து கொண்டன. பேட்மின்டன், டேபிள் டென்னிஸ் 2 போட்டியிலும் ஜமால் முகமது கல்லூரி சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. போட்டியில் வெற்ற பெற்ற வீரர்களை கல்லூரி தாளாளர் காஜா நஜூமுதீன், முதல்வர் இஸ்மாயில் முகைதீன், உடற்கல்வி இயக்குனர் சாயின்ஷா உட்பட பலர் பாராட்டினர்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

வெள்ளிக்கிழமை
15 செப்டம்பர் 2017
திருச்சி
22 பக்கங்கள் ரூ. 5

# பல்கலைக்கழக மேஜைபந்து போட்டி: ஜமால் முகமது கல்லூரி சாம்பியன்

**திருச்சி, செப். 14:** திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகக் கல்லூரிகளுக்கு இடையிலான மேஜைபந்து போட்டியில் ஜமால் முகமது கல்லூரி சாம்பியன்பட்டத்தை கைப்பற்றியது.

பல்கலைக்கழக இணைவுபெற்ற 8 மாவட்டங்களைச் சேர்ந்த கல்லூரிகளின் சார்பில் 150 விளையாட்டு, வீரர்கள் பங்கேற்ற மேஜைபந்து போட்டி ஜமால் முகமது கல்லூரியில் வியாழக்கிழமை தொடங்கியது. இப்போட்டியின் இறுதியாட்டத்தில் புதுக்கோட்டை ஜெ.ஜெ. கலை அறிவியல் கல்லூரியை 3-1 என்ற செட் கணக்கில் வென்று பல்கலைக்கழக அளவிலான சாம்பியன் பட்டத்தைப் பெற்றது.

முன்னதாக, நடைபெற்ற முதல் அரையிறுதிப் போட்டியில் தஞ்சாவூர் அன்னை வேளாங்கன்னி கல்லூரியை புதுக்கோட்டை ஜெ.ஜெ. கலை அறிவியல் கல்லூரியும், இரண்டாவது அரையிறுதியில் கும்பகோணம் அன்னை கல்லூரியை ஜமால் முகமது கல்லூரியும் வென்றது.

தஞ்சாவூர் அன்னை வேளாங்கண்ணி கல்லூரியை 3-1 செட் கணக்கில் கும்பகோணம் அன்னை கல்லூரி வென்று 3 ஆவது இடத்தை பிடித்தது. முன்னதாக நடைபெற்ற முதல் சுற்றுப் போட்டிகளில், பாரதிதாசன் பல்கலைக்கழக மைய வளாக அணியை 3-0 என்ற செட் கணக்கில் புதுகை ஜெ.ஜெ. கல்லூரியும், அதிராம்பட்டினம் கே.எம்.சி. கல்லூரியை 3-0 என்ற செட் கணக்கில் தஞ்சாவூர் அன்னை வேளாங்கன்னி கல்லூரியும், முசிறி அறிஞர் அண்ணா அரசுக் கல்லூரியை 3-1 என்ற செட் கணக்கில் கும்பகோணம் அன்னைக் கல்லூரியும் வென்று அரையிறுதிக்கு தகுதி பெற்றிருந்தன.

போட்டிகளை ஜமால் முகமது கல்லூரிச் செயலர் மற்றும் தாளாளர் ஏ.கே. காஜா நஜ்முதீன், முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன் தொடக்கி வைத்தனர். காதர்மொகைதீன் கல்லூரி உடற்கல்வி இயக்குநர் முருகானந்தம், பூண்டி புஷ்பம் கல்லூரி உடற்கல்வி இயக்குநர் முருகராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

FOLLOW US:
thehindu.com
facebook.com/thehindu
twitter.com/the_hindu

THE HINDU

FRIDAY, SEPTEMBER 15, 2017

INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

TIRUCHIRAPALLI
CITY EDITION
32 pages • ₹6.00

PRINTED AT · CHENNAI · COIMBATORE · BENGALURU · HYDERABAD · MADURAI · NOIDA · VISAKHAPATNAM · THIRUVANANTHAPURAM · KOCHI · VIJAYAWADA · MANGALURU · TIRUCHIRAPALLI · KOLKATA · HUBBALLI · MOHALI · MALAPPURAM · MUMBAI · TIRUPATI · LUCKNOW

## TAMIL NADU ROUND-UP



**Creditable show:** Jamal Mohamed College, winner of men's badminton and table tennis titles. ▪SPECIAL ARRANGEMENT

### Jamal Mohamed College claims titles

**TIRUCHI:** Jamal Mohamed College won the men's badminton and table tennis titles in the Bharathidasan University inter-collegiate tournament.

**The results: Badminton: Final:** Jamal Mohamed bt Bishop Heber 2-0 (S. Abdul Rahim bt S. Ajith Kumar 21-13, 21-13; S. Abdul Rahim & S. Mohan Ram bt S.J. Varshath & P. Santhosh 21-19, 21-13). **Third place:** JJ CAS bt EGS Pillay ASC 2-0 (Mugundan bt J. Yaseer 21-19, 21-6; Akash & Mugundan bt Ragupathi & Basith 21-18, 21-14).

**Table Tennis: Final:** Jamal Mohamed bt JJ CAS 3-1 (J. Sheik Abdullah bt A. Ijas Ahammed 11-6, 11-9, 11-13, 11-6; B. Murali Manohar lost to S. Murugesan 7-11, 9-11, 9-11; D. Maria Paul bt A. Riyaz Ahammed 11-8, 11-3, 13-11; J. Sheik Abdullah bt S. Murugesan 12-10, 11-4, 6-11, 11-4). **Third place:** Annai CAS bt Annai Vailankanni ASC 3-1 (A. Ganesh Kumar bt S. Mathiraja 11-4, 11-2, 11-2; C. Vedharaj lost to A. George 4-11, 8-11, 1-11; K. Semiyon bt R. Ravichandran 11-9, 8-11, 11-9, 9-11, 12-10; A. Ganesh Kumar bt A. George 11-2, 11-5, 11-8).



திருச்சி ஜமால் முகம்மது கல்லூாயில் நடைபெற்ற பாரதிதாசன் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு இடையேயான இறகுபந்து, மேஜைபந்து போட்டிகளை கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் ஏ.கே.காஜா நஜீமுதின் மற்றும் முதல்வர் எஸ்.இஸ்மாயில் முகைதீன், சுயநிதிப்பிரிவு இயக்குநர் கே.என். அப்துல் காதர் நிஹால் ஆகியோர் தொடங்கி வைத்தனர். விழாவில் காதர் முகைதீன் கல்லூரி உடற்கல்வி இயக்குநர் கே.முருகானந்தம், பூண்டி புஷ்பம் கல்லூரி உடற்கல்வி இயக்குநர் பேராசிரியர் டி.முருகராஜ் கலந்து கொண்டனர்.

லாக் ஆன் செய்யுங்கள்
etamil.thehindu.com
இப்பொழுது டிஜிட்டலிலும்.

# தி இந்து

Vol. 5 No. 255 தமிழால் இணைவோம் RNI No.TNTAM/2013/55769

லாக் ஆன் செய்யுங்கள்
etamil.thehindu.com
இப்பொழுது டிஜிட்டலிலும்.

புதன், செப்டம்பர் 13, 2017 • சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி ஆகிய நகரங்களில் அச்சாகிறது • திருச்சி பதிப்பு • 20 பக்கங்கள் ₹ 5

■ எமது பதிப்புகள்: சென்னை, காஞ்சிபுரம், புதுவை, வேலூர், கோவை, சேலம், தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை எமது இணையதளம்: http://tamil.thehindu.com ■

## தென்னிந்திய கல்லூரி ஹாக்கி போட்டியில்

# காஜாமியான் கோப்பையை வென்றது கோவை அணி

**திருச்சி**

திருச்சியில் நடைபெற்ற காஜா மியான் சுழற்கோப்பைக்கான ஹாக்கி போட்டியில் கோவை டாக்டர் என்ஜிபி கல்லூரி அணி சாம்பியன் பட்டத்தை வென்றது.

தென்னிந்திய அளவில் கல்லூரிகளுக்கு இடையேயான காஜா மியான் சுழற்கோப்பைக்கான 17-வது ஆண்டு ஹாக்கி போட்டி திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்றது.

இதில் தமிழ்நாடு, கேரளாவைச் சேர்ந்த 16 அணிகள் பங்கேற்றன. அரையிறுதிப் போட்டியில் ஜமால்முகமது கல்லூரி அணி 5-0 என்ற கோல் கணக்கில் கோவை பிஎஸ்ஜி கல்லூரி அணியை வென்றது.

மற்றொரு ஆட்டத்தில் கோவை டாக்டர் என்ஜிபி அணி 6-5 என்ற கோல் கணக்கில் சென்னை நாசரேத் கல்லூரி அணியை வென்றது.

இறுதிப்போட்டியில், கோவை டாக்டர் என்ஜிபி கல்லூரி அணி 7-6 என்ற கோல் கணக்கில் ஜமால் முகமது கல்லூரி அணியை வென்று, காஜாமியான் சுழற்கோப்பை, சாம்பியன் பட்டத்தை வென்றது.

3-வது இடத்துக்கான ஆட்டத்தில் கோவை பி.எஸ்.ஜி அணி 1-0 என்ற கோல் கணக்கில் சென்னை நாசரேத் கல்லூரி அணியை வென்றது.

போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு ஜமால் முகமது கல்லூரிச் செயலாளர் மற்றும் தாளாளர் காஜா நஜீமுதின், கல்லூரி பொருளாளர் கலீல் அகமது ஆகியோர் பரிசு, சுழற்கோப்பை மற்றும் சான்றிதழ்களை வழங்கினர்.

http://www.maalaimalar.com Regd. No. TRY/061/2015-2017 RNI.No.42628/85

# மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்
MAALAI MALAR

திருச்சி 12-9-2017 (செவ்வாய்க்கிழமை) 8 பக்கம் 400 காசு ★★★ | மலர் 40 இதழ் 271



இறுதி போட்டியில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டம் வென்ற கோவை கல்லூரி அணிக்கு ஜமால் முகமது கல்லூரி செயலாளர் காஜா நஜிமுதீன், பொருளாளர் கலீல் அகமது ஆகியோர் சுழற்கோப்பை மற்றும் சான்றிதழ் வழங்கிய காட்சி.

### திருச்சி ஜமால் முகமது கல்லூரியில்

# காஜாமியான் கோப்பைக்கான 17-வது ஆண்டு ஆக்கி போட்டி

## கோவை அணிக்கு சாம்பியன் பட்டம்

திருச்சி, செப். 12–

திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியின் பொன்விழா வையொட்டி காஜாமியான் சுழற்கோப்பைக்கான 17–வது ஆண்டு தென்னிந்திய அளவிலான கல்லூரிகளுக்கு இடையேயான ஆக்கி போட்டி நடைபெற்றது.

இதன் நிறைவு விழா நேற்று மாலை நடைபெற்றது. முன்னதாக நடந்த அரையிறுதிப் போட்டிகள் நடந்தன. முதலாவது அரையிறுதிப் போட்டியில் ஜமால் முகமது கல்லூரி அணி 5–0 என்ற கோல் கணக்கில் கோவை பி.எஸ்.ஜி. கல்லூரி அணியை வென்றது.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் கோவை டாக்டர் என்.ஜி.பி. அணி 6–5 என்ற கோல் கணக்கில் சென்னை நாஜரத் அணியை வென்றது. 3–வது மற்றும் 4–வது இடங்களுக்கான போட்டியில் கோவை பி.எஸ்.ஜி. அணி 1–0 என்ற கோல் கணக்கில் சென்னை நாஜரத் அணியை வென்று மூன்றாம் இடத்தை பிடித்தது. சென்னை நாஜரத் அணி 4–வது இடத்தை பிடித்தது.

இறுதிப்போட்டியில் கோவை டாக்டர் என்.ஜி.பி. அணி, ஜமால் முகமது கல்லூரி அணியை 7–6 என்ற கோல் கணக்கில் காஜாமியான் சுழற்கோப்பையை வென்று சாம்பியன் பட்டம் பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கல்லூரியின் செயலாளரும் தாளாளருமான காஜா நஜீமுதின் மற்றும் கல்லூரியின் பொருளாளர் கலீல் அகமது ஆகியோர் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத் தொகை, சுழற்கோப்பை மற்றும் சான்றிதழ்களும் வழங் கினர்.

இணை செயலாளர் ஜமால் முகம்மது, துணை முதல்வர் முகமது இப்ராகிம் கல்லூரி இயக்குனர்கள் அப்துல் காதர் நிஹால், முகமது பாஜில் மற்றும் ஜமால் முகமது யாசின் ஜூபைர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக முதல்வர் இஸ்மாயில் முகைதீன் முன்னிலை வகித்தார். இறுதியாக கூடுதல் துணை முதல்வர் முகமது சிகாபுதீன் நன்றி கூறினார்.

போட்டிக்கான ஏற்பாடுகளை கல்லூரியின் உடற் கல்வி இயக்குநர் ஷாயின் ஷா மற்றும் உதவி உடற் கல்வி இயக்குநர் பிரதீப் குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

வெற்றி பெற்ற அணிகளுக்கு முதல் பரிசாக ரூ.10,000 சுழற்கோப்பை, சான்றிதழ், இரண்டாம் பரிசாக ரூ.7,000 சுழற்கோப்பை, சான்றிதழ், மூன்றாம் பரிசாக ரூ.5,000 சான்றிதழ், நான்காவது பரிசாக ரூ. 3,000 சான்றிதழ் வழங்கப்பட்டது.

## பொது அறிவிப்பு

திருச்சி, சோமரம்பேட்டை, வாசன்வேலி, வசித்து தற்சமயம் பண்டாரிநாதபுரம், பீமநகர், வசிக்கும் அல்லா பக்ஷா அவர்களின் மகள் ரசிதாபேகம் ஆகிய என் கட்சிக்காரர் கொடுத்த தகவல் படி கொடுக்கும் பொது அறிவிப்பு, என் கட்சிக்காரருக்கும் திருச்சி, சோமரசம்பேட்டை, ரஹீம் ஷரீப் அவர்கள் மகன் ரிஸ்வான் ஷரீப்க்கும் 18.09.2002 திருமணம் நடந்தது. இருவரிடையே ஏற்பட்ட பிரச்சனை காரணமாக இஸ்லாமிய முறைப்படி என் கட்சிக்காரர் அவரை குலா செய்து விட்டார். அதை விளம்புகை செய்ய திருச்சி, குடும்ப நல நீதிமன்றத்தில் O.S.No.36/2017 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார். ரிஸ்வான் ஷரீப் அவருக்கும் என் கட்சிக்காரருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. யாரேனும் அவர்களிடம் இதற்கு முன்பின் கொடுத்த கடன்களுக்கும் என் கட்சிக்காரருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அவர் வாங்கிய கடன்கள் என் கட்சிக்காரரை ஒரு போதும் கட்டுப்படுத்தாது என்பதை இதன் மூலம் அறியவும். மேலும் இந்த அறிவிப்பு கண்டவுடன் ரிஸ்வான் ஷரீப் அவர்கள் என் கட்சிக்காரருக்கு சேர வேண்டிய பொருட்களையும், உடமைகளையும் நீதிமன்றம் மூலம் ஒப்படைக்கும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இப்படிக்கு : M.அப்துல்சலாம் B.A.,B.L., N.தர்மராஜா B.A.,B.L.,
E.நோபல் சந்திரபோஸ் M.A.,B.L., வழக்கறிஞர்கள்

REGD. No. TRY/056/2015-2017 ★★★★
இன்டர்நெட் முகவரி:
http://www.dailythanthi.com

- தினத்தந்தி, உயிர்த்துடிப்பு உள்ள நாளிதழ் -

தினத் தந்தி
DAILY THANTHI
பவள விழா ஆண்டு

திருச்சி (12-9-2017) செவ்வாய்க்கிழமை
மலர் 75 இதழ் 315
ஹேவிளம்பி ஆவணி 27 உ
ஹிஜிரி 1438 துல்ஹஜ் 20

அருள்தரும் ஆன்மிகம்
24 பக்கம் 500 காசு

64 ஆண்டுகள் பாரம்பரியமிக்க நிறுவனம்
TRV
M/S T.R.வெங்கடாஜலம் செட்டி
NUTS, DRY FRUITS, SPICES & GIFT BOXES
ஏற்றுமதிதர முந்திரி மற்றும் உலர் பழவகைகள்
மொத்த விலையில் சில்லரை விற்பனை
திருச்சி : 36/2, பழைய அக்ராகரம் தெரு, தென்னூர், திருச்சி-17
கரூர் : 213, கோவை ரோடு, போன்: 0432-232580

என்றும் எப்போதும் உங்களுடன்...
புதுக்கோட்டை
தாரகை
• சில்க்ஸ் • ரெடிமேட்ஸ்
• பட்டு • பர்னிச்சர் • மேட்சிங்
Raymond BASICS VENFIELD

ஹேமங் பதானி.

இந்த ஆட்டம் காலை 10 மணிக்கு தொடங்குகிறது.



## தென்னிந்திய அளவிலான ஆக்கி போட்டியில்

# கோவை டாக்டர் என்.ஜி.பி. கல்லூரி அணி சாம்பியன்

திருச்சி, செப்.12-

திருச்சி ஜமால் முகமது கல்லூரி நடத்திய தென்னிந்திய அளவிலான கல்லூரிகளுக்கு இடையிலான ஆக்கி போட்டி கல்லூரி மைதானத்தில் கடந்த 9-ந் தேதி தொடங்கி நேற்று வரை நடந்தது. இதில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி, கேரளா மகாராஜா கல்லூரி, கொச்சின் அக்யுநாஸ் கல்லூரி உள்பட 15 கல்லூரிகளை சேர்ந்த அணிகள் பங்கேற்றன. நேற்று அரையிறுதி போட்டிகளும், இறுதிப் போட்டியும் நடந்தன. இறுதிப்போட்டியில் கோவை டாக்டர் என்.ஜி.பி. கல்லூரி அணி, 7-6 என்ற கோல் கணக்கில் ஜமால் முகமது கல்லூரி அணியை வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றது. மாலையில் நடந்த பரிசளிப்பு விழாவில் ஜமால் முகமது கல்லூரியின் செயலரும், தாளாளருமான காஜா நஜீமுதினும், பொருளாளர் கலீல் அகமதுவும் கலந்து கொண்டு, முதலிடம் பிடித்த கோவை டாக்டர் என்.ஜி.பி. கல்லூரி அணிக்கு கோப்பை மற்றும் பரிசுத் தொகை ரூ.10 ஆயிரமும், 2-ம் இடத்தை பிடித்த ஜமால் முகமது கல்லூரி அணிக்கு கோப்பை மற்றும் ரூ.7 ஆயிரமும், 3-ம் இடத்தை பிடித்த கோவை பி.எஸ்.ஜி. கல்லூரி அணிக்கு ரூ.5 ஆயிரமும், 4-வது இடத்தை பிடித்த சென்னை நாசரேத் கல்லூரி அணிக்கு ரூ.3 ஆயிரத்தையும் வழங்கினர். விழாவில் கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன், உடற்கல்வி இயக்குனர் ஷாயின் ஷா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

FOLLOW US:
thehindu.com
facebook.com/thehindu
twitter.com/the_hindu

# THE HINDU

TUESDAY, SEPTEMBER 12, 2017

INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

TIRUCHIRAPALLI
CITY EDITION
18 pages • ₹6.00



Gurugram student murder concerns the safety of all children: SC

page 7



Nirmala Sitharaman is a member of key Cabinet Committees

page 10



Centre has not firmed up a plan yet to deport Rohingya: Kiren Rijiju

page 11

Australia takes on Board President's XI in tour game

page 15



PRINTED AT · CHENNAI · COIMBATORE · BENGALURU · HYDERABAD · MADURAI · NOIDA · VISAKHAPATNAM · THIRUVANANTHAPURAM · KOCHI · VIJAYAWADA · MANGALURU · TIRUCHIRAPALLI · KOLKATA · HUBBALLI · MOHALI · MALAPPURAM · MUMBAI · TIRUPATI · LUCKNOW

## TAMIL NADU ROUND-UP

### Dr. NGP ASC triumphs

TIRUCHI: Dr. NGP ASC (Coimbatore) edged host Jamal Mohamed College 5-4 via tie-breaker, after the teams were 2-2 at full-time, to clinch the Khajamian Trophy in the inter-collegiate hockey tournament on Monday.

**The results: Final:** Dr. NGP ASC bt Jamal Mohamed 5-4, via tie-breaker (full-time 2-2).

**Third place:** PSG (Coimbatore) 1 (Arul) bt Nazareth CAS (Chennai) 0. **Semifinals:** Jamal Mohamed 5 (Sithukannan 3, Hariharan 2) bt PSG CAS 0; Dr. NGP ASC bt Nazareth CAS 4-3, via tie-breaker (full-time 2-2).




**A happy bunch:** The victorious Dr. NGP Arts and Science College hockey team. ▪SPECIAL ARRANGEMENT

### Narrow win for Kovai Knights

COIMBATORE: Kovai Knights edged out Arumugam Eleven Patriots Cricket Club by 13 runs in the CDCA first division league at the PSG Medical College grounds here on Sunday.

**The scores: I div.:** Kovai Knights 139 in 47.4 overs (A.V. Abilash 44, K. Murugesh four for 16, S.M. Sidharth three for 32) bt Arumugam Eleven Patriots CC 126 in 44.2 overs (R. Mithun 61, P. Saravanakumar three for 22, Rajeel Abdul Rahman three for 22, T. Veeramani three for 24).

**V div.:**

PIE Tech CC 156 in 43.3 overs (R. Siva Kumar 33, A. Ajith Kumar 31, K. Karthik three for 33) bt Young Blood CC 120 in 37.3 overs (K. Manibarathy three for 28, S. Gokulmoorthy three for 18, R. Vijaykumar three for 12).

Rathinam College CC 138 for seven in 23 overs (S. Jebastine Amalan 55, R. Naveen four for 23) bt Magma CC 124 in 22 overs (Abdul Rahim three for 45).

மூட்டு வலிக்கு முற்றுப்புள்ளி...
அதி நவீன மூட்டு மாற்று அறுவை சிகிச்சை
ஜி.வி.என். மருத்துவமனை
46, சிங்காரத்தோப்பு, சூப்பர் பஜார், திருச்சி - 620 008.
0431-2700712, 2700811, 2705979, 2703945

தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்
-TPTC Edition-

பூமெக்ஸ்
• பனியன்கள் • ஜட்டிகள்
Poomex

திருச்சி • செவ்வாய் • செப்டம்பர் 12, 2017
சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில்
• 18 பக்கம் • 600 காசு • மலர் 67 • இதழ் 7

# ஜமால் முகமது ஹாட்ரிக்

திருச்சி: பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட கல்லூரிகளுக்கு இடையிலான பூப்பந்து போட்டியில் ஜமால் முகமது கல்லூரி தொடர்ந்து 3வது ஆண்டாக வெற்றி பெற்றது. திருச்சி ஜோசப், ஜமால் முகமது, பிஷப் ஹீபர், அரியலூர், கும்பகோணம் அரசு கல்லூரிகள், உட்பட 12 கல்லூரிகள் பாரதிதாசன் பல்கலை. பேட்மின்டன் போட்டியில் கலந்து கொண்டன. இதில் ஜமால் முகமது கல்லூரி, ஜோசப் கல்லூரி, பிஷப் ஹீபர் கல்லூரி, மயிலாடுதுறை ஏவிசி உட்பட 4 கல்லூரிகள் அரை இறுதி போட்டிக்கு தகுதி பெற்றன. இதில் அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெற்று 3வது ஆண்டாக ஜமால் முகமது கல்லூரி பல்கலை. சாம்பியன் பட்டம் வென்றது. ஏவிசி கல்லூரி 3வது இடம் பிடித்தது. சாம்பியன் பட்டம் வென்ற ஜமால் முகமது கல்லூரி வீரர்களை கல்லூரி தாளாளர் காஜா நஜுமுதீன், முதல்வர் முகமது இப்ராஹிம், உடற்கல்வி இயக்குனர் சாயின்ஷா உட்பட பலர் பாராட்டினர்.



பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட கல்லூரிகளுக்கு இடையிலான பூப்பந்து போட்டியில் 3வது முறையாக சாம்பியன் பட்டம் வென்ற ஜமால் முகமது கல்லூரி வீரர்களை கல்லூரி முதல்வர் முகமது இப்ராஹிம், உடற்கல்வி இயக்குனர் சாயின்ஷா ஆகியோர் பாராட்டினர்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
[illegible]
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

செவ்வாய்க்கிழமை
12 செப்டம்பர் 2017
திருச்சி
18 பக்கங்கள் ரூ.5

# ஹாக்கி போட்டி: காஜாமியான் கோப்பையை வென்றது கோவை என்.ஜி.பி. கல்லூரி அணி

**திருச்சி,செப். 11:** திருச்சியில் நடைபெற்று வந்த தென்னிந்திய கல்லூரிகளுக்கிடையிலான ஹாக்கி போட்டியின் இறுதி போட்டியில் காஜாமியான் கோப்பையை கோவை டாக்டர் என்.ஜி.பி.கல்லூரி அணி வென்றது.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் பொன் விழாவையொட்டி கடந்த 9 ஆம் தேதி தென்னிந்திய அளவிலான கல்லூரிகளுக்கு இடையிலான காஜாமியான் கோப்பைக்கான 17 ஆம் ஆண்டு ஹாக்கி போட்டிகள் தொடங்கின. பத்துக்கும் மேற்பட்ட கல்லூரிகள் போட்டியில் பங்கேற்று விளையாடின.

திங்கள்கிழமை மாலை நடைபெற்ற இறுதிப் போட்டியில் திருச்சி ஜமால் முகமது கல்லூரியை 7-6என்ற கோல்கணக்கில் வென்று காஜாமியான் கோப்பையை கோவை டாக்டர் என்.ஜி.பி. கல்லூரி கைப்பற்றியது.

சென்னை நாசரேத் கல்லூரியை 1-0 என்ற கோல்கணக்கில் வென்று கோவை பி.எஸ்.ஜி. கல்லூரி மூன்றாவது இடத்தைப் பிடித்தது.

முன்னதாக, காலையில் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் கோவை பி.எஸ்.ஜி.கல்லூரியை 5-0 என்ற கோல்கணக்கில் திருச்சி ஜமால் முகமது கல்லூரியும், இரண்டாவது அரையிறுதியில் சென்னை நாசரேத் கல்லூரியை 6-5 என்ற கோல்கணக்கில் கோவை டாக்டர் என்.ஜி.பி. கல்லூரியும் வென்று இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றன.

தொடர்ந்து நடைபெற்ற விழாவில், கல்லூரிச் செயலர் ஏ.கே.காஜா நஜ்முதீன், பொருளாளர் கே.ஏ . கலீல் அகமது பரிசுகளையும், சான்றிதழ்களையும் வழங்கினர்.

விழாவில், கல்லூரி இணைச் செயலர் எம்.எஸ்.ஜமால் முகமது, முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். ஏற்பாடுகளை கல்லூரி உடற்கல்வி இயக்குநர் ஷாஇன்ஷா, உதவி உடற்கல்வி இயக்குநர் மு. பிரதீப்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.



ஜமால் முகம்மது கல்லூரியின் பொன்விழாவினை முன்னிட்டு துவங்கப்பட்ட காஜாமியான் சுழற்கோப்பைக்கான 17வது ஆண்டு தென்னிந்திய அளவிலான கல்லூரிகளுக்கு இடையேயான ஹாக்கி போட்டியை கல்லூரி உதவிச் செயலாளர் ஜமால் முகம்மது துவக்கி வைத்தார். விழாவில் கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் காஜா நஜீமுதின், பொருளாளர் கலீல் அகமது, முதல்வர் இஸ்மாயில் முகைதீன், துணை முதல்வர் முகமது இப்ராகிம், கூடுதல் துணை முதல்வர் முகமது சிகாபுதீன், மேலாண்மைத்துறை இயக்குநர் அப்துஸ் சமது, சுயநிதிப்பிரிவு இயக்குநர் அப்துல் காதர் நிகால், மற்றும் பேராசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

REGD. No. TRY/056/2015-2017 ★★★★
இன்டர்நெட் முகவரி:
http://www.dailythanthi.com

- சென்னை, திருச்சி, மதுரை, கோவை, சேலம், நெல்லை, வேலூர், கடலூர், ஈரோடு, நாகர்கோவில், தஞ்சாவூர், திண்டுக்கல், திருப்பூர், புதுச்சேரி, பெங்களூரு, மும்பை, துபாய் நகரங்களில் அச்சாகிறது -

ஞாயிறு மலர், குடும்ப மலர்
32 பக்கம் 600 காசு

ஆனந்தம்... ஆனந்தாவின் ஆடைகளில் ஆரம்பம்
மக்கள் போற்றும் மகத்தான ஜவுளி நிறுவனம்!
ஆனந்தா
சில்க்ஸ் பாரடைஸ்
என்.எஸ்.பி. ரோடு, திருச்சி - 2.

தினத் தந்தி
DAILY THANTHI
பவள விழா ஆண்டு

திருச்சி (10-9-2017) ஞாயிற்றுக்கிழமை | மலர் 75 இதழ் 313 | ஹேவிளம்பி ஆவணி மீ 25 உ. ஹிஜிரி 1438 துல்ஹஜ் 18

AMMAN-TRY
TMT BARS
நாடு போற்றும்
நல்ல கம்பி...
0431 - 2420022

# தென்னிந்திய அளவிலான ஆக்கி போட்டி; திருச்சியில் தொடங்கியது

திருச்சி, செப்.10–

திருச்சி ஜமால் முகமது கல்லூரி நடத்தும் தென்னிந்திய அளவிலான கல்லூரிகளுக்கு இடையிலான ஆக்கி போட்டி நேற்று கல்லூரி மைதானத்தில் தொடங்கியது. இதில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி, கேரளா மகாராஜா கல்லூரி, கொச்சின் அக்யுநாஸ் கல்லூரி, கோவை பி.எஸ்.ஜி. கல்லூரி, திருப்பத்தூர் தூய இருதய கல்லூரி, திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி உள்பட 15 கல்லூரிகளை சேர்ந்த அணிகள் பங்கேற்றன. போட்டியை ஜமால் முகமது கல்லூரி தாளாளர் காஜா நஜீமுதின், முதல்வர்



இஸ்மாயில் முகைதீன் ஆகியோர் முன்னிலையில், உதவி செயலாளர் ஜமால் முகமது தொடங்கி வைத்தார். முதல் போட்டியில் ஜமால் முகமது கல்லூரி அணி 3–1 என்ற புள்ளி கணக்கில் உடுமலைப்பேட்டை வித்யாசாகர் கல்லூரி அணியை வென்றது. இதனை தொடர்ந்து நடந்த போட்டிகளில் அருளானந்தர் கருமாத்தூர் கல்லூரி, மதுரை சவுராஸ்டிரா கல்லூரி, சென்னை நஜரத் கல்லூரி, கோவை பி.எஸ்.ஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை டாக்டர் என்.ஜி.பி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம் ஏ.வி.எஸ் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகிய கல்லூரி அணிகள் வெற்றி பெற்றன. போட்டிகள் தொடர்ந்து நாளை(திங்கட்கிழமை) வரை நடைபெறுகிறது. முடிவில் நாளை மாலை நடைபெறும் பரிசளிப்பு விழாவில் வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பைகள், பரிசுத்தொகை, சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. போட்டிக்கான ஏற்பாடுகளை கல்லூரியின் உடற்கல்வி இயக்குனர் ஷாயின் ஷா, உதவி உடற்கல்வி இயக்குனர் பிரதீப்குமார் ஆகியோர் செய்துள்ளனர்.

# தினகரன்

ஒரு புதிய அனுபவம்

www.dinakaran.com
/dinakarannews
/dinakaranonline




யுஎஸ் ஓபனில் புதிய சாம்பியன் பக்கம் 13



முன்னாள் அமைச்சர் ஜெயந்தி நடராஜன் விரைவில் கைது? பக்கம் 5

முதல்படம் உணர்வில் இருக்கிறேன் பக்கம் 12




● திருச்சி ● திங்கள், செப்டம்பர் 11, 2017 ● சென்னை ● புதுவை ● வேலூர் ● சேலம் ● கோவை ● திருச்சி ● மதுரை ● நெல்லை ● நாகர்கோவில் ● பெங்களூர் ● மும்பை ● டெல்லி ● கதிர் 39 ஒளி 97 ● 18 பக்கம் ₹5


## தென்னிந்திய அளவில் கல்லூரிகளுக்கு இடையே

# திருச்சியில் ஹாக்கி போட்டி

திருச்சி, செப். 11: திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியின் பொன்விழாவினை முன்னிட்டு காஜாமியான் சுழற்கோப்பைக்கான 17வது ஆண்டு தென்னிந்திய அளவிலான கல்லூரிகளுக்கு இடையேயான ஹாக்கி போட்டி திருச்சியில் துவங்கியது. போட்டிகளை கல்லூரியின் உதவி செயலாளர் ஹாஜி.ஜமால் முகம்மது துவக்கி வைத்தார்.

முதல்நாள் நடைபெற்ற போட்டிகளில் ஜமால் முகமது கல்லூரி அணி 3-1 புள்ளி கணக்கில் உடுமலைப்பேட்டை வித்யா சாகர் கல்லூரி அணியை வென்றது. இரண்டாவது போட்டியில் அருளானந்தர், கருமாத்தூர் கல்லூரி அணி 2-1 என்ற புள்ளி கணக்கில்சிவகாசி அஞ்சா கல்லூரி அணியையும், மூன்றாவது போட்டியில் மதுரைசௌராஷ்ட்ராகல்லூரி அணி 5-0என்றபுள்ளி கணக்கில் கொச்சி அக்யுநாஸ் கல்லூரி அணியையும், நான்காவது போட்டியில் சென்னை நஜரத் கல்லூரி அணி 7-1 என்ற புள்ளி கணக்கில் திருச்சி பிஷப்ஹீபர்கல்லூரிஅணியையும் வென்றது. இன்று மாலை பரிசளிப்பு விழா நடைபெறுகிறது. வெற்றி பெறும்அணிகளுக்குபரிசு மற்றும்கோப்பைவழங்கப்படுகிறது.

FOLLOW US:
thehindu.com
facebook.com/thehindu
twitter.com/the_hindu

# THE HINDU

MONDAY, SEPTEMBER 11, 2017
INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

TIRUCHIRAPALLI
CITY EDITION
22 pages • ₹6.00



Under-construction flyover collapses in Bhubaneswar, 1 killed
page 7



Violence outside Ryan International School over killing of student
page 7



BJP readies aggressive campaign in Bengal for Amit Shah visit
page 10

Sloane Stephens crowned champion at US Open
page 15



PRINTED AT · CHENNAI · COIMBATORE · BENGALURU · HYDERABAD · MADURAI · NOIDA · VISAKHAPATNAM · THIRUVANANTHAPURAM · KOCHI · VIJAYAWADA · MANGALURU · TIRUCHIRAPALLI · KOLKATA · HUBBALLI · MOHALI · MALAPPURAM · MUMBAI · TIRUPATI · LUCKNOW

## TAMIL NADU ROUND-UP

### Three-in-a-row for JMC

TIRUVARUR: Jamal Mohamed College won all its matches in the semifinal league to triumph for the third successive year in the Bharathidasan University inter-collegiate ball badminton tournament for men here on Saturday.

St. Joseph's College (two wins) and AVC College (one win) finished second and third respectively.

**The results (semifinal league):** Jamal Mohamed bt Bishop Heber 35-10, 35-13; St. Joseph's bt AVC 35-21, 35-19; Jamal Mohamed bt AVC 35-14, 35-18; St. Joseph's bt Bishop Heber 35-22, 35-16; AVC bt Bishop Heber 35-25, 35-27; Jamal Mohamed bt St. Joseph's 35-18, 35-24.



**Unstoppable:** Jamal Mohamed College ball badminton team kept a clean slate to win the title. ▪THE HINDU

### Hat-trick by Vijayan

TIRUCHI: Vijayan netted thrice as Nazareth CAS blanked AVS CAS 6-0 and entered the semifinals of the Khajamian Trophy inter-collegiate hockey tournament here on Sunday.

**The results (quarterfinals):** Jamal Mohamed 3 (Sithukannan, Hariharan, Praveen Kumar) bt Arul Anandar 0; Nazareth CAS 6 (Vijayan (3), Vijay, John Peter, Raja Prasath) bt AVS CAS 0; PSG CAS 1 (Muthukumar) bt Sourashtra 0; Dr. NGP ASC 1 (Sujimon) bt GTN 0.

### Sree Sowdambigai EC triumphs

DINDIGUL: Sree Sowdambigai EC (Virudhunagar) registered a narrow two-wicket win over NPRCET (Natham) in the final of the Anna University zone-17 inter-engineering tournament on Sunday.

**The scores: Final:** NPRCET (Natham) 130 in 24.1 overs (Y. Surya 54, S. Pandeswaran four for 22, V. Vijay three for 20) lost to Sree Sowdambigai EC (Virudhunagar) 134 for eight in 24.2 overs (A. Inbarasan 40 n.o., T. Ayyanar Moorthy four for 22). **Third place play-off:** RVSCET (Dindigul) 121 for six in 20 overs (M. Mohammed Eithrees 52 n.o.) bt PSNACET (Dindigul) 100 in 19.3 overs (M. Ajith Kumar 27).

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

திங்கள்கிழமை
11 செப்டம்பர் 2017
திருச்சி
14 பக்கங்கள் ரூ.5


# ஹாக்கி: அரையிறுதியில் கோவை, திருச்சி கல்லூரிகள்

**திருச்சி, செப். 10:** திருச்சியில் நடைபெற்று வரும் தென்னிந்திய அளவிலான கல்லூரிகளுக்கு இடையேயான ஹாக்கி போட்டியின் அரையிறுதி ஆட்டங்களுக்கு சென்னை, கோவை, திருச்சி கல்லூரிகள் தகுதிபெற்றன.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் காஜாமியான் கோப்பைக்கான ஹாக்கி போட்டி சனிக்கிழமை தொடங்கியது. தமிழகம் மற்றும் கேரள மாநில கல்லூரிகள் இதில் பங்கேற்று விளையாடின. இதில், ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற காலிறுதியில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி 3-0 என்ற கோல் கணக்கில் கருமாத்தூர் அருளானந்தர் கல்லூரியையும், சென்னை நாசரேத் கல்லூரி 6-0 என்ற கணக்கில் சேலம் ஏவிஎஸ் கல்லூரியையும் வென்றன.

அதேபோல், கோவை பி.எஸ்.ஜி. கல்லூரி 1-0 என்ற கணக்கில் மதுரை செளராஷ்டிரா கல்லூரியையும், கோவை டாக்டர் என்.ஜி.பி. கல்லூரி, திண்டுக்கல் ஜி.டி.என். கல்லூரியையும் வென்றன.

திங்கள்கிழமை காலை அரையிறுதியும், மாலையில் இறுதிப் போட்டியும் நடைபெறுகிறது.

Prithvi
INNER WEARS
Bra | Slips | Panties
Uniform Shorts
Contact : +91 99522 77703
customercare@prithvimail.com

–TPTC Edition–

தினமலர்

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

திருச்சியில்
மர, ஸ்டீல் பர்னிச்சர்கள்
வாங்க கைராசியான ஸ்தாபனம்
ராயல் பர்னிச்சர்
22, மதுரை ரோடு, திருச்சி – 8.
போன்: 2702225, 2700620.

திருச்சி • திங்கள் • செப்டம்பர் 11, 2017 | சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் | • 16 பக்கம் • 600 காசு • மலர் 67 • இதழ் 6

# தென்னிந்திய ஹாக்கி: அரை இறுதியில் திருச்சி, சென்னை, கோவை அணிகள்

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் தென்னிந்திய அளவிலான ஹாக்கி போட்டிகள் நடக்கிறது. நேற்று நடந்த காலிறுதி போட்டியில் ஜமால் முகமது கல்லூரி 3-0 என்ற கோல் கணக்கில் அருளானந்தர் கல்லூரியை வென்றது.

சென்னை நாசரத் கல்லூரி 6-0 என்ற கோல் கணக்கில் சேலம் ஏவிஎஸ் கல்லூரியை வீழ்த்தியது. கோவை பிஎஸ்ஜி கல்லூரி 1-0 என்ற கோல் கணக்கில் மதுரை சவுராஷ்டிரா கல்லூரியை வென்றது. கோவை டாக்டர் என்ஜிபி கல்லூரி 1-0 என்ற கோல் கணக்கில் ஜிடிஎன் கல்லூரியை வென்றது. இன்று காலை அரை இறுதி போட்டி மாலை இறுதி போட்டி மற்றும் பரிசளிப்பு நிகழ்ச்சி நடக்கிறது.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

சனிக்கிழமை
9 செப்டம்பர் 2017
திருச்சி
14 பக்கங்கள் ரூ.5

# ஐஓபி சுழற்கோப்பையை வென்றது கோவை பி.எஸ்.ஜி. கல்லூரி

**திருச்சி, செப். 8:** திருச்சி ஜமால் முகமது கல்லூரி நடத்திய மாநில அளவிலான கல்லூரிகளுக்கிடையிலான வைரவிழா வாலிபால் போட்டியில் வென்று இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சுழற்கோப்பையை கோவை பிஎஸ்ஜி கலை அறிவியல் கல்லூரி வென்றது.

ஜமால் முகமது கல்லூரியில் கடந்த 6 ஆம் தேதி தொடங்கிய இந்தப் போட்டியில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 12 கல்லூரிகள் பங்கேற்றன. நாக் அவுட் முறையில் நடத்தப்பட்ட போட்டிகளில் பெற்ற வெற்றியின் அடிப்படையில் 4 கல்லூரிகள் அரையிறுதிக்குத் தகுதி பெற்றன.



திருச்சி ஜமால் முகமது கல்லூயில் நடைபெற்ற ஐ.ஓ.பி. சுழற்கோப்பைக்கான வைரவிழா வாலிபால் போட்டியில் முதலிடம் பெற்ற கோவை பிஎஸ்ஜி கலை அறிவியல் கல்லூரிக்கு சுழற்கோப்பை வழங்குகிறார் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் முதன்மை மண்டல மேலாளர் கே. ஜீவானந்தம்.

முதல் அரையிறுதி லீக் போட்டியில் திருச்சி ஜமால் முகமது கல்லூரியை 22-25, 25-25, 25-23, 25-21,15-10 என்ற செட்களில் கோவை பிஎஸ்ஜி கலை அறிவியில் கல்லூரியும், இரண்டாவது அரையிறுதி லீக்போட்டியில் கோவை என்.ஜி.பி. கல்லூரியை 25-22, 25-23, 25-18 என்ற செட்களில் சென்னை லயோலா கல்லூரியும் வென்றது.

மூன்றாவது லீக் போட்டியில் சென்னை லயோலா கல்லூரியை 25-13, 25-17,25-15 என்ற செட்களில் ஜமால் முகமது கல்லூரியும், நான்காவது லீக் போட்டியில் கோவை என். ஜி.பி.கல்லூரியை 25-20,25-20,25-19 என்ற செட்களில் கோவை பிஎஸ்ஜி கல்லூரியும் வென்றது.

ஐந்தாவது லீக் போட்டியில் சென்னை லயோலா கல்லூரியை 27-25, 25-29, 14-25, 25-22 என்ற செட்களில் கோவை பிஎஸ்ஜி கல்லூரியும், ஆறாவது லீக் போட்டியில் கோவை என்ஜிபி கல்லூரியை 22-25, 29-27, 25-20, 25-22 என்ற செட்களில் ஜமால் முகமது கல்லூரியும் வென்றது. அனைத்துப் போட்டிகளிலும் வெற்றி பெற்ற கோவை பிஎஸ்ஜி கலை அறிவியல் கல்லூரி முதலிடத்தை பெற்று சாம்பியன் கோப்பையைக் கைப்பற்றியது. 2 போட்டிகளில் வென்ற ஜமால் முகமது கல்லூரி இரண்டாவது இடத்தையும், ஒரேயோரு வெற்றியை பெற்ற லயோலா கல்லூரி 3 ஆவது இடத்தையும் பிடித்தது. இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் முதன்மை மண்டல மேலாளர் கே. ஜீவானந்தம் சாம்பியன் கோப்பையை கோவை பி.எஸ்.ஜி. கல்லூரிக்கு வழங்கினார். கல்லூரிச் செயலர் மற்றும் தாளாளர் ஏ.கே. காஜா நஜ்முதீன், இணைச் செயலர் ஜமால் முகமது, துணை முதல்வர் முகமது இப்ராஹிம், கல்லூரி இயக்குநர்கள் அப்துல்காதர் நிகால், முகமது பாஜில், ஜமால் முகமது யாசீன் ஜூபைர் , கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன் வாழ்த்திப் பேசினர்.

FOLLOW US:
thehindu.com
facebook.com/thehindu
twitter.com/the_hindu

# THE HINDU

SATURDAY, SEPTEMBER 9, 2017

INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

TIRUCHIRAPALLI
CITY EDITION
24 pages • ₹6.00



Court asks Kodnani to get Amit Shah to testify in her favour by Tuesday page 7



Ready to meet anyone who wishes to talk to me in Kashmir: Rajnath page 11



At least 32 dead as magnitude 8.2 quake rocks Mexico page 12

Keys to take on Stephens in US Open women's singles final page 15



PRINTED AT · CHENNAI · COIMBATORE · BENGALURU · HYDERABAD · MADURAI · NOIDA · VISAKHAPATNAM · THIRUVANANTHAPURAM · KOCHI · VIJAYAWADA · MANGALURU · TIRUCHIRAPALLI · KOLKATA · HUBBALLI · MOHALI · MALAPPURAM · MUMBAI · TIRUPATI · LUCKNOW

## TAMIL NADU ROUND-UP

30) lost to Sri Sowdambika CET (Virudhunagar) 89 for three in 10.1 overs (P. Arun 57).

SBMCET (Dindigul) 71 in 18.4 overs (M. Mohammed Withress three for 12) lost to RVSCET (Dindigul) 74 for two in 16.3 overs (P. Arun Pandi 35 n.o.).

Kamaraj CET (Virudhunagar) 86 in 19.5 overs (A. Sweetin Jebasingh 27, R. Vinoth four for 19) lost to NPRCET (Natham) 87 for two in 10.2 overs (T. Ayyanaramoorthi 32 n.o., M. Dhanabal 25).

### PSG CAS lifts trophy

TIRUCHI: PSG College of Arts and Science (Coimbatore) maintained a clean slate in the league to emerge champion in the Diamond Jubilee inter-collegiate volleyball tournament for the IOB Rolling Trophy here on Thursday.

**The results (semifinal league):** PSG CAS (Cbe) bt Jamal Mohamed (Tir) 22-25, 22-25, 25-23, 25-21, 15-10; Loyola (Che) bt Dr. NGP CAS (Cbe) 25-22, 25-23, 25-18; Jamal Mohamed bt Loyola 25-13, 25-17, 25-15; PSG CAS bt Dr. NGP CAS 25-20, 25-20, 25-19; PSG CAS bt Loyola 27-25, 25-20, 14-25, 25-22; Jamal Mohamed bt Dr. NGP CAS 22-25, 29-27, 25-20, 25-22.

**Final standing:** 1. PSG CAS; 2. Jamal Mohamed; 3. Loyola; 4. Dr. NGP CAS.




**Triumphant:** PSG College of Arts and Science (Coimbatore) which emerged the champion. ▪SPECIAL ARRANGEMENT

தினகரன்
ஒரு புதிய அனுபவம்
www.dinakaran.com
/dinakarannews
/dinakaranonline
ஹாங்காங் ஸ்குவாஷ் பைனலுக்கு தகுதி பக்கம் 13
இன்றைய இதழுடன் ஆன்மிக மலர் புத்தகம் கேட்டு வாங்குங்கள்
போட்டோ எடுத்தவர்களுக்கு அடி உதை பக்கம் 12
● திருச்சி ● சனி, செப்டம்பர் 9, 2017
● சென்னை ● புதுவை ● வேலூர் ● சேலம் ● கோவை ● திருச்சி ● மதுரை ● நெல்லை ● நாகர்கோவில் ● பெங்களூர் ● மும்பை ● டெல்லி
● கதிர் 39 ஒளி 95 ● 18 பக்கம் ₹5


## மாநில வாலிபால் போட்டி

# ஜமால் முகமது கல்லூரி 2வது இடம்

திருச்சி. செப். 9: திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் மாநில அளவில் கல்லூரிகளுக்கு இடையேயான வாலிபால் போட்டி நடந்தது. இதில் 11 கல்லூரிகளை சேர்ந்த அணிகள் கலந்து கொண்டன.

போட்டிகள் நாக்அவுட் மற்றும் லீக் முறையில் நடந்தது. அரையிறுதி போட்டிக்கு திருச்சி ஜமால் முகமது, கோவை பிஎஸ்ஜி, சென்னை லயோலா, கோவை என்ஜிபி கல்லூரி அணிகள் தகுதி பெற்றன. லீக் முறையில் நடந்த இந்தப் போட்டியில் புள்ளிகள் அடிப்படையில் கோவை பிஎஸ்ஜி முதலிடத்தை பிடித்து சாம்பியன் கோப்பையை பெற்றது. திருச்சி ஜமால் முகமது 2வது இடத்தையும், சென்னை லயோலா 3ம் இடத்தையும் பிடித்தன. வெற்றி பெற்ற அணிகளுக்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதன்மை மண்டல மேலாளர் ஜீவானந்தம் பரிசு கோப்பை வழங்கினார். இதில் கல்லூரி செயலாளர் காஜாநஜீமுதீன், உதவி செயலாளர் ஜமால் முகமது, உடற்கல்வி இயக்குனர் ஷாகின்ஷா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

FOLLOW US
thehindu.com
facebook.com/thehindu
twitter.com/the_hindu

THE HINDU
FRIDAY, SEPTEMBER 8, 2017
INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878
TIRUCHIRAPALLI
CITY EDITION
40 pages • ₹6.00

PRINTED AT · CHENNAI · COIMBATORE · BENGALURU · HYDERABAD · MADURAI · NOIDA · VISAKHAPATNAM · THIRUVANANTHAPURAM · KOCHI · VIJAYAWADA · MANGALURU · TIRUCHIRAPALLI · KOLKATA · HUBBALLI · MOHALI · MALAPPURAM · MUMBAI · TIRUPATI · LUCKNOW

# Competitions for college students

TIRUCHI

The Department of Tamil Development will conduct poetry, essay writing, and oratorical competitions for college students on September 15 to nurture creative talent. The competitions will be held at Jamal Mohammed College and colleges can send one contestant for each of the three contests. Students without authorisation letters from their institutions would not be allowed to participate. Contestants should register at the venue at 9 a.m. on the day of the event. The top three winners in each contest would be awarded cash prizes. First prize winners will qualify for the State-level competition to be held in Chennai, Collector K. Rajamani said in a release.

பட்டின் பாரம்பரியம்... பட்டுக்கு 15% தள்ளுபடி
தைலா Thaila
பட்டு • ரெடிமேட்ஸ் • மில்ஜவுளிகள்
55, பெரியகடை வீதி, திருச்சி-2 போன் : 2705554

தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்
-TPTC Edition-

ருசியில் சிறந்தது சிவதாஸ் அப்பளம்
சமையல் மணக்க சிவதாஸ் கூட்டு பெருங்காயத்தூள்
வாங்கி மகிழுங்கள்!!
போன்: 95003 00113

திருச்சி • வெள்ளி • செப்டம்பர் 8, 2017 | சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் | • 16 பக்கம் • 600 காசு • மலர் 67 • இதழ் 3

# மாநில வாலிபால்

# கோவை பிஎஸ்ஜி சாம்பியன்

திருச்சி, செப். 8–

*திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் மாநில அளவில் ஐஓபி கோப்பைக்கான வாலிபால் போட்டிகள் நடந்தது.*

இதில் நேற்று நடந்த அரையிறுதி லீக் சுற்று போட்டியில் அதிக புள்ளிகள் பெற்ற பிஎஸ்ஜி கல்லூரி முதல் இடமும், ஜமால் முகமது கல்லூரி 2வது இடமும், சென்னை லயோலா கல்லூரி 3வது இடமும் பிடித்தன. போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு ஐஓபி முதன்மை மண்டல மேலாளர் ஜீவானந்தம் கோப்பை மற்றும் பரிசு வழங்கினார். ஜமால் முகமது கல்லூரி தாளாளர் காஜா நஜூமுதீன், முதல்வர் இஸ்மாயில் முகைதீன் , உடற்கல்வி இயக்குனர் சாயின்ஷா உட்பட பலர் கலந்து கொண்டனர்.




திருச்சியில் நடந்த ஐஓபி கோப்பைக்கான மாநில வாலிபால் போட்டியில் வெற்றி பெற்ற கோவை பிஎஸ்ஜி கல்லூரிக்கு ஐஓபி முதன்மை மண்டல மேலாளர் ஜீவானந்தம் கோப்பை வழங்கினார். அருகில் ஜமால் முகமது கல்லூரி தாளாளர் காஜா நஜூமுதீன், முதல்வர் இஸ்மாயில் முகைதீன். உடற்கல்வி இயக்குனர் சாயின்ஷா உட்பட பலர்.

REGD. No. TRY/056/2015-2017
இன்டர்நெட் முகவரி:
http://www.dailythanthi.com
★★★★
- சென்னை, திருச்சி, மதுரை, கோவை, சேலம், நெல்லை, வேலூர், கடலூர், ஈரோடு, நாகர்கோவில், தஞ்சாவூர், திண்டுக்கல், திருப்பூர், புதுச்சேரி, பெங்களூரு, மும்பை, துபாய் நகரங்களில் அச்சாகிறது -
சிறுவர் தங்கமலர், வெள்ளிமலர்
30 பக்கம் 500 காசு
தினத் தந்தி
DAILY THANTHI
பவள விழா ஆண்டு
திருச்சி (8-9-2017) வெள்ளிக்கிழமை
மலர் 75 இதழ் 311
ஹேவிளம்பி ஸ்ரீ ஆவணி மீ 23 உ
ஹிஜ்ரி 1438 துல்ஹஜ் 16

உயர்த்தப்பட்ட ஒரு ரூபாய் நிஜாம் பாக்கு
M/S.A.SAFIULLAH & CO., P.B.No.14, PUDUKKOTTAI
பித்தவெடிப்பு சேற்றுப்புண் சொறிசிரங்கு முகப்பரு வெட்டுக்காயம் வேனல்கட்டி முதலிய தோல்வியாதிகளுக்கு சிறந்தது
75
BEST SKIN OINTMENT
Partners: S. S. Subramanian S. Balaji
சைபால்



## மாநில அளவிலான கைப்பந்து போட்டி:

# கோவை பி.எஸ்.ஜி. கல்லூரி அணி சாம்பியன்

திருச்சி, செப்.8–

திருச்சி ஜமால்முகமது கல்லூரியில் மாநில அளவில் கல்லூரிகளுக்கு இடையேயான கைப்பந்து போட்டி கடந்த 5–ந் தேதி தொடங்கி நடைபெற்றது. இதில் சென்னை லயோலா கல்லூரி, கோவை பி.எஸ்.ஜி. கல்லூரி, திருப்பத்தூர் தூய இருதய கல்லூரி, சென்னை இந்துஸ்தான் கல்லூரி உள்பட 11 கல்லூரி அணிகள் கலந்துகொண்டு மோதின. போட்டிகள் நாக்அவுட் மற்றும் லீக் முறையில் நடத்தப்பட்டன. அரையிறுதி போட்டிக்கு திருச்சி ஜமால்முகமது, கோவை பி.எஸ்.ஜி., சென்னை லயோலா, கோவை என்.ஜி.பி. ஆகிய 4 கல்லூரி அணிகள் தகுதி பெற்றன. லீக் முறையில் பரபரப்பாக நடந்த இந்த போட்டிகளில் புள்ளிகளின் அடிப்படையில் கோவை பி.எஸ்.ஜி. கல்லூரி அணி முதலிடத்தை பிடித்து சாம்பியன் கோப்பையை தட்டி சென்றது. திருச்சி ஜமால்முகமது கல்லூரி 2–வது இடத்தையும், சென்னை லயோலா 3–ம் இடத்தையும் பிடித்தன. வெற்றி பெற்ற அணிகளுக்கு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதன்மை மண்டல மேலாளர் ஜீவானந்தம் பரிசு கோப்பையை வழங்கினார். இதில் கல்லூரி செயலாளர் காஜாநஜீமுதீன், உதவி செயலாளர் ஜமால்முகமது, உடற்கல்வி இயக்குனர் ஷாகின்ஷா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

RICE CITY
Nurturing Tomorrow
Rice City Matriculation Higher Secondary School
Railway Road, Aduthurai - 612 101 Ph : 0435 2473350 / 2470138
E-mail : ricecityschool@gmail.com www.ricecity.org

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துல் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper

RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018
TN /PMG (CCR) WPP258/2016-18

SCM SHIRTS
A product of Seyad Cotton Mills
Seyad Home
Industries Private Limited
Tirunelveli - 627 003

மணி - 33 சுடர் - 022 | ஹிஜ்ரி 1438 - துல்ஹஜ் - 15 | திருவள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி - 22 | சென்னை 07.09.2017 வியாழன் | வெளியூர் 08.09.2017 வெள்ளி | http://muslimleaguetn.com/manichudar.asp | பக்கம் - 4 | விலை ₹ 3

# ஜமால் முகம்மது கல்லூரியில் மாநில அளவில் ஐ.ஓ.பி சுழற்கோப்பைக்கான வைரவிழா கையுந்துபந்து போட்டி

திருச்சி, செப்.06-

ஜமால் முகம்மது கல்லூரி நடத்தும் மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையிலான ஐஓபி சுழற்கோப்பைக்கான வைரவிழா கையுந்துபந்து போட்டி 05ம்; தேதி செவ்வாய் கிழமை மாலை 4.00 மணிக்கு தொடக்க விழா நடைபெற்றது.



தொடர்ந்து 07ந் தேதி மாலை (மூன்று நாட்கள்) வரை நடைபெற உள்ளது. இப் போட்டியில் தமிழகத்தின் தலை சிறந்த கல்லூரிகளான சென்னை லயோலா மற்றும் ஹிந்துஸ்தான், கோவை பி.எஸ்.ஜி., மற்றும் டாக்டர் என்.ஜி.பி, திருப்பத்தூர் தூய நெஞ்சக்கல்லூரி, திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி, புனித வளனார், பிஷப் ஹீபர், ஸ்ரீமத் ஆண்டவன் கல்லூரி மற்றும் கடலூர் புனித வளனார் உட்பட 12 கல்லூரிகள் கலந்து கொள்கின்றன. போட்டிகள் நாக் அவுட் மற்றும் லீக் முறையில் நடத்தப்படுகிறது.

போட்டிகளை கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் டாக்டர் ஐ.கே. காஜா நஜீமுதின், ஆர். முரளீதரன், முதன்மை மேலாளர்து MC Oranch ஐஓபி., ஜெஎம்சி. பிரான்ச் ஆகியோர் துவக்கி வைத்தனர்.

கல்லூரி பொருளாளர் ஹாஜி கே.ஏ.கலீல் அகமது, இணை செயலாளர் ஹாஜி எம்.ஜெ. ஜமால் முகம்மது மற்றும் முதல்வர் டாக்டர் எஸ்.இஸ்மாயில் முகைதீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். போட்டிக்கான ஏற்பாடுகளை கல்லூரியின் உடற்கல்வி இயக்குநர் டாக்டர் பி.எஸ். ஷாயின் ஷா மற்றும் உதவி உடற்கல்வி இயக்குநர் கே. முபிரதீப் குமார் ஆகியோர் செய்துள்ளனர்.

முதல் போட்டியில் சென்னை ஹிந்துஸ்தான் கல்லூரி அணி 25-21, 25-19 என்ற செட் கணக்கில் கடலூர் புனித வளனார் கல்லூரி அணியை வென்றது.

இரண்டாவது போட்டியில் பி.எஸ்.ஜி கல்லூரி அணி 25-19, 25-19 என்ற செட் கணக்கில் ஜமால் கல்லூரி 'பி' அணியை வென்றது. நாளை காலை 06.09.2017 அன்று கால் இறுதி போட்டிகள் நடைபெறுகின்றன.

வெற்றி பெறும் அணிகளுக்கு முதல் பரிசாக ரூ 10,000 + சுழற்கோப்பை + சான்றிதழ் இரண்டாம் பரிசாக ரூ. 7,000 + சுழற்கோப்பை + சான்றிதழ் மூன்றாம் பரிசாக ரூ. 5,000 + சான்றிதழ் நான்காவது பரிசாக ரூ. 3,000 + சான்றிதழ் வழங்கப்படுகிறது.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

# தினமணி

வியாழக்கிழமை
7 செப்டம்பர் 2017
திருச்சி
14 பக்கங்கள் ரூ.5

## தமிழ் வளர்ச்சித்துறை சார்பில்

# கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான பேச்சு, கட்டுரை, கவிதைப் போட்டிகள்

**திருச்சி, செப். 6:** திருச்சி மாவட்ட தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கான கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் செப்டம்பர் 15ஆம் தேதி நடைபெறவுள்ளதாக மாவட்ட ஆட்சியர் கு.ராசாமணி தெரிவித்துள்ளார்.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடைபெறவுள்ள இப்போட்டிகளில், கல்லூரி சார்பில் ஒவ்வொரு போட்டிக்கும் ஒரு மாணவர் வீதம் மூன்று போட்டிகளுக்கும் மூன்று மாணவர்களை மட்டும் கல்லூரி முதல்வர் பரிந்துரை செய்து அனுப்பி வைக்க வேண்டும். பரிந்துரை கடிதம் இல்லாமல் வரும் மாணவர்கள் போட்டியில் அனுமதியில்லை.

பங்கேற்போர் போட்டி நாளன்று காலை 9 மணிக்கு வருகையை பதிவு செய்து கொள்ள வேண்டும். கவிதைப் போட்டி காலை 10 முதல் 11.30 மணி வரையிலும், கட்டுரைப் போட்டி நண்பகல் 12 மணி முதல் 1.30 மணி வரையிலும், பேச்சுப் போட்டி பிற்பகல் 2.30 மணி முதல் போட்டி முடியும் வரையிலும் நடைபெறும்.

ஒவ்வொரு போட்டிக்கும் முதல் பரிசு ரூ. 10,000, இரண்டாம் பரிசு ரூ. 7,000, மூன்றாம் பரிசு ரூ. 5,000-ம் வழங்கப்படும். முதல் பரிசுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் மாநில அளவில் சென்னையில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றி பெறுவோருக்கு ரூ. 15,000, 12,000, 10,000 என முறையே முதல், இரண்டு, மூன்றாம் பரிசுகள் வழங்கப்படும். மேலும் மாநில அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்பவர்களுக்குப் பயணப்படி வழங்கப்படும்.

மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிகளுக்குத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் முனைவர் துரை. தம்புசாமி ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுவார்.



# திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் மாநில அளவிலான கையுந்துபந்து போட்டி

## கல்லூரியின் தாளாளர் ஏ.கே. காஜா நஜீமுதின் துவக்கி வைத்தார்

திருச்சி, செப்.6–

ஜமால் முகம்மது கல்லூரி நடத்தும் மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையிலான ஐ.ஓ.பி சுழற்கோப்பைக்கான வைரவிழா கையுந்துபந்து போட்டி 5ம் தேதி தொடக்க விழா நடைபெற்றது. தொடர்ந்து 7ந் தேதி மாலை (மூன்று நாட்கள்) வரை நடைபெற உள்ளது.

இப்போட்டியில் தமிழகத்தின் தலைசிறந்த கல்லூரிகளான சென்னை லயோலா மற்றும் ஹிந்துஸ்தான், கோவை பி.எஸ்.ஜி., மற்றும் டாக்டர் என்.ஜி.பி, திருப்பத்தூர் தூய நெஞ்சக்கல்லூரி, திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி, புனித வளனார், பிஷப் ஹீபர், ஸ்ரீமத் ஆண்டவன் கல்லூரி மற்றும் கடலூர் புனித வளனார் உட்பட 12 கல்லூரிகள் கலந்து கொள்கின்றன. போட்டிகள் நாக் அவுட் மற்றும் லீக் முறையில் நடத்தப்படுகிறது.

போட்டிகளை கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் ஏ.கே. காஜா நஜீமுதின், ஐ.ஓ.பி. வங்கி முதன்மை மேலாளர் ஆர். முரளீதரன் ஆகியோர் துவக்கி வைத்தனர். கல்லூரியின் பொருளாளர் கே.ஏ. கலீல் அகமது, இணை செயலாளர் எம்.ஜெ.ஜமால் முகம்மது மற்றும் முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

போட்டிக்கான ஏற்பாடுகளை கல்லூரியின் உடற்கல்வி இயக்குனர் பி.எஸ்.ஷாயின் ஷா மற்றும் உதவி உடற்கல்வி இயக்குனர் கே.பிரதீப் குமார் ஆகியோர் செய்துள்ளனர். முதல் போட்டியில் சென்னை ஹிந்துஸ்தான் கல்லூரி அணி 2521, 2519 என்ற செட் கணக்கில் கடலூர் புனித வளனார் கல்லூரி அணியை வென்றது. இரண்டாவது போட்டியில் பி.எஸ்.ஜி கல்லூரி அணி 2519, 2519 என்ற செட் கணக்கில் ஜமால் கல்லூரி பி அணியை வென்றது.

இன்று கால் இறுதி போட்டிகள் நடைபெறுகின்றன. வெற்றி பெறும் அணிகளுக்கு முதல்பரிசாக ரூ.10,000 சுழற் கோப்பை சான்றிதழ், இரண்டாம் பரிசாக ரூ. 7,000 சுழற்கோப்பை சான்றிதழ், மூன்றாம் பரிசாக ரூ. 5,000 சான்றிதழ்,

நான்காவது பரிசாக ரூ. 3,000 சான்றிதழ் வழங்கப்படுகிறது.




தினமலர்

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்




திருச்சி •வியாழன் •செப்டம்பர் 7, 2017 | சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் | •16 பக்கம் •600 காசு •மலர் 67 •இதழ் 2

# மாநில வாலிபால் போட்டி
# அரையிறுதியில் திருச்சி அணி

திருச்சி, செப். 7-

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் ஐஓபி சுழற் கோப்பைக்கான வாலிபால் போட்டிகள் நடக்கிறது.

இதில் நேற்று நடந்த காலிறுதி போட்டியில் சென்னை லயோலா, திருச்சி ஜமால் முகமது, கோவை பிஎஸ்ஜி, டாக்டர் என்ஜிபி கல்லூரிகள் வெற்றிபெற்று அரை இறுதியில் விளையாட தகுதி பெற்றன.

காலிறுதிப் போட்டி முடிவுகள்:

கோவை பி.எஸ்.ஜி கலை அறிவியல் கல்லூரி 25--21, 25--21 என்ற நேர் செட்டில் திருப்பத்தூர் தூய இருதய கல்லூரியை வென்றது.

கோவை என்ஜிபி கலை அறிவியல் கல்லூரி 25--20, 25-19- என்ற நேர் செட்டில் சென்னை ஹிந்துஸ்தான் கல்லூரியை வென்றது.

திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணி 25--17, 25--17 என்ற செட்களில் ஸ்ரீரங்கம் ஆண்டவன் கல்லூரியை வென்றது.

சென்னை லயோலா கல்லூரி 25-18, 20-25, 25-18 என்ற செட்களில் திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியை வென்றது. காலிறுதியில் வெற்றி பெற்ற 4 அணிகளும் அரையிறுதி லீக் போட்டிக்கு தகுதி பெற்றன. இன்று மாலை இறுதிப்போட்டி மற்றும் பரிசளிப்பு நிகழ்ச்சி நடக்கிறது.



திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடந்து வரும் ஐஓபி சுழற் கோப்பைக்கான வாலிபால் போட்டியின் காலிறுதி ஆட்டத்தில் கோவை பிஎஸ்ஜி கல்லூரி, திருப்பத்தூர் தூய இருதய கல்லூரி அணிகள் மோதின.

REGD. No. TRY/056/2015-2017 ★★★★
இன்டர்நெட் முகவரி:
http://www.dailythanthi.com

- தினத்தந்தி, ஒவ்வொரு அங்குலமும் தங்கநகை போல அலங்கரிக்கப்படுகிறது -

தினத் தந்தி
DAILY THANTHI

பவள விழா ஆண்டு

18 பக்கம் 500 காசு

திருச்சி (7-9-2017) வியாழக்கிழமை | மலர் 75 இதழ் 310 | ஹேவிளம்பி ஸ்ரீ ஆவணி மீ 22 உ ஹிஜிரி 1438 துல்ஹஜ் 15

No.1 TMT - KISCOL TMT
KISCOL ®
SYMBOL OF QUALITY
Mobile : 99655 44486
KANNAPPAN IRON & STEEL COMPANY PVT. LTD.

AJS SINCE 1945 AJM
அமர் ஜுவல்லரி
NEAR ROCKFORT TEMPLE, TRICHY-2
2703321 / 2702860 / 4050606





மாநில அளவிலான கைப்பந்து போட்டியில்

# ஜமால்முகமது, லயோலா உள்பட 4 கல்லூரி அணிகள் அரை இறுதிக்கு தகுதி

திருச்சி, செப்.7-

திருச்சி ஜமால்முகமது கல்லூரியில் மாநில அளவில் கல்லூரிகளுக்கு இடையேயான கைப்பந்து போட்டி நேற்று முன்தினம் தொடங்கியது. இதில் சென்னை லயோலா கல்லூரி, கோவை பி.எஸ்.ஜி. கல்லூரி, திருப்பத்தூர் தூய இருதய கல்லூரி, ஜமால்முகமது கல்லூரி, சென்னை இந்துஸ்தான் கல்லூரி உள்பட 12 கல்லூரிகளை சேர்ந்த அணிகள் பங்கேற்றன. முதல் சுற்று போட்டிகள் நாக்அவுட் முறையில் நடந்தது. பரபரப்பாக நடந்த இந்த போட்டிகளில் சென்னை லயோலா, திருச்சி ஜமால்முகமது, கோவை பி.எஸ்.ஜி. உள்பட 4 கல்லூரி அணிகள் அரை இறுதி போட்டிக்கு தகுதி பெற்றன. அரை இறுதி போட்டிகள் லீக் முறையில் நடந்து வருகின்றன. தொடர்ந்து இன்று(வியாழக்கிழமை) மாலை இறுதி போட்டியும், அதனை தொடர்ந்து பரிசளிப்பு விழாவும் நடக்கிறது.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

வியாழக்கிழமை
7 செப்டம்பர் 2017
திருச்சி
14 பக்கங்கள் ரூ.5

## வாலிபால்

# அரையிறுதியில் கோவை, சென்னை, திருச்சி கல்லூரிகள்

**திருச்சி, செப்.6:** திருச்சியில் நடைபெற்று வரும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சுழற்கோப்பைக்கான அரையிறுதி ஆட்டங்களில் விளையாட கோவை,சென்னை, திருச்சி கல்லூரிகள் தகுதி பெற்றுள்ளன.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் வைரவிழா ஆண்டையொட்டி 8 ஆவது மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையிலான வாலிபால் போட்டிகள் செவ்வாய்க்கிழமை தொடங்கின. இப்போட்டியில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 12 கல்லூரிகள் பங்கேற்று விளையாடி வருகின்றன.

புதன்கிழமை நடைபெற்ற முதல் காலிறுதிப் போட்டியில் திருப்பத்தூர் தூய நெஞ்சகக் கல்லூரியை 25-21, 25-21 என்ற நேர் செட்கணக்கில் கோவை பி.எஸ்.ஜி. கலை அறிவியல் கல்லூரியும், இரண்டாவது காலிறுதிப் போட்டியில் சென்னை இந்துஸ்தான் கல்லூரியை 25-20, 25-19 என்ற நேர்செட்கணக்கில் கோவை என்.ஜி.பி.கலை அறிவியல் கல்லூரியும் வென்றன.

மூன்றாவது காலிறுதியில் திருவானைக்கா ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரியை 25-17,25-17 என்ற நேர்செட்கணக்கில் ஜமால் முகமது கல்லூரி வென்றது. நான்காவது காலிறுதிப் போட்டியில் திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியை 2518, 20-25, 25-18 என்ற செட்களில் சென்னை லயோலா கல்லூரி வென்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

வெற்றி பெற்ற அணிகளும் அரையிறுதிப் போட்டிகளை லீக் முறையில் சந்திக்கின்றன. வியாழக்கிழமை மாலை பரிசளிப்பு விழா நடைபெறும்.

சென்னை கோவை சேலம் திருச்சி மதுரை நெல்லை நாகர்கோவில் வேலூர் புதுவை

தமிழ் முரசு

திருச்சி 6.9.2017 புதன் ★

நம்பர் 1 மாலை நாளிதழ்

www.tamilmurasu.org ● முரசு 20 ● ஓசை 232 ● 8 பக்கம் ● ₹4









GENERAL LIBRARY, TRICHY 06 SEP 2017


# கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு கவிதை, கட்டுரை, பேச்சு போட்டி

திருச்சி, செப்.6–

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் தமிழ்வளர்ச்சித் துறையின் சார்பில் வரும் 15ம் தேதி கல்லூரி மாணவ, மாணவிகளிடையே தமிழ் மொழியில் எழுத்தாற்றல், படைப்பாற்றல், பேச்சாற்றல் வளர்க்கும் நோக்கில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் போன்ற போட்டிகள் நடைபெறவுள்ளது.ஒவ்வொரு போட்டிக்கும் ஒரு மாணவர் வீதம் மூன்று போட்டிகளுக்கும் மூன்று மாணவர்களை மட்டும் கல்லூரி முதல்வர் பரிந்துரை செய்து அனுப்பி வைக்க வேண்டும்.

போட்டிகளில் கலந்து கொள்ள பரிந்துரை கடிதம் பெற்றுள்ள மாணவ, மாணவியர்கள் போட்டி நாளன்று காலை 9 மணிக்குத் தங்கள் வருகையைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். கவிதைப் போட்டி காலை 10 மணி முதல் 11.30 மணி வரையிலும், கட்டுரைப் போட்டி காலை 12 மணி முதல் 1.30 மணி வரையிலும், பேச்சுப் போட்டி பிற்பகல் 2.30 மணி முதல் போட்டி முடியும் வரையிலும் நடைபெறும்.ஒவ்வொரு போட்டிக்கும் முதல்பரிசு ரூ. 10 ஆயிரமும், இரண்டாம் பரிசு ரூ. 7 ஆயிரமும், மூன்றாம் பரிசு ரூ. 5 ஆயிரமும் வழங்கப்படும். முதல் பரிசுக்குத் தொவு செய்யப்பட்டவர்கள் மாநில அளவில் சென்னையில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

சென்னை கோவை சேலம் திருச்சி மதுரை நெல்லை நாகர்கோவில் வேலூர் புதுவை

தமிழ் முரசு

நம்பர் 1 மாலை நாளிதழ்

திருச்சி 6.9.2017 புதன் ★

www.tamilmurasu.org ● முரசு 20 ● ஓசை 232 ● 8 பக்கம் ● ₹4







06 SEP 2017
GENERAL LIBRARY TRICHY

# கல்லூரிகள் வாலிபால்: அரையிறுதியில் ஜமால் முகமது

திருச்சி, செப். 6- திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் மாநில அளவில் கல்லூரிகளுக்கு இடையிலான ஐஓபி சுழற்கோப்பைக்கான வாலிபால் போட்டி நேற்று மாலை துவங்கியது.

7ம் தேதி வரை நடைபெற உள்ள போட்டியில் திருச்சி ஜமால் முகமது, ஜோசப், பிஷப், சென்னை லயோலா, இந்துஸ்தான், கோவை பிஎஸ்ஜி, திருப்பத்தூர் புனித இதயம் உள்ளிட்ட 12 கல்லூரிகள் பங்கேற்றுள்ளன.

போட்டியை ஐஓபி முதன்மை மேலாளர் முரளிதரன், கல்லூரி செயலாளர் காஜா நஜுமுதீன் ஆகியோர் துவக்கி வைத்தனர். கல்லூரி பொருளாளர் கலீல் அகமது, இணை செயலாளர் ஜமால் முகமது, முதல்வர் இஸ்மாயில் முகைதீன் பங்கேற்றனர். நாக் அவுட், லீக் முறையில் போட்டிகள் நடக்கின்றன..

முதல் போட்டியில் சென்னை இந்துஸ்தான் கல்லூரி 25-21, 25-19 என்ற செட் கணக்கில் கடலூர் புனித வளனார் கல்லூரியை வென்றது. 2வது போட்டியில் கோவை பிஎஸ்ஜி கல்லூரி அணி 25-19, 25-19 என்ற செட் கணக்கில் ஜமால் கல்லூரி பி அணியை வென்றது.

இன்று காலை நடந்த காலிறுதி முதல் போட்டியில் கோவை பிஎஸ்ஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரி 25-25 என்ற நேர் செட்டில் வென்றது.

2வது போட்டியில் கோவை டாக்டர் என்ஜிபி கலை மற்றும் அறிவியல் கல்லூரி 25-25 நேர் செட்டில் சென்னை இந்துஸ்தான் கல்லூரி அணியை வென்றது. 3வது போட்டியில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணி 25-17. 25-17 என்ற செட்களில் ஸ்ரீமத் ஆண்டவன் கல்லூரி அணியை வென்றது.

அரை இறுதிப்போட்டிக்கு கோவை டாக்டர் என்ஜிபி கலைஅறிவியல் கல்லூரி, கோவை பிஎஸ்ஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருச்சி ஜமால் முகமது கல்லூரி, சென்னை லயோலா கல்லூரி ஆகிய 4 கல்லூரி அணிகள் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது. போட்டிகள் நாளை மாலை வரை நடக்கிறது.

வெற்றி பெறும் அணிகளுக்கு மாலை நடைபெறும் பரிசளிப்பு விழாவில் சுழற்கோப்பை, சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

பிளைவுட், லாமினேட் ஷீட்ஸ், அலுமினியம் பிட்டிங்ஸ் மற்றும் கண்ணாடி வகைகளுக்கு
ஸ்ரீ விஜயா பிளைவுட் (பி) லிட்.,
No.70, மதுரை ரோடு (பேலஸ் தியேட்டர் அருகில்) திருச்சி-8. ☎ 2707805, 2707505

–TPTC Edition–
# தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

புற்றுநோய்க்கு
ஜி.வி.என். மருத்துவமனை
46, சிங்காரத்தோப்பு, சூப்பர் பஜார், திருச்சி - 620 008.
போன்: 0431-2700712, 2700811, 2705979, 2703945

திருச்சி • புதன் • செப்டம்பர் 6, 2017 | சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் | பக்கம் • 600 காசு • மலர் 67 • இதழ் 1

# வைரவிழா வாலிபால் போட்டி

திருச்சி, செப். 6–

*திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் ஐஓபி சுழற் கோப்பைக்கான வைரவிழா வாலிபால் போட்டி நேற்று தொடங்கியது.*

நேற்று மாலை நடந்த தொடக்கவிழாவில் கல்லூரி துணை செயலாளர் ஜமால் முகமது தலைமை வகித்தார். பொருளாளர் கலீல்அகமது முன்னிலை வகித்தார். இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதன்மை மேலாளர் முரளிதரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு போட்டியை தொடங்கிவைத்தார்.

முதல் போட்டியில் சென்னை இந்துஸ்தான் கலை அறிவியல் கல்லூரி அணி, கடலூர் ஜோசப் கல்லூரி அணியை 25:21, 25:19 என்ற புள்ளிக்கணக்கில் வென்றது. மற்றொரு போட்டியில் கோவை பிஎஸ்ஜி கலை அறிவியல் கல்லூரி அணி, திருச்சி ஜமால் முகமது கல்லூரி பி அணியை 25:19, 25:19 என்ற புள்ளிக்கணக்கில் வென்றது.



திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடந்த ஐஓபி சுழற் கோப்பைக்கான வாலிபால் போட்டியில் சென்னை இந்துஸ்தான் கல்லூரி அணியும் கடலூர் ஜோசப் கல்லூரி அணியும் மோதின. இதில் இந்துஸ்தான் கல்லூரி அணி 25:21, 25:19 என்ற புள்ளி கணக்கில் வென்றது.

# தினகரன்

ஒரு புதிய அனுபவம்

www.dinakaran.com
/dinakarannews
/dinakaranonline



லாலு மகள் பண்ணை வீடு பறிமுதல் பக்கம் 12



கவர்னருக்கு கெடு விதித்த எம்எல்ஏக்கள் பக்கம் 7

டி20 போட்டியில் இந்தியா-இலங்கை இன்று மோதல் பக்கம் 13



● திருச்சி ● புதன், செப்டம்பர் 6, 2017 ● சென்னை ● புதுவை ● வேலூர் ● சேலம் ● கோவை ● திருச்சி ● மதுரை ● நெல்லை ● நாகர்கோவில் ● பெங்களூர் ● மும்பை ● டெல்லி ● கதிர் 39 ஒளி 92 ● 18 பக்கம் ₹5


## ஜமால் முகமது கல்லூரியில்

# மாநில வாலிபால் போட்டி துவக்கம்



▶ திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் மாநில அளவிலான வாலிபால் போட்டி நேற்று துவங்கியது. இதில் ஜமால் முகமது- கோவை பிஎஸ்ஜி கல்லூரி அணிகள் மோதியது.

**திருச்சி, செப். 6:** திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் மாநில அளவில் கல்லூரிகளுக்குஇடையிலான ஐஓபி சுழற்கோப்பைக்கான வாலிபால் போடடி நேற்று மாலைதுவங்கியது. 7ம்தேதிவரைநடைபெறும் போட்டியில்திருச்சிஜமால் முகமது கல்லூரி, ஜோசப் கல்லூரி, பிஷப்ஹீபர் கல்லூரி, சென்னை லயோலா மற்றும் இந்துஸ்தான் கல்லூரி, கோவை பிஎஸ்ஜி கல்லூரி, திருப்பத்தூர் புனித இதயம் உள்ளிட்ட 12 கல்லூரிகள் பங்கேற்றுள்ளது. நாக் அவுட், லீக் முறையில் போட்டிகள் நடக்கிறது. போட்டியை ஐஓபிமுதன்மைமேலாளர் முரளிதரன், ஜமால் முகமது கல்லூரி செயலாளர் காஜா நஜமுதீன் துவக்கி வைத்தனர்.

கல்லூரி பொருளாளர் கலீல் அகமது, இணை செயலாளர் ஜமால் முகமது மற்றும் முதல்வர் இஸ்மாயில் முகைதீன் பங்கேற்றனர்.

நேற்று நடந்த முதல் போட்டியில் சென்னை ஹிந்துஸ்தான் கல்லூரி அணி 25-21, 25-19 என்ற செட் கணக்கில் கடலூர் புனித வளனார் கல்லூரியை வென்றது. 2வது போட்டியில் கோவை பிஎஸ்ஜி கல்லூரி அணி 25-19, 25-19 என்ற செட் கணக்கில் ஜமால் முகமது கல்லூரிபி அணியைவென்றது. வெற்றி பெறும் அணிகளுக்கு வரும் 7ம் தேதி நடைபெறும் பரிசளிப்பு விழாவில் சுழற்கோப்பை, சான்றிதழ் வழங்கப்படவுள்ளது.

REGD. No. TRY/056/2015-2017 ★★★★
இன்டர்நெட் முகவரி:
http://www.dailythanthi.com

- தினத்தந்தி, வெளிநாட்டு ஏடு போன்ற தோற்றம் உடையது -

தினத் தந்தி
DAILY THANTHI
பவள விழா ஆண்டு

20 பக்கம் 500 காசு

திருச்சி (6-9-2017) புதன்கிழமை | மலர் 75 இதழ் 309 | ஹேவிளம்பி ஸ்ரீ ஆவணி மீ 21 உ. ஹிஜிரி 1438 துல்ஹஜ் 14



RAMRAJ

நியூரோ ஒன்
மூளை. நரம்பியல் பிரச்சனைகளுக்காகவே அமைக்கப்பட்ட சிறப்பு மருத்துவமனை
திருச்சி-2. போன்: 0431-2221222

## மாநில அளவிலான

# கல்லூரிகளுக்கு இடையிலான கைப்பந்து போட்டி தொடங்கியது

திருச்சி, செப்.6–
மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையிலான கைப்பந்து போட்டி திருச்சி ஜமால் முகமது கல்லூரி மைதானத்தில் நேற்று தொடங்கியது.

### கைப்பந்து போட்டி

திருச்சி ஜமால் முகமது கல்லூரி நடத்தும் மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையிலான கைப்பந்து போட்டி நேற்று கல்லூரி மைதானத்தில் தொடங்கியது. இதில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி, சென்னை லயோலா கல்லூரி, கோவை பி.எஸ்.ஜி. கல்லூரி, திருப்பத்தூர் தூய இருதய கல்லூரி உள்பட 12 கல்லூரிகளை சேர்ந்த அணிகள் பங்கேற்றன.

போட்டிகள் நாக்–அவுட் முறையில் நடந்தது. போட்டியை ஜமால் முகமது கல்லூரியின் செயலரும், தாளாளருமான காஜா நஜீமுதின், கல்லூரியில் உள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளை மேலாளர் முரளிதரன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.



கைப்பந்து போட்டியில் திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி அணியும், கோவை பி.எஸ்.ஜி.கல்லூரி அணியும் மோதிய காட்சி.

### நாளை பரிசளிப்பு விழா

நேற்று நடந்த முதல் போட்டியில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணியும், கோவை பி.எஸ்.ஜி. கல்லூரி அணியும் மோதின. இதில் கோவை பி.எஸ்.ஜி. கல்லூரி அணி வெற்றி பெற்றது. மற்றொரு ஆட்டத்தில் சென்னை ஹிந்துஸ்தான் கல்லூரி அணி, கடலூர் புனித வளனார் கல்லூரி அணியை தோற்கடித்தது. போட்டிகள் தொடர்ந்து நாளை (வியாழக்கிழமை) வரை நடைபெறுகிறது. தொடர்ந்து நாளை மாலை பரிசளிப்பு விழா நடக்கிறது. போட்டிக்கான ஏற்பாடுகளை கல்லூரியின் உடற்கல்வி இயக்குனர் ஷாயின் ஷா செய்துள்ளார்.

லாக் ஆன் செய்யுங்கள்
etamil.thehindu.com
இப்பொழுது டிஜிட்டலிலும்.

தி இந்து
Vol. 5 No. 248 தமிழால் இணைவோம் RNI No.TNTAM/2013/55769
புதன், செப்டம்பர் 6, 2017 • சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி ஆகிய நகரங்களில் அச்சாகிறது • திருச்சி பதிப்பு • 20 பக்கங்கள் ₹ 5
எமது பதிப்புகள்: சென்னை, காஞ்சிபுரம், புதுவை, வேலூர், கோவை, சேலம், தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை எமது இணையதளம்: http://tamil.thehindu.com

லாக் ஆன் செய்யுங்கள்
etamil.thehindu.com
இப்பொழுது டிஜிட்டலிலும்.

# மாநில அளவிலான வாலிபால் போட்டி

**திருச்சி**

மாநில அளவில் கல்லூரிகளுக்கு இடையே ஐ.ஓ.பி சுழற் கோப்பைக்கான வாலிபால் போட்டி திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் நேற்று தொடங்கியது.

போட்டிகளை கல்லூரி தாளாளர் ஏ.கே.காஜா நஜீமுதின், ஐஓபி முதன்மை மேலாளர் முரளீதரன் தொடங்கி வைத்தனர். முதல் ஆட்டத்தில் சென்னை ஹிந்துஸ்தான் கல்லூரி அணியும் மற்றொரு ஆட்டத்தில் கோவை பி.எஸ்.ஜி கல்லூரி அணியும்வென்றன. செப்.7-ம் தேதி வரை போட்டிகள் நடைபெறும்

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

புதன்கிழமை
6 செப்டம்பர் 2017
திருச்சி
18 பக்கங்கள் ரூ. 5

JAMAL MOHAMED COLLEGE (AUTONOMOUS)
06 SEP 2017

# வாலிபால் போட்டி: சென்னை, கோவை கல்லூரிகள் வெற்றி

திருச்சி, செப்.5: திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் செவ்வாய்க்கிழமை தொடங்கிய மாநில அளவிலான வாலிபால் போட்டியின் முதல்நாள் ஆட்டத்தில் சென்னை, கோவை கல்லூரிகள் வெற்றி பெற்றுள்ளன.

ஜமால் முகமது கல்லூரி நடத்தும் மாநில அளவிலான கல்லூரிகளுக்கிடையிலான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி சுழற்கோப்பைக்கான வாலிபால் போட்டிகள் செவ்வாய்க்கிழமை தொடங்கின. சென்னை லயோலா, ஹிந்துஸ்தான் கல்லூரி, கோவை பி.எஸ்.ஜி, என்.ஜி.பி. கல்லூரிகள், திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரி, திருச்சி ஜமால் முகமது, புனித வளனார், பிஷப் ஹீபர் கல்லூரிகள், ஸ்ரீமத் ஆண்டவன் கல்லூரி, கடலூர் புனித வளனார் உள்பட 12 கல்லூரிகள் போட்டியில் பங்கேற்றுள்ளன. லீக் மற்றும் நாக் அவுட் முறையில் போட்டிகள் நடத்தப்படுகின்றன.,

இப்போட்டியை கல்லூரிச் செயலர் மற்றும் தாளாளர் ஏ.கே. காஜா நஜ்முதீன், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் ஜமால் முகமது கிளை முதன்மை மேலாளர் ஆர். முரளிதரன் ஆகியோர் போட்டியைத் தொடக்கி வைத்தனர்.

கல்லூரிப் பொருளாளர் கே.ஏ. கலீல் அகமது, இணைச் செயலர் எம்.ஜே. ஜமால் முகமது, முதல்வர் எஸ்.இஸ்மாயில் முகைதீன் ஆகியோர் தொடக்க விழாவில் பங்கேற்றனர். முதல் போட்டியில் கடலூர் புனித வளனார் கல்லூரியை 25-21, 25-19 என்ற செட் கணக்கில் சென்னை இந்துஸ்தான் கல்லூரியும், மற்றொரு போட்டியில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி பி அணியை 25-19, 25-19 என்ற செட் கணக்கில் கோவை பி.எஸ்.ஜி. கல்லூரியும் வென்றது. புதன்கிழமையும் போட்டி நடைபெறுகிறது.

போட்டிக்கான ஏற்பாடுகளை கல்லூரி உடற்கல்வி இயக்குநர் ஷாஇன்ஷா, உதவி உடற்கல்வி இயக்குநர் பிரதீப்குமார் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.




திருச்சியில் செவ்வாய்க்கிழமை தொடங்கிய மாநில அளவிலான வாலிபால் போட்டியில் கோவை பிஎஸ்ஜி கல்லூரியுடன் விளையாடும் ஜமால் முகமது கல்லூரி பி அணி.

சென்னை
மதுரை
கோவை
திரு[illegible]
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

# தினமணி

செவ்வாய்க்கிழமை
5 செப்டம்பர் 2017
திருச்சி
18 பக்கங்கள் ரூ. 5


## இன்றைய நிகழ்ச்சிகள்

ஜமால் முகமது கல்லூரி : 8ஆவது கல்லூரிகளுக்கிடையிலான வைர விழா வாலிபால் போட்டிகளைத் தொடக்கி வைப்பவர்- கல்லூரித் தாளாளர் மற்றும் செயலர் ஏ.கே. காஜா நஜ்முதீன், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஜமால் முகமது கல்லூரி கிளை முதன்மை மேலாளர் ஆர். முரளிதரன், கல்லூரி வளாகம், மாலை 4.

- தினத்தந்தி, உயிர்த்துடிப்பு உள்ள நாளிதழ்-

# தினத் தந்தி DAILY THANTHI

பவள விழா ஆண்டு

திருச்சி (5-9-2017) செவ்வாய்க்கிழமை

மலர் 75 இதழ் 308

ஹேவிளம்பி ஆவணி மீ 20 உ.

ஹிஜிரி 1438 துல்ஹஜ் 13

அருள்தரும் ஆன்மிகம்

24 பக்கம் 500 காசு

REGD. No. TRY/056/2015-2017 ★★★★

http://www.dailythanthi.com

SRI VIJAYAA TOUGHENED GLASS PVT LTD.,

Thuvakudi, Trichy - 620 015.

Customer Care : +91 431 2501502 | 8428 151 151

Email : svtg@yahoo.com | www.vijayaatuff.com

என்றும் எப்போதும் உங்களுடன்...

புதுக்கோட்டை

தாரகை

• சில்க்ஸ் • ரெடிமேட்ஸ்

• பட்டு • பர்னிச்சர் • மேட்சிங்

Raymond BASICS VENFIELD

# கல்லூரிகளுக்கு இடையேயான கைப்பந்து போட்டி

## இன்று தொடங்குகிறது

திருச்சி,செப்.5-

திருச்சி மாவட்ட கல்லூரிகளுக்கு இடையேயான கைப்பந்து போட்டி இன்று(செவ்வாய்க்கிழமை) மாலை 4 மணிக்கு ஜமால் முகமது கல்லூரியில் நடக்கிறது. இந்த போட்டி தொடர்ந்து 7-ந்தேதி(வியாழக்கிழமை) வரை நடக்கிறது. அன்று மாலை 6 மணிக்கு வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிப்பு விழா நடக்கிறது.




–TPTC Edition–

தினமலர்

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

அரசு ஜுவல்ஸ்
கும்பகோணம். 0435 - 2431144

திருச்சி • செவ்வாய் • செப்டம்பர் 5, 2017

சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில்

• 16 பக்கம் • 600 காசு • மலர் 66 • இதழ் 364

# மாநில வாலிபால் இன்று தொடக்கம்

**திருச்சி, செப். 5–**

*திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் மாநில அளவில் ஐஓபி சுழற்கோப்பைக்கான வாலிபால் போட்டிகள் இன்று (செப். 5) தொடங்குகிறது.*

சென்னை லயோலா, இந்துஸ்தான், கோவை பிஎஸ்ஜி, திருப்பத்தூர் புனித இதயம், திருச்சி ஜமால், ஜோசப், பிஷப் உள்ளிட்ட 12 கல்லூரிகள் போட்டியில் கலந்து கொள்கின்றன. நாக்அவுட், லீக் முறைகளில் போட்டி நடக்கிறது.

இன்று மாலை ஐஓபி முதன்மை மேலாளர் முரளிதரன், ஜமால் முகமது கல்லூரி செயலாளர் காஜா நஜ்முதீன் ஆகியோர் போட்டிகளை தொடங்கி வைக்கின்றனர். போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு வரும் 7ம் தேதி பரிசளிக்கப்படுகிறது.

போட்டிக்கான ஏற்பாடுகளை உடற்கல்வி இயக்குனர் சாயின்ஷா செய்து வருகிறார்.




உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper

RNI 42728/87 / REGD. No.TN/CNI GPC/006/2016-2018
TN /PMG (CCR) WPP258/2016-18




மணி - 33 சுடர் - 016 | ஹிஜ்ரி 1438 - துல்ஹஜ் - 07 | திருவள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி - 14 | சென்னை 30.08.2017 புதன் | வெளியூர் 31.08.2017 வியாழன் | http://muslimleaguetn.com/manichudar.asp | பக்கம் - 4 | விலை ₹ 3

# திருச்சி ஜமால் முகமது கல்லூரி 6-வது ஆண்டு சுழற்கோப்பை கால்பந்து போட்டி



திருச்சி, ஆக.30-

ஜமால் முகமது கல்லூரி நடத்தும் 6வது ஆண்டு மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையேயான கால்பந்து போட்டி கல்லூரி மைதானத்தில் சனிக்கிழமை (26.08.2017) காலை முதல் தொடங்கி 28.08.2017 திங்கள் கிழமை மாலை 4.30 மணியளவில் இறுதி போட்டியும் பரிசளிப்பு விழாவும் நடைபெற்றது.

விழாவிற்கு முதல்வர் இஸ்மாயில் முகைதீன் தலைமை ஏற்று வரவேற்புரையாற்றினார். கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் காஜா நஜீமுதீன் சிறப்புரையாற்றி வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுத்தொகை, சுழற்கோப்பை மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

கல்லூரி மேலாண் மைத் துறை இயக்குநர் அப்துஸ் சமது, சுயநிதிப் பிரிவு இயக்குநர் அப்துல் காதர் நிகால் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியாக கல்லூரி துணை முதல்வர் முகமது இப்ராகிம் நன்றியுரையாற்றினார். இவ்விழாவில் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

போட்டிகளுக்கான ஏற்பாடுகளை கல்லூரியின் உடற்கல்வி இயக்குநர் முனைவர் ஷாயின் ஷா மற்றும் உதவி உடற்கல்வி இயக்குநர் முபிரதீப் குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

முதல்பரிசாக ரூ.10,000 + சுழற்கோப்பை + சான்றிதழ் இரண்டாம் பரிசாக ரூ. 7,000 + சுழற்கோப்பை + சான்றிதழ் மூன்றாம் பரிசாக ரூ. 5,000 + சான்றிதழ் முதல் அரையிறுதிப் போட்டியில் கோவை பிஎஸ்ஜி கல்லூரி அணி 2-0 என்ற கோல் கணக்கில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணியை வென்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் சென்னை லயோலா கல்லூரி அணி 11-10 என்ற கோல் கணக்கில் திருச்சி புனித வளனார் கல்லூரியை வென்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.




# திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் சுழற்கோப்பை கால்பந்து போட்டி

திருச்சி, ஆக.29–

ஜமால் முகமது கல்லூரி நடத்தும் 6வது ஆண்டு மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையேயான கால்பந்து போட்டி கல்லூரி மைதானத்தில் 26–ந் தேதி முதல் தொடங்கி 28–ந் தேதி இறுதி போட்டியும் பரிசளிப்பு விழாவும் நடைபெற்றது.

விழாவிற்கு முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன் தலைமை ஏற்று வரவேற்புரையாற்றினார். கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் ஏ.கே. காஜா நஜீமுதீன் சிறப்புரையாற்றி வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுத்தொகை, சுழற்கோப்பை மற்றும் சான்றிதழ்களை வழங்கினார். கல்லூரியின் மேலாண்மைத்துறை இயக்குனர் கே. அப்துஸ் சமது, சுயநிதிப்பிரிவு இயக்குனர் கே.என். அப்துல் காதர் நிகால் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியாக கல்லூரியின் துணை முதல்வர் ஏ. முகமது இப்ராகிம் நன்றியுரையாற்றினார். இவ்விழாவில் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

போட்டிகளுக்கான ஏற்பாடுகளை கல்லூரியின் உடற்கல்வி இயக்குனர் ஷாயின் ஷா மற்றும் உதவி உடற்கல்வி இயக்குனர் மு.பிரதீப் குமார் ஆகியோர் செய்திருந்தனர். முதல்பரிசாக ரூ.10 ஆயிரம் சுழற்கோப்பை சான்றிதழ், இரண்டாம் பரிசாக ரூ. 7,000 சுழற்கோப்பை சான்றிதழ், மூன்றாம் பரிசாக ரூ. 5,000 சான்றிதழ் வழங்கப்பட்டது.

முதல் அரையிறுதிப் போட்டியில் கோவை பி.எஸ்.ஜி கல்லூரி அணி 20 என்ற கோல் கணக்கில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணியை வென்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் சென்னை லயோலா கல்லூரி அணி 1110 என்ற கோல் கணக்கில் திருச்சி புனித வளனார் கல்லூரியை வென்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

REGD. No. TRY/056/2015-2017 ★★★★
இன்டர்நெட் முகவரி:
http://www.dailythanthi.com

- தினத்தந்தி, உயிர்த்துடிப்பு உள்ள நாளிதழ் -

அருள்தரும் ஆன்மிகம்
20 பக்கம் 500 காசு

வெட்கிரைண்டர், ஸ்டீல் மற்றும் ... பர்னிச்சர்கள் உற்பத்தி மற்றும் மொத்த விற்பனையாளர்
J.V.M. இண்டஸ்ட்ரீஸ்
64-A, சங்கிலியாண்டபுரம், திருச்சி-1.
போன்: 0431-2302221, 6541123, செல்: 98424 50616

தினத் தந்தி
DAILY THANTHI
பவள விழா ஆண்டு

திருச்சி (29-8-2017) செவ்வாய்க்கிழமை | மலர் 75 இதழ் 301

ஹேவிளம்பி ஸ்ரீ ஆவணி மீ 13 உ
ஹிஜிரி 1438 துல்ஹஜ் 6

என்றும் எப்போதும் உங்களுடன்...
புதுக்கோட்டை
தாரகை
• சில்க்ஸ் • ரெடிமேட்ஸ்
• பட்டு • பர்னிச்சர் • மேட்சிங்
Raymond BASICS VENFIELD



மாநில அளவில் கல்லூரிகளுக்கிடையேயான கால்பந்து போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற சென்னை லயோலா கல்லூரி அணிக்கு கோப்பை வழங்கப்பட்டபோது எடுத்த படம்.

## மாநில அளவில் கல்லூரிகளுக்கிடையேயான கால்பந்து போட்டி:

# சென்னை லயோலா கல்லூரி அணி சாம்பியன்

திருச்சி, ஆக.29-

திருச்சியில் நடந்த மாநில அளவில் கல்லூரிகளுக்கிடையேயான கால்பந்து போட்டியில் சென்னை லயோலா கல்லூரி அணி சாம்பியன் பட்டத்தை வென்றது.

### 12 கல்லூரி அணிகள்

மாநில அளவிலான கல்லூரிகளுக்கிடையேயான கால்பந்து போட்டி திருச்சி ஜமால் முகமது கல்லூரி மைதானத்தில் கடந்த 26-ந்தேதி தொடங்கி நேற்று வரை நடந்தது. இதில் ஜமால் முகமது கல்லூரி, சென்னை லயோலா கல்லூரி உள்பட 12 கல்லூரிகளை சேர்ந்த அணிகள் பங்கேற்றன.

நேற்று அரையிறுதி போட்டிகளும், இறுதிப்போட்டியும் நடந்தன. இறுதிப்போட்டியில் சென்னை லயோலா கல்லூரி அணி, 6-5 என்ற கோல் கணக்கில் கோவை பி.எஸ்.ஜி. கல்லூரி அணியை வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை வென்றது. 3-ம் இடத்தை ஜமால் முகமது கல்லூரி அணி பிடித்தது.

### பரிசளிப்பு விழா

மாலையில் நடந்த பரிசளிப்பு விழாவிற்கு ஜமால் முகமது கல்லூரியின் முதல்வர் இஸ்மாயில் முகைதீன் முன்னிலை வகித்தார். கல்லூரியின் செயலரும், தாளாளருமான காஜா நஜீமுதீன் முதலிடம் பிடித்த சென்னை லயோலா கல்லூரி அணிக்கு கோப்பையும், பரிசுத்தொகை ரூ.10 ஆயிரமும், 2-ம் இடத்தை பிடித்த கோவை பி.எஸ்.ஜி. கல்லூரி அணிக்கு கோப்பையும், ரூ.7 ஆயிரமும், 3-ம் இடத்தை பிடித்த ஜமால் முகமது கல்லூரி அணிக்கு ரூ.5 ஆயிரத்தையும் வழங்கினார். விழாவில் கல்லூரி இயக்குனர்கள் அப்துல் சமது, அப்துல் காதர் நிஹால், முகமது பாசில், உடற்கல்வி இயக்குனர் ஷாயின் ஷா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

லாக் ஆன் செய்யுங்கள்
etamil.thehindu.com
இப்பொழுது டிஜிட்டலிலும்.

தி இந்து
Vol. 5 No. 240 தமிழால் இணைவோம் RNI No.TNTAM/2013/55769
செவ்வாய், ஆகஸ்ட் 29, 2017 • சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி ஆகிய நகரங்களில் அச்சாகிறது • திருச்சி பதிப்பு • 20 பக்கங்கள் ₹5
■ எமது பதிப்புகள்: சென்னை, காஞ்சிபுரம், புதுவை, வேலூர், கோவை, சேலம், தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை எமது இணையதளம்: http://tamil.thehindu.com ■

லாக் ஆன் செய்யுங்கள்
etamil.thehindu.com
இப்பொழுது டிஜிட்டலிலும்.



▲ திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்ற மாநில அளவிலான கால்பந்து போட்டியில் சாம்பியன் பட்டம் வென்ற சென்னை லயோலா கல்லூரி அணிக்கு கோப்பை வழங்கப்படுகிறது. படம்: எம்.ஸ்ரீநாத்

# லயோலா கல்லூரி சாம்பியன்

■ திருச்சி

மாநில அளவிலான கால்பந்து போட்டியில் சென்னை லயோலா கல்லூரி அணி சாம்பியன் பட்டம் வென்றது.

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் மாநில அளவிலான கால்பந்து போட்டி கடந்த 26-ம் தேதி தொடங்கியது. இதில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 12 அணிகள் பங்கேற்றன. நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் சென்னை லயோலா கல்லூரி - கோவை பிஎஸ்ஜி கல்லூரி அணிகள் மோதின. ஆட்ட நேரம் முடியும்வரை இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. இதையடுத்து டைபிரேக்கர் முறையில், சென்னை லயோலா கல்லூரி அணி 6-5 என்ற கோல் கணக்கில், கோவை பிஎஸ்ஜி கல்லூரி அணியை வீழ்த்தி சாம்பியன் பட்டம் வென்றது.

BENNETT, COLEMAN & CO. LTD. | ESTABLISHED 1838 TRICHY | TUESDAY, AUGUST 29, 2017 | 14 PAGES | METRO | PRICE ₹ 2.50

THE TIMES OF INDIA

TIMESOFINDIA.COM | EPAPER.TIMESOFINDIA.COM VOLUME 5, ISSUE 13

DARA KHOSROWSHAHI OF EXPEDIA, A KNOWN TRUMP CRITIC, TO BE UBER'S CEO 12

DIPAK MISRA SWORN IN AS THE 45TH CHIEF JUSTICE OF INDIA 7

HURRICANE HARVEY HITS HARD IN HOUSTON, 200 INDIAN STUDENTS MAROONED IN UNIV: SUSHMA 9

# CAMPUS NOTES



Jamal Mohamed College (Autonomous), Trichy on Independence Day awarded 19 Alumni (Jamalians) with the Distinguished Alumnus Award

**Alumni Meet held at JMC:** Jamal Mohamed College (Autonomous), Trichy on Independence Day awarded 19 Alumni (Jamalians) with the Distinguished Alumnus Award. Managing Director, Toshiba Elevators and Escalators, Dubai, MJ Mohamed Iqbal graced the occasion as the chief guest and delivered the special address. He spoke about his student life and how the teacher shaped his personality. He urged students to make the best use of the opportunities. Management committee member honorable assistant secretary, Hajee MJ Jamal Mohamed Sahib, was presented with 'The Jamalian Award of 2017'. Principal Hajee Dr Ismail Mohideen presided over the function and Dr M Mohamed Sarputheen, general secretary of alumni association welcomed the gathering.

FOLLOW US:
thehindu.com
facebook.com/thehindu
twitter.com/the_hindu

TUESDAY, AUGUST 29, 2017

# THE HINDU

INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

TIRUCHIRAPALLI
CITY EDITION
18 pages • ₹6.00



Aadhaar petitioners to move SC for early decision on the scheme
page 10



Heavy flooding, caused by Hurricane Harvey, cripples Houston
page 12



Uber picks Expedia's Dara Khosrowshahi as new CEO
page 13

Shakib spins a web around Australia, puts Bangladesh on top
page 16



PRINTED AT · CHENNAI · COIMBATORE · BENGALURU · HYDERABAD · MADURAI · NOIDA · VISAKHAPATNAM · THIRUVANANTHAPURAM · KOCHI · VIJAYAWADA · MANGALURU · TIRUCHIRAPALLI · KOLKATA · HUBBALLI · MOHALI · MALAPPURAM · MUMBAI · TIRUPATI · LUCKNOW

## TAMIL NADU ROUND-UP



**Victorious:** The Loyola College which won the Jamal Mohamed Trophy. ■ M. SRINATH

### RCF posts win

COIMBATORE: RCF (Kapurthala) registered a 96-88 win over Arise (Chennai) in a league match of the 53rd PSG Trophy all-India basketball tournament for men at the PSG Tech Indoor Sports Complex courts here on Monday.

**The results (league):** RCF, Kapurthala 96 (Harmandeep Singh 29, Rajan Sharma 26, Bijender Kumar 20) bt Arise, Chennai 88 (Harish 34, Vijaya Baskar 14, Shashank Rai 13); Punjab Police 88 (Gurjinder Singh 22, Kanbir Singh 18) bt Arise 57 (Arun Prasanth 13, Harissh 10); Vijaya Bank, Bengaluru 79 (Anil Kumar 23, Karthikeyan 22) bt RCF, Kapurthala 66 (Prakash Mishra 24, Bijender Kumar 17); Indian Army, Pune 80 (Issac T. Thomas 24, Vishal Hooda 17) bt Customs, Chennai 61 (Mayilraj 13, Akshdeep 12).

### Loyola clinches trophy

TIRUCHI: Loyola College edged out PSG CAS 6-5, via sudden death, to clinch the Jamal Mohamed Trophy in the inter-collegiate football tournament, organised by Jamal Mohamed College, here on Monday.

**The results: Final:** Loyola bt PSG CAS 6-5 (fulltime 0-0, tie-breaker 5-5, sudden death 1-0). **Semifinals:** PSG CAS 2 (Mohanraj, Femson) bt Jamal Mohamed 0; Loyola bt St. Joseph's 11-10 (fulltime 0-0, tie-breaker 4-4, sudden death 7-6).

### Adidhya scalps five

VELLORE: R. Adidhya Chandran's five for 11 enabled Vellore CA script a four-wicket win over Saba Group in a second division match of the TNCA-Vellore DCA cricket league here.

**The scores: II div.:** Power Star 162 for eight in 25 overs (A. Vinoth Kumar 78, G. Madhavan 38) lost to United-B 163 for six in 19 overs (C. Siddarthan 71, Hasim Ali 28, Sentamil Selvan 28).

Saba Group 76 in 17 overs (R. Adidhya Chandran five for 11) lost to Vellore CA 82 for six in 19 overs (Masood Basha three for 16).

## ENGAGEMENTS

**At Coimbatore**

**Basketball:** 53rd all-India tournament for PSG Trophy, PSG Tech Indoor Sports Complex courts, 5 p.m.

# தினகரன்

ஒரு புதிய அனுபவம்

www.dinakaran.com
/dinakarannews
/dinakaranonline



இளம் வீரர்களுக்கு வாய்ப்பு பக்கம் 13

அமைச்சர்கள் உட்பட மேலும் 16 பேர் ஆதரவு பக்கம் 8

கோவா இடைத்தேர்தலில் வெற்றி பக்கம் 12



●திருச்சி ●செவ்வாய், ஆகஸ்ட் 29, 2017 ●சென்னை ●புதுவை ●வேலூர் ●சேலம் ●கோவை ●திருச்சி ●மதுரை ●நெல்லை ●நாகர்கோவில் ●பெங்களூர் ●மும்பை ●டெல்லி ●கதிர் 39 ஒளி 84 ●18 பக்கம் ₹5


# மாநில கால்பந்து போட்டி லயோலா கல்லூரி சாம்பியன்




திருச்சி ஜமால்முகமது கல்லூரியில் நடந்த மாநில கால்பந்து போட்டியில் வெற்றி பெற்ற சென்னை லயோலா கல்லூரி அணிக்கு கல்லூரி செயலர் காஜாநஜிமுதீன் பரிசு கோப்பை வழங்கினார்.

திருச்சி, ஆக.29: திருச்சி ஜமால்முகமது கல்லூரியில் கல்லூரிகளுக்கிடையே நடைபெற்ற மாநிலகால்பந்துபோட்டியில் சென்னை லயோலா கல்லூரி அணி சாம்பியன் பட்டம் வென்றது.

மாநில அளவில் கல்லூரிகளுக்கு இடையேயான கால்பந்துபோட்டி திருச்சி ஜமால்முகமது கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கடந்த 26ம்தேதி துவங்கியது.

இதில் சென்னை லயோலா, கோவை பிஎஸ்ஜி, திருப்பத்தூர் தூயநெஞ்சம், பாளையங்கோட்டை புனித சேவியர், நாசரேத் மர்காசிஸ், திருச்சி ஜமால் முகமது, புனித வளனார், திருச்சி பிஷப் ஹீபர், திருச்சி தேசியக் கல்லூரி உள்பட 12 கல்லூரிகளை சேர்ந்த அணிகள் விளையாடின. போட்டிகள் நாக் அவுட் முறையில் நடத்தப்பட்டன.

போட்டிகளின் முடிவில் சென்னை லயோலா கல்லூரி, கோவை பிஎஸ்ஜி கல்லூரி அணிகள் இறுதி போட்டியில் விளையாட தகுதி பெற்றன. முடிவில் லயோலா கல்லூரி அணி 6-5 என்ற கோல் கணக்கில் கோவை பிஎஸ்ஜி அணியை வென்று சாம்பியன் பட்டம் பெற்றது.

மாலையில் வெற்றி பெற்ற அணிகளுக்கான பரிசளிப்பு விழா நடைபெற்றது. ஜமால் முகமது கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் முனைவர் காஜாநஜிமுதீன், முதல்வர் இஸ்மாயில் முகைதீன் ஆகியோர் பரிசுத்தொகை, சுழற்கோப்பை மற்றும் சான்றிதழ்களை வழங்கினர். கல்லூரி இயக்குனர்கள் அப்துஸ் சமது, அப்துல் காதர் நிஹால் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

வெற்றிபெற்ற அணிகளுக்கு சுழற்கோப்பை, சான்றிதழுடன் முதல் பரிசாக ரூ.10 ஆயிரம், இரண்டாம் பரிசாக ரூ.7 ஆயிரம், மூன்றாம் பரிசாக ரூ.5 ஆயிரம், நான்காம் பரிசாக ரூ.3 ஆயிரம் மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

போட்டிக்கான ஏற்பாடுகளை, உடற்கல்வி இயக்குனர் ஹாயின் ஷா, உதவி உடற்கல்வி இயக்குனர் பிரதீப்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

–TPTC Edition–




# தினமலர்

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்




திருச்சி • செவ்வாய் • ஆகஸ்ட் 29, 2017

சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில்

• 16 பக்கம் • 600 காசு • மலர் 66 • இதழ் 357

## மாநில கால்பந்து: லயோலா கல்லூரி கோப்பை வென்றது

**திருச்சி:** திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடந்த மாநில கால்பந்து போட்டியில் சென்னை லயோலா கல்லூரி கோப்பை வென்றது.

மாநில அளவில் கல்லூரிகளுக்கு இடையிலான கால்பந்து போட்டியில் 12 அணிகள் கலந்து கொண்டன. நேற்று நடந்த இறுதி போட்டியில் லயோலா கல்லூரி 6–5 (டை பிரேக்கர்) எனும் கோல் கணக்கில் கோவை பிஎஸ்ஜி கல்லூரியை வீழ்த்தி கோப்பையை வென்றது. 3வது இடத்திற்கான போட்டியில் ஜமால் முகமது கல்லூரி ஜோசப் கல்லூரியை வீழ்த்தியது. போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு ஜமால் முகமது கல்லூரி தாளாளர் காஜா நஜூமுதீன் கோப்பை மற்றும் பரிசு வழங்கினார். முன்னதாக கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன் வரவேற்றார். உடற்கல்வி இயக்குனர் சாயின்ஷா நன்றி கூறினார்.



திருச்சியில் நடந்த மாநில அளவில் கல்லூரிகளுக்கு இடையிலான கால்பந்து போட்டியில் வெற்றி பெற்ற சென்னை லயோலா அணிக்கு ஜமால் முகமது கல்லூரி தாளாளர் காஜா நஜூமுதீன் கோப்பை வழங்கினார். அருகில் கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன், உடற்கல்வி இயக்குனர் சாயின்ஷா உட்பட பலர்.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

செவ்வாய்க்கிழமை
29 ஆகஸ்ட் 2017
திருச்சி
18 பக்கங்கள் ரூ. 5

# மாநில அளவிலான கால்பந்து: சென்னை லயோலா கல்லூரி சாம்பியன்

**திருச்சி, ஆக.28:** திருச்சியில் நடைபெற்ற மாநில அளவிலான கால்பந்து போட்டியில் சென்னை லயோலா கல்லூரி அணி சாம்பியன் பட்டம் வென்றது.

திருச்சி ஜமால் முகமது கல்லூரி சார்பில் ஜமால் முகமது கோப்பைக்கான 6-ஆவது மாநில அளவிலான கால்பந்து போட்டி கடந்த 26 -ஆம் தேதி தொடங்கியது. இதில் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 10 -க்கும் மேற்பட்ட கல்லூரி அணிகள் பங்கேற்று விளையாடின.

திங்கள்கிழமை நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் சென்னை லயோலா கல்லூரி அணி 6-5 என்ற கோல் கணக்கில் கோவை பி.எஸ்.ஜி. கல்லூரி அணியை வீழ்த்தி கோப்பையைக் கைப்பற்றியது.

முன்னதாக நடைபெற்ற முதல் அரையிறுதி ஆட்டத்தில் கோவை பி.எஸ்.ஜி.கல்லூரி அணி 2-0 என்ற கோல் கணக்கில் திருச்சி ஜமால் முகமது கல்லூரியை வென்றது. மற்றொரு அரையிறுயில் சென்னை லயோலா கல்லூரி அணி 11-10 என்ற கோல் கணக்கில் திருச்சி தூய வளனார் கல்லூரி அணியை தோற்கடித்தது.



சாம்பியன் பட்டம் வென்ற சென்னை லயோலா கல்லூரி அணிக்கு கோப்பையை வழங்குகிறார் கல்லூரிச் செயலர் மற்றும் தாளாளர் ஏ.கே. காஜா நஜ்முதீன்.

இரண்டாவது அரையிறுதியில் ஆட்டம் முடியும் வரை இரு அணிகளும் கோல்கள் அடிக்காததால் டைபிரேக்கர் வாய்ப்பு வழங்கப்பட்டது. அதில் இரு அணிகளும் 4-4 என்ற கோல் கணக்கில் சமநிலை பெற்றன. இதையடுத்து வெற்றியைத் தீர்மானிக்க சடன்டெத் வாய்ப்பு வழங்கப்பட்டது. அதில் வென்ற லயோலா கல்லூரி அணி இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது.

பின்னர் நடைபெற்ற பரிசளிப்பு விழாவுக்கு கல்லூரி முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன் தலைமை வகித்தார். கல்லூரிச் செயலர் மற்றும் தாளாளர் ஏ.கே. காஜா நஜ்முதீன் வெற்றி பெற்ற அணிக்கு கோப்பையை வழங்கினார்.

போட்டிக்கான ஏற்பாடுகளை கல்லூரி உடற்கல்வி இயக்குநர் ஷாஇன்ஷா, உதவி உடற்கல்வி இயக்குநர் மு. பிரதீப்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

முரசு: 57 ஒலி: 104

8 பக்கங்கள் விலை 500 காசுகள்

THANJAI MALAI MURASU
Reg.No. TRY/060/2015-2017
RNI Regn. No.5842/61

தஞ்சை
மாலை முரசு
திருச்சி பதிப்பு

28-8-2017 (ஆவணி 12) திங்கட்கிழமை

திருச்சியில் கல்லூரிகளுக்கிடையேயான

# மாநில கால்பந்து போட்டியில் கோப்பையை வெல்வது யார்?

## இன்றைய இறுதி ஆட்டத்தில் அணிகள் மோதல்

திருச்சி, ஆக. 28– திருச்சியில் நடைபெற்று வரும் கல்லூரிகளுக்கிடையேயான மாநில கால்பந்து போட்டியில் சுழற்கோப்பையை கைப்பற்றுவது யார் என்பது இன்று மாலை நடக்கும் இறுதி போட்டியில் தெரிந்து விடும்.

**12 அணிகள் மோதல்**

திருச்சி ஜமால் முகமது கல்லூரி நடத்தும் மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையிலான கால்பந்து போட்டி கடந்த சனிக்கிழமை தொடங்கியது. இப்போட்டியில் சென்னை லயோலா, கோவை பி.எஸ்.ஜி., திருப்பத்தூர்தூய நெஞ்சக்கல்லூரி, பாளையங்கோட்டை, புனித சேவியர் கல்லூரி, நாசரேத் மர்கோஸிஸ் கல்லூரி, திருச்சி ஜமால் முகமது கல்லூரி, புனித வளனார், பிஷப்ஹீபர், தேசியக்கல்லூரி உள்பட 12 கல்லூரிகள் கலந்து கொண்டன.

இவ்விழாவில் கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் காஜா நஜீமுதின், முதல்வர் இஸ்மாயில் முகைதீன் ஆகியோர் முன்னிலையில் கல்லூரியின் பொருளாளர் கலீல்அகமது மற்றும் இணை செயலாளர் ஜமால் முகமது ஆகியோர் போட்டிகளை தொடங்கி வைத்தனர். இவ்விழாவில் துணை முதல்வர்கள், இயக்குனர்கள் மற்றும் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

**இன்று இறுதி போட்டி**

இந்த போட்டியில் இன்று பிற்பகலில் இறுதி ஆட்டம் நடக்கிறது. இதில் முன்னதாக காலை நடந்த அரையிறுதி போட்டியில் கோவை பி.எஸ்.ஜி. அணி திருச்சி ஜமால் முகமது கல்லூரி அணியை 2–0 கோல்கணக்கிலும், மற்றொரு இறுதி ஆட்டத்தில் சென்னை லயோலா கல்லூரி அணி, திருச்சி ஜோசப் கல்லூரி அணியை டைபிரேக் முறையில் 11–10 கோல் கணக்கிலும் வென்றது. இறுதி ஆட்டத்தில் கோவை அணியும், சென்னை அணியும் மோதுகின்றன.

போட்டிகளுக்கான ஏற்பாடுகளை கல்லூரியின் உடற்கல்வி இயக்குனர் ஷாயின் ஷா மற்றும் உதவி உடற்கல்வி இயக்குனர் பிரதீப் குமார் ஆகியோர் செய்துள்ளனர். வெற்றி பெறும் அணிகளுக்கு முதல்பரிசாக ரூ.10 ஆயிரம் ரொக்கம் மற்றும் சுழற்கோப்பை, சான்றிதழும், 2–ம் பரிசாக ரூ.7 ஆயிரம், சுழற்கோப்பை, சான்றிதழும், 3–ம் பரிசாக ரூ.5 ஆயிரமும், சான்றிதழும், 4–ம் பரிசாக முறையே ரூ.3 ஆயிரமும், சான்றிதழும் வழங்கப்படுகிறது.

Celebrate your special occasions with us
CakeBee
Cantonment 96591 31113 | Thillai Nagar 96592 31113 | Kumaran Nagar 96590 31113
Order online @ www.cakebee.in

–TPTC Edition–

# தினமலர்

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

BIS HALLMARK 91.6 தங்க நகைகளுக்கு
A GOLD SAVINGS SCHEME
A 100% 916 HALLMARK SHOWROOM
M/s வயி.சண்முகம்பிள்ளை
VESV A/c
3220-3223, தெற்கு ராஜவீதி, புதுக்கோட்டை-622 001.
போன்: 04322-221869, 223869

திருச்சி • ஞாயிறு • ஆகஸ்ட் 27, 2017

சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில்

• 16 பக்கம் • 600 காசு • மலர் 66 • இதழ் 355

# மாநில கால்பந்து: கோவை, பாளையங்கோட்டை அணிகள் வெற்றி

***தி**ருச்சி ஜமால் முகமது கல்லூரியில் மாநில அளவில் கல்லூரிகளுக்கு இடையிலான கால்பந்து போட்டிகள் நேற்று தொடங்கியது.*

சென்னை லயோலா, கோவை பிஎஸ்ஜி, திருப்பத்துார் சேக்கர்டு ஹார்ட், பாளையங்கோட்டை புனித சேவியர், திருச்சி ஜமால், பிஷப், ஜோசப் உள்ளிட்ட 12 கல்லுாரிகள் போட்டியில் கலந்து கொள்கின்றன. கல்லுாரி தாளாளர் காஜா நஜிமுதீன், முதல்வர் இஸ்மாயில் முகைதீன் ஆகியோர் போட்டிகளை தொடங்கி வைத்தனர்.

போட்டிக்கான ஏற்பாடுகளை உடற்கல்வி இயக்குனர் சாயின்ஷா செய்து உள்ளார்.



**திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நேற்று தொடங்கிய மாநில கால்பந்து போட்டியில் புதுக்கோட்டை மன்னர் கல்லூரியும், உடுமலைப்பேட்டை வித்யாசாகர் கல்லூரியும் மோதின.**

நேற்றைய போட்டி முடிவுகள் விவரம்: உடுமலைபேட்டை வித்யாசாகர் கல்லுாரி 7–6 (டை பிரேக்கர்) என்ற கோல் கணக்கில் புதுகை மன்னர் கல்லுாரியை வீழ்த்தியது. கோவை பிஎஸ்ஜி கல்லுாரி 2–0 என்ற கோல் கணக்கில் பிஷப் ஹீபர் கல்லுாரியை வென்றது.

பாளையங்கோட்டை புனித சேவியர் கல்லுாரி 1–0 என்ற கோல் கணக்கில் தேசிய கல்லுாரியை வீழ்த்தியது.

மர்கோஸ் அணி 3–0 என்ற கோல் கணக்கில் ஸ்ரீரங்கம் ஆண்டவன் கல்லுாரியை வென்றது.

போட்டிகள் இன்றும் தொடர்ந்து நடக்கிறது.

நாக்அவுட் முறையில் நடக்கும் போட்டியில் வெற்றி பெறும் அணிகளுக்கு நாளை (ஆக. 28) பரிசளிப்பு நிகழ்ச்சிகள் நடக்கிறது.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

ஞாயிற்றுக்கிழமை
27 ஆகஸ்ட் 2017
திருச்சி
18 பக்கங்கள் ரூ. 6

# மாநில கால்பந்து: கோவை, உடுமலை. கல்லூரிகள் வெற்றி

**திருச்சி, ஆக. 26:** திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் சனிக்கிழமை தொடங்கிய ஜமால் முகமது சுழற் கோப்பைக்கான மாநில கால்பந்து போட்டியின் முதல்நாள் ஆட்டத்தில் கோவை, பாளையங்கோட்டை, திருச்சி கல்லூரிகள் வெற்றி பெற்றன.

திருச்சி ஜமால் முகமது கல்லூரி நடத்தும் மாநில அளவிலான கால்பந்து போட்டியில் சென்னை லயோலா, கோவைபி.எஸ்.ஜி. கலை அறிவியல் கல்லூரி, திருப்பத்தூர் தூய நெஞ்சகக் கல்லூரி, பாளையங்கோட்டை புனித சேவியர் கல்லூரி, நாசேரத் மர்கோஸிஸ் கல்லூரி, திருச்சி ஜமால் முகமது, பிஷப் ஹீபர், தேசியக் கல்லூரி, ஸ்ரீமத் ஆண்டவன் கல்லூரி உள்ளிட்ட கல்லூரிகள் பங்கேற்றுள்ளன.

முதல் போட்டியை கல்லூரிச் செயலர் மற்றும் தாளாளர் ஏ.கே. காஜா நஜ்முதீன், முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன் முன்னிலையில் கல்லூரிப் பொருளாளர் கே. ஏ. கலீல் அகமது, இணைச் செயலர் எம்.ஜெ. ஜமால்முகமது ஆகியோர் தொடக்கி வைத்தனர்.



திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் சனிக்கிழமை நடைபெற்ற கால்பந்து போட்டியில் விளையாடிய புதுக்கோட்டை மாமன்னர் அரசு கல்லூரி, உடுமலைப்பேட்டை வித்யாசாகர் கல்லூரி மாணவர்கள்.

முதல் போட்டியில் புதுக்கோட்டை மாமன்னர் அரசு கல்லூரியை உடுமலைப்பேட்டை வித்யாசாகர் கல்லூரி 7-6 என்ற கோல்கணக்கில் வென்றது. ஆட்ட முடியும் வரை 2 அணிகளும் தலா 2 கோல்கள் அடித்திருந்தன., இதையடுத்து டைபிரேக்கர் வாய்ப்பு வழங்கப்பட்டது. அதிலும் இரு அணிகளும் தலா 4 கோல்கள் அடித்தன. இதைத் தொடர்ந்து சடன்டெத் வாய்ப்பு வழங்கப்பட்டத்தில் உடுமலைப்பேட்டை கல்லூரியின் பிரவீன்குமார் அடித்த ஒரு கோல் அந்த அணியை வெற்றி பெற செய்தது. இரண்டாவது போட்டியில திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரியை 2-0 என்ற கோல்கணக்கில் கோவை பி.எஸ்.ஜி.கலை அறிவியல் கல்லூரியும்,மூன்றாவது போட்டியில் திருச்சி தேசியக் கல்லூரியை 1-0 என்ற கோல் கணக்கில் பாளையங்கோட்டை புனித சேவியர் கல்லூரி அணியும் வீழ்த்தின.

நான்காவது போட்டியில் நாசரேத் மர்கோஸிஸ் கல்லூரி அணியை 3-0 என்ற கோல்கணக்கில் ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் கல்லூரி அணி வென்றது. போட்டிகள் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறுகிறது. திங்கள் கிழமை மாலை அரையிறுதி, இறுதிப் போட்டிகள் நடைபெறும்.

ஏற்பாடுகளை கல்லூரி உடற்கல்வி இயக்குநர் முனைவர் ஷா இன்ஷா, உதவி உடற்கல்வி இயக்குநர் மு. பிரதீப்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.

திருச்சி மாவட்ட செய்திகள்

சினிமா கேள்வி-பதில்! 18-ம் பக்கம்



திருச்சியில் நேற்று தொடங்கிய கல்லூரிகளுக்கு இடையிலான கால்பந்து போட்டியில் இரு அணிகள் விளையாடியதை படத்தில் காணலாம்.

### மாநில அளவிலான

# கல்லூரிகளுக்கு இடையிலான கால்பந்து போட்டி தொடங்கியது

திருச்சி, ஆக.27-

மாநில அளவில் கல்லூரிகளுக்கு இடையிலான கால்பந்து போட்டி திருச்சி ஜமால் முகமது கல்லூரி மைதானத்தில் நேற்று தொடங்கியது.

## கோவை பி.எஸ்.ஜி. கல்லூரி அணி வெற்றி

திருச்சி ஜமால் முகமது கல்லூரி நடத்தும் மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையிலான கால்பந்து போட்டி நேற்று கல்லூரி மைதானத்தில் தொடங்கியது. இதில் திருச்சி ஜமால் முகமது கல்லூரி, சென்னை லயோலா கல்லூரி, கோவை பி.எஸ்.ஜி. கல்லூரி, திருப்பத்தூர் தூய இருதய கல்லூரி, பாளையங்கோட்டை புனித சேவியர் கல்லூரி, திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி உள்பட 12 கல்லூரிகளை சேர்ந்த அணிகள் பங்கேற்றன. போட்டிகள் நாக்-அவுட் முறையில் நடந்தது. போட்டியை ஜமால் முகமது கல்லூரியின் செயலரும், தாளாளருமான காஜா நஜீமுதின், முதல்வர் இஸ்மாயில் முகைதீன் ஆகியோர் முன்னிலையில், பொருளாளர் கலீல் அகமது, இணை செயலாளர் ஜமால் முகமது ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

நேற்று காலை நடந்த முதல் போட்டியில் விளையாடிய உடுமலைப்பேட்டை வித்யா சாகர் கல்லூரி அணி, புதுகை மாமன்னர் அரசு கல்லூரி அணியை 7-6 என்ற கோல் கணக்கில் வென்றது. மற்றொரு போட்டியில் கோவை பி.எஸ்.ஜி. கல்லூரி அணி, 2-0 என்ற கோல் கணக்கில் திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி அணியை தோற்கடித்தது.

## பரிசளிப்பு விழா

போட்டிகள் தொடர்ந்து நாளை மறுநாள் (செவ்வாய்க்கிழமை) வரை நடைபெறுகிறது. அன்று மாலையில் நடைபெறும் பரிசளிப்பு விழாவில் வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பைகள், பரிசுத்தொகை, சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது. போட்டிக்கான ஏற்பாடுகளை கல்லூரியின் உடற்கல்வி இயக்குனர் ஷாயின் ஷா, உதவி உடற்கல்வி இயக்குனர் பிரதீப் குமார் ஆகியோர் செய்துள்ளனர்.

காவேரி Times
வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருகிறது
இது ஒரு இலவச வார இதழ்

# CAUVERY TIMES

Bilingual Neighbourhood Weekly Free Newspaper
RNI No. TNBIL / 2007 / 23710
Volume : 10 Issue : 507, Trichy - AUG-18 - AUG-24, 2017 Friday

காவேரி Times
வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருகிறது
இது ஒரு இலவச வார இதழ்





திருச்சி ஜமால் முகமது கல்லூரி 67வது ஆண்டு விளையாட்டு தினவிழா கடந்த 10ந் தேதி நடைபெற்றது. வெற்றி பெற்ற மாணவர்களுக்கு திருச்சி மாவட்ட போதை பொருள் தடுப்பு காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் முனைவர் ரவிசேகரன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்றினார். வரலாற்றுத்துறை 63 புள்ளிகளை பெற்று ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தையும், மாணவர் சத்யா தனி நபர் சாம்பியன் பட்டத்தையும் பெற்றனர். இதே போல் மாணவிகள் பிரிவிற்கான 16ம் ஆண்டு விளையாட்டு தினவிழா கடந்த 11ந் தேதி நடைபெற்றது. கரூர் மாவட்ட குற்றவியல் தடுப்பு காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் வி.வி.கீதாஞ்சலி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பரிசுகளை வழங்கி பாராட்டினார் ஆங்கிலத் துறை 34 புள்ளிகள் பெற்று ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தையும், மாணவி ஐஸ்வர்யா தனி நபர் சாம்பியன் பட்டத்தையும் பெற்றனர். மேற்கண்ட நிகழ்ச்சிகளில் கல்லூரி முதல்வர் முனைவர் எஸ்.இஸ்மாயில் முகைதீன் தலைமையுரையாற்றினார். உடற்கல்வி இயக்குநர் முனைவர் பி.எஸ்.ஷாயின்ஷா ஆண்டறிக்கை வாசித்தார்.கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே.காஜாநஜீமுதீன், பொருளாளர் ஹாஜி. கே.ஏ.கலீல்அகமது, உதவி செயலாளர் ஹாஜி. எம்.ஜெ.ஜமால்முகமது ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி துணை முதல்வர் முனைவர் ஏ.முகமது இப்ராகிம், கூடுதல் துணை முதல்வர் முனைவர் எம்.முகமது சிகாபுதீன், மேலாண்மை துறை இயக்குநர் முனைவர் கே.அப்துஸ்சமது, சுயநிதி பிரிவு இயக்குநர் முனைவர் கே.என்.அப்துல்காதர் நிகால், விடுதி இயக்குநர்கள் முனைவர் கே.என்.முகமது பாஜில், பேராசிரியர் எம்.ஏ.ஜமால் முகமது யாசின் ஜுபைர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

http://www.maalaimalar.com Regd. No. TRY/061/2015-2017 RNI.No.42628/85

மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

MAALAI MALAR

திருச்சி 26-8-2017 (சனிக்கிழமை) 10 பக்கம் 400 காசு ★★★ மலர் 40 இதழ் 254



போட்டியை கல்லூரி செயலாளர் மற்றும் தாளாளர் காஜா நஜிமுதீன் தொடங்கி வைத்த போது எடுத்த படம்.

## திருச்சி ஜமால் முகமது கல்லூரியில்

# கால்பந்து போட்டி தொடக்கம்

திருச்சி, ஆக. 26–

திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி சார்பில் மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையிலான கால்பந்து போட்டி இன்று தொடங்கியது. வருகிற 28–ந்தேதி வரை போட்டி நடக்கிறது.

இப்போட்டியில் சென்னை லயோலா, கோவை பி.எஸ்.ஜி., திருப்ப த்தூர் தூய நெஞ்சக்கல்லூரி, பாளை புனித சேவியர் கல்லூரி, நாசரேத் மர்கோசிஸ் கல்லூரி, திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி, புனித வளனார், பிஷப் ஹீபர், தேசியக் கல்லூரி உட்பட 12 கல்லூரிகள் கலந்து கொள்கின்றன. போட்டிகள் நாக் அவுட் முறையில் நடத்தப்படுகிறது.

போட்டிகளை கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் நஜீமுதின், முதல்வர் இஸ்மாயில் முகை தீன் ஆகியோர் முன்னிலையில் கல்லூரியின் பொருளாளர் கலீல் அகமது மற்றும் இணை செயலாளர் ஜமால் முகம்மது ஆகியோர் போட்டிகளை தொடங்கி வைத்தார்.

திங்கட்கிழமை மாலை நடைபெறும் பரிசளிப்பு விழாவில் கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் காஜா நஜீமுதின் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுத் தொகை, சுழற் கோப்பை மற்றும் சான்றிதழ்களும் வழங்க உள்ளனர். கல்லூரியின் இயக்குனர்கள் அப்துஸ் ஸமது மற்றும் அப் துல் காதர் நிஹால் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர். முதல்வர் இஸ்மாயில் முகைதீன் முன்னிலை வகிக்கிறார். வெற்றி பெறும் அணிகளுக்கு முதல் பரிசாக

ரூ.10,000 சுழற்கோப்பை, சான்றிதழ், இரண்டாம் பரிசாக ரூ.7,000 சுழற் கோப்பை, சான்றிதழ், மூன்றாம் பரிசாக ரூ.5,000, சான்றிதழ், நான்காவது பரிசாக ரூ.3,000, சான்றிதழ் வழங்கப்படுகிறது.

போட்டிகளுக்கான ஏற்பாடுகளை கல்லூரியின் உடற்கல்வி இயக்குநர் ஷாயின் ஷா மற்றும் உதவி உடற் கல்வி இயக்குநர் பிரதீப் குமார் ஆகியோர் செய்துள்ளனர்.

REGD. No. TRY/056/2015-2017 ★★★★
இன்டர்நெட் முகவரி:
http://www.dailythanthi.com

- தினத்தந்தி, ஒவ்வொரு அங்குலமும் தங்கநகை போல அலங்கரிக்கப்படுகிறது -

18 பக்கம் 500 காசு

தினத் தந்தி
DAILY THANTHI

பவள விழா ஆண்டு

திருச்சி (24-8-2017) வியாழக்கிழமை | மலர் 75 இதழ் 296 | ஹேவிளம்பி ஞ ஆவணி மீ 8 உ ஹிஜிரி 1438 துல்ஹஜ் 1

தி சென்னை சில்க்ஸ்
Let the celebrations begin

ஸ்ரீ குமரன் தங்கமாளிகை

## மாவட்ட அளவிலான கூடைப்பந்து போட்டியில்

# பெண்கள் பிரிவில் ஜமால் முகமது கல்லூரி முதலிடம்

திருச்சி, ஆக.24-

திருச்சி மாவட்ட அளவிலான கூடைப்பந்து போட்டி திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடந்தது. இதில் திருச்சி மாவட்டத்தில் இருந்து பள்ளி, கல்லூரிகளை சேர்ந்த 30-க்கும் மேற்பட்ட அணிகள் பங்கேற்றன. பள்ளிகளுக்கு இடையேயான மாணவிகள் பிரிவில் மணப்பாறை லிட்டில் பிளவர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி அணி முதலிடத்தையும், ஆண்கள் பிரிவில் திருவெறும்பூர் பாய்லர் பிளாண்ட் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அணி முதலிடத்தையும் பிடித்தன. சீனியர் ஆண்கள் பிரிவுகளுக்கான போட்டியில் திருச்சி மத்திய மண்டல போலீஸ் அணி 64-41 என்ற புள்ளிகள் கணக்கில் திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரி அணியை தோற்கடித்தது. இதேபோல் பெண்கள் பிரிவில் பிஷப் கல்லூரி அணியை 34-56 என்ற புள்ளிகள் கணக்கில் ஜமால் முகமது கல்லூரி அணி வெற்றி பெற்றது. மாலையில் நடந்த பரிசளிப்பு விழாவில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

FOLLOW US:
thehindu.com
facebook.com/thehindu
the_hindu

# THE HINDU

MONDAY, AUGUST 21, 2017

INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

TIRUCHIRAPALLI
CITY EDITION
22 pages • ₹6.00



Karnan to file petition in Calcutta High Court on his appeal for parole
page 10



Modi, Shah to meet BJP Chief Ministers today for stock-taking
page 10



Dhawan, spinners help India crush Sri Lanka in first ODI
page 15

Jerry Lewis, legendary actor, comedian and director, has died aged 91
page 18



PRINTED AT · CHENNAI · COIMBATORE · BENGALURU · HYDERABAD · MADURAI · NOIDA · VISAKHAPATNAM · THIRUVANANTHAPURAM · KOCHI · VIJAYAWADA · MANGALURU · TIRUCHIRAPALLI · KOLKATA · HUBBALLI · MOHALI · MALAPPURAM · MUMBAI · TIRUPATI · LUCKNOW

# Barath Kalyan and Kharunya take titles



Barath Kalyan.



C.S. Kharunya. ■ M. SRINATH

TIRUCHI: M. Barath Kalyan (6.5 points) and C.S. Kharunya (7 points) won the men's and women's titles after the seventh and final round of the Bharathidasan University inter-collegiate chess tournament held at National College recently.

**Final standings (top five):**

**Men:** 1. M. Barath Kalyan (Bishop Heber College, 6.5), 2. S. Yogesh (Rajah Serfoji GC, 6), 3. A. Kalideva (Valluvar CSM, 5.5), 4. V. Ajith Kumar (Srimad Andavan ASC, 5.5), 5. S. Peer Ibramsha (Jamal Mohamed College, 5.5).

**Women:** 1. C.S. Kharunya (Jamal Mohamed College, 7), 2. K. Varshcine (Bishop Heber College, 5.5), 3. U. Guruvanthana (Srimad Andavan ASC, 5.5), 4. T.B. Nafisa Nehal (Rabiammal Ahamed Maideen CW, 5.5), 5. S. Ram Priya (Seethalakshmi Ramaswami College, 5.5).

-TPTC Edition-




# தினமலர்

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்




திருச்சி • செவ்வாய் • ஆகஸ்ட் 22, 2017 | சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் | • 16 பக்கம் • 600 காசு • மலர் 66 • இதழ் 350



# பாரதிதாசன் பல்கலை. செஸ் போட்டி

## பரத் கல்யாண், காருண்யா சாம்பியன்

**திருச்சி, ஆக. 22-**

*திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட கல்லூரிகளுக்கு இடையிலான செஸ் போட்டி தேசிய கல்லூரியில் நடந்தது.*

இதன் ஆண்கள் பிரிவில் பிஷப் ஹீபர் கல்லூரியின் பரத் கல்யாணும், மகளிர் பிரிவில் ஜமால் முகமது கல்லூரியின் காருண்யாவும் சாம்பியன் பட்டம் வென்றனர்.

7 சுற்றுகள் நடந்த போட்டிகளில் முதல் 5 இடங்களை பிடித்தவர்கள் பல்கலைக்கழகத்திற்கு இடையிலான செஸ் போட்டியில் கலந்து கொள்ளதகுதி பெற்றுள்ளனர். பிஷப் ஹீபர் கல்லூரி தொடர்ந்து 10வது ஆண்டாக பாரதிதாசன் பல்கலைக்கழக சாம்பியன் பட்டத்தை வென்றது குறிப்பிடத்தக்கது.

போட்டியில் வெற்றி பெற்றவர்கள் அடைப்புகள் குறிக்குள் அவர்கள் பெற்ற புள்ளிகள்)





திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட கல்லூரிகளுக்கு இடையிலான செஸ் போட்டியின் மகளிர் பிரிவில் சாம்பியன் பட்டம் வென்ற காருண்யா, ஆண்கள் பிரிவில் பட்டம் வென்ற பரத்கல்யாண்.

**ஆண்கள் பிரிவு:** பரத் கல்யாண் -பிஷப் ஹீபர் கல்லூரி (6.5), யோகேஷ் -ராஜா சரபோஜி கல்லூரி (6) காளிதேவ் - வள்ளுவர் கல்லூரி( 5.5), அஜித்குமார் - ஆண்டவன் கல்லூரி (5.5), பீர் இப்ராம்ஷா -ஜமால் முகமது கல்லூரி (5.5)

**பெண்கள் பிரிவு:** காருண்யா -ஜமால் முகமது கல்லூரி(7), வர்ஷினி -பிஷப் ஹீபர் கல்லூரி (5.5) குருவந்தனா - ஆண்டவன் கல்லூரி (5.5), நபிஷாநெகல் -ரபியம்மாள் அகமது கல்லூரி (5.5), ராம்பிரியா -எஸ்ஆர்சி கல்லூரி (5.5).

அண்ணாநகரில் முதன்மையான தங்க நகை ஷோ ரூம்
For Trust & Integrity
வாவு ஜுவல்லர்ஸ்
தங்கம் | வெள்ளி | வைரம் | மாணிக்கம்
AA-7A, 2வது அவென்யூ (ரவுண்டானா அருகில்), அண்ணாநகர், சென்னை - 600 040. போன் : 044 2628 4295, 2628 4296
Sunday open upto 1.30 p.m.

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper

RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018
TN /PMG (CCR) WPP258/2016-18

தரம் மென்மை நீடித்த உழைப்பு
999 மார்க் லுங்கிகள்
இது வெறும் நம்பரல்ல, நம்பிக்கை!






# ஜமால் முஹம்மது கல்லூரியில் 19 சாதனையாளர்களுக்கு "எம்.ஜே. ஜமால் முகமது ஜமாலியன் விருதுகள்"

திருச்சி, ஆக21-

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி சுதந்திரதினத்தன்று நடைபெற்றது.

இக்கல்லூரியில் பயின்று பல்வேறு துறைகளில் உலகெங்கும் சாதனை படைத்து வரும் 19 சாதனையாளர்களுக்கு முன்னாள் மாணவர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு வருடமும் சுதந்திரதின விழா பல்வேறு ஜமாலியன்களை உலக சாதனையாளர்களாக உருவாக்கி நாட்டிற்கு அர்பணித்த கல்லூரி என்ற பெருமையுடன் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. முன்னாள் மாணவர்கள் தாங்கள் பயின்ற கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவும் பாங்கு பாராட்டத்தக்கது.

கல்லூரி முதல்வர் முனைவர். எஸ். இஸ்மாயில் முகைதீன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு, சிறப்பு விருந்தினராக துபாயைச் சேர்ந்த தனியார் நிறுவன மேலாண்மை இயக்குநர் எம்.ஜே. முகமது இக்பால் கலந்துகொண்டு தன்னுடைய கல்லூரி நினைவுகளையும், தன்னை சிற்பிபோல் செதுக்கிய பேராசிரியர்களையும் நினைவு கூர்ந்தார். மாணவர்கள் ஆசிரியர்களை கல்லூரியில் பயிலும் போதே நன்றாக பயன் படுத்திக்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார். கல்லூரியின் வளர்ச்சிக்காக பெரும் முயற்சியுடன் புரவலர்களாக புகழ்பரப்பிக்கொண்டிருக்கும் ஜமாலில் பயிலாத சான்றோர்களுக்கும் இந்த ஆண்டு முதல் ஜமாலியன் விருது வழங்கப்படுகிறது. இவ்வகையில் இவ்விழாவில், கல்லூரியின் ஆட்சிமன்றக்குழு உறுப்பினரும், துணைச் செயலாளருமான "ஹாஜி. எம்.ஜே. ஜமால் முகமது அவர்களுக்கு ஜமாலியன் விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டது.

முன்னதாக, கல்லூரியின் தாளாளர் மற்றும் செயலாளர் காஜா நஜீமுதீன் மற்றும் துணைச் செயலாளர் ஆ.து. ஜமால் முஹம்மது, ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மேலும், கல்லூரியின் பொருளாளர் மு.யு. கலீல் அஹமது உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும், கூடுதல் துணைமுதல்வர் முனைவர் ஆ. முஹம்மது சிஹாபுதீன், மேலாண்மைத்துறை இயக்குநர் முனைவர் மு. அப்துஸ் சமது, சுயநிதிப்பிரிவு இயக்குநர் முனைவர் மு.கு. அப்துல் காதர் நிஹால், விடுதி நிர்வாக இயக்குநர்கள் முனைவர் மு.க. முஹம்மது ஃபாஜில், பேராசிரியர் ஆ.யு. ஜமால் முஹம்மது யாசின் ஜூபைர், விலங்கியல் துறைத் தலைவர் முனைவர். முகமது சம்சுதீன் உள்ளிட்டோர் விருது பெறுவோரை அறிமுகம் செய்து வைத்தனர்.

முன்னதாக, முன்னாள் மாணவர் சங்கத்தின் பொதுச் செயலாளர் முனைவர். எம்முகமது சர்புதீன் வரவேற்புரையாற்ற, துணை முதல்வர் முனைவர் யு. முஹம்மது இப்ராஹிம், நன்றி கூற நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தது.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பேராசிரியர்கள் குழு, மாணவ - மாணவிகள் உள்ளிட்டோர் செய்திருந்தனர். இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட முன்னாள், இந்நாள் மாணவ - மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

RNI No: TNTAM/ 2009/ 34877
P.R.No: TN\MA\160\2015-2017
Posted at BPC Madurai on daily

சென்னை, திருச்சி, திண்டுக்கல், தேனி, புதுக்கோட்டை, கோவை, சேலம், ஒசூர், வேலூர், திருப்பூர், நெல்லை, ராமநாதபுரம் மற்றும் புதுவையில் கிடைக்கிறது...

www.dhinasangu.com - dhinasangudaily@gmail.com

தின சங்கு
DHINA SANGU
சத்தியமே சாத்தியம்
நாளிதழ்

சங்கு: 9 ஓசை: 228 மதுரை
ஆசிரியர் : இரா.கண்ணன்
EDN : 9, ISSUE : 228, MADURAI. Rs:3.00

வியாழன், ஆகஸ்ட் 17, 2017 | உண்மையை உரக்கச் சொல்லும் ஒரே நாளிதழ் | பக்கம்: 8 | விலை: 300காசுகள் (அஞ்சல் மூலம் 400 காசுகள்)

அன்னை தெரசா
ஹை-டெக் ப்யூட்டி பார்லர்
இலங்கார நகைகள் வாடகைக்கு கிடைக்கும்
80123 41555
96989 67878
28/1,முத்துப்பட்டிமெயின்ரோடு,
அழகப்பன்நகர், மதுரை-3

சுவைகளின் அரசன்
KINGS BAKES
திண்டுக்கல், சின்னாளபட்டி, ஒட்டன்சத்திரம்
9446620088, 7092424222, 9092811212.

# திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு




திருச்சி, ஆக. 17-

திருச்சி ஜமால் முஹம்மது தன்னாட்சிக் கல்லூரியில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி சுதந்திரதினத்தன்று நடைபெற்றது. இக்கல்லூரியில் பயின்று பல்வேறு துறைகளில் உலகெங்கும் சாதனை படைத்து வரும் 19 சாதனையாளர்களுக்கு முன்னாள் மாணவர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன.

கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு, சிறப்பு விருந்தினராக துபாயைச் சேர்ந்த தனியார் நிறுவன மேலாண்மை இயக்குநர் முகமது இக்பால் கலந்து கொண்டு தன்னுடைய கல்லூரி நினைவுகளையும், தன்னை சிற்பிபோல் செதுக்கிய பேராசிரியர்களையும் நினைவுகூர்ந்தார்.

மாணவர்கள் ஆசிரியர்களை கல்லூரியில் பயிலும்போதே நன்றாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார். கல்லூரியின் வளர்ச்சிக்காக பெரும் முயற்சியுடன் புரவலர்களாக புகழ்பரப்பிக்கொண்டிருக்கும் ஜமாலில் பயிலாத சான்றோர்களுக்கும் இந்த ஆண்டு முதல் ஜமாலியன் விருது வழங்கப்படுகிறது. இவ்வகையில் இவ்விழாவில், கல்லூரியின் ஆட்சிமன்றக்குழு உறுப்பினரும், துணைச்செயலாளருமான ஜமால் முகமதுக்கு ஜமாலியன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

முன்னதாக, கல்லூரியின் தாளாளர் மற்றும் செயலாளர் காஜா நஜீமுதீன் மற்றும் துணைச் செயலாளர் ஜமால் முஹம்மது ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

கூடுதல் துணைமுதல்வர் முஹம்மது சிஹாபுதீன், மேலாண்மைத் துறை இயக்குநர் அப்துஸ் சமது, சுயநிதிப்பிரிவு இயக்குநர் அப்துல் காதர் நிஹால், விடுதி நிர்வாக இயக்குநர்கள் முஹம்மது ஃபாஜில், பேராசிரியர் ஜமால் முஹம்மது யாசின் ஜூபைர், விலங்கியல் துறைத்தலைவர் முகமது சம்சுதீன் உள்ளிட்டோர் விருது பெறுவோரை அறிமுகம் செய்து வைத்தனர். முன்னதாக, முன்னாள் மாணவர் சங்கத்தின் பொதுச்செயலாளர் முகமது சர்புதீன் வரவேற்புரையாற்ற, துணைமுதல்வர் முஹம்மது இப்ராஹிம் நன்றி கூற நிகழ்ச்சி இனிதே நிறைவடைந்தது.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பேராசிரியர்கள் குழு, மாணவ மாணவிகள் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

விழாவில் கல்லூரி பொருளாளர் கலீல் அஹமது மற்றும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட முன்னாள், இந்நாள் மாணவ மாணவிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# இராஜக்கல் ஊராட்சியில் கிராமசபா கூட்டம்

குடியாத்தம், ஆக. 17-

பேரணாம்பட்டுஊராட்சிஒன்றியம் இராஜக்கல் ஊராட்சிஅலுவலகத்தில் சுந்திரதினவிழாவும் சுதந்திரதினசிறப்புகிராமசபா கூட்டமும் நடைப்பெற்றது. ஒன்றியஆணையாளர் கலைச்செல்வி, வட்டாரவளர்ச்சி அலுவலர் அப்துல் கரீம் மண்டல துணைவட்டாரவளர்ச்சிஅலுவலர் பிரதீப்குமார், கிராமநிர்வாகஅலுவலர் சி.பலராமன், இளநிலைமின்பொறியாளர் டி.தமிழ்வாணன் உள்பட பலர் கலந்துகொண்டனர். இதில் பல்வேறுதீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது, முடிவில் ஊராட்சி செயலாளர் லட்சுமி நன்றி கூறினார்.

Now in Live makkalkural.tv

MAKKAL KURAL (Independent National Tamil Daily) 10 பக்கம் விலை ரூ.4.00

மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

மதுரை பதிப்பு

(மலர்:39 ★ 17.8.2017 வியாழன் மாலை ★ வெளியீட் 18.8.2017 வெள்ளி ★ இதழ் 82)

Regd. No. TN/SR-21/15–17

மெகா டிஜிட்டல்
டிஜிட்டல் பேனர் பிரிண்டிங்
The Magic of Large format Printing
Mega DiGiTAL
High Technology with Sharp Quality
ANNA SALAI ◊ ADYAR ◊ KOYAMBEDU ◊ THIRUVOTTIYUR
9444007466 FLEX & VINYL DIGITAL PRINTING




# ஜமால் முஹம்மது கல்லூரியில் முன்னாள் மாணவர் சந்திப்பு நிகழ்ச்சி: 19 சாதனையாளர்களுக்கு விருது

## துணைச்செயலாளர் ஜமால் முகமது ஜமாலியன் கவுரவிக்கப்பட்டார்

திருச்சி, ஆக.17–

திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி சுதந்திரதினத்தன்று நடைபெற்றது. இக்கல்லூரியில் பயின்று பல்வேறு துறைகளில் உலகெங்கும் சாதனை புடைத்து வரும் 19 சாதனையாளர்களுக்கு முன்னாள் மாணவர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன.

ஒவ்வொரு வருடமும் சுதந்திரதின விழா பல்வேறு ஜமாலியன்களை உலக சாதனையாளர்களாக உருவாக்கி நாட்டிற்கு அர்பணித்த கல்லூரி என்ற பெருமையுடன் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. முன்னாள் மாணவர்கள் தாங்கள் பயின்ற கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவும் பாங்கு பாரட்டத்தக்கது. கல்லூரி முதல்வர் எஸ். இஸ்மாயில் முகைதீன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு, சிறப்பு விருந்தினராக துபாயைச் சேர்ந்த தனியார் நிறுவன மேலாண்மை இயக்குநர் எம்.ஜே. முகமது இக்பால் கலந்துகொண்டு தன்னுடைய கல்லூரி நினைவுகளையும்,தன்னைசிற்பிபோல் செதுக்கிய பேராசிரியர்களையும் நினைவுகூர்ந்தார். மாணவர்கள் ஆசிரியர்களை கல்லூரியில் பயிலும்போதே நன்றாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

கல்லூரியின் வளர்ச்சிக்காக பெரும் முயற்சியுடன் புரவலர்களாக புகழ்பரப்பிக்கொண்டிருக்கும் ஜமாலில் பயிலாத சான்றோர்களுக்கும் இந்த ஆண்டு முதல் ஜமாலியன் விருது வழங்கப்படுகிறது. இவ்வகையில் இவ்விழாவில், கல்லூரியின் ஆட்சிமன்றக்குழு உறுப்பினரும், துணைச்செயலாளருமான எம்.ஜே. ஜமால் முகமதுக்கு ஜமாலியன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

முன்னதாக, கல்லூரியின் தாளாளர் மற்றும் செயலாளர் காஜா நஜீமுதீன் மற்றும் துணைச்செயலாளர் ஜமால் முஹம்மது, ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மேலும், கல்லூரியின் பொருளாளர் கலீல் அஹமது உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். மேலும், கூடுதல் துணைமுதல்வர் முனைவர் ஆ. முஹம்மது சிஹாபுதீன், மேலாண்மைத்துறை இயக்குநர் மு. அப்துஸ் சமது, சுயநிதிப்பிரிவு இயக்குநர் அப்துல் காதர் நிஹால், விடுதி நிர்வாக இயக்குநர்கள் முஹம்மது பாஜில், பேராசிரியர் ஜமால் முஹம்மது யாசின் ஜுபைர், விலங்கியல் துறைத்தலைவர் முகமது சம்சுதீன் உள்ளிட்டோர் விருது பெறுவோரை அறிமுகம் செய்து வைத்தனர். முன்னதாக, முன்னாள் மாணவர் சங்கத்தின் பொதுச்செயலாளர் எம். முகமது சர்புதீன் வரவேற்புரையாற்ற, துணைமுதல்வர் முஹம்மது இப்ராஹிம், நன்றி கூறினார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பேராசிரியர்கள் குழு, மாணவ மாணவிகள் உள்ளிட்டோர் செய்திருந்தனர். இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட முன்னாள், இந்நாள் மாணவ மாணவிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

http://www.maalaimalar.com Regd. No. TRY/061/2015-2017 RNI.No.42628/85

# மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்
MAALAI MALAR

திருச்சி 17-8-2017 (வியாழக்கிழமை) 8 பக்கம் 400 காசு ★★★ மலர் 40 இதழ் 245

## ஜமால் முகமது கல்லூரியில் சுதந்திர தின விழா

### முன்னாள் மாணவர்கள் சந்திப்பும் நடந்தது

திருச்சி, ஆக. 17–

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி சுதந்திர தினத்தன்று நடைபெற்றது. இக்கல்லூரியில் பயின்று பல்வேறு துறைகளில் உலகெங்கும் சாதனை படைத்து வரும் 19 முன்னாள் மாணவர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன.

இந்த விழாவுக்கு கல்லூரி முதல்வர் முனைவர் இஸ்மாயில் முகைதீன் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக துபாயைச் சேர்ந்த தனியார் நிறுவன மேலாண்மை இயக்குநர் முகமது இக்பால் கலந்து கொண்டு தன்னுடைய கல்லூரி நினைவுகளையும், தன்னை சிற்பிபோல் செதுக்கிய பேராசிரியர்களையும் நினைவு கூர்ந்தார்.

மாணவர்கள் ஆசிரியர்களை கல்லூரியில் பயிலும் போதே நன்றாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என கேட்டுக்கொண்டார். கல்லூரியின் வளர்ச்சிக்காக பெரும் முயற்சியுடன் புரவலர்களாக புகழ் பரப்பிக் கொண்டிருக்கும் ஜமாலில் பயிலாத சான்றோர்களுக்கும் இந்த ஆண்டு முதல் ஜமாலியன் விருது வழங்கப்படுகிறது.

அந்த வகையில் விழாவில், கல்லூரியின் ஆட்சி மன்றக்குழு உறுப்பினரும், துணைச்செயலாளருமான எம்.ஜே.ஜமால் முகமதுவுக்கு ஜமாலியன் விருது வழங்கப்பட்டது.

முன்னதாக, கல்லூரி தாளாளரும் செயலாளருமான காஜா நஜீமுதீன், துணைச்செயலாளர் ஜமால் முகமது ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கல்லூரி பொருளாளர் கலீல் அகமது உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மேலும், கூடுதல் துணை முதல்வர் முனைவர் முகமது சிஹாபுதீன், மேலாண்மைத் துறை இயக்குநர் முனைவர் அப்துஸ் சமது, சுயநிதிப்பிரிவு இயக்குநர் முனைவர் அப்துல் காதர் நிஹால், விடுதி நிர்வாக இயக்குநர்கள் முனைவர் முகமது பாஜில், பேராசிரியர் ஜமால் முகமது யாசின் ஜுபைர், விலங்கியல் துறைத் தலைவர் முகமது சம்சுதீன் உள்ளிட்டோர் விருது பெறுவோரை அறிமுகம் செய்து வைத்தனர்.




திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் சுதந்திர தினத்தன்று முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றபோது எடுத்தபடம்.

முன்னதாக, முன்னாள் மாணவர் சங்கத்தின் பொதுச் செயலாளர் முனைவர். எம்.முகமது சர்புதீன் வரவேற்றார். துணை முதல்வர் முனைவர் முகமது இப்ராகிம், நன்றி கூறினார்.

விழா ஏற்பாடுகளை பேராசிரியர்கள் குழுவினர், மாணவ, மாணவிகள் உள்ளிட்டோர் செய்திருந்தனர். இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட முன்னாள், இந்நாள் மாணவ, மாணவிகள் கலந்துகொண்டனர்.

தினபூமி
thinaboomi.com
திருச்சி, புதன், ஆகஸ்ட் 16, 2017 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ பாண்டிச்சேரி


# ஜமால் முஹம்மது கல்லூரியில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு

திருச்சி,ஆக.16-

திருச்சி ஜமால் முஹம்மது தன்னாட்சிக் கல்லூரியில் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இக்கல்லூரியில் பயின்று பல்வேறு துறைகளில் உலகெங்கும் சாதனை படைத்து வரும் 19 சாதனையாளர்களுக்கு முன்னாள் மாணவர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு வருடமும் சுதந்திர தின விழா பல்வேறு ஜமாலியன்களை உலக சாதனையாளர்களாக உருவாக்கி நாட்டிற்கு அர்பணித்த கல்லூரி என்ற பெருமையுடன் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. முன்னாள் மாணவர்கள் தாங்கள் பயின்ற கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவும் பாங்கு பாரட்டத்தக்கது. கல்லூரி முதல்வர் முனைவர். எஸ். இஸ்மாயில் முகைதீன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவிற்கு, சிறப்பு விருந்தினராக துபாயைச் சேர்ந்த தனியார் நிறுவன மேலாண்மை இயக்குநர் எம். ஜே. முகமது இக்பால் கலந்து கொண்டு தன்னுடைய கல்லூரி நினைவுகளையும், தன்னை சிற்பிபோல் செதுக்கிய பேராசிரியர்களையும் நினைவுகூர்ந்தார். மாணவர்கள் ஆசிரியர்களை கல்லூரியில் பயிலும்போதே நன்றாக பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டார். கல்லூரியின் வளர்ச்சிக்காக பெரும் முயற்சியுடன் புரவலர்களாக புகழ் பரப்பிக் கொண்டிருக்கும் ஜமாலில் பயிலாத சான்றோர்களுக்கும் இந்த ஆண்டு முதல் ஜமாலியன் விருது வழங்கப்படுகிறது. இவ்வகையில் இவ்விழாவில், கல்லூரியின் ஆட்சிமன்றக்குழு உறுப்பினரும், துணைச்செயலாளருமான எம்.ஜே. ஜமால் முகமதிற்கு ஜமாலியன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.




முன்னதாக, கல்லூரியின் தாளாளர் மற்றும் செயலாளர் காஜா நஜீமுதீன் மற்றும் துணைச்செயலாளர் ஜமால் முஹம்மது, ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மேலும் கல்லூரியின் பொருளாளர் கலீல் அஹமது உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். மேலும், கூடுதல் துணைமுதல்வர் முனைவர் முஹம்மது சிஹாபுதீன், மேலாண்மைத்துறை இயக்குநர் முனைவர் அப்துஸ் சமது, சுயநிதிப்பிரிவு இயக்குநர் முனைவர் அப்துல் காதர் நிஹால், விடுதி நிர்வாக இயக்குநர்கள் முனைவர் முஹம்மது பாஜில், பேராசிரியர் ஜமால் முஹம்மது யாசின் ஜூபைர், விலங்கியல் துறைத் தலைவர் முனைவர். முகமது சபீசுதீன் உள்ளிட்டோர் விருது பெறுவோரை அறிமுகம் செய்து வைத்தனர். முன்னதாக முன்னாள் மாணவர் சங்கத்தின் பொதுச்செயலாளர் முனைவர். எம்.முகமது சர்புதீன் வரவேற்புரை வழங்கினார். முடிவில் துணைமுதல்வர் முனைவர் முஹம்மது இப்ராஹிம் நன்றி கூறினார்.

தின பூமி
thinaboomi.com
திருச்சி, திங்கள், ஆகஸ்ட் 14, 2017 ▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ பாண்டிச்சேரி பக்கம் 8 ₹3.00

# ஜமால் முகமது கல்லூரியில் விளையாட்டு விழா



திருச்சி,ஆக.14-

ஜமால் முகமது கல்லூரியின் மாணவிகளுக்கான 16-வது ஆண்டு விளையாட்டு விழா நடைபெற்றது. கல்லூரி மாணவிகளுக்கான ஓட்டப் பந்தயம், . வட்டு எறிதல், குண்டு எறிதல், ஈட்டி எறிதல், தொடர் ஓட்ட போட்டிகள் மற்றும் நீளம் தாண்டுதல் போட்டி என 6 குழுக்களாக பிரிக்கப்பட்டு நடத்தப்பட்டது. இவ்விழாவிற்கு கரூர் மாவட்ட குற்றவியல் தடுப்பு காவல் துறை துணை கண்காணிப்பாளர் வி.வி.கீதாஞ்சலி கலந்து கொண்டு பரிசுகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

போட்டியில் ஆங்கிலத் துறை 34 புள்ளிகள் பெற்று ஒட்டு மொத்த சாம்பியன் பட்டத்தை பெற்றது. மேலும் தனிநபர் சாம்பியன் பட்டத்தையும் இதே துறையை சார்ந்த மூன்றாம் ஆண்டு மாணவி ஐஸ்வர்யா பெற்றார். சிறந்த அணிவகுப்பிற்கான கேடயத்தை கிரீன் ஹவுஸ் குழுவினர் பெற்றனர்.

**நிர்வாகிகள்**

இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் முகைதீன் தலைமையுரையாற்றினார். உடற்கல்வி துறை இயக்குநர் முனைவர் பி.எஸ்.~hயின் ~h ஆண்டறிக்கை வாசித்தார், கல்லூரி செயலர் மற்றும் தாளாளர் டாக்டர். ஏ.கே. காஜா நஜீமுதீன், பொருளாளர் ஹாஜி கே.ஏ.கலீல் அகமது, உதவிச் செயலாளர் ஹாஜி எம்.ஜே. ஜமால் முகமது ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மேலும் கல்லூரியின் துணை முதல்வர் கூடுதல் துணை முதல்வர் முனைவர் எம்.முகமது சிகாபுதீன், மேலாண்மைத்துறை இயக்குநர் முனைவர் கே.அப்துஸ் சமது, சுயநிதிபிரிவு இயக்குநர் முனைவர். கே. என். அப்துல் காதர் நிகால், விடுதி இயக்குநர்கள் முனைவர் கே.என். முகமது பாஜில், பேரா. எம்.ஏ.ஜமால் முகமது யாசின் ஜுபைர், பல துறை தலைவர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். முடிவில் துணை முதல்வர் முனைவர் ஏ.முகமது இப்ராகிம் நன்றியுரையாற்றினார்.




# திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் தூய்மை இந்தியா தின உறுதிமொழி

திருச்சி, ஆக.9–

திருச்சி ஜமால் முகமது கல்லூரி நாட்டு நலப்பணித் திட்டம் சார்பில் தூய்மை இந்தியா தின உறுதிமொழி ஏற்பு விழா திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நடைபெற்றது. இந்த விழாவில் கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் முனைவர் ஏ.கே. காஜா நஜீமுதீன் மற்றும் கல்லூரி முதல்வர் முனைவர் இஸ்மாயில் முகைதீன் தலைமையுரை வழங்கினார். அவர்களும் மற்றும் இக்கல்லூரியின் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் முனைவர். எம். காமராஜ் மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட தொண்டர்கள் கலந்து கொண்டு தூய்மை இந்தியா தின உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். பின்பு கல்லூரியின் வளாகம் மற்றும் கல்லூரியின் வெளியே சாலை ஓரங்களில் உள்ள குப்பைகள் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை, இக்கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் மற்றும் தொண்டர்கள் ஏற்பாடு செய்தனர்.

நிகழ்வின் சிறப்பு விருந்தினராக கல்யாணசுந்தரம், தலைமை சுகாதாரத்துறை ஆய்வாளர், தென்னக ரெயில்வே, திருச்சிராப்பள்ளி ஜங்ஷன், திருச்சிராப்பள்ளி கலந்து கொண்டு நாட்டு நலப்பணித்திட்டத்தின் நிகழ்வுகளை குறித்து மிக சிறப்பாக பேருரை ஆற்றினார்.

கல்லூரியின் செயல்பாடுகளைக் குறித்தும் நாட்டு நலப்பணித்திட்ட மேனாள் அலுவலர்கள், மாணவர்கள் குறித்தும் பாராட்டு வழங்கினார். முன்னாள் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பு செய்தனர். நிகழ்ச்சியை நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர்கள் முனைவர் காமராஜ், முனைவர் அன்வர் சாதிக், அக்பர் அலி, ஃபைஸ் பாஷா மற்றும் முனைவர். ஆசிக் அஹமது ஏற்பாடு செய்திருந்தனர்.

அண்ணாநகரில் முதன்மையான தங்க நகை ஷோ ரூம்
For Trust & Integrity
வாவு ஜுவல்லர்ஸ்
தங்கம் | வெள்ளி | வைரம் | மாணிக்கம்
AA-7A, 2வது அவென்யு (ரவுண்டானா அருகில்), அண்ணாநகர், சென்னை - 600 040. போன் : 044 2628 4295, 2628 4296
Sunday open upto 1.30 p.m.

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper
RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018
TN /PMG (CCR) WPP258/2016-18

தரம்
மென்மை
நீடித்த உழைப்பு
999
மார்க் லுங்கிகள்
இது வெறும் நம்பரல்ல, நம்பிக்கை!

மணி - 32 சுடர் - 352 | ஹிஜ்ரி 1438 - துல்காயிதா - 07 | திருவள்ளுவர் ஆண்டு 2048 ஆடி - 15 | சென்னை 31.07.2017 திங்கள் | வெளியீடு 01.08.2017 செவ்வாய் | http://muslimleaguetn.com/manichudar.asp | பக்கம் - 4 | விலை ₹ 3




# திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி பெண்கள் பிரிவு இளம் அரிமா சங்க 9 வது ஆண்டு புதிய நிர்வாகிகள்

திருச்சி, ஜூலை.31-

ஜமால் முகம்மது கல்லூரி பெண்கள் பிரிவு இளம் அரிமா சங்கத்தின் 9 வது ஆண்டு புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு விழா கல்லூரியின் உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. குருதியைக் கொடையாக வழங்குவதிலே, மற்றவர்களுக்கு உதவி செய்வதிலே இச்சங்கம் மிகச் சிறந்த முறையில் இயங்கி வருகிறது.

இச்சங்கம் கடந்த 8 ஆண்டுகளாக மாணவிகளை வைத்து மிகச்சிறப்பாகச் செயலாற்றி வருகிறது. மாணவிகளிடையே இரத்த தானம் பற்றி விழிப்புணர்வு வழங்குவதில் முன்னிலை வகிக்கிறது.

மேலும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மக்களுக்கு நடத்துவதோடு தன் பணியை நிறுத்திக் கொள்ளாமல் ஏழை எளிய மாணவ, மாணவிகள் கல்வி உபகரணங்கள், பின்தங்கியிருக்கும், ஆதர வற்று இருக்கும் ஏழைப் பெண்கள் உழைத்துப் பயன் பெறும் வகையில் சுய வேலை வாய்ப்புகளை உருவாக்கித் தருகிறது.

இவ்வருடமும் 2017 - 2018 ஆம் கல்வியாண்டில் புதிய நிர்வாகிகள் பதவியேற்பு விழா கல்லூரியின் உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. விழாவிற்கு கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் மொய்தீன் தலைமை வகித்துப் பேசினார். இளம் அரிமா சங்கத்தின் ஆலோசகர் திருமதி. கிறிஸ்டின் மரிய ட்ராவிட் அனைவரையும் வரவேற்று பேசினார். கடந்த ஆண்டு செயல்பாடுகள் குறித்து முன்னாள் செயலர் லக்ஷிகா ஆண்டு அறிக்கை வாசித்தார்.

கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே. காஜா நஜீமுத்தீன், உதவிச் செயலர் ஹாஜி எம்.ஜே.ஜமால் முகமது ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அரிமா சங்கத்தின் மாவட்ட இரண்டாவது துணை ஆளுநர் ஜே. கார்த்திக் பாபு புதிய நிர்வாகிகளுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

இளம் அரிமா சங்கத்தின் மாவட்ட தலைவர் இளங்கோவன், முன்னாள் மாவட்ட அரிமா சங்கத்தின் கவர்னர் அரிமா ஆர். முருகேசன், திருச்சிராப்பள்ளி மிட்டவுன் அரிமா சங்கத்தின் தலைவர், திருச்சிராப்பள்ளி மிட்டவுன் அரிமா சங்கத்தின் செயலர் லட்சுமி நாராயணன், திருச்சிராப்பள்ளி மிட்டவுன் அரிமா சங்கத்தின் பொருளாளர் ஜே. செல்வின் ஆன்ரூஸ், அரிமா சங்கத்தின் மண்டல நிர்வாகிகளான, ஏ.இ. இராஜா, ஆர். பிரதீப் குமார், பி.என். நாகப்பன், எஸ். ஜேகன், எஸ். சாமுவேல், கே. ஆபிநயா, என். விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

விழாவில் மன்னார்புரம் தொடக்கப்பள்ளி மாணாக்கர்கள் 25 பேருக்கு அரிமாசங்கத்தின் சார்பாக சீருடைகள் வழங்கப்பட்டது. மேலும் ஆதரவற்ற பெண்மணி ஒருவருக்கு ஜமால் முகம்மது கல்லூரியின் பெண்கள் பிரிவு இளம் அரிமா சங்கத்தின் புதிய தலைவி ஜே. ஹாஜிரா பாத்திமா பசுங்கன்று ஒன்றை வழங்கி விழாவில் ஏற்புரையும் வழங்கினார். விழாவின் நிறைவாக கல்லூரி அரிமா சங்கத்தின் புதிய செயலர் என். கனிஷ்கா நன்றியுரை வழங்கினார்.

விழாவில் கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் ஏ. முகம்மது இப்பராஹீம், கூடுதல் துணை முதல்வர் முனைவர் முகம்மது சிஹாபுதீன், சுயநிதிப்பிரிவின் இயக்குநர் முனைவர் கந. அப்துல் காதர் நிஹால், விடுதி இயக்குநர் ஜமால் முகம்மது யாசின் ஜுபைர், பகுதி ஒருங்கிணைப்பாளர் முகம்மது சம்சுதீன், பெண்கள் விடுதி துணைக் காப்பாளர் முனைவர் ஏ. முகம்மது இஸ்மாயில் முன்னாள் முதல்வர்களான முனைவர் ஆர். காதர் மொய்தீன், முனைவர் ஏ.எம். முகம்மது சிந்தாஷா, முனைவர் எஸ். முகம்மது சாலிகு ஆகியோர் விழாவில் கலந்துகொண்டனர்.

# ‘வரதட்சனை வாங்காமல் திருமணம் முடிப்போம்’: ஜமால் முகமது கல்லூரி மாணவர்கள் உறுதிமொழி

திருச்சி, ஜூலை 30–

ஜமால் முகம்மது கல்லூரி கைக்கூலி கைவிட்டோர் கழகத்தின் 33வது ஆண்டு புதிய நிர்வாகிகள் பதவி ஏற்புவிழா நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராக அரசியல் விமர்சகர் மற்றும் ஊடகவியாளர் ஆர் ஷாநவாஸ் கலந்துகொண்டு புதிய நிர்வாகிகளுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார். இந்த கழகத்தின் உள்ள 67 மாணவர்கள் எந்த சூழ்நிலையிலும் வரதட்சனை வாங்காமல் திருமணம் முடிப்போம் என உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி கைக்கூலி கைவிட்டோர் கழகம் மிகச்சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்த கழகம் வரதட்சனை தொடர்பான பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றார்கள். இதுவரை கல்லூரியில் 3500க்கு மேற்பட்ட மாணவர்கள் எக்காரணத்தை கொண்டும் வரதட்சனை வாங்கமாட்டோம் என உறுதிமொழி ஏற்றுக்கொண்டுள்ளார்கள். இந்த கழகத்தை ஒவ்வொரு வருடமும் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் தான் இந்த கழகத்தை நிர்வகித்து வருவார்கள். அதன்படி இந்த வருடத்தின் 33வது புதிய நிர்வாகிகள் பதவிஏற்பு விழா காஜாமியான் விடுதியில் நடைபெற்றது.

விழாவுக்கு முதல்வர் முனைவர் இஸ்மாயில் மொய்தீன் தலைமை வகித்தார். கழகத்தின் ஆலோசகரும், வணிகவியல் துறை பேராசிரியர் முனைவர் அப்துல் ஹக்கீம் அனைவரையும் வரவேற்று பேசினார். கல்லூரி துணை முதல்வர் முனைவர் முஹம்மது இப்ராஹிம், கூடுதல் துணை முதல்வர் முனைவர் முஹம்மது சிகாபுதீன், விடுதி இயக்குநர்கள் முஹம்மது சகாபுதின், முஹம்மது பாசில், பேராசிரியர் ஜமால்முகம்மது யாசின் ஜீபைர், விடுதி ஒருங்கிணைப்பாளர் முனைவர் முகம்மது ஷர்புதின், கைக்கூலி கைவிட்டோர் கழக நிறுவனர் கூத்தா நல்லூர் அப்துல் சலீம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.




கைக்கூலி கைவிட்டோர் கழகத்தின் 33வது ஆண்டு புதிய தலைவராக எம். முஹம்மது நயாஸ், செயலாளராக கே.முஹம்மது பைசர் ரஹ்மான், பொருளராளராக முஹம்மது ஆசிப் முஸ்தபா, உதவும் இதயங்கள் செயலாளராக பைசல் அஹமது, துணைத்தலைவர்களாக எச். முஹம்மது சபயாத், எம்.முஹம்மது அப்சர், எம்.முஹம்மது இப்ராஹீம், எப்.முஹம்மது இம்ரான், எம். முஹம்மது ரிஸ்வான் பிரதிபலிப்பு இதழில் ஆசிரியர்களாக ஆர். சரவணன், அஹமது ரிஸ்வான், ஜி.கவின், எம்.பீர் முஹம்மது, மக்கள் தொடர்பு அலுவலர்களாக சமாருதீன், முகம்மது நாசர், ஹபீஸ் முகம்மது உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளுக்கு சிறப்பு விருந்தினர் தினராக அரசியல் விமர்சகர் மற்றும் ஊடகவியாளர் ஆர் ஷாநவாஸ் அடையாள அட்டை மற்றும் பதவிபிரமாணம் செய்து மாணவர்களுக்கு பல்வேறு அறிவுரைகள் மற்றும் வருங்காலத்தில் இளைஞர்கள் எப்படி இருக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்.

பின்னர் மாணவர்கள் பல்வேறு கேள்விகளுக்கு ஆரூர் ‘நாவாஸ் பதில் அளித்து மாணவர்களை உற்சாகப்படுத்தினார். கடந்த ஆண்டு கைக்கூலி கைவிட்டோம் கழகத்தின் தலைவர் கே.முஹம்மது ரபிக் கடந்த நிறைவேற்றப்பட்ட சட்டங்களை குறித்து அறிக்கைவாசித்தார். விழாவில் விடுதி காப்பாளர்கள் முனைவர் சையது அலி பாது‘ா, முனைவர் ஜாகீர் உசேன், பேராசிரியர் அப்பாஸ் மந்திரி, முனைவர் பிரச்சன்னா, கழகத்தின் முன்னாள் நிர்வாகிகள் முஹம்மது முஸ்தாக், நூர்ருதீன், முத்துப்பேட்டை முஹம்மது அனீபா, லாலப்பேட்டை முஹம்மது அஜிசுல்லா, திருச்சி செய்தியாளர் எம்.கே. சாகுல் ஹமீது மற்றும் இளம் அரிமா சங்கத்தின் மற்றும் ரோட்ராக்ட் கிளப் நிர்வாகிகள் விடுதிகளை காப்பாளர்கள் மாணவர்கள் திரளாக கலந்து கொண்டார்கள். புதிய செயலாளர் கே.முஹம்மது பைஜிர் ரஹ்மான் நன்றி கூறினார்.

# ஜமால் முகமது மகளிர் கல்லூரி புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு




திருச்சி, ஜூ.லை 30–

ஜமால் முகம்மது மகளிர் கல்லூரி கைக்கூலி கைவிட்டோர் கழகத்தின் 8வது ஆண்டு புதிய நிர்வாகிகள் பதவி ஏற்புவிழா நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராக அரசியல் விமர்சகர் மற்றும் ஊடகவியாளர் ஆர் ஷாநவாஸ் கலந்துகொண்டு புதிய நிர்வாகிகளுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார். இந்த கழகத்தின் உள்ள 200 மாணவிகள் எந்த சூழ்நிலையிலும் வரதட்சனை வாங்காமல் திருமணம் முடிப்போம் என உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

ஜமால் முகம்மது மகளிர் கல்லூரி கைக்கூலி கைவிட்டோர் கழகம் மிகச்சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இந்த கழகம் வரதட்சனை தொடர்பான பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றார்கள். இதுவரை கல்லூரியில் 3500க்கு மேற்பட்ட மகளிர்கள் எக்காரணத்தை கொண்டும் வரதட்சனை வாங்கமாட்டோம் என உறுதிமொழி ஏற்றுக்கொண்டுள்ளார்கள். இந்த கழகத்தை ஒவ்வொரு வருடமும் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் தான் இந்த கழகத்தை நிர்வகித்து வருவார்கள். அதன்படி இந்த வருடத்தின் 8வது புதிய நிர்வாகிகள் பதவிஏற்பு விழர் நடைபெற்றது.

விழாவுக்கு முதல்வர் முனைவர் இஸ்மாயில் மொய்தீன் தலைமை வகித்தார். கழகத்தின் ஆலோசகரும் தொழில்நுட்ப துறை பேராசிரியர் வகிதா கியாஸ்த்தீன் அனைவரையும் வரவேற்று பேசினார். கல்லூரி துணை முதல்வர் முனைவர் முஹம்மது இப்ராஹிம், கூடுதல் துணை முதல்வர் முனைவர் முஹம்மது சிகாபுதீன், விடுதி இயக்குநர்கள் முனைவர் முஹம்மது சகாபுதின், முனைவர் முஹம்மது பாசில், பேராசிரியர் ஜமால்முகம்மது யாசின் ஜீபைர், விடுதி ஒருங்கிணைப்பாளர் முனைவர் முகம்மது ஷர்புதின், கைக்கூலி கைவிட்டோர் கழக நிறுவனர் கூத்தா நல்லூர் அப்துல் சலீம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி செயலாளர் மற்றும் தாளாளர் ஏ.கே. காஜா நஜ்முத்தீன் வாழ்த்துரை வழங்கினார்.

ஜமால் முகம்மது மகளிர் கல்லூரி கைக்கூலி கைவிட்டோர் கழகத்தின் 8வது ஆண்டு கழகத்தின் தலைவராக அ.ஷிபானா பர்வீன், செயலாளராக அ.எல்.புஜா, பொருளாளராக எஸ். நபீலா சுபதான், உதவும் இதயங்களின் செயலாளராக காத்திஜத்துல் புஸ்ரா, துணைத்தலைவராக ஐநூனுன், இணைச்செயலாளராக ரபீகா நிலோபர், கூடுதல் துணைத்தலைவராக ஷகிக்கா பர்வீன், பிரதிப்பலிப்பு இதழின் ஆசிரியர்களாக அமீரா, மக்கள் தொடர்பு அலுவலராக நூரூல் பகுமிதா பர்வீன் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளுக்கு அரசியல் விமர்சகர் மற்றும் ஊடகவியாளர் ஆர் ஷாநவாஸ் பதவி பிராமாணம் செய்துவைத்து மற்றும் அடையாள அட்டைகளை வழங்கினார்.

விழாவில் முன்னாள் முதல்வர்கள் ஆர். காதர் மொய்தீன். முகம்மது ஜிந்தாஷா, விடுதி காப்பாளர்கள் கழகத்தின் முன்னாள் நிர்வாகிகள் முஹம்மது முஸ்தாக், முத்துப்பேட்டை முஹம்மது அனீபா, லாலப்பேட்டை முஹம்மது திருச்சி செய்தியாளர் எம். கே. சாகுல் ஹமீது மற்றும் இளம் அரிமா சங்கத்தின் மற்றும் ரோட்ராக்ட் கிளப் நிர்வாகிகள் விடுதிகளை காப்பாளர்கள் மாணவர்கள் திரளாக கலந்து கொண்டார்கள். விழா முடிவில் கழகத்தின் மாணவி சுமையா அனைவருக்கும் நன்றி கூறினார்.

http://www.maalaimalar.com Regd. No. TRY/061/2015-2017 RNI.No.42628/85

மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

MAALAI MALAR

திருச்சி 27-7-2017 (வியாழக்கிழமை) 8 பக்கம் 400 காசு ★★★ | மலர் 40 இதழ் 224




டெங்கு விழிப்புணர்வு பேரணியினை பொன்மலைக்கோட்ட உதவி ஆணையர் தயாநிதி கொடியசைத்து துவக்கி வைத்த போது எடுத்த படம்.

## கே.கே.நகரில் மாநகராட்சி சார்பில்

# டெங்கு விழிப்புணர்வு பேரணி

கே.கே.நகர். ஜூலை.27–

திருச்சி மாநகராட்சி சார்பில் மாநகரின் பல்வேறு பகுதிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது.இதன்ஒருபகுதியாக திருச்சி மாநகராட்சி 38–வது வார்டு கே.கே நகர் பேருந்து நிலையத்தில் இருந்து சுந்தர்நகர் பெரியார் கல்வி வளாகம் வரை கல்லூரி மாணவ, மாணவிகள் பங்கு பெற்றபொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பேரணி நடை பெற்றது.

இதில் எம்.ஏ.எம், ஈ.வே.ரா.ஜமால் கல்லூரி மாணவ, மாணவிகள் சுமார் 400 பேர் பங்கு பெற்றனர். இந்தபேரணியை பொன்மலைக்கோட்ட உதவி ஆணையர் தயாநிதி கொடியசைத்து துவக்கி வைத்தார். பேரணியில் உதவி பொறியாளர் ரவிச்சந்திரன், சுகாதார அதிகாரி கார்த்திகேயன், சுகாதார அலுவலர் பிரின்ஸ், இளநிலைப் பொறியாளர்கள் கிருஷ்ணமூர்த்தி, ஜோசப், வருவாய் அலுவலர் பாலசுப்ரமணியன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

Edited and Published by **C.SENTHILKUMAR**, for Malar Publications (P) Ltd., 13, Macdonalds Road, Trichy-620001 and Printed by **N.VIJAYAKUMAR**, at V.C.Printograph, No.144, M.K.Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambikapuram, Ariyamangalam, Trichy-620 010.

முரசு: 57 ஒலி: 72
ஆடி மாதமும், அம்மன் வழிபாடும் புத்தகத்துடன்
8 பக்கங்கள் விலை 500 காசுகள்
THANJAI MALAI MURASU
Reg.No. TRY/060/2015-2017
RNI Regn. No.5842/61
தஞ்சை
மாலை முரசு
திருச்சி பதிப்பு
27-7-2017 (ஆடி 11) வியாழக்கிழமை




திருச்சி மாநகராட்சி பொன்மலை கோட்டம் கே.கே.நகரில் இன்று டெங்கு காய்ச்சல் உண்டாக்கும் கொசு உற்பத்தி ஆதாரங்கள் அழித்தல் மற்றும் தடுத்தல் தொடர்பான விழிப்புணர்வு பேரணியை மாநகராட்சி ஆணையர் ரவிச்சந்திரன் உத்தரவின்பேரில் உதவி ஆணையர் தயாநிதி கொடியசைத்து தொடங்கி வைத்தார். இப்பேரணி கே.கே.நகர் பேருந்து நிலையத்திலிருந்து தொடங்கி ராசாராம் சாலை, சாத்தனூர் சாலை வழியாக மணியம்மை பள்ளியில் முடிவடைந்தது. பேரணியில் மாணவ, மாணவிகள் மற்றும் மாநகராட்சி பணியாளர்கள் கலந்து கொண்டார்கள்.

# ஜமால் முகம்மது கல்லூரி இளம் அரிமா சங்கத்தின் 9–வது ஆண்டு புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு விழா




திருச்சி, ஜூலை 27,

ஜமால் முகம்மது கல்லூரி பெண்கள் பிரிவு இளம் அரிமா சங்கத்தின் 9 வது ஆண்டு புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு விழா கல்லூரியின் உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. இந்த பெண்கள் பிரிவு அரிமா சங்கம் ஆசியக் கண்டத்தில் மிகச் சிறந்த முறையில் இயங்கி வருகிறது. குருதியைக் கொடையாக வழங்குவதிலே, மற்றவர்களுக்கு உதவி செய்வதிலே இச்சங்கம் மிகச் சிறந்த முறையில் இயங்கி வருகிறது.

திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி பெண்கள் பிரிவு இளம் அரிமா சங்கம் கடந்த 8 ஆண்டுகளாக மாணவிகளை வைத்து மிகச்சிறப்பாகச் செயலாற்றி வருகிறது. மாணவிகளிடையே இரத்ததானம் பற்றி விழிப்புணர்வு வழங்குவதில் முன்னிலை வகிக்கிறது. மேலும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மக்களுக்கு நடத்துவதோடு தன் பணியை நிறுத்திக்கொள்ளாமல் ஏழை எளிய மாணாக்கர்களுக்கு கல்வி உபகரணங்கள், பின்தங்கியிருக்கும், ஆதரவற்று இருக்கும் ஏழைப் பெண்கள் உழைத்துப் பயன்பெறும் வகையில் சுய வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருகிறது.

வருடம்தோறும், புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அந்த வகையில் இவ்வருடமும் 2017 2018 ஆம் கல்வியாண்டில் புதியநிர்வாகிகள் பதவியேற்பு விழா கல்லூரியின் உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. விழாவிற்கு கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். இஸ்மாயில் மொய்தீன் தலைமை வகித்துப் பேசினார். இளம் அரிமா சங்கத்தின் ஆலோசகர் திருமதி. கிறிஸ்டின் மரிய ட்ராவிட் அனைவரையும் வரவேற்று பேசினார். கடந்த ஆண்டு செயல்பாடுகள் குறித்து முன்னாள் செயலர் லக்ஷிகா ஆண்டு அறிக்கை வாசித்தார்.

கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் டாக்டர் ஏ.கே. காஜா நஜீமுத்தீன், உதவிச்செயலர் ஹாஜி எம்.ஜே.ஜமால் முகமது ஆகியோர் சிறப்பான வாழ்த்துரை வழங்கினர். அரிமா சங்கத்தின் மாவட்ட இரண்டாவது துணை ஆளுநர் ஜே. கார்த்திக் பாபு புதிய நிர்வாகிகளுக்குப் பதிவிப் பிரமாணம் செய்துவைத்தார்.

இளம் அரிமா சங்கத்தின் மாவட்ட தலைவர் இளங்கோவன், முன்னாள் மாவட்ட அரிமா சங்கத்தின் கவர்னர் அரிமா ஆர். முருகேசன், திருச்சிராப்பள்ளி மிட்டவுன் அரிமா சங்கத்தின் தலைவர், திருச்சிராப்பள்ளி மிட்டவுன் அரிமா சங்கத்தின் செயலர் லட்சுமி நாராயணன், திருச்சிராப்பள்ளி மிட்டவுன் அரிமா சங்கத்தின் பொருளாளர் ஜே. செல்வின் ஆன்ரூஸ், அரிமா சங்கத்தின் மண்டல நிர்வாகிகளான, ஏ.இ. இராஜா, ஆர். பிரதீப் குமார், பி.என். நாகப்பன், எஸ். ஜேகன், எஸ். சாமுவேல், கே. ஆபிநயா, என். விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

விழாவில் மன்னார்புரம் தொடக்கப்பள்ளி மாணாக்கர்கள் 25 பேருக்கு அரிமாசங்கத்தின் சார்பாக சீருடைகள் வழங்கப்பட்டது. மேலும் ஆதரவற்ற பெண்மணி ஒருவருக்கு ஜமால் முகம்மது கல்லூரியின் பெண்கள் பிரிவு இளம் அரிமா சங்கத்தின் புதிய தலைவி ஜே. ஹாஜிரா பாத்திமா அவர்கள் பசுங்கன்று ஒன்றை வழங்கி விழாவில் ஏற்புரையும் வழங்கினார். விழாவின் நிறைவாக கல்லூரி அரிமா சங்கத்தின் புதிய செயலர் என். கனிஷ்கா அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

விழாவில் கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் ஏ. முகம்மது இப்பராஹீம், கூடுதல்துணை முதல்வர் முனைவர் முகம்மது சிஹாபுதீன், சுயநிதிப்பிரிவின் இயக்குநர் முனைவர் க.ந. அப்துல் காதர் நிஹால், விடுதி இயக்குநர் ஜமால் முகம்மது யாசின் ஜுபைர், பகுதி ஒருங்கிணைப்பாளர் முகம்மது சம்சுதீன், பெண்கள் விடுதி துணைக் காப்பாளர் முனைவர் ஏ. முகம்மது இஸ்மாயில் முன்னாள் முதல்வர்களான முனைவர் ஆர். காதர் மொய்தீன், முனைவர் ஏ.எம். முகம்மது சிந்தாஷா, முனைவர் எஸ். முகம்மது சாலிகு ஆகியோர் விழாவில் கலந்துகொண்டனர்.

# ஜமால் முகம்மது கல்லூரி ரோட்ராக்ட் கிளப் புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு




திருச்சி, ஜூலை 21–

திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி ரோட்ராக்ட் கிளப்பின் 44 வது ஆண்டு புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு விழா காஜாமியான் கிடுதியில் நடைபெற்றது.

திருச்சி ஜமால்முகம்மது கல்லூரியில் ரோட்ராக்ட் கிளப் 44 வருடங்களாக மிகச்சிறப்பாக செயல்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு மட்டும் 1000 க்கு மேற்பட்ட இரத்த யூனிட்டுகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு பல்வேறு விருதுகள் வாங்கி இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டு இந்த கிளப் தலைவர் ஆசிப், செயலாளர் எஸ். ஷேக் முஹம்மது, பொருளாளர் இர்'ாத் அஹமது ஆகியோர் தலைமையில் பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் மற்றும் 1000 க்கும் மேற்பட்ட இரத்த யூனிட்டுகள் வழங்கி இருக்கிறார்கள். 2017–18 ஆம் ஆண்டு புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு விழா காஜாமியான் விடுதியில் நடைபெற்றது. விழாவிற்கு கல்லூரி முதல்வர் முஹம்மது மொய்தீன் தலைமை வகித்தார். விடுதியின் துணை காப்பாளர் மற்றும் கிளப் ஆலோசகர் முனைவர் ஆர். ஜாகிர் உசேன் அனைவரையும் வரவேற்று பேசினார். கல்லூரி உதவிச் செயலாளர் எம்.ஜே.ஜமால் முஹம்மது, துணை முதல்வர் முனைவர் முஹம்மது இப்ராஹிம், ரோட்டரி தலைவர் ஜி.ஆர்.ராஜ், ரோட்டரி செயலாளர் சேதுராமன், ரோட்டரி ஒருங்கிணைப்பாளர் பி.பாலசந்தர், மண்டல ஒருங்கிணைப்பாளர் பி.மணிகண்டன், ரோட்டரி இயக்குநர் சித்தார்த் உள்பட பலர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

ரோட்ராக்ட் கிளப்பின் 44 வது ஆண்டு புதிய நிர்வாகிகள் பதவி ஏற்புக்கு சிறப்பு விருந்தினராக மாவட்ட இயக்குநர் மற்றும் ஜெரால்டு இருதயராஜ் கலந்து கொண்டு இந்த ஆண்டின் நிர்வாகிகளுக்கு பதவி பிரமாணம் மற்றும் அடையாள அட்டைகளை வழங்கி மாணவர்களுக்கு பல்வேறு அறிவுரைகளை வழங்கி பேசினார்.

2017– 18 ஆம் ஆண்டின் புதிய நிர்வாகிகள் பின்வருமாறு :

எம். முஹம்மது அலி புகாரி செயலாளராகவும், என். முஹம்மது முஸ்தபா பொருளாளராகவும், எஸ் முஹம்மது தாஹா அஸ்லன், எஸ்.சமீர்கான் ஆகியோர் துணைத் தலைவர்களாகவும், எஸ். ஜாபர் சாதிக், என்.கரண் ஆகியோர் இணைச் செயலாளர்களாகவும், எம்.மன்சூர், அ.மணிகண்டன், கே.மிதுன்ராஜ், ஆகியோர் இரத்ததான பொறுப்பாளர்களாகவும், எம்.முஹம்மது இப்ராஹிம், கே.முத்துமணி, அ.பாலகுமார், ஜே.நாவிண்ட் ஆகியோர் ஜம்போ இதழின் ஆசிரியர்களாகவும் அ.சையது இப்ராஹிம், எச்.அஸ்ரப் அலி ஆகியோர் மக்கள் தொடர்பு அலுவலர்களாகவும், 29 பேர் கிளப் இயக்குநர்களாக உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன.

விழாவில் விடுதி காப்பாளர்கள் சையது அலிபாதுஷா, முனைவர் சையது ஹக்கீம், பிரசன்னா, இஸ்மாயில், பேராசிரியர் முனைவர் காஜாமைதீன், திருச்சி செய்தியாளர் எம்.கே.சாகுல் ஹமீது மற்றும் கைக்கூலி கைவிட்டோர் கழகம், இளம் அரிமா சங்கத்தின் நிர்வாகிகள், துணை காப்பாளர்கள், மாணவர்கள் திரளாக கலந்து கொண்டார்கள். இந்த ஆண்டின் புதிய தலைவர் எம். முஹம்மது ஆரிப் நன்றி கூறினார்.

RICE CITY
Nurturing Tomorrow
Rice City Matriculation Higher Secondary School
Railway Road, Aduthurai - 612 101 Ph : 0435 2473350 / 2470138
E-mail : ricecityschool@gmail.com www.ricecity.org

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper

RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018
TN /PMG (CCR) WPP258/2016-18

SCM SHIRTS
A product of Seyad Cotton Mills
Seyad Home Industries Private Limited
Tirunelveli - 627 003



## திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரியில்

# துபை ஈமான் கல்வி அறக்கட்டளை சார்பில் 1000 மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டது




திருச்சி ஜூலை 16-

துபாய் ஈமான் கல்வி அறக்கட்டளை சார்பில் தமிழகத்தில் பல்வேறு கல்லூரிகளில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு 100பேருக்கு கல்வித் உதவித் தொகை ஜமால் முகம்மது கல்லூரியில் வழங்கப்பட்டது.

துபாயில் ஈமான் கல்வி அறக்கட்டளை நீண்ட வருடங்களாக செயல்பட்டு வருகிறது.இந்த அறக்கட்டளை பல்வேறு வித பணிகளை செய்து வருகிறது.

குறிப்பாக, கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு கல்வி உதவித் தொகைகளை வழங்கி வருகிறது. அதன் படி இந்த வருடத்தில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் விழா ஜமால் முகம்மது கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

விழாவுக்கு ஈமான் கல்வி அறக்கட்டளை தலைவர் ஹாஜி. பிஎஸ்எம் ஹபிபுல்லா தலைமை வகித்து பேசினார். பொதுச் செயலாளர் ஹமீது யாசீன் அனைவரையும் வரவேற்று பேசினார். ஈமான் கல்வி அறக்கட்டளையின் எதிர்கால திட்டங்கள் மற்றும் கல்வி உதவித்தொகைப் பற்றி ஈமான் கல்வி அறக்கட்டளையின் கல்வி துறை செயலாளர் டைஜுர் ரஹ்மான் மாணவ மாணவிகளுக்கு பல்வேறு அறிவுரைகளை வழங்கினார்கள்.

கல்லூரி தாளாளர் முனைவர் ஏகே காஜா நஜ்முதீன் உதவிச் செயலாளர் எம்கே ஜமால் முஹம்மது, கல்லூரி முதல்வர் முனைவர் இஸ்மாயில் மொய்தீன், ஈமான் கல்வி அறக்கட்டளையின் இணைச் செயலாளர் மொய்தீன் அப்துல் காதர், பொருளாளர், முன்னாள் முதல்வர் குத்தாலம் லியாகத் அலி, முன்னாள் துணை பாசில், முன்னாள் மாணவர் சங்கத்தின் செயலாளரும் விடுதி ஒருங்கிணைப்பாளர் முனைவர் முகம்மது சர்புதீன், திருச்சி செய்தியாளர் எம்கே ஷாஹுல் ஹமீது, மற்றும் தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் இருந்து மாணவ மாணவிகள்



பொதுச் செயலாளர் தாஹா அரபித் துறை பேராசிரியர் மௌலவி முஹம்மது இஸ்மாயில் ஹசனி, அய்மான் மகளிர் கல்லூரி தாளாளர் முனைவர் எம்எம் ஷாகுல் ஹமீது, ஆகியோர் வருங்காலத்தில் எப்படியெல்லாம் அரசு பதவிகளில் நாம் வளர வேண்டும்.என்று ஐஏஎஸ் உயர் பதவிகளில் வருங்கால மாணவ மாணவிகள் வர வேண்டும் என அறிவுரை வழங்கினார்கள்.

விழாவில் கல்லூரி துணை முதல்வர் முனைவர் முஹம்மது இப்ராஹிம், முன்னாள் முதல்வர் ஆர்காதர் மொய்தீன், முன்னாள் மாணவர் சங்கத்தின் மலேசிய பிரிவின் தலைவர் கான் என்ற நசுருல்லா கான், கல்லூரியின் சுயநிதி பிரிவின் இயக்குநர் முனைவர் அப்துல் காதர் நிஹால், விடுதி இயக்நர் முனைவர் முஹம்மது அவர்களது பெற்றோர்கள் கலந்து கொண்டார்கள். நிகழ்ச்சிகளை முதுவை இதயத்துல்லா தொகுத்து வழங்கினார்.

பின்னர், ஈமான் சங்கத்தின் அனைத்து நிர்வாகிகளும் கல்லூரியில் விசுவல் கம்யூனிகேசன் துறை சார்பில் நவீன தொழில் நுட்பத்துடன் தயாராகி வரும் எடிட்டிங், கலந்தாய்வு அரங்கம் போன்றவைகளை சுற்றிப் பார்த்தார்கள்.

பின்னர், கல்லூரியின் சுயநிதி பிரிவின் இயக்குநர் முனைவர் அப்துல் காதர் நிஹாலிடம் இது போன்ற அரங்கங்கள் வேறு எந்த கல்லூரியிலும் இருக்கிறதா என்று கேட்டனர் அதற்கு தமிழகத்தில் இது போன்று எந்த கல்லூரியிலும் இல்லை என்று கூறினார்.

# ஜமால் முகம்மது கல்லூரி இளம் அரிமா சங்கத்தின் 35 வது ஆண்டு புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு

திருச்சி ஜீலை 18

ஜமால் முகம்மது கல்லூரி இளம் அரிமா சங்கத்தின் 35 வது ஆண்டு புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு விழா காஜாமியான்விடுதியில்நடைபெற்றது. ஆசியாவிலேயே சிறந்த இளம் அரிமா சங்கமாகும், அதே போன்று இரத்த தானம் வழங்கியதில் தொடர்ந்து முதலிடத்தை வகித்து வருகிறது. கடந்த மாதம் வரை 1327 இரத்த யூனிட்டுகள் வழங்கப்பட்டுள்ளது.

திருச்சி ஜமால் முகம்மது கல்லூரியில் இளம் அரிமா சங்கம் 34 ஆண்டுகளாக மிகச்சிறப்பாக மாணவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள். இவர்களுடைய முக்கிய பணியானது இரத்த தானம். இரத்ததானம்வழங்குவதில் தொடர்ந்து முதலிடம் பிடித்து வருகிறது இளம் அரிமா சங்கம். அதுமட்டுமில்லாமல் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மக்களுக்கு நடத்தி வருகிறார்கள். குறிப்பாக விடுதி மாணவர்கள் மட்டும் இதனை முழு மூச்சாக நடத்தி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வருடம் தோறும், புதிய நிர்வாகிகள் தோ்ந்தெடுக்கப்படுவார்கள். கடந்த வருடம் மூன்றாம் ஆண்டு மாணவர் எஸ்.முகம்மது 'ரீப் தலைவராகவும், எஸ்.சையது மசூது பாரூக் செயலாளராகவும், சையது மைதீன் புகாரி பொருளாளராகவும், சிறப்பாக கடந்த ஆண்டு செயல்பட்டு வந்தனர். கடந்த ஆண்டு மட்டும் திருச்சி மாநகர் மற்றும் புறநகர் மருத்துவமனைகளுக்கு நேரடியாக சென்று 1327 க்கு மேற்பட்ட ரத்த யூனிட்டுகளை வழங்கி பல்வேறு உயிர்களை காப்பாற்றியுள்ளனர். தொடர்ந்து ரத்ததானம் வழங்குவதில் பல வருடங்களாக தொடர்ந்து முதலிடம் பெற்று வருகின்றார்கள். அதே போன்று போக்குவரத்து தொடர்பான 30 க்கு மேற்பட்ட பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார்கள்.

2017 18 ஆம் ஆண்டு புதிய இளம் அரிமா சங்கத்தின் புதிய நிர்வாகிகள் பதவி ஏற்பு விழா காஜாமியான் விடுதியில் நடைபெற்றது.

விழாவிற்கு கல்லூரி முதல்வர் முனைவர் எஸ்.இஸ்மாயில் மொய்தீன் தலைமை வகித்து பேசினார்.

இளம் அரிமா சங்கத்தின் ஆலோசகர் முனைவர் சையது அலி பாது'ா




அனைவரையும் வரவேற்று பேசினார். கடந்த ஆண்டு செயல்பாடுகளை குறித்து முன்னாள் நிர்வாகி ஷேக் மைதீன் இப்ராஹிம் ஆண்டு அறிக்கை வாசித்தார்.

கல்லூரி உதவிச் செயலாளர் ஹாஜி எம்.ஜே.ஜமால் முகமது, இளம் அரிமா சங்கத்தின் மாவட்ட தலைவர் இளங்கோவன், மிட்டவுன் கிளப் செயலாளர் லெட்சுமி நாராயணன் பொருளாளர் செலண்ட்ரிங் ஆண்ட்ரோஸ், மண்டல தலைவர் பிரதீப்குமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். .

201718 ஆம் ஆண்டின் இளம் அரிமா சங்கத்தின் தலைவராக கணிணித்துறையைச் சார்ந்த மாணவர் அ.முஹம்மது மன்சூர், செயலாளராக அ.மஹபூப் பாட்சாவும், பொருளாளராக எஸ். முஹம்மது நவ்பிக் அலியும், துணை தலைவர்களாக எஸ்.சுவைபு மற்றும் ஆதில் அஹமது அவர்களும், இணைச் செயலாளர்களாக எம். முகமது தன்சீல், முகமது ரிஃபாஸ் அவர்களும், இளம் அரிமா சங்கத்தின் மண்டல ஒருங்கிணைப்பாளராக எஸ். முஹம்மது நத்தீமும் இரத்ததான மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களாக என். சையது ஜமீர் அஹமதுவும், முஹம்மது ஆசிக்கும், இளம் அரிமா சங்கத்தின் தலைமை பயிற்றுநராக முஹம்மது நிசாருதீனும், கல்லூரியின் இரத்த ஒருங்கிணைப்பாளர்களாக என்.அஜ்மலுதீன் அஹமது, ரகுமான் கான் என். ஜாகீர் உசேன், சங்கமம் இதழின் ஆசிரியர்களாக முகமது ஆசிக், ஹக்கீம், இளம் ஆழமா சங்கத்தின் இயக்குநர்களாக எம். அப்துல்லா, அப்துல் ஹக், மக்கள் தொடர்பு அலுவலர்களாக அமீர் அஹமது, முகமது இர்'ாத் மற்றும் பல்வேறு பொறுப்புகளுக்கு இளம் அரிமா சங்கத்தின் மாவட்ட ஆளுநர் கார்த்திக் பாபு பதவி பிரமாணம் செய்து அடையாள அட்டைகளை வழங்கினார்.

விழாவில் இளம் அரிமா சங்கம் சார்பில் மஜ்லீஸ் உலமாவில் உள்ள அனாதை இல்லத்தில் உள்ள 15 பேருக்கு ரூ.5000ஃ மதிப்புள்ள துணிமணிகளை கல்லூரி உதவிச்செயலாளர் ஹாஜி.எம்ஜே. ஜமால் முஹம்மது, கல்லூரி முதல்வர் எஸ்.இஸ்மாயில் மொய்தீன், துணை முதல்வர் முனைவர் முஹம்மது இப்ராஹிம், கூடுதல் துணை முதல்வர் முனைவர் முஹம்மது ஜிஹாபுதீன் ஆகியோர் வழங்கினார்கள்.

விழாவில் விடுதி ஒருங்கிணைப்பாளர் முனைவர் முஹம்மது 'ர்புதீன், விடுதி இயக்குநர்கள் முனைவர் முஹம்மது பாசில், முனைவர் முஹம்மது ஜிகாபுதீன், பேராசிரியர் ஜமால் முஹம்மது யாசின் ஜீபைர், விடுதி காப்பாளர்கள் முனைவர் சையது ஹக்கீம், முனைவர் ஆர்.ஜாகீர் உசேன், பேராசிரியர் அப்பாஸ், முனைவர் எம்.முஹம்மது சம்சுதீன் இளம் அரிமா சங்கத்தின் மண்டல சோ'மன் ராஜா, ஆலோசகர் நாகப்பன், இளம் அரிமா சங்கத்தின் நிர்வாகிகள் மற்றும் விடுதியின் உதவி காப்பாளர், கைக்கூலி கைவிட்டோர் கழகம், ரோட்ராக்ட் கிளப்பின் நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டார்கள் இளம் அரிமா சங்கத்தின் மண்டல ஒருங்கிணைப்பாளர் முஹம்மது நத்தீம் நன்றி கூறினார்.

RICE CITY
Nurturing Tomorrow
Rice City Matriculation Higher Secondary School
Railway Road, Aduthurai - 612 101 Ph : 0435 2473350 / 2470138
E-mail : ricecityschool@gmail.com www.ricecity.org

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper

RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018
TN /PMG (CCR) WPP258/2016-18

தரம்
மென்மை
நீடித்த உழைப்பு
999
மார்க் லுங்கிகள்
இது வெறும் நம்பரல்ல, நம்பிக்கை!

மணி - 32 சுடர் - 333 | ஹிஜ்ரி 1438 - ஷவ்வால் - 17 | திருவள்ளுவர் ஆண்டு 2048 ஆனி - 28 | சென்னை 12.07.2017 புதன் | வெளியூர் 13.07.2017 வியாழன் | http://muslimleaguetn.com/manichudar.asp | பக்கம் - 4 | விலை ₹ 3

# திருச்சி ஜமால் முஹம்மது கல்லூரி நிறுவனர் நினைவு நாள் விழா

## பேராசிரியர் ஜவாஹிருல்லா சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்

திருச்சி, ஜூலை.12-

திருச்சி ஜமால் முகமது தன்னாட்சிக் கல்லூரியில் நிறுவனர் நாள் விழா (11.07.2017-செவ்வாய்க்கிழமை) அன்று நடைபெற்றது. 1951ம் ஆண்டு ஜுலை மாதம் 11-ந்தேதியன்று 12 பேராசிரியர்கள் 250 மாணவர்களைக் கொண்டு இக்கல்லூரி தொடங்கப் பட்டது. கல்லூரியின் நிறுவனர்களான ஹாஜி. ஆ. ஜமால் முகமது மற்றும் என்.எம். காஜாமியான் ராவுத்தர் ஆகியோரை நினைவு கொள்ளும் வகையில் இந்த விழாவிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கல்லூரி முதல்வர் முனைவர் இஸ்மாயில் முகைதீன் தலைமை உரையாற்றினார்.



நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினர்களாக 'உதயமணி' தமிழ்மாத இதழாசிரியரும், தினமணியின் மேனாள் தலைமை செய்தியாளருமான விஎன். சாமி கலந்துகொண்டு துவக்கவுரையாற்றினர் தமிழ்நாடு அரசு அருங்காட்சிய கத்துறையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற முன்னாள் உதவி இயக்குநர் முனைவர். ஜெ. ராஜாமுகம்மது 'முதல் தலைமுறை மனிதர்கள்' நூலாசிரியர் சேயன் இப்ராஹீம் 'சமரசம்' இதழின் துணைஆசிரியர் விஎஸ். முகமது அமீன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். மனிதநேய மக்கள் கட்சி தலைவர் பேராசிரியர்எம். எச். ஜவாஹிருல்லாஹ் விழா பேருரையாற்றினார். சிறப்பு விருந்தினர்கள் அனைவரும் நிறுவனர்களின் வள்ளல் தன்மையினையும், தற்போதுள்ள நிர்வாகிகள் தொண்டுள்ளத்துடனும், கல்வியை சேவையாக வழங்கியும் வருவதாகக் கூறினர்.

கல்லூரியின் தாளாளர் மற்றும் செயலாளர் டாக்டர் காஜா நஜீமுதீன்கல்லூரியின் தலைவர் ஜமால் முகமது பிலால், பொருளாளர் கலீல் அஹமது,துணைச்செயலாளர். ஜமால் முஹம்மது, மேலாண்மைத்துறை இயக்குநர் முனைவர் மு. அப்துஸ் சமது, சுயநிதிப்பிரிவு இயக்குநர் முனைவர் அப்துல் காதர் நிஹால், விடுதி நிர்வாக இயக்குநர்கள் முனைவர் முஹம்மது பாஜில், பேராசிரியர் ஜமால் முஹம்மது யாசின் ஜுபைர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை துணைமுதல்வர் முனைவர் முஹம்மது இப்ராஹிம், கூடுதல் துணைமுதல்வர் முனைவர் முஹம்மது சிஹாபுதீன் உள்ளிட்ட பேராசிரியகள் குழு, மாணவ - மாணவிகள் உள்ளிட்டோர் செய்திருந்தனர். இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட முன்னாள், இந்நாள் மாணவ - மாணவிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்




**Speakers at Jamal Mohamed College Founders' Day recalled the services renedered by it's founding fathers M. Jamal Mohamed Sahib and N.M. Kajamian Rowther. Dr. S. Ismail Mohideen, Principal, delivered the presidential address. Mr. V.N. Samy, Editor of 'Udhayamani Magazine' and J. Raja Mohamed, Assistant Director (Retd.) Department of Museum were the Chief Guests . The Keynote address was delivered by Mr. Cheyan Ibrahim, Editor, 'The Mudhal Thalai Murai Manithargal' and Mr. V.S. Mohamed Amin, Sub Editor of the 'Samarasam', Dr. Prof. M.H. Jawahirullah, the President of Manitha Neya Makkal Party offered felicitations on the occasion. Dr. A.K. Khaja Nazeemudeen D.Litt (USA), the Secretary and Correspondent, Janab. M.J. Jamal Mohamed Bilal, President, Hajee. K.A. Khaleel Ahamed, Treasurer, Hajee. M.J. Jamal Mohamed Sahib, Assistant Secretary, Dr. K. Abdus Samad, Director (JIM) and Dr. K.N. Abdul Khadar Nihal, Director (SF), Dr. K.N. Mohamed Fazil, and M.A. Jamal Mohamed Yaseen Zubeir, Directors - Hostel Administration offered felicitations and graced the occasion. A team of staff members, under the guidance of Dr. A. Mohamed Ibraheem, Vice Principal and Dr. M. Mohamed Sihabudeen, Additional Vice Principal organized the function.**

# திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் நிறுவனர் நாள் விழா




திருச்சி, ஜூலை 12–

திருச்சி ஜமால் முகமது தன்னாட்சிக் கல்லூரியில் நிறுவனர் நாள் விழா கொண்டாடப்பட்டது.

1951–ம் ஆண்டு ஜூலைமாதம் இதேநாள் 12 பேராசிரியர்கள் 250 மாணவர்களைக் கொண்டு இக்கல்லூரி தொடங்கப்பட்டது. கல்லூரியின் நிறுவனர்களான ஆ. ஜமால் முகமது மற்றும் காஜாமியான் ராவுத்தர் ஆகியோரை நினைவு கொள்ளும் வகையில் இந்த விழா கல்லூரி நிர்வாக கமிட்டி தலைமையில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன் தலைமை உரையாற்றினார்.

நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினர்களாக உதயமணி தமிழ்மாத இதழாசிரியரும், தினமணியின் மேனாள் தலைமை செய்தியாளருமான சாமி கலந்துகொண்டு துவக்கவுரையாற்றினார். மேலும், தமிழ்நாடு அரசு அருங்காட்சியகத்துறையைச் சோ்ந்த ஓய்வுபெற்ற முன்னாள் உதவி இயக்குனர் ஜெ. ராஜாமுகம்மது கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். முதல் தலைமுறை மனிதர்கள் நூலாசிரியர் சேயன் இப்ராஹீம் மற்றும் சமரசம் இதழின் துணைஆசிரியர் முகமது அமீன் ஆகியோர் கருத்துரை வழங்கினர். மேலும், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் ஜவாஹிருல்லாஹ் கலந்து கொண்டு விழா பேருரையாற்றினார். சிறப்பு விருந்தினர்கள் அனைவரும் நிறுவனர்களின் வள்ளல் தன்மையினையும், தற்போதுள்ள நிர்வாகிகள் தொண்டுள்ளத்துடனும், கல்வியை சேவையாக வழங்கியும் வருவதாகக் கூறினர்.

முன்னதாக, கல்லூரியின் தாளாளர் மற்றும் செயலாளர் ஏ.கே. காஜா நஜீமுதீன் வாழ்த்துரை வழங்கினார். மேலும், கல்லூரியின் தலைவர் எம்.ஜெ. ஜமால் முகமது பிலால், பொருளாளர் கலீல் அஹமது, துணைச்செயலாளர் ஜமால் முஹம்மது, மேலாண்மைத்துறை இயக்குநர் அப்பாஸ் சமது, சுயநிதிப்பிரிவு இயக்குநர் அப்துல் காதர் நிஹால், விடுதி நிர்வாக இயக்குநர்கள் முஹம்மது பாஜில், ஜமால் முஹம்மது யாசின் ஜுபைர் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை துணைமுதல்வர் முஹம்மது இப்ராஹிம், கூடுதல் துணைமுதல்வர் முஹம்மது சிஹாபுதீன் உள்ளிட்ட பேராசிரியர்கள் குழு, மாணவ மாணவிகள் உள்ளிட்டோர் செய்திருந்தனர். இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட முன்னாள், இந்நாள் மாணவ மாணவிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.




# தினமலர்

நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

-TPTC Edition-

ஆண்களுக்கான புராஸ்டேட் புற்றுநோய்
நவீன உயர் சிறப்பு சிகிச்சைகளுக்கு...
Q Med Hospital
QUALITY DEFINED
No.25, Officer's Colony Road, Renganathapuram,
Puthur, Near Fathima Church, Trichy-620 017.
Ph: 0431-4200711, 4200911, 97879 70972
சிறப்பு மருத்துவர்
Dr.K.ஜெயப்பிரகாஷ் நாராயணன் MBBS.,MS(Surgery)
M.Ch (Genito-Urinary Surgery), (Urology), Uro Oncologist

திருச்சி • வியாழன் • ஜூலை 13, 2017 | சென்னை, வேலூர், புதுச்சேரி, ஈரோடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் | • 16 பக்கம் • 600 காசு • மலர் 66 • இதழ் 310



ஜமால் முகமது கல்லூரியில் நிறுவனர் நாள் விழா கொண்டாடப்பட்டது.

# நிறுவனர் நாள் விழா

*திருச்சி:* ஜமால் முகமது கல்லூரியில் நிறுவனர் நாள் விழா கொண்டாடப்பட்டது. 1951ம் ஆண்டு 250 மாணவர்களுடன் இக்கல்லூரி தொடங்கப்பட்டது. கல்லூரி நிறுவனர்கள் ஜமால் முகமது, காஜாமியான் ராவுத்தர் ஆகியோரை நினைவு கூரும் வகையில் இந்த விழா நடந்தது. கல்லூரி முதல்வர் இஸ்மாயில் முகைதீன் அவர்கள் தலைமை வகித்தார். தமிழக அரசு அருங்காட்சியகத்துறையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற முன்னாள் உதவி இயக்குநர் ராஜாமுகம்மது, மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் ஜவாஹிருல்லா ஆகியோர் சிறப்புரையாற்றினர். கல்லூரி தாளாளர் காஜா நஜீமுதீன் வாழ்த்திப் பேசினார். கல்லூரி தலைவர் ஜமால் முகமது பிலால், பொருளாளர் கலீல் அஹமது, துணைச்செயலாளர் ஜமால் முகமது மற்றும் பலர் பேசினர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை துணைமுதல்வர் முகமது இப்ராஹிம், கூடுதல் துணைமுதல்வர் முகமது சிஹாபுதீன், பேராசிரியர்கள், மாணவ - மாணவிகள் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

http://www.maalaimalar.com Regd. No. TRY/061/2015-2017 RNI.No.42628/85

# மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்
MAALAI MALAR

திருச்சி 11-7-2017 (செவ்வாய்க்கிழமை) 8 பக்கம் 500 காசு ★★★ மலர் 40 இதழ் 208




திருச்சி ஜான்வெஸ்ட்ரி ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைபள்ளியில் இருந்து உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. பேரணியை கலெக்டர் ராசாமணி தொடங்கி வைத்தார். இதில் குடும்ப நலத்துறை துணை இயக்குனர் எலிசபெத்மேரி, மக்கள் கல்வி தொடர்பு அலுவலர் சாந்தி நிர்மலா உள்பட பலர் கலந்து கொண்டனர்.

REGD. No. TRY/056/2015-2017 ★★★★
இன்டர்நெட் முகவரி:
http://www.dailythanthi.com

– தினத்தந்தி, வெளிநாட்டு ஏடு போன்ற தோற்றம் உடையது –

# தினத் தந்தி
DAILY THANTHI

பவள விழா ஆண்டு

22 பக்கம் 500 காசு

திருச்சி (12–7–2017) புதன்கிழமை | மலர் 75 இதழ் 253 | ஹேவிளம்பி ஆனி மீ 28 உ ஹிஜிரி 1438 ஷவ்வால் 17

RAMRAJ COTTON WHITE SHIRTS
திருச்சி: 2, W.B. ரோடு ☎: 0431 - 271147
கரூர் | கும்பகோணம் | தஞ்சாவூர் | மாயவரம்

பட்டின் பாரம்பரியம்... 15%
தைலா Thaila
பட்டு • ரெடிமேட்ஸ் • மில்ஜவுளிகள்
55, பெரியகடை வீதி, திருச்சி-2



உலக மக்கள் தொகை தினத்தையொட்டி திருச்சியில் மாணவ–மாணவிகள் ஊர்வலமாக சென்ற போது எடுத்த படம். (உள்படம்: ஊர்வலத்தை கலெக்டர் ராஜாமணி கொடி அசைத்து தொடங்கி வைத்தார்).

### உலக மக்கள் தொகை தினத்தையொட்டி

# மாணவ, மாணவிகள் பங்கேற்ற விழிப்புணர்வு ஊர்வலம்

## கலெக்டர் தொடங்கி வைத்தார்

திருச்சி,ஜூலை.12–

உலக மக்கள் தொகை தினத்தையொட்டி மாணவ, மாணவிகள் பங்கேற்ற விழிப்புணர்வு ஊர்வலத்தை கலெக்டர் ராஜாமணி தொடங்கி வைத்தார்.

### உலக மக்கள் தொகை தினம்

மக்கள் தொகை பெருக்கத்தின் அபாயத்தை உணர வைக்கவும், மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் உலக சுகாதார நிறுவனம் ஆண்டுதோறும் ஜூலை 11–ந்தேதியை உலக மக்கள் தொகை தினமாக அறிவித்துள்ளது. அதன்படி ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதம் 11–ந் தேதி உலக மக்கள் தொகை தினமாக கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

### விழிப்புணர்வு ஊர்வலம்

இந்த ஆண்டு 28–வது உலக மக்கள் தொகை தினத்தையொட்டி நேற்று விழிப்புணர்வு ஊர்வலம் நடந்தது. திருச்சி வெஸ்ட்ரி பள்ளி அருகில் இருந்து புறப்பட்ட ஊர்வலத்தை மாவட்ட கலெக்டர் கே. ராஜாமணி தொடங்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில் 'பெண்களின் குடும்ப சுமையை குறைத்து நாடு நலம் பெற சிறு குடும்ப நெறியை பின்பற்றி பெருகி வரும் மக்கள் தொகையை கட்டுப்படுத்த ஆண்களும் ஒத்துழைக்க வேண்டும்.

கல்வி அவசியம், அதிலும் பெண் கல்வி மிகவும் அவசியம். எதிர்காலம் இளைஞர்களின் கையில் உள்ளது. மக்கள் தொகை பெருக்கத்தை கட்டுப்படுத்த இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த பள்ளி கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு பேச்சுப்போட்டி நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டுள்ளது' என்றார். இந்த ஊர்வலத்தில் பள்ளி, கல்லூரி மாணவ–மாணவிகள் மற்றும் டாக்டர்கள் கலந்து கொண்டனர்.

லாக் ஆன் செய்யுங்கள்
etamil.thehindu.com
இப்பொழுது டிஜிட்டலிலும்.

# தி இந்து

Vol. 5 No. 192 தமிழால் இணைவோம் RNI No.TNTAM/2013/55769

புதன், ஜூலை 12, 2017 • சென்னை, கோவை, மதுரை, திருச்சி, திருவனந்தபுரம், பெங்களூரு, திருப்பதி ஆகிய நகரங்களில் அச்சாகிறது • திருச்சி பதிப்பு • 20 பக்கங்கள் ₹ 5

எமது பதிப்புகள்: சென்னை, காஞ்சிபுரம், புதுவை, வேலூர், கோவை, சேலம், தருமபுரி, திருச்சி, தஞ்சாவூர், மதுரை, ராமநாதபுரம், நெல்லை எமது இணையதளம்: http://tamil.thehindu.com
லாக் ஆன் செய்யுங்கள்
etamil.thehindu.com
இப்பொழுது டிஜிட்டலிலும்.




## விழிப்புணர்வுப் பேரணி...

▲ உலக மக்கள் தொகை தினத்தையொட்டி, திருச்சியில் நேற்று நடைபெற்ற விழிப்புணர்வுப் பேரணியை தொடங்கிவைக்கிறார் மாவட்ட ஆட்சியர் கு.ராஜாமணி. வெஸ்ட்ரி பள்ளியில் தொடங்கி மத்திய பேருந்து நிலையம் வழியாக கிஆபெ விசுவநாதம் அரசு மருத்துவ கல்லூரி வரை இந்த பேரணி நடைபெற்றது.

சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

தினமணி

புதன்கிழமை
12 ஜூலை 2017
திருச்சி
18 பக்கங்கள் ரூ. 5

# உலக மக்கள்தொகை தின விழிப்புணர்வுப் பேரணி



திருச்சியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மக்கள் தொகை விழிப்புணர்வு பேரணியில் பங்கேற்ற மாணவிகள்.

***திருச்சி, ஜூலை 11:*** திருச்சியில் உலக மக்கள்தொகை தின விழிப்புணர்வுப் பேரணி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

திருச்சி ஜான்வெஸ்ட்ரி ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் பேரணியைத் தொடக்கிவைத்து மாவட்ட ஆட்சியர் கு. ராசாமணி பேசியது:

நிகழாண்டில் புதிய அலை, புதிய நம்பிக்கை, முழு பொறுப்பு இதுவே குடும்ப வளர்ச்சி என்பதை மையக் கருத்தாகக் கொண்டு மக்கள்தொகை தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. மக்கள்தொகையைக் கட்டுப்படுத்த இளைஞர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுக்குப் பேச்சுப் போட்டி நடத்தி பரிசு வழங்கப்படுகிறது என்றார் ஆட்சியர். முன்னதாக பள்ளி வளாகத்தில் தொடங்கிய பேரணி, ராயல் சாலை, மத்தியப் பேருந்து நிலையம் வழியாக கி.ஆ.பெ. விசுவநாதம் மருத்துவக் கல்லூரியில் முடிந்தது. பேரணியில் பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி, கலைக் காவிரி, தேசியக் கல்லூரி, ஜமால் முகமது கல்லூரிகளின் என்எஸ்எஸ் மாணவர்கள், பெரியமிளகுப்பாறை ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளி, ஆர்.சி. சேவா சங்கம், ஜான் வெஸ்ட்ரி மேல்நிலைப் பள்ளி மாணவ, மாணவிகள், அரசு மருத்துவமனை செவிலியர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.கி.ஆ.பெ. விசுவநாதம் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் (பொ) அனிதா,, கண்காணிப்பாளர் ஏகநாதன், மருத்துவப் பணிகள் இணை இயக்குநர் சம்சாத் பேகம், துணைஇயக்குநர்கள் எலிசபெத், சாவித்ரி, மாநகராட்சி நகர்நல அலுவலர் அல்லி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

http://www.maalaimalar.com Regd. No. TRY/061/2015-2017 RNI.No.42628/85

மாலை மலர்

இந்தியாவின் No.1 மாலை நாளிதழ்

MAALAI MALAR

திருச்சி 7-7-2017 (வெள்ளிக்கிழமை) 8 பக்கம் 400 காசு ★★★ மலர் 40 இதழ் 204

## திருச்சி ஜமால் முகமது கல்லூரி

# காஜாமியான் விடுதியில் மீலாது விழா

திருச்சி, ஜூலை. 7–

திருச்சி ஜமால் முகம்மது கல்லூாரி காஜாமியான் விடுதியில் இக்கல்வியாண்டின் தொடக்க விழாவாக மீலாது விழா விடுதி கலையரங்கத்தில் நடைபெற்றது.

விழாவில் சிறப்பு விருந்தினராக சென்னை பல்கலைக் கழக கவுரவ விரிவுரையாளர் முனைவர் அன்வர் பாதுஷா உலவி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்

அப்போது அவர் பேசுகையில், முகம்மது நபி (ஸல்) அவர்களின் நற்குணங்களை பற்றியும், பெற்றோர்கள் ஆசிரியர்கள் மற்றும் சமூகத்தில் இருப்போர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமெனவும், இஸ்லாம் கூறும் வழிமுறைகளைப் பற்றியும் விளக்கமாக எடுத்துரைத்தார்.

கல்லூரி முதல்வர் முனைவர் இஸ்மாயில் முகைதீன் தலைமையுரையாற்றினார். கல்லூரி செயலாளரும், தாளாளருமான காஜா நஜீமுதீன் முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில் துணை முதல்வர் முனைவர் முகம்மது இப்ராகிம், கூடுதல் துணை முதல்வர் முனைவர் முகம்மது சிகாபுதீன், ஜமால் முகமது மேலாண்மை நிறுவன இயக்குனர் முனைவர் அப்துல் சமது,

விடுதி இயக்குநர்கள் முனைவர் முகமது பாசில், ஜமால் முகமது யாசின் ஜூபைர், முனைவர் முகமது சகாபுதீன் மற்றும் விடுதி துணைக் காப்பாளர்கள், உதவிக்காப்பாளர்கள், பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

முன்னதாக விடுதி ஒருங்கிணைப்பாளர் முனைவர் முகமது சர்புதீன் வரவேற்றார். முடிவில் விடுதி துணைக்காப்பாளர் முனைவர் சையது அலி பாதுஷா நன்றி கூறினார்.



திருச்சி ஜமால் முகமது கல்லூரி காஜாமியான் விடுதியில் நடந்த மிலாது விழாவில் கலந்துகொண்டவர்களை படத்தில் காணலாம்.

RICE CITY
Nurturing Tomorrow
Rice City Matriculation Higher Secondary School
Railway Road, Aduthurai - 612 101 Ph : 0435 2473350 / 2470138
E-mail : ricecityschool@gmail.com www.ricecity.org

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper

RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018
TN /PMG (CCR) WPP258/2016-18

SCM SHIRTS
A product of Seyad Cotton Mills
Seyad Home Industries Private Limited
Tirunelveli - 627 003





## நாகூர் ஷாகுல் ஹமீது வலியுல்லாஹ் வரலாறு குறித்து

# ஜமால் முகம்மது கல்லூரி வரலாற்றுத்துறை மாணவர்கள் ஆய்வு வகுப்பு

திருச்சி, ஜூலை04-

நாகூரில் உள்ள ஷாகுல் ஹமீது வலியுல்லா சடங்கில் உள்ளவர்களை பற்றியும் ஜமால் முகம்மது வரலாற்றுத்துறை சேர்;ந்த மாணவர்கள் ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாகூர் தர்கா தலைமை அறங்காவலர் மௌவி செயது முகம்மது கலீபாவிடம் கல்லூரி முதல்வர் முனைவர் இஸ்மாயில் மொய்தீன் உறுதி அளித்தார்.

நாகை மாவட்டம் நாகூரில் ஷாகுல்ஹமீது வலியுல்லா சுமார் 460 க்கு மேற்பட்ட முன்னோர் இருந்து இந்த தர்கா செயல்பட்டு வருகிறது. இந்த தர்காவிற்கு உலகம் முழுவதிலும் இருந்து நிறைய பேர் வந்து ஜியாரத் செய்து செல்வார்கள்.

கடந்த மாதம் 460 வது சந்தனக்கூடு விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றுள்ளது. இவர்களைப் பற்றி சொல்ல வேண்டும் என்றால் 68 வருடம் பூவுலகம் வாழ்ந்து 490 லிருந்து 500 க்கு முந்தைய கால கட்டத்தில் வணிகம் என்ற போர்வையில் இந்தியாவில் நுழைந்த போர்ச்சுகல் படைகளை குஞ்சாலி மரைக்காயர் அரசுடன் இணைந்து போரிட்டு விரட்டியவர்கள். இவர்களுடைய வரலாற்றை ஆவணப்படுத்த கோரி தமிழக அரசிடம் முறையிட்டு எந்தவித பயனும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி முதல்வர் முனைவர் இஸ்மாயில் மொய்தீன் கணிதத்துறை தலைவர் முனைவர் முகம்மது அலி, வணிகவியல்துறை பேராசிரியர் முனைவர் காஜா முகம்மது, திருச்சி செய்தியாளர் எம்.கே. ஷாகுல்ஹமீது ஆகியோர் நாகூரில் அடங்கி உள்ள ஷாகுல்ஹமீது வலியுல்லா தர்காவிற்கு சென்று ஜியாரத் செய்யப்பட்டது. தர்காவின் தலைவர் மௌலவி சையது முகம்மது கல்பா அனைவரையும் வரவேற்றார்.

பின்னர் கல்லூரி முதல்வரிடம் இந்த தர்காவில் மறைக்கப்பட்ட விஷயத்தை முழுமையாக எடுத்துரைத்தார். பின்னர் அவர் ஜமால் முகம்மது கல்லூரி இதனை ஆய்வு செய்ய வேண்டும் கோரிக்கை விடுத்தார்.

அதற்கு கல்லூரி முதல்வர் முனைவர் இஸ்மாயில் அரபி மற்றும் வரலாற்றுத்துறை சேர்ந்த தலைவர்களிடம் இதுபற்றி விரைவாக எடுத்து சொல்லி மாணவர்களை ஆய்வு செய்ய விரைவில் நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறினார்.

# ஜமால் முகம்மது கல்லூரியில் மீலாது நபி விழா: இமாம் மௌல்வி அன்வர் பாதுஷா உலவி பங்கேற்பு




திருச்சி ஜூலை 6

திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி காஜாமியான் விடுதியில் நபிகள் நாயகத்தின் பிறந்த நாளை முன்னிட்டு மீலாது நபி விழா கொண்டாடப்பட்டது. இதில் சிறப்பு விருந்தினராக சென்னை பெரம்பூர் ரஹ்மானிய மஸ்ஜித் பள்ளிவாசல் இமாம் மௌலாவி அன்வர் பாதுஷா உலவி கலந்து கொண்டு மாணவர்களுக்கு பல்வேறு அறிவுரைகளை வழங்கினார்.

ஜமால்முகம்மது கல்லூரியில் முதலாம் ஆண்டு கல்லூரி தொடங்கும் போது மீலாது நபி விழா கொண்டாடுவது வழக்கமாக கல்லூரி நிர்வாகம் செய்து தருகிறது. அதே போன்று இந்த விழா கல்லூரி மற்றும் விடுதியிலும் இது போன்று விழா நடந்த பிறகு தான் மற்ற விழாக்கள் நடைபெறும். அந்த வகையில் காஜாமியான் விடுதியில் மீலாது நபி விழா நடைபெற்றது.

விழாவிற்கு கல்லூரி முதல்வர் முனைவர் இஸ்மாயில் மொய்தீன் தலைமை வகித்து மீலாது நபி பிறந்தநாள் எதற்காக கொண்டாடப்படுகிறது? என்றும் வருங்கால மாணவர்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதனையும் பேசினார்.

கல்லூரி செயலாளர் மற்றும் தாளாளர் முனைவர் ஏ.கே.காஜா நஜ்முதீன், துணை முதல்வர் முனைவர் முஹம்மது இப்ராஹிம், கூடுதல் துணை முதல்வர் முனைவர் முகமது சிகாபுதீன், விடுதி இயக்குநர்கள் முனைவர் முகம்மது சிகாபுதீன், முனைவர் முகம்மது பாசில், பேராசிரியர் ஜமால் முகம்மது யாரன் ஜுபைர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விடுதி ஒருங்கிணைப்பாளர் முனைவர் முகம்மது ஷர்புதீன் அனைவரையும் வரவேற்று பேசினார்.

மீலாது நபி விழாவில் சிறப்பு விருந்தினராக சென்னை ரஹ்மானிய மஸ்ஜித் பள்ளிவாசல் இமாம் மௌலாவி அன்வர் பாதுஷா உலவி கலந்து கொண்டு பேசுகையில் இந்த மீலாது நபி விழா எதற்காக இப்போது கொண்டாடப்பட வேண்டும் என மாணவர்கள் நினைக்கலாம். நபிகள் நாயகம் பற்றி எப்போது வேண்டுமானாலும் பேசலாம். அதே போன்று நபிகள் நாயகம் அவர்கள் எப்படி எல்லாம் வாழ்ந்தார்கள் மற்றும் மக்களுக்கு எவ்வளவு நன்மைகள் செய்தார்கள் என்பதை பல வித ஆதாரங்களை மேற்கோள் காட்டி மாணவர்களிடையே உரையாற்றி அவர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார். மேலும், இக்கால மாணவர்களாகிய நீங்கள் நல்ல பழக்கவழக்கங்களை மேற்கொள்ள வேண்டும். மது போன்ற தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகிவிடக்கூடாது என்றும் மது மற்றும் போதைப் பொருட்களால் ஏற்படும் தீய விளைவுகளை, ஆபத்துக்களை விளக்கமாக எடுத்துக் கூறி மாணவர்களுக்கு அறிவுரை வழங்கி அவர் மாணவர்களிடத்தில் பேசினார்.

விழாவில் முன்னாள் முதல்வர் முனைவர் முகமது சாலிகு, துபாய் இமாம் சங்கத்தின் இணைச் செயலாளர் பைசூர் ரஹ்மான், விடுதி காப்பாளர்கள் முனைவர் ஜாகீர் உசேன், முனைவர் அப்துல் ஹக்கீம், முனைவர் பிரசன்னா, அமீர் அப்பாஸ், கைக்கூலி கைவிட்டோர் கழக நிறுவனர் அப்துல் அலீம், திருச்சி செய்தியாளர் எம்.கே.ஷாகுல் ஹமீது, எடிட்டர் அலாவுதீன், மற்றும் தமிழ் மற்றும் அரபித்துறைத் தலைவர்கள் , பேராசிரியர்கள் , மாணவர்கள் திரளாக கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர். விழா முடிவில் விடுதி காப்பாளர் முனைவர் சையது அலி பாதுஷா நன்றி கூறினார்.

# நாகூர் தர்கா ஷாகுல் ஹமீது வலியுல்லாவை பற்றி ஆய்வு: ஜமால் முகம்மது கல்லூரி நடவடிக்கை

திருச்சி, ஜூலை 4–

நாகூரில் உள்ள ஷாகுல் ஹமீது வலியுல்லா சடங்கில் உள்ளவர்களை அவர்களைப் பற்றியும் ஜமால் முகம்மது வரலாற்றுத்துறை சோ'ந்த மாணவர்கள் ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று நாகூர் தர்கா தலைமை அறங்காவலர் மௌாவி செயது முகம்மது கலீபாவிடம் கல்லூரி முதல்வர் முனைவர் இஸ்மாயில் மொய்தீன் உறுதி அளித்தார்.

நாகை மாவட்டம் நாகூரில் ஷாகுல்ஹமீது வலியுல்லா சுமார் 460 க்கு மேற்பட்ட முன்னோர் இருந்து இந்த தர்கா செயல்பட்டு வருகிறது. இந்த தர்காவிற்கு உலகம் முழுவதிலும் இருந்து நிறைய போ' வந்து ஜியாரத் பண்ணிவிட்டு செல்வார்கள். கடந்த மாதம் 460 வது சந்தனக்கூடு விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றுள்ளது. இவர்களைப் பற்றி சொல்ல வேண்டும் என்றால் 68 வடம் பூவுலகம் வாழ்ந்து 490 லிருந்து 500 க்கு முந்தைய கால கட்டத்தில் வணிகம் என்ற போர்வையில் இந்தியாவில் நுழைந்த போர்ச்சுகல்



படைகளை குஞ்சாலி மரைக்காயர் அரசுடன் இணைந்து போரிட்டு விரட்டியவர்கள். இவர்களுடைய வரலாற்றை ஆவணப்படுத்த கோரி தமிழக அரசிடம் முறையிட்டு எந்தவித பயனும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் திருச்சி ஜமால் முகம்மது கல்லூரி முதல்வர் முனைவர் இஸ்மாயில் மொய்தீன் கணிதத்துறை தலைவர் முனைவர்ட முகம்மது அலி, வணிகவியல்துறை பேராசிரியர் முனைவர் காஜா முகம்மது, திருச்சி செய்தியாளர் எம்.கே.ஷாகுல்ஹமீது ஆகியோர் நாகை மாவட்டம் மஞ்சக்கொல்லையில் திருமணம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விட்டு நாகூரில் அடங்கி உள்ள ஷாகுல்ஹமீது வலியுல்லா தர்காவிற்கு சென்று ஜியாரத் செய்யப்பட்டது. இவர்களை தர்காவின் தலைவர் மௌலாவி சையது முகம்மது கல்பா அனைவரையும் வரவேற்றார்.

பின்னர் கல்லூரி முதல்வரிடம் இந்த தர்காவில் மறைக்கப்பட்ட விஷயத்தை முழுமையாக எடுத்துறைத்தார். பு ின்னர் அவர் ஜமால் முகம்மது கல்லூரி ஆய்வு செய்ய வேண்டும் கோரிக்கை விடுத்தார். ஆதற்கு கல்லூரி முதல்வர் முனைவர் இஸ்மாயில் அரபி மற்றும் வரலாற்றுத்துறை சோ'ந்த தலைவர்களிடம் இதுபற்றி விரைவாக எடுத்து சொல்லி ஆய்வு மாணவர்களை ஆய்வு செய்ய விரைவில் நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறினார்.

# ஜமால் முகமது கல்லூரியில் முன்னாள் மாணவர்கள் கவுரவிப்பு

திருச்சி, ஜூலை 4–

திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் 1984–1987ம் ஆண்டு படித்த அனைத்து துறை சோ்ந்த 42 முன்னாள் மாணவர்கள் கல்லூரிக்கு வருகை தந்தார்கள். முன்னாள் மாணவர்கள் குவைத், தமிழகத்தில் உள்ள பல்வேறு ஊர்களில் இருந்து வந்தவர்களை கல்லூரி நிர்வாகம் சார்பில் கல்லூரி முதல்வர் முனைவர். எஸ்.இஸ்மாயில் முகைதீன், துணை முதல்வர் முனைவர் முகமது இப்ராஹிம், கூடுதல் துணை முதல்வர் முனைவர் முகமது சிகாபுதீன் முன்னாள் மாணவர் சங்கத்தின் செயலாளரும், விடுதி ஒருங்கிணைப்பாளர் முனைவர் முகமது சர்பதீன் ஆகியோர் வந்து கவுரவிக்கப்பட்டனர்.

பின்னர் கல்லூரிக்கு சென்று தாங்கள் படித்த அறைக்கு சென்று மலரும் நினைவுகளை நினைவு கூர்ந்து சக முன்னாள் மாணவர்களிடம் பகிர்ந்து கொண்டார்கள். பின்னர் கல்லூரி பேராசிரியர்களிடம் தாங்கள் படித்த நாங்கள் பின்பற்றியதன் மூலம் இன்று நாங்கள் நல்ல நிலைமைக்கு இருக்கிறோம் என்று பேராசிரியர்களிடம் பகிர்ந்து கொண்டார்கள்.

பின்னர் காஜாமியான் விடுதிக்கு சென்று முன்னாள் மாணவர்கள் படிக்கும் காலத்தில் தாங்கள் படித்த அறைக்கு சென்று கடந்த கால நினைவுகளை சக மாணவர்களிடம் கலந்து கொண்டார்கள். பின்னர் காஜாமியான் விடுதிக்கு மிகவும் பிரபலமான குஸ்காவை ருசித்து சாப்பிட்டு மலரும் நினைவுகளை பகிாந்து கொண்டார்கள். பின்னர் கல்லூரி முழுவதும் சுற்றிபார்த்து




கடந்த கால நிகழ்வுகளை பகிர்ந்து கொண்டார்கள்.

பின்னர் கல்லூரி நிர்வாகம் மற்றும் கல்லூரி முதல்வரிடம் இங்கு படித்து வரும் ஏழை, எளிய மாணவ, மாணவர்களுக்கு எல்லோரும் ஒன்று சோ்ந்து விரைவில் கல்வி உதவித் தொகை வழங்குவதாக உறுதி அளித்தனர். வரும் ஆகஸ்ட் 15 ஆம் தேதி நடைபெறும் முன்னாள் மாணவர் சங்கத்தின் விழாவில் இந்நாள் மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகை வழங்குவதாகவும் அறிவித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் கலைமாமணி விருதுபெற்ற இளங்கோ, சேலம் அபுபக்கர் புதுக்கோட்டை அல் முனவரா பள்ளியின் தாளாளர் முகமது தையூப், திண்டுக்கல் ரோஜா பாக்கு உரிமையாளர் முகமது ரபீக், நிஜாம் பாக்கு உரிமையாளர் முகமது நாசர், ஈரோடு ஆடிட்டர் நாகராஜன், நாமக்கல் தொழிலதிபர் சம்பத் உள்ளிட்ட 42 வணிகவியல் துறை சார்ந்த மாணவர்கள் கலந்து கொண்டனர்.

முன்னாள் மாணவர்களுடன் முன்னாள் முதல்வர் முனைவர் ஆர்.காதர் மொய்தீன் , துறை தலைவர் முனைவர் முபாரக் அலி, கைக்கூலி கைவிட்டோர் கழகத்தின் நிறுவனர் அப்துல் அலி ஆகியோர் முன்னாள் மாணவர்களிடம் கலந்துரையாடினார்கள். இந்த முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் சந்திப்பு ஏற்பாடுகளை முன்னாள் மாணவர் சங்கத்தின் திருச்சி பிரிவின் துணைச் செயலாளர் சிராஜ்தீன், நாகூர் ஜாகீர் உசேன் ஆகியோர் ஏற்பாடு செய்தனர்.

இந்த சந்திப்புக்கு முழு ஒத்துழைப்பு மற்றும் அனுமதி தந்த கல்லூரி செயலாளர் முனைவர் ஏ.கே. நஜ்முதீன் உதவி செயலாளர் ஹாஜி ஜமால் முகமது, மேலாண்மைத்துறை இயக்குநர் முனைவர். கே.ஏ.அப்துல் சமது, சுயநிதிப்பிரிவு இயக்குநர் முனைவர். கே.என்.அப்துல் காதர் நிகால், விடுதி இயக்குநர்கள் முனைவர். கே.என்.முகமது பாஜில், பேரா. எம்.ஏ.ஜமால் முகமது யாசின் ஜுபைர், துணை முதல்வர்கள் முனைவர். ஏ. முகமது இப்ராகிம், முனைவர். எம். முகமது சஹாபுதீனஆகியோருக்கு முன்னாள் மாணவர்கள் நன்றி தொிவித்தனர்.

அண்ணாநகரில் முதன்மையான தங்க நகை ஷோ ரூம்
For Trust & Integrity
வாவு ஜுவல்லர்ஸ்
தங்கம் | வெள்ளி | வைரம் | மாணிக்கம்
AA-7A, 2வது அவென்யூ (ரவுண்டானா அருகில்), அண்ணாநகர், சென்னை - 600 040. போன் : 044 2628 4295, 2628 4296
Sunday open upto 1.30 p.m.

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper

RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018
TN /PMG (CCR) WPP258/2016-18

SCM SHIRTS
SCM A product of Seyad Cotton Mills
Seyad Home Industries Private Limited
Tirunelveli - 627 003





திருச்சி ஜமால் முகமது கல்லூரியில் 1987–1990ம் ஆண்டு படித்த அனைத்து துறை 65 முன்னாள் மாணவர்கள் சிங்கப்பூர், குவைத், மலேசியா உள்ளிட்ட ஊர்களில் இருந்து வந்தவர்களை கல்லூரி நிர்வாகம் சார்பில் செயலர் மற்றும் தாளாளர் முனைவர். ஏ.கே. காஜா நஜீமுதீன், பொருளாளர் ஹாஜி கே.ஏ.கலீல் அகமது, உதவிச்செயலர் ஹாஜி.எம்.ஜே.ஜமால் முகமது, கல்லூரி முதல்வர் முனைவர். எஸ்.இஸ்மாயில் முகைதீன் ஆகியோர் வரவேற்றனர். பின்னர் கல்லூரி நிர்வாகம் மற்றும் கல்லூரி முதல்வரிடம் இங்கு படித்து வரும் ஏழை, எளிய மாணவ, மாணவர்களுக்கு எல்லோரும் ஒன்று சேர்ந்து விரைவில் கல்வி உதவித் தொகை வழங்குவதாக உறுதி அளித்தனர். இந்த நிகழ்ச்சியில் மேலாண்மைத்துறை இயக்குநர் முனைவர். கே.ஏ.அப்துல் சமது, சுயநிதிப்பிரிவு இயக்குநர் முனைவர். கே.என்.அப்துல் காதர் நிகால், விடுதி இயக்குநர்கள் முனைவர். கே.என்.முகமது பாஜில், பேரா. எம்.ஏ.ஜமால் முகமது யாசின் ஜுபைர், துணை முதல்வர்கள் முனைவர். ஏ. முகமது இப்ராகிம், முனைவர். எம். முகமது சஹாபுதீன் உள்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மெகா டிஜிட்டல்
டிஜிட்டல் பேனர் பிரிண்டிங்
The Magic of Large format Printing
Mega DiGiTAL
High Technology with Sharp Quality
ANNA SALAI ◊ ADYAR ◊ KOYAMBEDU ◊ THIRUVOTTIYUR
9444007466 FLEX & VINYL DIGITAL PRINTING

MAKKAL KURAL (Independent National Tamil Daily) அ பக்கம் விலை ரூ.4.00

மக்கள் குரல்

நடுநிலை நாளேடு

மதுரை பதிப்பு

(மலர்:39 * 1.6.2017 வியாழன் மாலை * வெளியூர் 2.6.2017 வெள்ளி * இதழ் 5)

Regd. No. TN/SR-21/15–17

T.NAGAR LKS
HOUSE OF L.K.S LKS GH SINCE 1995
GOLD • SILVER • DIAMOND • PLATINUM
T.NAGAR Ph: 2434 1111 / 5555 | ANNA NAGAR Ph: 2626 8000 / 1111 | TAMBARAM Ph: 2241 3333 / 7777

# திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் முதல்வராக இஸ்மாயில் முகைதீன் பொறுப்பேற்பு

திருச்சி, ஜூன்.1–

திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் முதல்வராக 01.06.2017 அன்று கணிதத்துறை தலைவராக உள்ள முனைவர். எஸ். இஸ்மாயில் முகைதீன் அவர்கள் பொறுப்பேற்றுள்ளார். இவர் 1984ம் ஆண்டு கல்லூரியில் விரிவுரையாளராக சேர்ந்து விடுதியில் உதவிக்காப்பாளர், துணைக்காப்பாளர், ஒருங்கிணைப்பாளராக பணிபுரிந்துள்ளார். மேலும் கல்லூரியில் நிதியாளர், கூடுதல் துணை முதல்வர் முதலிய முக்கிய பொறுப்புகளுடன் ஜமால் முகமது கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்க பொதுச்செயலாளராக செயல்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் கல்லூரியின் கூடுதல் துணை முதல்வராக வேதியியல் துறைத்தலைவர் முனைவர். எம்.முகமது சிகாபுதீன் மற்றும் நிதியாளர் முனைவர் டி.ஐ.ஜார்ஜ் அமலரெத்தினம் அவர்கள் பொறுப்பேற்றுள்ளார்கள்.

இந்தப் பதவியேற்பு விழாவில் கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் டாக்டர்.ஏ.கே.காஜா நஜீமுதீன் அவர்கள், பொருளாளர் ஹாஜி கே.ஏ.கலீல் அகமது அவர்கள் மற்றும் உதவிச்செயலர் ஹாஜி எம்.ஜே. ஜமால் முகமது அவர்கள் முன்னின்று பதவி ஏற்பினை நடத்தினர். இந்நிகழ்வில் கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் ஏ.முகமது இப்ராகிம், இயக்குநர்கள் முனைவர் கே.அப்துஸ் சமது, பேராசிரியர் கே.என். அப்துல் காதர் நிகால், முனைவர் கே.என். முகமது பாஜில் மற்றும் பேராசிரியர் எம்.ஏ.ஜமால் முகமது



யாசின் ஜுபைர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேலும் கல்லூரி முன்னாள் மற்றும் இந்நாள் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

ZAM ZAM REAL ESTATE
ALHAJEE S.M. BATHRUTHEEN
வாய்மையும் நம்பிக்கையும் பெற்ற வளம் மிகுந்த நிறுவனம்
கட்டிடங்கள் வாங்க - விற்க வாடகை வசூல் செய்ய புகழ் பெற்றது
புஎண்: 76 (பஎண்: 233) பீட்டர்ஸ் ரோடு, ராயபேட்டை, சென்னை - 600 014.
போன் : 044 - +91 44 2848 0697 / 4330 2522
E-mail : zamzam501@rediffmail.com www.zamzamrealestate.com

உண்மை சொல்வோம் நன்மை செய்வோம்

# மணிச்சுடர்

MANICHUDAR TAMIL DAILY

நிறுவனர் : மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஆ.கா.அ. அப்துஸ் ஸமது
https://www.facebook.com/Manichudardailypaper
RNI 42728/87 / REGD. No.TN/CNI GPO/006/2016-2018
TN /PMG (CCR) WPP258/2016-18

தரம்
மென்மை
நீடித்த உழைப்பு
999
மார்க் லுங்கிகள்
இது வெறும் நம்பரல்ல, நம்பிக்கை!

மணி - 32 சுடர் - 294 | ஹிஜ்ரி 1438 - ரமளான் 05 | திருவள்ளுவர் ஆண்டு 2048 வைகாசி - 18 | சென்னை 01.06.2017 வியாழன் | வெளியூர் 02.06.2017 வெள்ளி | http://muslimleaguetn.com/manichudar.asp | பக்கம் -4 | விலை ₹ 3

# திருச்சி ஜமால் முகமது கல்லூரி முதல்வராக எஸ். இஸ்மாயில் முகைதீன் பொறுப்பேற்பு



திருச்சி, ஜூன்.01-

திருச்சி ஜமால் முகமது கல்லூரியின் முதல்வராக 01.06.2017 அன்று கணிதத்துறை தலைவராக உள்ள முனைவர். எஸ். இஸ்மாயில் முகைதீன் அவர்கள் பொறுப்பேற்றுள்ளார். இவர் 1984-ம் ஆண்டு கல்லூரியில் விரிவுரையாளராக சேர்ந்து விடுதியில் உதவிக்காப்பாளர், துணைக்காப்பாளர், ஒருங்கிணைப்பாளராக பணிபுரிந்துள்ளார். மேலும் கல்லூரியில் நிதியாளர், கூடுதல் துணை முதல்வர் முதலிய முக்கிய பொறுப்புகளுடன் ஜமால் முகமது கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்க பொதுச்செயலாளராக செயல்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் கல்லூரியின் கூடுதல் துணை முதல்வராக வேதியியல் துறைத்தலைவர் முனைவர். எம்.முகமது சிகாபுதீன் மற்றும் நிதியாளர் முனைவர் டி.ஐ.ஜார்ஜ் அமலரெத்தினம் பொறுப்பேற்றுள்ளார்.

இந்தப் பதவியேற்பு விழாவில் கல்லூரியின் செயலர் மற்றும் தாளாளர் டாக்டர்.ஏ.கே.காஜா நஜீமுதீன், பொருளாளர் ஹாஜி கே.ஏ.கலீல் அகமது மற்றும் உதவிச்செயலர் ஹாஜி எம்.ஜே. ஜமால் முகமது முன்னின்று பதவி ஏற்பினை நடத்தினர்.

இந்நிகழ்வில் கல்லூரியின் துணை முதல்வர் முனைவர் ஏ.முகமது இப்ராகிம், இயக்குநர்கள் முனைவர் கே.அப்துஸ்சமது, பேராசிரியர் கே.என்.அப்துல் காதர் நிகால், முனைவர் கே.என். முகமது பாஜில் மற்றும் பேராசிரியர் எம்.ஏ.ஜமால் முகமது யாசின் ஜுபைர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மேலும் கல்லூரி முன்னாள் மற்றும் இந்நாள் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.